தமிழ்ப் புலவர்கள் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டு

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழகராதிக்குழூஉப் புலவரும்
கல்வெட்டு ஆராய்ச்சி வல்லாரும் வானநூலறிஞரும்
இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினருமாகிய
திரு. ச. சோமசுந்தர தேசிகர்
எழுதியது

பதிப்பாளர்:
வித்துவான் சோம. இராமலிங்க தேசிகர்

All Rights Reserved] 1943 [விலை ரூ. 1-10-0

பொருளடக்கம்

1. புராண திருவிளையாடல் நாதர்
2. பாண்டிச்சேரியன்
3. நெல்லைச் சீமான்
4. [illegible]
5. சங்கரன்
6. [illegible] ஜோதிப் பிரகாசம்
7. மண்டபம் புலவன்
8. கோபாலகிருஷ்ணர்
9. விசுவநாதன்
10. [illegible]
11. வீரபத்திர பாண்டியன்
12. மனோகர சேகரன்
13. மனோகரன் தேசிகன்
14. இராமலிங்க [illegible]
15. [illegible] மாறன்
16. கொங்கு சேரன்
17. நீதியே வடிவே தேசிகன்
18. [illegible] பாண்டியன்
19. சோழ [illegible]
20. எட்டப்ப [illegible]
21. வரகுண பாண்டியன்

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர். ச. சோமசுந்தர தேசிகர்.

தமிழ்ப் புலவர்கள் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டு

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழகராதிக்குழுஉப் புலவரும்
கல்வெட்டு ஆராய்ச்சி வல்லாரும் வானநூலறிஞரும்
இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினருமாகிய
திரு. ச. சோமசுந்தர தேசிகர்
எழுதியது

பதிப்பாளர்:
வித்துவான் சோம. இராமலிங்க தேசிகர்

All Rights Reserved] 1943 [விலை ரு. 1-10-0

பதிப்புரை

ஒவ்வொரு நூற்றாண்டிலுமுள்ள தமிழ்ப் புலவர்களின் வரலாற்றை முறையே எழுத வேண்டும் என்ற கருத்து ஆசிரியர் (எனது தந்தை) மனத்தில் வெகுகாலத்திற்கு முன்பே உண்டாயிற்று. 16ம். நூற்றாண்டு, தமிழ்ப் புலவர்கள் வரலாறு என்ற புத்தகத்தை 1936ல் எழுதி வெளியிட்டார்கள். இப்போது 17ம் நூற்றாண்டுப் புலவர்களைப் பற்றிய வரலாறு ஒன்று எழுதி அச்சியற்றி முடித்தார்கள். முடித்தும் இவ் வரலாறு வெளியிடுவதற்கு முன் ஆசிரியர் இறைவனடி யுற்றார்கள்.

தமிழறிஞர்கள் இந்நூலை விரும்பி யேற்றுக் கொள்வார்கள் என்று எண்ணி இப்போது வெளியிடுகின்றேன்.

S. இராமலிங்கம்.

THE B. N. PRESS, MADRAS.

இரண்டாம் பதிப்புரை

பதினேழாம் நூற்றுண்டுத் தமிழ் புலவர்கள் வரலாறு என்னும் இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது குறித்து அறிஞர் மகிழ்வர். முதற்பதிப்பு முற்றுஞ் செலவாயின மையின், பற்பலர் புதுப்பதிப்பை எதிர் நோக்கியிருந்தமை அவர்கள் எமக்கு எழுதிய கடிதங்களால் உணர்ந்தேன்.

இப்பதிப்பில் "ஆதலால் முனிவன்" (பக்கம். 17.) எனத் தொடங்குஞ் செய்யுளின் அமைதி தெரிந்திலது. பின்னர் விளங்குமேல் அடுத்த பதிப்பில் திருத்தப்படும்.

இதனை நன்கு வெளிப்படுத்தத் துணை புரிந்த பெரியார் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் உயர் திருவாளர், இராவ்சாகிப் S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., அவர்கட்கும், சென்னைப் பல்கலைக் கழக இஸ்லாமிக் பகுதியின் உதவித் தமிழாராய்ச்சியாளர், சைவத் திருவாளர், ஆரணி. வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசகமுதலியாரவர்கட்கும் எனது மனமார்ந்த வணக்கம் உரித்து.

இதனைப் பாட புத்தகமாக்கி உதவிய பல்கலைக் கழகங்களின் பாடக் குழுவினர்க்கு (Board of Studies) யான் பெரிதும் நன்றியுடையேன்.

மயிலாப்பூர்
1—9—'43

வித்துவான்,
சோம. இராமலிங்க தேசிகர்.

புலவரையும் புரவலரையும் காட்டும் அட்டவணை.

வரிசை யெண்.	புலவர்	புரவலர்	நூல்களிற் கண்ட ஆண்டு. கி. பி.	உடன் காலத்தவர்
1.	சித்தர் சிவப்பிரகாசர்	இலிங்கமாநாயக்கர், இலிங்காரெட்டியார்	உத்தேசம் 1606	அம்பலவாணர்
2.	அம்பலவாண தேசிகர்		ஷை	ஷை
3.	ஞானக்கூத்தர்			சிவப்பிரகாசரின் சீடர்
4.	களந்தைக்குமரன்	அழகவேள்	1616	
5.	அகோர முனிவர்			வைத்தியநாத தேசிகரின் ஆசிரியர்
6.	கந்தசாமிப் புலவர்	முத்துவடுகநாத துரை,	1621	உமறுப்புலவர், சீதக்காதி
7.	பாலசுப்பிரமணிய கவிராயர்	சீதக்காதி	1628	நொண்டி நாடக ஆசிரியர்
8.	குமரகுருபரர்	திருமலை நாயக்கர்,	உத் 1630	குமரகுருபரர் சீடர்
9.	வெள்ளியம்பலவாணர்	மாசிலாமணி தேசிகர்		சிவப்பிரகாச அடிகள் ஆசிரியர்.
10.	திருவேங்கடநாதையர்	ஷை திருமலை நாயக்கர்	கல்வெட்டு 1633	வைத்தியநாத தேசிகர்
11.	மணவாள தாசர்	ஷை		
12.	வைத்தியநாத தேசிகர்	திருவேங்கடநாதர்		அந்தகக்கவி

13.	அந்தகக்கவி வீரராகவர்	ஷை		வைத்தியநாததேசிகர், நிரஞ்சன நாதர், கந்தபுராணம் கச்சியப்பர்.
14.	தமிழாகர முனிவர்	பராசசிங்கன், குமார ஒப்பிலாத் தமிழவராயன், திருஞானசம்பந்தர்	1623	
15.	சம்பந்த சரணலயர்	மாசிலாமணி தேசிகர்		
16.	அழகிய சிற்றம்பலக்கவிராயர்	வெங்களப்பநாயக்கர், தளவாய் சேதுபதி	1647	
17,	வென்றிமாலைக்கவிராயர்	காவை வடமலையப்பன் பிள்ளையன்	1654	
18.	பாகை அழகப்பன்	ஷை		
19.	நாராயண தீட்சிதர்	ஷை		
20.	திருமேனிக் கவிராயர்	ஷை		
21.	சிவப்பிரகாச அடிகள்	அண்ணமலை ரெட்டியார்	1652	
22.	சாந்தலிங்கர்			சிவப்பிரகாச அடிகள்
23.	அமிர்த கவிராயர்	திருமலை சேதுபதி		அனந்த கவிராயர்
24.	நடராசர்		1665	
25.	கடிகைமுத்துப்புலவர்	எட்டப்பன்		
26.	சதாசிவ தேசிகர்			
27.	படிக்காசுப்புலவர்	சிவந்தெழுந்த பல்லவன் மழவராயன், சீதக்காதி		வைத்தியநாத தேசிகரின் புதல்வர், படிக்காசுப்புலவர் கும்பகவி, நமசிவாயப்புலவர், திருக்குறுங்குடி நம்பி

புலவரையும் புரவலரையும் காட்டும் அட்டவணை—(தொடர்ச்சி)

வரிசை யெண்.	புலவர்.	புரவலர்	நூல்களிற் கண்ட ஆண்டு கி. பி.	உடன் காலத்தவர்
28.	நமசிவாயப்புலவர்	சீதக்காதி		
29.	உமறுப்புலவர்	ஷை		படிக்காசுப்புலவர்
30.	திருக்குறுங்குடி நம்பி	காளத்தி முதலியார்		
31.	சுப்பிரமணிய தீட்சிதர்			சிவப்பிரகாச அடிகள் இளவல்
32.	வேலையர்			ஷை
33.	கருணைப்பிரகாசர்			
34.	சிறியகாரி ரத்நக் கவிராயர்	இரசை வடமலையப்பர்		
35.	ஈசான தேசிகர்			வைத்தியநாத தேசிகர்
36.	திருவையாற்றுப்புராண ஆசிரியர்	கோவிந்த தீட்சிதர்	1605	சுப்பிரமணிய தேசிகர்
37.	பிறவாநெறிப்புராண ஆசிரியர்		1608	
38.	திருச்செந்தூர்ப்புலவர்			சிவப்பிரகாச அடிகள்
39.	கந்தபுராணம் கச்சியப்பர்			அந்தகக்கவி
40.	அம்மைச்சி			ஷை
41.	வராரசையுலா ஆசிரியர்	காவை வடமலையப்பர்		
42.	நிரஞ்சன நாதர்			அந்தகக்கவி
43.	அனந்தக்கவிராயர்	திருமலை சேதுபதி		அமிர்த கவிராயர்
44.	கும்பகவி	கிழவன் சேதுபதி		படிக்காசுப்புலவர்
45.	பாண்டிப்பெருமாள்			
46.	சீதக்காதி நொண்டி நாடக ஆசிரியர்	சீதக்காதி		கந்தசாமிப்புலவர்,உமறுப்புலவர்

தமிழ்ப் புலவர்கள் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டு

1. சித்தர் சிவப்பிரகாசர்

திருக்குடந்தை யென்னும் கும்பகோணம் பல சைவ வைணவ ஆலயங்கள் நிறைந்துள்ள ஊர். அவ்வூரிலே உயர் சைவ வேளாளர் குடியொன்றுண்டு. அக்குடியிலே ஒரு பிள்ளை பிறந்தது. அப்பிள்ளை உரிய காலத்திலே கல்வி பயில்விக்கப்பட நாளடைவில் கல்வியிற் றேர்ச்சியடைந்து நன்னடை யுடையதாயிற்று. அப்பிள்ளைக்கு வயது ஏறஏற அது இல்லற வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டது. அதன் பலனாக அவ்விளைஞர் சற்குருவைத் தேடியலைந்தார். அக்காலத்திலே கோமுத்தி யென்னும் திருவாவடுதுறையில் நமச்சிவாயரென்ற திருநாமமுடைய பெரியார் ஒருவரைக் குருவாக அடைந்தார். நமச்சிவாய மூர்த்தி பெரிய சைவாட்ட ாதிபதி.

நமச்சிவாய மூர்த்தியிடம் தீட்சைபெற்றுச் சிவப்பிரகாசர் என்ற தீட்சாநாமமும் பெற்று அவ்விளைஞர் அணுக்கத் தொண்டரா யமர்ந்து வருவாராஞர்.

அக்காலத்திலே சிதம்பரத்தின் கண்ணே விஜயநகரவரசர்களது காரிய கர்த்தராக விருந்தவர்கள் வைணவர்கள் அவர்கள் வைணவப் பற்றும் சைவத் துவேஷமும் உடையவர்கள். அதனாலே சிற்சபையின் கண்ணே கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமானது நித்தியப்படி பூசை முதலாயின விஜயநகர அரசர்களது காரியகர்த்தர்களால் தடைப்பட்டன. தில்லைமூவாயிரவர் பலவிதமாக முயன்றும் இடையூறு நீங்காமையால் திருவாவடுதுறையிலுள்ள நமச்சிவாய மூர்த்தியிடம் முறையிட்டனர். அம்மூர்த்திகள் தமது அணுக்கத் தொண்டரான சிவப்பிரகாசரைச் சிதம்பரம் அனுப்பி, பூசை முட்டுப்படாவாறு பார்க்கும்படி கட்டளையிட்டார்.

சிவப்பிரகாசர் தில்லை வந்து இருக்கும் நிலையைக்கண்டபோது, தம்மால் ஒன்றும் இங்குச் செய்யவியலாது என்று அறிந்து காரிய கர்த்தரது தலைவர் இருக்கும் வேலூருக்குப் போகத் துணிந்தார்.

சிவப்பிரகாசர் தில்லைமூவாயிரவரால் கொடுக்கப்பட்ட சிவி கையிலிவர்ந்து வேலூரை யடைந்தார் அங்கு அப்பொழுது விஜயநகர அரசரது அமைச்சராகவும் பிரதிநிதியாகவுமிருந்து அர சாங்கத்தை நிர்வகித்துவந்தவர் இலிங்கம நாயக்கராவார். இவரை இலிங்கண்ணு என்றும் மக்கள் கூறுவர். சிவப்பிரகாசர் அமைச் சரைக்காண எண்ணினர். அமைச்சர் பழுத்த வீரசைவர் என்று அறிந்தவுடன் தாமும் தமது ஆன்மார்த்த பூஜையை மார்பிலணிந்து மந்திரியாரைக் கண்டார். இலிங்கண்ணு இவரது வேடப் பொலி வையும இலிங்கதாரணத்தையும் கண்டமாத்திரை யானே சங்கம பத்தி பூண்டு நல்வரவேற்று உபசரித்தார்.

வந்தகாரியம் நடராஜப் பெருமான் நித்திய பூசைக்கும் கட்ட ளைக்கும்முட்டுப்பாடு குறித்தது என்று இலிங்கண்ணு கேட்டபோது அவைகளுக்குரிய இடையூறுகளை நீக்கியதோடுசிவப்பிரகாசருக்குப் பலவித மரியாதைகளுஞ் செய்தார். சிவப்பிரகாசரது அறிவு ஆற்றல்களைக் கண்ட அமைச்சர் இலிங்கமநாயக்கர்[1] அடியவ ருக்குத் திரு வண்ணுமலையில் மடமொன்று ஏற்படுத்தி அங்கேயே இருக்கும்படி வேண்டிக்கொண்டார். சிவப்பிரகாசரோ தாம் வந்த காரியம் நிறைவேறினும், இங்குத் தாமதிப்பது குருவாணையைக் கடத்தலாகுமென அஞ்சி அமைச்சரிடம் சென்று, தமது குரவ ரிடம் விடைபெற்று வருவதாகச் சொல்லிமீண்டார்.

மீண்டு இடையிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு கோமுத்தியடைந்து குருநாதனைக் கண்டு பணிந்து நடந்தவற்றை விண்ணப்பித்து நின்றார். தமது அடியாரது நிலையைக் கண்ட நமச்சிவாயகுரவர் திருவருளைச் சிந்தித்து, சிவப்பிரகாசர் அகப்புறச் சமயத்தை யடைந்ததை யெண்ணி அவரை வடதிசையிலிருந்து இலிங்கண்ணு முதலானவர்கட்கு ஞானோபதேசஞ் செய்யுமாறு பணித்தருளினர். அது முதல் அவர் சித்தர் சிவப்பிரகாசர் எனப் பெயர் பெற்றார். தமது குரவரிடம விடைபெற்று, பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருக்கழுக்குன்றஞ் சென்று திருக்கழுக்குன்ற

1. இலிங்கமநாயக் கி. பி. 1610 வரை வேங்கடபதிராயரின் அமைச் சராகவும் காரியகர்த்தராகவும் வேலூரில் இருந்ததாகச் சரித்திர ஆசிரியர் கூறுவர்.

மாலை பாடித் துதித்தார். பின்னர், பலதலங்களையுந் தரிசித்துக் கொண்டு திருச்செங்கோடு சென்றார். இவரது பெருமையைக் கேள்வியுற்ற கேதாரி ஐயர் என்பவருடைய சீடரிற் சிலர் இவருக்கு உரியதாகக் கூறப்படும் பெருமை உண்மையாயின் கோயிற் கொடி மரத்தருகிலுள்ள இடபம் தன்னிடம் வைக்கப்பெறும் கடலையைத் தின்னவேண்டு மென்றனர். இவ் அசதியைப்பொறாத சிவப்பிர காசர்,

வில்லார் பொதுச்சபையின்[1] வித்தகா நீயுமுனங்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே யாயினிந்தக் கல்லே றெழீஇக்கடலை
யிட்டவிவர் முன்றினச் செய்யே[2].

என்று சிவபெருமானை வேண்டுதலும், அடியார்க் கெளிய ஞகிய பெம்மானது திருவருளால் அக்கல்லிடபம் எழுந்து முக்கார மிட்டுக் கடலையைத் தின்றதென்பர்.[3] இச்செய்தி திருச்செங்கோட் டுக் குறவஞ்சியில்,

'....... ... .நல்ல
கல்லிடபங் கடலை தின்று சொல்லுயர்ந்த நாடு,

என்று காணப்படும். இச்செய்தி

பண்பார் சிவப்பிர காசனைத் துட்டர் பழிக்கவவர்
கண்பார்க்க 'வில்லார் பொதுச்சபை யின்வித்த கா'வெனவோர்
வெண்பாச் சொலக்கல் லிடபங் கடலையை மென்றுதின்னும்
வண்பா வலர்வரு செங்கோடை யுங்கொங்கு மண்டலமே.

என்ற கொங்குமண்டலசதகச் செய்யுளால் வலிபெறும்.[4]

இவர் அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள பல தலங்களை யுந் தரிசித்துக்கொண்டு திருவண்ணமலைக்கு வந்து மடத்திலெழுந் தருளியிருந்து சீடர்கட்கு உபதேச முதலானவை செய்துகொண் டிருந்தார்.

அக்காலத்திலே துறையூரிலே ஒரு பாளையப்பட்டு இருந்தது. அப்பாளையத்துக்குத் தலைவராக இருந்தவரோடு அவரது

(பி-ம்) 1. மணிச்சபை. 2. முன்றினச்செய். 3. See Salem District Gazetteer, vol i.

4. மெகன்ஸி மானஸ்கிரிப்டில் பொதுவாக இச்சரிதத்திற் காணப்படும் கருத்துக்கள் அடங்கியிருப்பினும் அது வேறு விதமாகக்கூறும். அது பின்னர்க் கொடுக்கப்பட்டுள்ளது.

இளவலான இலிங்கதுரை[1] மனவருத்த மடைந்து காசி யாத்திரை செல்லப் புறப்பட்டுவந்தார். வந்தவர் வழியிலே திருவண்ணாமலையில் சித்தர் சிவப்பிரகாசரது மடத்திற்றங்கினர்; அவருடைய அருள்பெற்றுக் காசி சென்று திரும்பிவந்து திருவண்ணாமலையில் சிவப்பிரகாசரது மடத்திலேயே தங்கினர். அப்பொழுது துறையூரை அரசு செய்துவந்த இலிங்கதுரையின் தமையனார் இறந்துபோனார். பட்டத்துக்கு உரியவர் இலிங்கதுரையையன்றி வேறொருவருமில்லை. இலிங்கதுரை திருவண்ணாமலையில் சிவப்பிரகாசர் மடத்திலிருப்பதை யறிந்த அமைச்சர் முதலாயினர் திருவண்ணாமலை வந்து அவரிடம் அரசுரிமை ஏற்குமாறு விண்ணப்பித்து நின்றனர். சிவப்பிரகாச அடிகளும் அரசுரிமையை ஏய்துமாறு ஆணையிட அவ்வாறே இலிங்கதுரை அரசுரிமையேற்று அரசாண்டு வந்தார். அந்தக் காலத்தில சித்தர் சிவப்பிரகாசர் துறையூரில் தங்கும்பொருட்டு ஒரு மடம் அமைத்தார். அதுவே துறையூர்மடமாயிற்று. பின்னர், சித்தர் சிவப்பிரகாசர் திருவண்ணாமலையிலும் துறையூரிலும் வசித்துவந்தார். ஒருநாள் யாத்திரை போகும்போது திருப்பட்டீச்சுரத்துக்கு அணிமையில் சிவலிங்க ஐக்கியமாயினர். இவருடைய சமாதி ஆண்டு இன்றுமுளது.

கர்னல் மெக்கன்ஸி என்பார் சேகரித்த கையெழுத்துப் புஸ்தகங்களில் (Mackenzie Manuscripts) ஒன்றிலேயிருக்கும் 'துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு' என்பதைக் கீழே கொடுக்கிறேன்[2].

'சுவாமி கைலாசத்திலே நந்திகேசுர சுவாமிக்கு அனுக்கிரகம பண்ணின முறைமையைத் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளிச் சனகாதியர் நாலவருக்கும் அனுக்கிரகம் பண்ணினது. சனகாதியர் பிருமசோதி மாமுனிக்கு அனுக்கிரகம. பிரம்மசோதி மாமுனிவர் பூலோகத்தில் திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்ட சிவாசாரியார் சுவாமிக்கு அனுக்கிரகம். மெய்கண்ட சிவாசாரியார் சுவாமி அருணந்தி சிவாசாரியாருக்கு அனுக்கிரகம். அருணந்தி

1. துறையூர் பாளையப்பட்டை முதலில் உண்டாக்கியவர் சின்ன எறமரெட்டியார் என்பவர். இவர் சகம் 1378-ல் இதனை நிலையிட்டார். இவரினின்றும் ஐந்தாவதாகப் பட்டத்துக்கு வந்தவர் எறமரெட்டியார். அவர் கி. பி. 1610-ல் இறந்தார். இலிங்க துரையான இலிங்காரெட்டியார் கி. பி. 1610 முதல் 1648 வரை தலைவராக இருந்தாரென்று துறையூர் பாளையப்பட்டு வமிசாவளி கூறும்.

2. இது சில்பஸ்ரீ என்னும் பத்திரிகையில் திரு. S. வையாபுரிப் பிள்ளையவர்களால் முன்னர் வெளியிடப்பட்டிருக்கிறது.

சிவாசாரிய சுவாமி பரஞான தேசிகசுவாமிக்கு அனுக்கிரகம். பரஞான தேசிகசுவாமி கொற்றவன் குடிசுவாமிக்கு அனுக்கிரகம். கொற்றவன் குடி சுவாமி நமசிவாய சித்தருக்கு அனுக்கிரகம். நமசிவாய சித்தர்சுவாமி சிவப்பிரகாச சித்தர்சுவாமிக்கு அனுக்கிரகம். சிவபிரகாச சித்தர்சுவாமி நமசிவாய மூர்த்திக்கு அனுக்கிரகம். நமசிவாய மூர்த்தி சிவப்பிரகாச சுவாமிக்கு அனுக்கிரகம்.

'இந்தக் காலத்தில் பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் நடனம் பண்ணுநின்ற சபாநாதர் ஆத்மார்த்தனுகிய அழகிய சிற்றம்பலத்துடையவரும் பரார்த்தமாகிய சபாநாதரும் எழுந்தருளப் பண்ணி[க்] கட்டளையிட்டுக் கொடுத்தது. அதை யெடுத்துக் கொண்டு திருவாவடுதுறைக்கு எழுந்தருளி மாசிலாமூர்த்தி ஸந்நிதானத்தில் ஸ்தோத்திரஞ் செய்கிறபோது ஓசையோடேகூடத் தக்கதாகப் போய்த்தான் அந்தக் கட்டளையிட்டுக்கொடுத்தது. அப்படித்திருவாவடுதுறையில் சிலகாலம் எழுந்தருளியிருக்குங் காலத்தில், சிதம்பர க்ஷேத்திரத்தில் சபாநாதருக்கும் தில்லை கோவிந்த ராஜராயற்[1] நிமித்தமாய் தில்லை மூவாயிரவர்க்கும் வைஷ்ணவர்களுக்கும்இரண்டுபேருக்கும் விரோதமாய், சபாநாயகருக்குப் பூசை முதலாகியது தடங்கலாய் நின்றபடியினுலே, அது நிமித்தமாக அநேகமாய் வியாச்சியங்கள் வந்து, அது முன்னிலையாகத் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கிற சிவப்பிரகாச சுவாமியார் சை[வ ச]னமானபடியினுலேயும் சபாநாதர் தில்லை மூவாயிரவர்களுக்கு[த்]திருவாவடுதுறையில் சிவப்பிரகாச சுவாமிகளாலேஇது காரியஞ் ஜயமாகுமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டபடியினுலேயும், அவர்கள் திருவாவடுதுறைக்குச் சமாசாரம் அனுப்புவித்தார்கள். அந்த சமாசாரம் வந்த நாழிகைக்கு, சிவப்பிரகாச சுவாமிகள் அநேகந் திருக்கூட்டத்துடனே எழுந்தருளி வருகிறபோது, தில்லை மூவாயிரவர்கள் சபாநாதர் கட்டளையிட்ட உத்தரவுப்படிக்கு சபாநாதருக்குண்டான முத்துச்சிவிகை முதலாகிய சகல பிருதுகளுங் கொண்டு எதிரேபோய்க் கொடுத்து, அழைத்துக் கொண்டுவந்து சபாநாதரையும் தெரிசனஞ் செய்து வைத்தார்கள். அப்படி அநேக உபசாரத்துடனே ஆநந்த பாஷ்பகரம் பொங்கும்படியாய்த் தெரிசனம் செய்தகாலையில், ஆனந்த சிவப்பிரகாச சுவாமிகளுக்கும் பின்னும் அவ்விடத்தில் இருக்கப்படாநின்ற பேருகள் அனைவருக்கும் ஆநந்த நிர்த்த நடனம தெரியும்படியாய்த் தெரிசனங் கொடுத்து, அதனுல் அவ்விடத்திலே ஆனந்தமாய் பகக்ஷி[2] அடைந்து பதஞ்சலி வியாக்கிரபாதரிஷி இவர்களுக்குத்

1. ராயர் என்று வாசிக்க. 2. புகழ்ச்சி?

தரிசனங் கொடுத்தது, சப்தார்த்தத்தினாலே சாஸ்திரங்களினாலே கண்டதே தவிர, நேரே உச்சவமாய்த் தெரியும்படியாகச் சுவாமிகள் முன்னிலத்தில் தெரிசினங் கண்டோமென்று மிகுதியுஞ் சந்தோஷமாய்ச் சபாநாதர் பூசை காரியமும் திருவிழா ரதோச்சவ கைங்கரியமும் இரண்டும் நிறைவேறும்படியாய் சர்வ சமஸ்தமான பேரும் அனுப்புவித்தார்கள்.

'அது முன்னிலேயாக ராயவேலூருக்கு ராயரவர்கள் சமஸ்தானத்துக்கு எழுந்தருளி அவ்விடத்திலே இருக்கப்படாநின்ற மந்திரி ஸ்தானுதிபதி முதலாகிய பேருகளும் மனோதர்மம் விசாரிக்குமிடத்தில் மந்திரி ஸ்தானுதிபதிகளுக்கெல்லாம் தலைவனாகிய லிங்கணபத்தர் அவர்களுடைய மனோதர்மம் விசாரிக்குமிடத்தில் வீரசைவத்துக்கு உடையவரானபடியினாலேயும் அவர்கள் சங்கமமே தெய்வமாயெண்ணுகிறபடியினாலேயும் அந்த சங்கம வடிவும் அங்க லிங்க சையோக வடிவமா யிருந்தால் அவர் எதிர் கொண்டு வந்து அவர்களையே சிவமாக எண்ணி அவர்களைத் தெரிசனஞ் செய்து கொண்டு அவர்கள் திருவாக்குப்படி நடந்துகொண்டு வருகிறவரானபடியினாலேயும், மற்ற அங்கலிங்க சையோகமிடத்திலே[1] திரை போட்டுக் கொண்டு சுகுரவரானபடியினாலே அவரிடத்தில் முகதாவிலே போய்ப் பேசினதுககாக[2] இந்த உடை ஆகமமும் எடுத்து விசாரணை செய்யுமிடத்தில் ஆகமத்துக் கெல்லாம் முடிவான சிவரகசியத்தில் அங்கலிங்கசையோகம் எல்லாவற்றிற்கும் முதலேயென்றும, எல்லாவற்றிற்கும் சைவமென்றும் வீரசைவ மென்றும் வேறில்லாதபடிக்கு இருக்கும்படியாக யிருக்கிற தென்றும் அறிவினாலே தெரிந்து சபாநாதர் கட்டளையிட்ட உடையவரைத் தானே சபாநாத சற்குரு மூர்த்தமாய் ஆகாசவாக்காய் அனுக்கிரகம் பண்ணினபடியினாலேயும், அந்த உடையவரைத் தானே சிரசின் பேரில் எழுந்தருளச் செய்துகொண்டு லிங்கணபத்தர் அவர்களிடத்திலே யெழுந்தருளிப் போகிறபோது, அவர் எதிர் கொண்டு நமமுடைய தெய்வம் இப்படியாக எழுந்தருளி வந்ததே யென்று வெகு ஆனந்தத்தை அடைந்து ஷோடஸோபசாரத்துடனே சரணஞ் செய்து கொண்டு தன்னுடைய அரண்மனைக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் சிவபூஜை மகேசுரபூஜை முடியும்படி செய்து, பூலோக கைலாசமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் சபாநாதருடைய கைங்கரியம் விசாரணை செய்து கொடுக்க

1. 'சையோக மில்லாதவிடத்திலே' என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

2. பேசுகிறதற்காக என்று வாசிக்க.

வேணுமென்று உத்தாரங் கட்டளையிட அந்த உத்திரவுப்படிக்கு விசாரணையுஞ் செய்து சபாநாதர் பூஜை கைங்கரியம் ஆனி மாசத்தில் ரதோச்சவமும் எப்பேர்ப்பட்ட உச்சவமுஞ் செய்துவைக்கச் சொல்லி உத்தரவு செய்து அந்த[த்] திருவிழா நடப்பித்து பதில் சமாசாரம் வந்த பிறகு தாம் பூசை செய்து நைவேதனஞ் செய்தார். பின்பு இது காரியங்களெல்லாம் ராயரவர்களிடத்தில் இது சமாசாரம் அறிக்கை பண்ணினார். அவர் அந்த சமாசாரத்தைக் கேட்டு இங்கே ஆர் வந்திருக்கிறார்கள் என்று ராயரவர்கள் கேட்டார்கள். கேட்டவுடனே, சிதம்பர ஸ்தலத்திலிருந்து மகாத்துமாக்கள் வந்[த]து என்று சொல்லிக்கொண்டார்கள். 'அரமனைச் செங்கோல் என்னிடத்தில் கட்டளையிட்டிருக்கிறபடியினாலே அவர்களுடைய காரியத்தைத் திட்டப்படுத்திக் கொடுக்கிறேன்' னென்று சொன்னார். சொன்னதற்குச் சமஸ்தானத்துக்கு நிற்போ......ச்சு[1] வரும்படியாய் அது காரியஞ் சீரிட்டுக் கொடுத்தது வெகு நன்மை ஆச்சுதென்று சந்தோஷப்பட்டுக்கொண்டார்.

'அப்போது ஆறு வருஷகாலமாய் மழை யில்லாமல் சீமைகளில் அந்தாலப்பட்டுப் போகிறதென்று வந்த மகாத்துமாக்களுடனே சொல்லி மழை அழைப்பிக்க வேண்டுமென்று சொன்னார். அது சமாசாரம் சிவப்பிரகாச சுவாமிகள் கிட்ட வந்துசொன்னார். அது சமாசாரங் கேட்ட மாத்திரத்தில் அடியார்களை அழைப்பித்து தேவாரத்தில் மேகராகக் குறிஞ்சி[2] யென்கிற திருவையாற்றுத் தேவாரம் ஓதச் சொல்லிக் கட்டளை யிட்டது. அந்தப் படிக்கு மழையும் நன்றாக வருஷித்து ஆறு குளங்கள் நிரம்பிச் சீமைகள் சௌக்கியப்பட்டது.

'இப்பேர்க்கொத்த மகாத்துமாக்களண்டையில் நாம் தெரிசனம் பண்ணிக் கொள்ளவேணுமென்று வந்தார். தெரிசனம் பண்ணிக் கொண்டு ஞான அனுக்கிரகங் கட்டளையிடவேணுமென்று கேட்டார். அப்போதை கிருபை வந்து ஞான அனுக்கிரகங் கட்டளையிட்டது.

'அப்படி யிருக்க, திருவண்ணாமலை தன் பட்டணத்துக்கு அடித்தானமானபடியினாலே மடங் கட்டி வைத்து அதிலே எழுந்தருளி யிருக்கும்படி செய்தார்கள்.

---

1. 'நிர்ப்பாதபட்சப் பேச்சு' என்றிருக்கவேண்டும்,

2. மேகராகக்குறிஞ்சி என்பது ஒருபண். திருஞானசம்பந்தர் பாடியது. 'புலனைந்தும் பொறி கலங்கி' என்ற தலைப்பையுடைய பதினொரு பாக்கள் கொண்டது.

'அப்படி யிருக்குங்காலத்திலே யாத்திரையாகி உடுப்பி சுப்பிரமணியத்தில் எழுந்தருளினவிடத்தில், அவ்விடத்தில் தடாகக்கரையில் நிஷ்டை பொருந்தியிருந்தவிடத்தில், சுப்பிரமணியர் அந்த ஊரிலேயிருக்கிற ஸ்தாநீகர்களுக்குச் சொல்லி அன்னங்கொண்டு போய்ப் படைக்கச் சொல்லி, அதனாலே அவர்கள் அன்னம் படைத்து, சுவாமி தெரிசனம் பண்ணி வைத்தார்கள்.

'மறுபடி இருக்கப்படாநின்ற ஸ்தலங்களுந் தெரிசனம் பண்ணிக்கொண்டு திருச்செங்கோட்டுக்கு வந்தவிடத்தில், கேதாரி உடையவர் மகேசுவர பூசை செய்து வைத்தார்கள். 'அடியார்க்குத் தானம் மகேசுவர பூசை செய்து வைத்தீர்களே! இந்த நந்திகேசுரருக்கு என்ன மகேசுவர பூசை செய்து வைத்தீர்'களென்று திருவுளம்பற்ற, அதற்குக் கடலை கொண்டு வந்தால் மகேசுவரபூசை நிறைவேறுமென்று சொல்ல, அந்தப் படிக்குக் கடலை கொண்டு வந்து வைத்த மாத்திரத்துக்குள்ளாக அந்த சன்னிதானத்துக்கு முன்னிதா யெழுந்தருளியிருந்த நந்திகேசுரர் எழுந்தருளிக் கடலையை நைவேதனஞ்செய்தது. அந்த மகாத்மியத்தைக் கண்ட மாத்திரத்திலே, அந்தக் கேதாரி உடையவர் சிவிகை சுமந்தார்.

'அவ்விடத்திலிருந்து திரிசிரபுரத்துக்கு எழுந்தருளின விடத்தில் தீவட்டிக்கு எண்ணெ யில்லாமல், காவேரித் தீர்த்தத்தைக் கொண்டுவரச் சொல்லிப் பந்தம் எரியவிட்டார்கள்.

'அவ்விடத்திலிருந்து திருவண்ணாமலைக்கு எழுந்தருளுகிற போது, பெண்ணையாறு இருகரையில் பாரித்து வருகிற சலந்தான் நதி வடிய விட்டது.

'அவ்விடத்திலிருந்து ஆண்டாநல்லூருக்கு எழுந்தருளும் போது ஒரு பிராமணனுடைய புத்திரன் நாகந்தீண்டி ஆத்துமா நீங்கிப்போக, அந்தப் புத்திர சோகத்தினாலே தாய் தகப்பன் மெத்தத் துயரப்பட்டுக்கொண்டு இருக்கிறதைக் கண்டு, போன ஆத்துமா மறுபடியும் அதுவா நிலை அந்தத் தேகத்தில் வரும்படியாய் முடித்தது.

'அவ்விடம் விட்டு, திருவாரூருக்கு எழுந்தருளிப்போனபோது, வலங்கமானில் ஒருவன் குஷ்டரோகத்தினால் கைகால்கள் தேகமாதியந்தம் குறைந்து அழுகிக் கிருமிகளாலே மிகவும் நாற்றமாயிருக்கிறதினாலே அந்தக் கிராமத்தார் சாலைக்கரையில் எடுத்துப் போட்டுவிட்டார்கள். அப்போ சுவாமிகள் எழுந்தருளும்போது அவன் கண்டு நமஸ்காரஞ் செய்யுமளவில், தமது அஸ்தத்தினாலே

விபூதி கொடுக்க, அந்த விபூதியை வாங்கி உள்ளுக்குப் போட்டுக் கொண்ட மாத்திரத்திலே அந்தக் குஷ்டரோகம் நீங்கி வச்சிர தேக மாய் விட்டது.

'அவ்விடத்திலிருந்து பட்டீச்சுரத்துக்கு எழுந்தருளும்போது, அந்த ஊரிலிருக்கப்பட்ட ராசாவுக்குப் பிரமஹத்தியாகிய தோஷம் வந்து பிடித்துக்கொண்டிருந்ததை, அது திரும்படியாக அனுக்கிரகம் செய்தது.

'அந்த மகிமையோடுங்கூடி எழுந்தருளி யிருக்கும்போது, இந்தத் துறையூரிலிருக்கும் லிங்கதுரையவர்கள் அடிமையாகச் சிவலிங்க தாரணமும் தீக்ஷை முதலாகியது செய்துகொண்டு தன்னுடைய அரண்மனைக்கு முன்னிதாய்த் திருமடம் கட்டிவைத்து, குரு தெரிசனம் எத்தேசகாலமுஞ் செய்யவேணு மென்கிறதாய் எழுந்தருளச் செய்து, அதிலிருக்கப்பட்ட தம்பிரான்கள் திருக்கூட்ட முதலாகிய சுவாமிகள் அனைவருக்கும் சிவபூசை மகேசுர பூசை நடக்கும்படியாக நாள்தோறும் தம்முடைய உக்கிராணத் திருந்து நித்தியப்படியாய்ப் பத்துப்படி காலாகாலம் அமுதுபடியும் அமுதுக்குண்டான மேற்செலவுகளும் பூசைத் திரவியங்களும் பிறதான செலவுக்கும் துரை அஞ்சு பொன்னும் கொண்டு வந்து பாதத்திலே வைத்து நமஸ்காரம் பண்ணிக்கொண்டு தினந்தோறும நடப்பித்து வந்தார்கள்.

'இப்படி வெகுநாளாய் நடந்து கொண்டு வருங்காலத்தில் ஞானக்கூத்து சிவப்பிரகாச சுவாமிகளுக்கு அனுக்கிரக முறைமை செய்து பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு பத்துத் தலைமுறை வரைக்கும் இந்த உக்கிராணக் கட்டளையும் பூசைத்திரவியமும் நித்தியம் அஞ்சு பொன்னும் அவர்கள் கொடுக்கச் சிவபூசை மகேசுரபூசையை நிறைவேற்றி வந்தது'.

சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களுள் **அத்துவிதவெண்பா** என்பது ஒன்று. அது 218 வெண்பாக்கள் கொண்ட வாதுளாகம சாரமான நூல். அந்நூலுக்குத் துறையூ ராதீனத்தில் 6-வது பட்டத்தில் வந்த நன்னூற் சிவப்பிரகாச சுவாமிகள் உரை யியற்றி யிருக்கின்றார்.

திங்களணி சிவனருள் செய்வாதுளா கமமதனிற் றிகழ்சா ரத்தை
எங்கள்பவப் பிணிதீர்க்கத் திரட்டியத்து விதவெண்பா வெனநன் கீந்தான்
துங்கமுறு மெய்கண்டான் சந்ததிக்கோர் தீபமெனத் துதிபெற் றோங்கித்
தங்கருணைத் திருத்துறையூர்ச் சிவப்பிரகா சப்பெரும்பேர் தரித்துள் ளானே.

செய்யதிரு வாவடுதண் டுறைநமச்சி வாயகுரு தேசி கேந்த்ரன்
துய்யகர சாதனனு யபிடேகந் திருநாமஞ் சூடப் பெற்றோன்
அய்பதில்லை யம்பலவன் பொருட்டாயத் துவிதசைவ வங்க லிங்கந்
தையல்பங்கன் சொற்படியே தரித்தசிவப் பிரகாசத் தவத்தான் மாதோ.

என்பவை அந்நூலிற் காணப்படுஞ் செய்யுட்கள்.

மற்றும், 2 கணபாஷித ரத்தினமாலை, 3 சதகத்திரயம், 4 அனுபவ சட்ஸ்தலம், 5 திருவாலந்துறைச் சிந்து முதலாய நூல்கள் இயற்றி அருளினார். இவற்றுள் 2, 3, 4, வீரசைவ சித்தாந்த நூல்களாகும்.

சித்தர் சிவப்பிரகாசருடைய காலத்தைத் திட்டமாகக் குறிக்கத் தக்க சான்றுகள் இரண்டு உள. ஒன்று இலிங்கம நாயக்கர் காலம். இரண்டாவது இலிங்கதுரையான இலிங்கா ரெட்டியாருடைய காலம். இவை இரண்டும் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தைக் குறிப்பதால் சித்தர் சிவப்பிரகாசர் அக்காலத்தினரே யாவர்.

2. துறைசை அம்பலவாண தேசிகர்

பல்வளங்களும் நிரம்பிய சோழவள நாட்டிலே காவிரியின் தென்பால் சிறப்புற்றிலங்குவது திருவாவடுதுறை என்னும் திப்பிய திருத்தலம். திருஞானசம்பந்தப்பிள்ளையார் தம் தந்தையின் வேண்டுகோட்கிணங்கி எம்பெருமானை வேண்டிப் பொற்கிழி பெற்றது இத்திருப்பதியேயாம்[1]. திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மருள் ஒருவரான திருமாளிகைத் தேவர் தங்கிப் பல அற்புதங்கள் செய்த இடம் இது வென்ப.

இவ்வாறு பல்வகையிலுஞ் சிறந்ததான அத்திருப்பதியிலே சைவசமயத்தை விளக்கவந்த பலமடங்களுள் ஒரு மடம் நிறுவப்பட்டது. நமச்சிவாயர் என்ற வேளாண்குல திலகர் அந்த மடத்தை நிலைநாட்டியவரும் முதற்குரவருமாவர்.[1] இவர் சைவசித்தாந்த சாத்திரத்தில் வல்லவராகவே பல மாணாக்கர்கள் கூடினர். அங்கு

1. பெரிய புராணம், சம்பந்தர் 422—427 தேவாரம். சம்பந்தர். திருவாவடுதுறை, பண், காந்தார பஞ்சமம் பார்க்க.

சுத்தசைவப் பதினெண் மடங்களாவன :

1. திருவாவடுதுறை ; 2. காஞ்சீபுரம் ; 3. தருமபுரம் ; 4. சூரியனார் கோயில் ; 5. ஆகம சிவப்பிரகாசராதீனம், சிதம்பரம் ; 6. செங்கோலாதீனம், பெருங்குளம் ; 7, திருஞானசம்பந்த ராதீனம், மதுரை; 8. திருவண்ணாமலையாதீனம், குன்றக்குடி; 9. இராமேச்சுர ஆதீனம்; 10. நீலப்பாடியாதீனம்;

நிறுவிய சந்தானமானது தழைத்தோங்குமாறும் தமக்குப்பின் ஆசிரியராக விருக்குமாறும் நமச்சிவாயமூர்த்தி சிவப்பிரகாசர் முதலாயினுரை ஏற்படுத்தினர். அவர்கள் வெவ்வேறு வகையாகச் சென்று விட்டதால் அம்பலவாணரென்பாரைத் தலைவராக நியமித்துப்பின் சிவப்பேறு பெற்றுர்.

துறைசை யாதீனத்தில் இரண்டாவது பட்டத்திலமர்ந்து சைவசமயத்தை வளர்த்த பெரியாரே மேலே கூறிய அம்பலவாணராவர். இவர் வேளாண்குலத்தவர். கல்வி கேள்விகளில் வல்லவர். சைவசித்தாந்த சாஸ்திரத்திலும் சைவ சம்பிரதாயத்திலும் தேர்ந்தவர். சித்தர் சிவப்பிரகாசருக்குப் பின் இவரே நமச்சிவாய மூர்த்திகளிடம் சைவசந்நியாசம் பெற்றுர். மடங்களை யடைந்து தீட்சை பெறுங்கால் பிள்ளைப் பெயரை நீத்து வேறு பெயர் பெறுவது மரபு.

துறவு பூண்ட சீடர்கள் தம்பிரான் என்றழைக்கப்படுவர். முனிவர் என உபசார வழக்காகக் கூறுவதுமுண்டு அவ்வாறே இவர் அம்பலவாணத் தம்பிரான் என்ற 'தீட்சாநாமம்' பெற்றுர். பின்னர் 'ஆசாரியபிடேகம்' என்னும் உயர் சடங்கினைப் பெற்று மடாதிபதியானுர்.

'தேசிக னென்பது தேசாந்திரியும்
குருவு மெனவே கூறு மிருபெயர்'

என்ற நிகண்டுச் சூத்திரப்படி இவர் ஆசார்யராயினமையின் அம்பலவாணதேசிக ரெனப் பெயர் பெற்றுர்.

அக்காலத்திலே வீரசைவமதம சற்று முனைந்திருந்ததெனத் தெரிகிறது. இம்மதம் சுத்த சைவசமயத்துக்குப் புறமாயுள்ளது. ஆயினும் அக்காலத்தி லரசாண்ட விஜயநகர அரசர்களின் அமைச்சர்களும் தளபதிகளும் வீரசைவ மதத்தைச் சார்ந்தவர்கள். அதனுலேயே அமபலவாணருக்குமுன் மடபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட சிவப்பிரகாசர் இலிங்கதாரணியானுர். வீரசைவமதத்தைக் கண்டித்து அம்பலவாணதேசிகர் பாசண்டநிராகரண மென ஒரு நூலியற்றி வெளியிட்டார்.

---

11. தாயுமானசுவாமிக ளாதீனம், அன்னப்பன்பேட்டை; 12. சாரமா முனிவர் ஆதீனம்; 13. சொர்க்கபுர ஆதீனம்; 14. வேளாகுறிச்சி யாதீனம்; 15. வள்ளலார் ஆதீனம், சீகாழி; 16. வரணி யாதீனம்; 17. நாய்ச்சியார் கோவி லாதீனம்; 18. குழாவூராதீனம். 'சைவ மார்க்கப் பதினெண் மடத்தாரும்' என்பது திருப்பூவணநாதருலா.

அதீனம் என்பது வழக்கத்தில் முதல் நீண்டது.

துறைசைமடம் புதுவதாகக் கிளைத்ததொரு மடமாகையாலே பரம்பரையாக வந்த சைவ ஆசார்யர்களுக்கும் துறவுபூண்ட இம மடத்தினர்க்கும் வாக்குவாதம் உண்டாயிருக்குமெனத் தோற்று கிறது. இது வைணவ சம்பிரதாயத்திலும் ஏற்பட்டிருந்ததென்று தெரிகிறது இந்தச் சச்சரவாலேயே துறவுபூண்டோர் இல்லறத் தாரினும் மேலோர் என்று காட்டச்சிவாச்சிரமத்தெளிவு என்றசிறு நூலை இயற்றி வெளியிட்டாரென்று ஊகிக்கவேண்டி யிருக்கிறது. இவ்வுயர்வு தாழ்வு குறித்த வாதம் இன்றும் உள்ளதாகும்.

இவர் சிறந்த கல்விமாணு யிருந்தமையான் இவரை யடுத்துப் பலர் சீடராயினர். அவருள் ஒருவர் வைணவர். அவரைச் சைவரா கச் செய்து உலகுடையநாயனர் என்று தீட்சாநாமமிட்டார். அவ் உலகுடையநாயனர் தாமே ஞானகுருவை ‘மலமெனுந்தடத்தில்’ எனத் தொடங்குவது முதலிய பத்துச் செய்யுள்களால் துதித்திருக் கின்றனர்.

திருக்குடந்தைக்கு அணித்தான சிவபுரம் என்ற ஊரிலுள்ள வேளாண்குல திலகரான பெரியபிள்ளை யென்பார் இவரது சீடரா கித் தமது ஞானசிரியரைப் பத்து வெண்பாக்களால் துதித்துள் ளார். இவர்களை யன்றி இவருடைய மாணக்கரும் சீடரும் பல்லோ ராவர்.

அம்பலவாணர் இயற்றிய நூல்கள் பலவாகும், அவை கீழே குறிக்கப்படுகின்றன.

1. தசகாரியம். இது தத்துவரூபம் முதல் சிவபோகம் ஈருக வுள்ள பத்து அவத்தைகளைக கூறுவது. ஐம்பத்தைந்து திருவிருத் தங்களும் காப்புச் செய்யுளொன்றுங் கொண்டது.

2. சன்மார்க்க சித்தியார். இது இருபத்தெட்டு வெண்பாக்க ளாலாய தொரு சைவசித்தாந்த நூல. இந்தநூல் உரைத்த கார ணத்தைப் பின்வருமாறு ஆசிரியரே கூறுவர்:

சன்மார்க்க நற்குரவோர் நாட்டமரு ளானேக்கிச்
சன்மார்க்க சித்தியெனத் தானுரைத்தேன்—புன்மார்க்க
மற்றூர்தந் நெஞ்சத் தமலஞ் செகமார்க்கம்
பெற்றூர்க் கிதுபேத மாம். (27)

3. சிவாச்சிரமத் தெளிவு:—இது எழுபது வெண்பாக்களா லாய தொரு சிறுநூல், இல்லறத்திலமர்ந்து லோக தன்மனீதிக்கை முதலாய பெற்றவர்க்கும் துறவறத்திற்றங்கி ஆசாரியரா யமர்வோ ருக்கு முள்ள வேறுபாடுகளைக் கூறுவது. இந்நூலை ஊன்றி நோக்

குங்கால் அக்காலத்திலே தலைமுறை தலைமுறையாக ஆசார்ய அபிஷேகம் பெற்றுவந்த சைவ இல்லறத்தார்க்கும் புதுவதாகத் தோன்றிய துறவிகட்கும் ஆசார்யத்துவத்தில் உண்டாய சச்சரவின் காரணமாக எழுந்தது இந்த நூல் என்பது நன்கு விளங்கும். ஈண்டு இரண்டொரு செய்யுள் உதாரணமாகக் காட்டுவாம்.

மலமகலந் தீக்கை வருவிப்பாய் நான்கா
யிலமகலு வார்க்குமிலத் தோர்க்கும்—புலமிலரை
விட்டறிவிற் றேசிகர்பான் மேவுகென நூலோதப்
பட்டதென்னை யீசா பகர். (6)

வஞ்சத்தில் வாஞ்சை மறவாமல் மாசிவத்திற்
கொஞ்சந்தி லாசைகொளுவாரைச்—செஞ்சொ
லுலக தருமணியென் றோதும்பொய் வஞ்சத்
திலகார் சிவதரும மென். (11)

பாவனையாற் றீக்கை பணவருகா லன்றில்ல
மாவினையே நெஞ்சின் மருவுமாற்—றீவினையை
மாற்றுவார் சீடன் வரும்பொருளா னீத்தோர்கள்
பாற்றுவார் பாவனையாற் பார். (27)

தனக்குப் பலன்கருதான் றக்கவுயிர்க் குற்ற
வினைக்குற்றந் தீர்ப்பான் விரத்தன்—மனைக்குற்றத்
தோங்குவான் றீக்கைக் குறுங்கூலி வாங்கியில்லந்
தாங்குவான் றேசிகனோ தான். (37)

4. சித்தாந்தப்பஃறொடை. இது கலிவெண்பாவாலானதொரு சித்தாந்த நூல். 650 கண்ணிகளையுடையது. அச்சுப் பிரதியின் ஈற்றிற் காணுமொரு வெண்பா இந்நூல் 385 கண்ணிகளுடையதெனக் கூறும்.

சித்தாந்த மென்னத் தெரித்த பஃறொடையிற்
சித்தாந்த முந்நூற்றெண் பத்தஞ்சாய்—முத்தாந்தஞ்
சொன்னான் றிருவா வடுதுறையைச் சூழ்ந்தோர்க்கு
மன்னாகு மம்பலவா ணன்.

5. சித்தாந்த சிகாமணி. இது 91 வெண்பாக்களாயதொரு சிறு நூல். சிவபெருமானது கருணைத் திறத்தைக் காட்டுவது.

நாமெங்கே முத்தி நடையெங்கே நன்னெஞ்சே
தீமங்கை யின்பே திளைக்குமாற்—காமன்கை
யம்புற்ற புண்மெய்யி லாறியபோ தன்றோதன்
செம்பொற்றா ளீவான் சிவன். (3)

இரும்பினைப் பொன்னுக்கு மியைந்த குளிகை
திரும்பியிரும் பாக்குதலைச் செய்யா—விரும்புமலம்
போக்குவதே யல்லாற்பின் போனதனை யாருயிர்மே
லாக்குதலைச் செய்யா னரன். (91)

6. **உபாய நிட்டை.** இது 46 வெண்பாக்களாலாயது. நிட்டை கூடும் உபாயத்தினைக் கூறுவது.

7. **நிட்டைவிளக்கம்.** இது இருபத்தெட்டுத் திருவிருத்தங்களாலாய தொரு நூல். பெரும்பாலும தில்லைச் சிற்றம்பலவனை முன்னிலைப்படுத்திக் கூறுவது. நிட்டை யின் தன்மையைக்கூறுவது.

8. **உபதேசவெண்பா.** இது 43 வெண்பாக்களாலாயதொரு சிறுநூல். சற்குருவையடைவதா லுண்டாம் பயனைக் கூறுவது

9. **அதிசயமாலை.** இது 76 கட்டளைக்கலித்துறைகளாலானதொருநூல, சிவபெருமான் செய்த அற்புதத் திருவிளையாடல்களையும் ஆசிரியர்க்குச் செய்த நன்மைகளையும் கூறுவது. 'தில்லையுளாடிய வித்தகனை' மகுட மாகவுடையது.

10. **நமச்சிவாயமாலை.** இது 137 செய்யுட்களாலாயது. குருதோத்திர நூல். இது பஞ்சாக்கரமாலை எனவும் சொல்லப்படும்.

11. **பாஷண்ட நிராகரணம்.** இது அறுபது கட்டளைக் கலித்துறைகளாறுைய தொருநூல். இது வீரசைவர்களான இலிங்கதாரணிகளின் மதத்தைக் கண்டிக்க வெழுந்தது. அக்காலத்திலே வீரசைவசமயம் புகுந்தவர் இவ்வமபலவாணருடனிருந்தசிவப்பிரகாசர்.

போரைத் துடைத்தவர் வீரரென் பார்பொய்ப் பகைகளெல்லாஞ்
சோரத் துடைத்தவர் வீரரென் பார்சரி யாதிதொக்கும்
வேரைத் துடைத்துப்பொய் மார்க்கத்தை மேற்கொண்ட வீணருக்கவ்
வீரத்தனமென்கொ லம்பல வா தில்லை வேதியனே. (10)

ஏயு மிடக்கரம் லிங்கமிவ் வங்கத்துட் டங்குமலங்
காயங் கரமெக் கரமென மூட்டுங்கை யேததனுற்
றேயு மசுசி சுசியெந்த வாறுந் தொடாது புத்தி
மாயு மிவர்க்குக் கதியேது தில்லையின் மன்னவனே. (41)

12. **பூப்பிள்ளையட்டவணை** இது ஒரு சிறு உரைநடை நூல். தம்மிடம் நீண்டநாளாகத் தவசிப்பிள்ளையாக இருநத ஒருவர் பொருட்டு எளியநடையிலெழுதிய நூல். இது உயிரட்டவணை எனவும் சொல்லப்படும.

13. அனுபோக வெண்பா. என்றொரு நூலுண்டு. அது 218 வெண்பாக்களையுடையது. அந்நூலின் ஆசிரியர் அம்பலவாண தேசிகர் தாமென உறுதியாகக் கூறுவதற்கில்லை. மேற்கூறியவற்றுள்ளே ஒன்றுமுதற் பத்துவரையிலுள்ள நூல்கள் 'பண்டார சாத்திரம் பதினான்க'னைச் சார்ந்தவை.

இவரது காலம் இன்னதெனத் திட்டமாகக் கூறுவதற்கில்லை. எனினும் இவரை யடுத்துவந்த உருத்திரகோடி தேசிகருடைய காலத்திலே மதுரையை யாண்ட முத்து வீரப்ப நாயகர் சகம் 1537, 1539, 1543-ல் கொடுத்த செப்புப் பட்டயங்களைக்கொண்டு அவர் காலத்திற்கு முற்பட்டவர் என்பது பெறப்படும். சகம் 1537 கி. பி. 1605-க்குச் சரியாகும். இக்காலத்திற்கு 4,5 ஆண்டாவது அம்பலவாணரது காலம் முற்பட்டதென்று கொள்ளுதல் தவறாகாது. இதுவன்றி இவருக்குமுன் ஆசாரியராக நியமிக்கப்பட்ட சிவப்பிரகாசரும் இவரும் விஜயநகர அரசரான வேங்கடபதி ராயர் காலத்தவர் என்று ஏற்படுவதாலே அம்பலவாணர் அவரது உடன் காலத்தவர் என்றேனும் சிறிது பிந்தியவரென்றேனும் கொள்ளுதல் இழுக்காகாது.

---

3. ஞானக்கூத்தர்

ஞானக்கூத்தர் எனப்பெயர் தாங்கினோர் இருவராவர். ஒருவர் திருவையாற்றுப் புராணஞ்செய்தவர். மற்றொருவர் சித்தர் சிவப்பிரகாசரின் சீடர். ஞானக்கூத்தரும் வீரசைவ மரபினரேயாவர். சித்தர் சிவப்பிரகாசர் வீரசைவமதத்தைத் தழுவியபின் அவரோடு சங்கமர் பலர் தங்குவராயினர். அக்குழுவிலே சார்ந்த ஒருவர் ஞானக்கூத்தர்.

இவர் சிறந்த கல்விமான். அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர். சிவப்பிரகாசர் சிவலிங்க ஐக்கியமாகும்போது ஞானக்கூத்தருக்கு அபிடேகஞ்செய்து அவரைத் துறையூர் மடத்துக்கு அதிபதியாகச் செய்தார். அவர் அம்மடத்திலிருந்துகொண்டு சீடர்களுக்குத் தாரண தீட்சையும் நல்லுபதேசமுஞ் செய்துகொண்டிருந்து சிவலிங்க ஐக்கியமாயினர்.

இவர் இயற்றிய நூல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று விருத்தாசல புராணம். கிராமங்களில் படித்துவந்த நூல்களில் இது முதன்மையான நூலாகும். இது 19 சருக்கங்கள் கொண்ட 438 திருவிருத்தங்களை யுடையது. 1. பாயிரம் 19, 2 கிரிச்சருக்கம் 39, 3. தலச்சருக்கம் 15, 4. தீர்த்தச்சருக்கம் 31, 5. விதர்க்கணச் சருக்கம் 23, 6. விபசித்துச் சருக்கம் 45, 7. நிருத்தச்

சருக்கம் 24, 8. அகத்தியச் சருக்கம் 14, 9. கலிங்கச் சருக்கம் 21, 10. கலியகல் சருக்கம் 20, 11. சுவேதச் சருக்கம் 20, 12. அன்பர் பூசைச் சருக்கம் 15, 13. சிவபூசாவிதிச் சருக்கம் 44, 14 விபூதிச் சருக்கம் 18, 15. உருத்திராக்ஷ சருக்கம் 17, 16. சிவ கீர்த்திச் சருக்கம் 10, 17. கோபர்வதச் சருக்கம் 21, 18. விருஷதன் சருக்கம் 12, 19. சசிவன்னச் சருக்கம் 30, ஆகத்திரு 438.

மற்றொன்று திருவிடைமருதுப் புராணம். இதுபொழுது இந்நூல் அருகியுளது. அதனால் அதனைக் குறித்த விவரமொன்றும் அறிவதற்கில்லை.

---

4. களந்தைக் குமரன்

தொண்டைமண்டலம் பல சான்றோர்களையுடையதென்பது தமிழ் மக்கள் நன்கறிந்த செய்தி. அம்மண்டலத்திலுள்ள பொற்களந்தை என்னும் பொன்விளைந்த களத்தூர் பல புலவர்களுக்குப் பிறப்பிடமாகவுள்ளது. வெண்பா பாடுவதில் புகழ்பெற்றவரான புகழேந்தி அக்களந்தையிற் பிறந்தவர். இவர்போன்று பிறந்தவர் பலராவர். அக்களந்தையிலே வேளாளர் குடியில் குமரன் என்பார் தோன்றினர். அவர் கல்வி கேள்விகளில் நிரம்பியவரானர். வயது வந்தபின்னர் சோழ நாடு சென்றார். அங்நாட்டிலே காவிரியின் வளப்பத்தால் செழிப்புடையதான முகுந்தனூரிலுள்ள வேளாண்டலைவரான அழகனென்பவர் புலவரை நல்வரவேற்று உபசரித்தார்.

அழகவேள் மிகுந்த சிவபக்தி யுடையவர். சற்குண சம்பன்னர். திருவாஞ்சியம் என்னும் திவ்யக்ஷேத்திர விசாரணை புரிபவர். புலவரது திறமையைக் கண்ட அப்பிரபு புலவரை அத்திருப்பதியின் பெருமையைச் செய்யுள் வடிவில் புராணமாகச் செய்து தரும்படி வேண்டிக்கொண்டார் அதற்கிணங்கிய புலவரும் முன்னிருந்த புராணக் கதைகளைத் தெரிந்துகொண்டு புராணத்தைத் தமிழிற் செய்தார்.

சாற்று மிப்பெருங் கதையினைச் சகாத்தமா யிரத்தைந்
நூற்று முப்பதோ டெட்டென நவலு மாண் டெல்லை
யேற்ற மாகிய விராக்கத வாண்டினி விசைத்தேன்
போற்று மற்றதன் பேர்திரு வாஞ்சிய புராணம்.

என்றபடி சாலிவாகன சகம் 1538-க்குச் சரியான கி. பி. 1616-ல் பாடிமுடித்தார். இந்நூலை மேற்கூறிய அழகவேளே திருவாஞ்சியர் சந்நிதியில் அரங்கேற்றினர்.

ஆதலால் முனிவன் சொற்ற வாரியந் தமிழ்ப்ப டுத்தி
யோதினு னதனை யயர்புக ழழகன் றானே யிருந்து
மாதொரு பாகர் வாஞ்சை மருந்தனூர் திருமுன் வைகிக்
காதலித் திருந்து கேட்பக் கதையரங் கேற்று வித்தான்.

திருவாஞ்சிய புராணம் காப்பு உள்பட 830 திருவிருத்தங் களையுடையது. காப்பு 4, 1. தலவிசேடச்சருக்கம் 87, 2. முனி தீர்த்தச்சருக்கம் 47, 3. பராசரதீர்த்தச்சருக்கம் 91, 4. அத்திரி தீர்த்நாமச் சருக்கம் 48, 5. திருமால் தவச்சருக்கம் 111, 6. புண் ணியதீர்த்தச் சருக்கம் 46, 7. விகுட்சிச்சருக்கம் 35, 8. மாக நீராடற்சருக்கம் 53, 9. மயிடாசுரன் வதைச் சருக்கம் 46, 10. மண்டுகேமுத்திச்சருக்கம் 54, 11. காசிபதிச்சருக்கம் 35, 12. பிர மோற்பவச்சருக்கம் 18, 13. சிருட்டிச்சருக்கம் 72, 14. திரு விழாச்சருக்கம் 83 ஆக 830 திருவிருத்தங்கள். இந்தப் புராணம் வடமொழியிலுள்ள சனற்குமார சங்கிதையிலிருந்தும பிரமாண்ட புராணத்திலிருந்தும் மொழிபெயர்த்துச் சுருக்கிச் செய்யப்பட்ட தென்று ஆசிரியர் கூறுவர்.

வானுடை முனிவர் போற்றும் வாஞ்சைமா நகரின்வாய்மை
புரையில்சீர் குலவு காந்த புராணமாக் கதையிற் சான்ற
தரைபுகழ் சனற்கு மார சங்கிதை யிலிம வான்கேட்
டுரைபெறு மத்தியாய மோதுவ தொருபா னென்ப.

பின்னுமோர் வகையிற் சாற்றும் பிரமாண்ட வுபபு ராணத்
துன்னரு முபரி பாகத் துரைக்குமத் தியாயத் தொன்பா
னின்னன முன்னூ லாய திரண்டின தியல்பு நோக்கிப்
பன்னரு வடநூல் வல்ல பாவலர் விரித்துச் சாற்ற

மற்றவற் றினை யானொரு வகைப்பட முனிவன்
சொற்ற காதைமுன் னூல்வழி தொகுத்துவண் டமிழான்
முற்ற வோதிய செய்யுளெண் ணூற்றின்மேல் முப்பா
னுற்ற வாய்மையின் சருக்கமு மொருபதி னான்கே.

திருவாஞ்சிய புராணம் கி. பி. 1616-ல் அரங்கேறியது. இப் புராணம் இன்னும் அச்சிடப்படவில்லை. இந்நூலாசிரியரான குமரனது காலம் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும் என்பது நன்கு விளங்கும்.

5. அகோரமுனிவர்

விராட் புருடனுககு மூலாதார க்ஷேத்திரமாகக் கருதப்படும் திருவாரூரின்கண்ணே கோயில்கொண்டுள்ள எம்பெருமான் தியாகேசன் எனப்படுவர். மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கு அமையப்பெற்றதொரு திருக்கோயிலர்தலாலே அரசர் பலரும் அக்கோயிலுக்குக் கொடுத்த மானியங்கள் பலவாகும். அம்மானியங் களினின்றும் வரும் வருவாயைக் கொண்டு கோயிற் காரியங்களை நிர்வாகஞ் செய்ய ஏற்படுத்தப்பட்ட நிர்வாகசாலைக்குக் கட்டளை என்று பெயரிட்டிருக்கின்றனர். அவ்வாருன கட்டளைகள் திருவாரூர்க் கோயிலிலே பல உண்டு. அவற்றுள் பெரியனவாய் நித்திய நைமித்தியங்களைக் கவனிப்பன மூன்று கட்டளைகள். அவை முறையே இராஜாங்கக் கட்டளை, அபிடேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை எனப் பெயர் பெறும். இராஜாங்கக் கட்டளை என்பது இராஜாங்கட்டளை என்ற பெயரோடு பதினெண் சைவாதீனங்களில் ஒன்ருகிய தருமபுரம் மடாதிபதிகளால் நிர்வகிக்கப் படுகின்றது.

அகோரமுனிவர்

அபிடேகக் கட்டளை, அன்னதானக் கட்டளை யிரண்டும் இதுபொழுது வேளாகுறிச்சி ஆதீனத்தாரால் நிர்வாகஞ் செய்யப்படுகிறது. இம்மடாதிபதிகள் தாங்களே நேரிற் காரியங்களை நிர்வகிக்காது தங்கட்குக் கீழ்பட்டவர்களும் சீடர்களுமான சைவத் துறவிகளைக்கொண்டு காரியங்களைச் செய்வர். இத்துறவிகள் தம்பிரான் என்றும் முனிவர் என்றும் அழைக்கப்படுவர்.

மேற்கூறிய கட்டளைகளுள் ஒன்ருன அபிடேகக் கட்டளையைப் பதினேழாம் நூற்ருண்டின் தொடக்கத்திலே நிர்வாகஞ் செய்துவந்தவர் அகோரத் தம்பிரான் என்ற துறவியாவர். இவர் அகோர முனிவர் என்றும் அழைக்கப்படுவார். அகோர சிவத் தியாகராஜ பண்டாரம் எனக் கணக்குகளில் கையொப்பமிடுவர். தியாகராஜ பண்டாரம் என்பது கோயில் முத்திரை.

இவர் கமலை ஞானப்பிரகாசரது பரம்பரையில் சைவ சன்னியாசம் பெற்றவர். வடமொழி தென்மொழிகளில் வல்லவர். இவர் வடமொழியைச் சிதம்பரத்தின்கண்ணே வாழும தில்லை மூவாயிரவருள் ஒருவரான திருமாளிகைத் தேவரிடம் பயின்றார். அவரைத் தாம் பாடிய நூல்களிற் றுதித்துள்ளார். திருவாரூரின்கண்ணே வாழ்ந்த வன்மீகநாத தேசிகரிடம் தமிழ்க் கல்வி பயின்றார். இந்த வன்மீகநாத தேசிகர் இலக்கண விளக்கம் முதலாய நூல்களின் ஆசிரியரான வைத்தியநாத தேசிகரின் தந்தை யாவர். அகோர முனிவர் கல்வி பயின்றது துறவு பூண்பதற்கு முன்னோ பின்னோ என்பது திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஆயினும் இவர் கல்வி கேள்விகளில் வல்லவராக விருந்து கோயிலுக்குச் சம்பாதித்துச் சேர்த்த சொத்துக்கள் பலவாம். இவர் மிக்க ஒழுக்கமுடையவர். அதனாற்போலும் திருவாரூர்ப் பூங்கோயிலின் வடபுறம் உள்ள கோபுரவாசலில் இவரது திருவுருவை அமைத்து இன்றும் பூஜை நைவேதனம் நடத்திவருகின்றனர்.

இவர் சிலகாலம் தியாகேசன் கட்டளையை மேற்பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் காசி சென்று கதியடைந்தாரென்ப. இவர் காசி யாத்திரை செல்லு முன்னே தமது குருபுத்திரர் வைத்தியநாத தேசிகரைச் சிறந்த கல்விமானாகச் செய்தார் என்பது கன்ன பரம்பரைச் செய்தி. இம்முனிவரது கல்வித் திறமைக்கு வேறு சான்று வேண்டா. இவர் இயற்றிய நூல்களே போதியனவாம். அவையாவன கும்பகோணப் புராணம், வேதாரணியப் புராணம், திருக்கானப் பேர்ப்புராணம் என்பனவாம.

1. கும்பகோணப் புராணம் 1118 திருவிருத்தங்களையுடையது. அது.

i. கும்பகோணச் சிறப்புரைத்த வத்தியாயம் 113 ii. ஆதிகும்பேசச் சருக்கம் 42 iii. பொற்றாமரைச் சருக்கம் 13 iv. மாந்தாதாச் சருக்கம் 34 v. சத்தியகீர்த்திச் சருக்கம் 20 vi. சோமநாதச் சருக்கம் 45 vii. நாகநாதச் சருக்கம் 79 viii. மடந்தைபாகர் திருநடச் சருக்கம் 535 ix. பாற்கரதீர்த்தச் சருக்கம் 14 x. காரோணச் சருக்கம் 63 xi. அமுதீசுரச்சருக்கம் 2 xii. மகாமக நியமச் சருக்கம் 39 xiii. ஆராவமுதச் சருக்கம் 119

என்ற 13 சருக்கங்களைக் கொண்டது. இவரே இந்நூலாசிரியரென்பது

தென்கலைக்கடற் றீஞ்சுவை யமுதினை மாந்து
மன்பி னுரியத் தெல்லைபோ யிலங்குமெய்ஞ் ஞானத்
தன்ப னாகிய வகோரமா தவஞ்சி வனருளான்
மன்ப தைக்கொரு வாழ்வெனத் தமிழினல் வகுத்தான்.

என்ற செய்யுளால் இனிது விளங்கும். இவர் இந்தப் புராணத்தில் தம் ஆசிரியர் துதியாகக் கூறுவது வருமாறு :

ஒழியாத கருணையினு லொருமூவா யிரவரில்யா னொருவ னென்றோன்
வழியாகி முழுதுணர்ந்தோ ரொழுகுநெறி பொறைமுகந் தோர்வடிவு போல்
பழியாரும் பிறப்புவரிக் கிடந்தேனை யானந்தப் பரவை வீழ்த்தும் [வான்
விழியாளன் றில்லைநகர் மாளிகைத்தே வன்றிருத்தாள் விரும்பி வாழ்வாம்

இப்புராணம் அச்சிடப்படவில்லை.

2. திருக்கானப்பேர்ப் புராணம் காந்தத்திலுள்ள உருத்திர சங்கிதை பதினெலாவது கண்டத்திலுள்ளவாறு கூறப்பட்டுளது. திருக்கானப்பேர் காளிபுரி எனவும் கூறப்படும். திருக்கானப்பேர்ப் புராணம் 650 திருவிருத்தங்களை யுடையது. i. வரலாற்றுச் சருக்கம் 95, ii. நாமச்சருக்கம் 13, iii. இலிங்கோற்பத்தி தேவதாரு வனச் சருக்கம் 19, iv. கானப்பேர் பிரமபுரியான சருக்கம் 87, v. திருவும் மாயனும் மருவிய சருக்கம் 31, vi. தென்னளகையாயசருக்கம் 37, vii. நித்துருவன் புதலவி சாபந்தீர்ந்த சருக்கம் 58, viii. இந்திரன் முதலானோர் வழிபடு சருக்கம் 20, ix. ஐராவதச் சருக்கம் 52, x. இராமன் முதலோர் இராச்சியமாதி பெற்ற சருக்கம் 20, xi. தீர்த்தச் சருக்கம் 75, xii. வேதகன் பேய்வடிவந் தீர்ந்த சருக்கம் 75, xiii. சிங்களத்தரசன் பிரமகத்தி தீர்த்த சருக்கம் 33, xiv-xv. காம்பீலி யரசன் முத்திபெற்றது—அகத்தியர் நெறி யுரைத்த சருக்கம் 37, xvi. சோமநாதன் பேறுபெற்ற சருக்கம் 14, xvii. பூபதி திருப்பணி திருவுளஞ் செய்த சருக்கம் 63 என்ற பதினேழு சருக்கங்களை, யுடையது. இவர் தமது குரவர் துதியாகக் கூறிய செய்யுள் வருமாறு :

அஞ்சனக் குழம்பிற் றோய மருமணி போன்ற ஞானந்
தெஞ்சலுற் றிரங்குவேனுக் கிருள்கிழித் திலங்குஞ் சோதி
செஞ்செவிக் கமலப் பொற்றாள் சிரத்தளித் தமல மாக்கும்
விஞ்சைமா ளிகைநற் றேவ வேதியற் றொழுது வாழ்வாம்.

அகோர தேவரே இந்நூலின் ஆசிரிய ரென்பது ·

ஆரிய மளந்து தூய தமிழ்த்துறை யனைத்துந் தேர்ந்து
பேரிய லகோர தேவன் பிறங்கிய மதுரத் தீந்தேன்
சீரியல் சந்த வின்பச் செழுந்தொடை தமிழாற் செய்தான்
நாரிதன் பங்கன் கானை நாயக னயக்கு மாறே.

3. வேதாரணிய புராணம். அகோர முனிவர் இயற்றிய புராணங்களிளெல்லாம் பெரியது இப்புராணமாகும். இது 3243 திருவிருத்தங்களையும் எழுபத்தேழு சருக்கங்களையு முடையது.

இவர் திருமாளிகைத் தேவர் துதியாக இப்புராணத்திற் கூறியது கீழே குறிக்கப்படுகிறது.

தெளிஞான வுருவேய்ந்து திருக்கரணங் கிரியையுறத் திகழ்ந்த வின்ப
மொளியாவி யிச்சையுற வோங்கருளே யவயமா யுவந்து தோன்றிக்
களிவாயு மலமூன்றுங் கழித்தயல வானந்தக் கதியினுக்கு
மளியானற் றிருப்புலியூர் மாளிகைத் தேவனுக்கெழுமை யடிமை யாமே.

இவரே இந்நூலாசிரிய ரென்பது

துணிவரு மாரிய முற்றுந் தோய்ந்துளந்
தணிவரத் தமிழ்க்கட லளக்குந் தன்மையான்
மணிவள ரின்னெலி மறைசைத் தீந்தமி
ழணிபெற வருளின னகோர தேவனே

இவ் அகோர தேவர் இலக்கண விளக்கம் செய்த வைத்திய நாத தேசிகருக்கு ஆசிரியரெனவே இவரதுகாலம் அவர்காலத்துக்கு முந்தியதாகக்கொண்டு, பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கமென்று உறுதிபெறக் கூறல் ஆகும்.

6. திருப்பூவணம் கந்தசாமிப் புலவர்

'தேவர்களும திசைமுகனுந் திருமாலும் திசையோரும் செங்கை கூப்ப மேவுதிரு நடராசர் மீனவன்றன் விழிகளிப்ப வெள்ளி மன்றுள் தாவின் மலர்ப்பதம் மாறித் தாண்டவஞ் செய்தருள் கின்ற' தருமமூதூரான மூவுலகும் புகழ்மதுரை மாநகர்க்கு அங்கி திக்கிலே ஒரு யோசனை யளவிற்கப்பால் திருப்பூவணம் என ஓர் ஊருளது. அது அப்பர், சம்பந்தர் ஆரூரர் என்ற மூவர் முதலிகளாலும் பாடல் பெற்றது. கருவூர்த் தேவரது திருவிசைப்பா பெற்றது. இத்தகைய சிறந்த திருப்பதியிலே சற்றேறக்குறைய முந்நூற்றைம்பதாண்டுகட்கு முன்னர், பொன்னனையாள்என்ற பதியிலாள் வாழ்ந்துவந்தாள். அவள் மிக்க சிவபக்தி யுடையவள். அவளுக்கு ஒரு திருக்குமாரன் பிறந்தான். அக்குழந்தைக்குக் கந்தசாமி எனப் பெயரிட்டனள்.

'தேவடியாள் வீட்டிலே ஆண்பிள்ளை பிறந்ததுபோல' என்ற ஒரு பழமொழி யுண்டு. ஆயினும், அப்பழமொழியை இப்பிள்ளை பொய்ப்பித்தது.

கந்தசாமி இளமையிலே நற்குணங்கள் வாய்ந்தவராக இருந்தார். சிறந்த கல்விமான்களை யடுத்துத் தக்கவாறு கல்வி பயின்றார். பாடுஞ் சக்தி வாய்ந்து பெரும் புலவரானார்.

இவரைத் திருப்பூவணம் கந்தசாமிப் புலவரென்றே மக்கள் புகழ லாயினர். இவரது பாடல்கள் இனிய சந்தங்களை யுடையனவா யிருந்தன. இவர் தாம் பிறந்த ஊரான திருப்பூவணத்தில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் எம்பிரான்மீது உலா, புராணம், வண்ணம் முதலியவைகளும் திருவாப்பனூர்ப் புராணமும் பாடினார். சிவகங்கை ஜமீந்தாரான முத்து வடுகநாத துரையால் பெரிதும் ஆத ரிக்கப்பட்டார். இவர் திருப்பூவணப் புராணம் பாடியது கி. பி. 1621 என்று அப்புராணம் கூறுகிறது. இவரை ஆதரித்த மற் றொரு வள்ளல் சீதக்காதியாவர் சீதக்காதி நொண்டி நாடகத்தில்

சந்தமுத் தமிழ்தோறுங்—கல்வித்
தலைவர் மகிழ்உமறுப் புலவருடன்
செந்தமிழ்க் கந்தசாமிப் புலவனுஞ்
சீராட் டெனத்தமிழ் பாராட்டவே[1]

என்று காணப்படுகிறது. சீதக்காதிவள்ளல் கி. பி. 1682 வரை வாழ்ந்தவர். படிக்காசுப் புலவர் காலத்தில் இறந்தவர். சீறாப் புராணம் பாடிய உமறுப் புலவர் பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்தவராகல் வேண்டும். இவைகளாலே கந்தசாமிப் புலவர் நீண்டநாள் வாழ்ந்திருந்தாராகல் வேண்டும் என்று தோன்றுகிறது. சிலர் திருப்பூவணப் புராண ஆசிரியர் கந்த சாமிப் புலவர் அல்லர் என்பர். புராணம் அவர் பாடியதாகவே நாட்டினர் கூறுவராகலின் அச்செய்தி வலியுடையதாகவே இருக் கின்றது. இப் புலவர் பெருமான் இயற்றிய நூல்களாவன :

1. திருப்பூவணப் புராணம் : திருப்பூவணம் என்னும் புஷ்ப வனத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் புஷ்பவன நாத ரது திருவிளையாடலைப் பரக்கக் கூறும் நூல். இது 1. கடவுள் வாழ்த்து, 2. நைமிசாரணியச் சருக்கம், 3. சவுநகர் சூதரை வின விய சருக்கம், 4. திருக்கயிலாயச் சருக்கம், 5. ஆற்றுச் சருக்கம், 6. திருநாட்டுச் சருக்கம், 7. திருநகரச் சருக்கம், இவைகளோடு
8. 'செங்கதிர்வெய் யோன்பூசை செய்த வாறும்
9. திகழ்திரணு சனன்வீடு சேர்ந்த வாறும்
10. பொங்குமணி கன்னிகைநீர் பொருந்து மாறும்
11. புகலருந்துன் மனன்கதியிற் புக்க வாறுந்

---

1. சீதக்காதி நொண்டி, 185. இந்நூல் ஸ்ரீ முகம்மது உஸேயின் நயினாரவர்களால் அழகுற அச்சிடப்பட்டுள்ளது.

12. தங்குதரு மஞ்ஞன்முத்தி சார்ந்த வாறுந்
13. தன்னிகருற் ப லாங்கிபதி சார்ந்த வாறுங்
14. பங்கமில்பாற் கரபுரப்பேர் படைத்த வாறும்
15. பன்னுமெலாப் பவங்களையும் பாற்று மாறும்
16. செங்கமலன் சாபமுற்றுந் தணந்த வாறுந்
17. திருமகடன் சாபந்தான் றீர்ந்த வாறும்
'18. மங்கையவ தாரஞ்செய் தமர்ந்த வாறும்
19. வார்சடையோ னவளைமணம் புரிந்தவாறுந்
20. தங்கியதக் கன்வேள்வி தகர்த்த வாறுஞ்
21. சங்கரிபூ வணத்தில்வந்த வாறுந் தீர்த்தங்
22.*கொங்கணி சுத்சோதி தானுடு மாறுங்
23. கோதில்பிதிர் களைமுத்தி சேர்த்த வாறும்
24. அருளுட னே தீர்த்தங்களாடு மாறு
25. மருங்கலியின் வலியைநள னகற்று மாறுந்
26. திருவிழா வணிபெறச்செய் வித்த வாறுஞ்
27. சிதம்பரநல் லுபதேசஞ் செய்த வாறுந்

தருமுலகிற் சகாத்தமா யிரத்தைஞ் ஞூறு
தங்குநாற்பான்மூன்று தந்த வாண்டிற்
பொருவருநற்புலவோர்சொற் புலமை காட்டப்
புட்பவன புராணமெனப்புகல லுற்றேன்' என்று கூறும்.

இது 1437 திருவிருத்தங்களை யுடையது. இந்நூல் செய்யப்பட்ட காலம் மேலே காட்டியாங்கு 1543 + 78 = கி. பி. 1621 ஆகும். இந்நூல் அச்சேறியுள்ளது.

2. **திருவாப்பனூர்ப் புராணம்.** இது மதுரைமா நகரை யடுத்துள்ள ஆப்பனூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரான்மீது பாடியது. 1. கடவுள் வணக்கம், 2. நைமிசாரணிய வருணனை, சுகரை வினுய காதை, 3. மூர்த்தி மகிமை, 4. ஆப்பனூர்ச் சருக்கம், 5. இடவபுரச் சருக்கம், 6. அன்னவினோதச் சருக்கம், 7. சந்திர சேனச் சருக்கம், 8. பாட்களச் சருக்கம், 9. குபேரச் சருக்கம், 10. சுதரிசனச் சருக்கம், 11. அரிச்சந்திரச் சருக்கம், 12. தீர்த்த மகிமைச் சருக்கம் என்ற 12 சருக்கங்கள் கொண்ட 515 திருவிருத்தங்களையுடையது; அச்சிடப்பட்டுளது.

திருப்பூவணநாதருலா. திருப்பூவணநாதரின்மேல் பாடப்பட்ட உலாப் பிரபந்தம். இது 469 கண்ணிகளையுடையது. முத்துவடுகநாததுரை, திருக்கண்ணிராசேந்திரன் முதலியோரது திருப்பணிகளை வியந்து கூறும்.

---

* இது விளங்கிற்றிலது.

திருவால வாயரெலாம் வலசித்த ரிரதவா தஞ்செய் தற்கா
வருவாரை வணங்கவவர் மணிமுறுவல் சிறிதரும்பி மலர்க்க ணேக்கக்
கருவாகிப் பொன்னனையாள் பெற்றெடுத்த புத்திரனேர் கந்த சாமி
பெருவாய்மைப் பூவையுலாப் பாடியதெம் போலியர்கள் பிழைக்கத் தானே.

என்பது சிறப்புப்பாயிரம்.

இவைகளை யன்றிப் புஷ்பவனநாதர் வண்ணம், திருப்பூவண ஸ்தலவகுப்பு, தீர்த்த வகுப்பு, மூர்த்தி வகுப்பு முதலாயவை செய்தார் என்று கூறுவர். அவை இதுபொழுது கிடைக்கவில்லை.

---

7. பாலசுப்பிரமணிய கவிராயர்

பன்றிமலை என்றும் வராகமலை என்றும் சொல்லப்படும் பழநிப்[1] பதியின்கண்ணே பாலசுப்பிரமணியக் கவிராயர் என்பவர் பிறந்தவராவர். இவரது தந்தையார் பெரியவன் கவிராயரெனப் பெறுவர்: இவர்கள் துளுவவேளாண் வகுப்பினராவர்; சைவசமயத்தவர். தந்தையார் பழநியாண்டவனது அகம்படித் தொழிலிமைர்ந்திருந்தார். அதாவது பூமாலை புனைதல், திருப்புகழ் முதலான ஓதுதல் முதலாய தொழில்களைச் செய்துவந்தார். அவருக்கு நெடுநாளாக மகப்பேறு வாய்க்காமையின், தமது குலமுதல்வனை முருகப் பெருமானை வேண்ட அவனது அருளால் ஓர் ஆண் குழந்தை உண்டாயிற்று. அக் குழந்தையே பாலசுப்பிரமணியக் கவிராயர்.

பாலசுப்பிரமணியம் என்பது பெற்றோர் இட்ட பெயர். பெற்றோர்கள் பிள்ளையை மனமகிழ்ச்சியோடு வளர்த்து வருநாளில், பிள்ளைக்கு வரவரப் பார்வைக் குறைவும் செவிட்டுத் தன்மையும் ஏறி வந்தன. பெற்ற பிள்ளை செவிடும் குருடும் ஆவதைக் கண்டால் எவர்தான் ஆற்றுவர்? பெற்றோர் ஆற்றொணுத் துயரையடைந்து தாம் வழிபடு தெய்வமாகிய கந்தவேளையே குறையிரப்பாராயினர். ஒருநாள் முருகவேள் இவர்களது வேண்டுகோளையேற்று இருமுது குரவரும் அயர்ந்து துயிலுகையில் அவர் தம் கனவிலேசங்கம வடிவிற்றோன்றித் தனித்தனியேதாய்தந்தையரிடம் ஒரு கடப்பம் பூவைக் கொடுத்து அதனைக் குழந்தையின் கண்ணிற் றடவிக் காதிலும் செருகும்படிச் சொல்லி மறைந்தனர் என்று கதை கூறும். பெற்றோர் விழித்துப் பார்க்கையில் தங்கள் கையில் பூவிருக்கக்கண்டு அது கந்தவேளினது திருவருளே யென

1, பழநி என்றே இந்நூலில் கொண்டுள்ளேன்.

மனத்துட்கொண்டு அவருடைய திருவாணையின்படியே செய்ய, குழந்தையும் பார்வை விளக்கமாகச் செவிடும் நீங்கப்பெற்றான்.

பின்னர், பாலசுப்பிரமணியம் தந்தையாரிடம் கற்பன கற்றுப் பின்னும் பலரிடம் வடமொழி தென்மொழி யிரண்டினையுங் கற்றுத்தேர்ந்து வல்லவரானார். ஆயினும் தமது தந்தையார் கொண்ட சைவசித்தாந்தப் பற்றுச் சிறிது மிலராய்ஏகான்மவாதமே பெரிதெனக்கொண்டு அதனைப் பயின்று வந்தார். அது பொழுது திருவாவடுதுறையின்கண்ணே தலைவராய் விளங்கிய சுப்பிரமணிய தேசிகரைச் சந்திக்க[1] அவர் மாயாவாத மதம் சைவசித்தாந்தத்துக்கு அடாதது என்று கூறி இவரைத் தம் வயத்தராகச் செய்ததாக இவருடைய சரித்திரக் குறிப்புக் கூறும். அதுமுதல் சைவமதப் பற்றுமிக்குடையராய்ப் பல்லோராலும் போற்றப்பட்டு வந்தார்.

இவர் அக்காலத்திலிருந்த தஞ்சை அரசரால் மதிக்கப்பட்டு, கவிராசன் என்ற பட்டம் பெற்றதாகக் கூறுவர். சேர நாடு சென்று மலையாளத்தரசனது அவையிலே நாலாயிர திவ்வியப்பிரபந்த வியாக்கியானமெழுதிய பிள்ளைலோகாசாரியரோடு வாதஞ் செய்து வென்றதாகக் கூறுவர். அதுகாலை திராவிட வேத நிர்ணயம் என்ற நூல் இயற்றியதாக நூலாசிரியர் வரலாறு கூறும். இதுவன்றி, பாஞ்சராத்ர மத சபேடிகை என்ற நூலும் இயற்றினரென்ப. அக்க தீபிகை, சைவசித்தாந்த தரிசனம், வேதாந்த சித்தாந்த சமரச தீபம், மாயவாத சகசிர தூஷணி, குகோத்கர்ஷம், கூவிள தீப மஹாத்மியம் என்ற நூல்களையும் இயற்றியவர் இவரது கல்வி வல்லமையைக் கண்ட மகாஜனங்கள் பழநி ஸ்தலபுராணத்தைப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அப்புராணத்தை மூன்றே நாளிற் பாடி முடித்தார் என்று கூறுவர்.

> கொங்கார் பழநிக் குடியார் முதுக்குறைவோ
> ரெங்கார் மயிற்கடவு ளின்பழநி—மங்காத
> நற்புகழைச் செய்யெனமூன் றூநாளி னல்கிட்டான்
> சிற்புகழான் மெய்ப்புலவன் றேர்

என்ற வெண்பா அச்செய்தியை வலியுறுத்தும்.

இப்பழநித்தல புராணம் i. கடவுள் வணக்கம், ii. கிரிச்சருக்கம், iii. மாயாத்திரி சருக்கம், iv. பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த

1. அக்காலத்தில் சுப்பிரமணிய தேசிகர் என்று பெயர் தாங்கித் திருவாவடுதுறை யாதீனத்தில் ஒருவரும் இருந்ததாகக் காணப்படவில்லை. அக்காலத்திலிருந்தவர் உருத்திரகோடி தேசிகர். சின்னப்பட்டத்தில் வேலப்பதேசிகர் இருந்தார்.

சருக்கம், v. அருச்சுனன்றவச் சருக்கம், vi. வராககிரிச் சருக்கம், vii. நதியுற்பவித்த சருக்கம், viii. கன்னிகாரவனச் சருக்கம், ix. அக்கினிசேடர் அருச்சனை, x. கௌசலசேரன் அருச்சனை, xi. திருமணச் சருக்கம், xii. நகர்செய் சருக்கம், xiii. திருவாவினன்குடிச் சருக்கம், xiv. பிரேமேந்திரச் சருக்கம், xv. நித்தியநாதச் சருக்கம், xvi. சுவணகுத்தச் சருக்கம், xvii. வசுமந்தச் சருக்கம், xviii. சண்முகநதிச் சருக்கம், xix. சிவகிரிசத்திகிரிச் சருக்கம், xx. மலைகள் பழநியடைந்தது, xxi. அகத்தியச் சருக்கம், xxii. தீர்த்தச் சருக்கம், xxiii. சேரர்கோன் சருக்கம் என்ற 23 சருக்கங்கள் கொண்ட 987 திருவிருத்தங்களையுடையது. இப்புராணத்தில்

மலர்தலை யலகந் தாங்கு மணிமுடிச் சகம தென்று
நிலைபெற நிறுத்த மூவைஞ் ஞூற்றின்மேற் றிகழு மைம்பான்
தலைசெறி பருவந் தன்னிற் றனிநெடுங் கதிர்வே லண்ண
னலனுறு பழநி மூதூர்ப் பெருமையை நவில லுற்றேன்.

என்று கூறுவதாலே இப்புராணத்தை ஆசிரியர் சகம் 1550 க்குச் சரியான கி. பி. 1628-ல் பாடினார். இவர் செய்தனவாகக் கூறும் பிறநூல்கள் கிடைத்தில.

---

8. குமரகுருபரர்

தென்பாண்டிவளநாடு புண்ணிய நதியான தாமிரபர்ணி என்னும் பொருநையாற்றின் நீர்வளத்தாற் சிறந்து விளங்குகிறது. அவ்வாற்றின் கரையின் இருமருங்கிலும் பல ஊர்கள் செழித்து நின்று நிலவுகின்றன. அவ்வூர்களிலொன்று ஸ்ரீவைகுண்டம். அதனையே சைவர் கைலாசபுரம் என்பர். வழிவழியாக வரும் கல்வி வல்ல ஒரு குடும்பம் அப்பதியிலே உண்டு. அக் குடும்பத்திலே சண்முகசிகாமணிக் கவிராயரென ஒருவர் இருந்தார். தங்குலத்திற் கொத்த சிவகாமசுந்தரி என்னும் கற்பினுக்கரசியை அவர் மணந்து இல்லறம் நடத்திவந்தார். தமக்குப் புத்திரப் பேறின்மையால கலியுகவரதரான செந்திலாண்டவனை நினைந்து வரங்கிடந்து ஒரு ஆண் மகனைப் பெற்றார். பெற்றுமென்? 'குழலினிது யாழினி தென்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்' என்பது பொய்யாமொழி யன்றோ? அவ்வாறிருக்க, ஐந்து வயதாகியும் பிள்ளை மூங்கையா யிருத்தலைக்கண்டு பெற்றோர் மனமுடைந்து செந்தில்மேய மணாளன் மேற் பாரத்தைப்போட்டுக் குறையிரந்து நின்றனர்.

ஒருநாள் சண்முகசிகாமணிக் கவிராயர் மனைவியாரோடு புத்திரரையும் உடன்கொண்டு, திருச்செந்தூரையடைந்து[1], முருகக்கடவுளைத் தரிசித்துத் துதித்து, "எம்பெருமானே! இப்புத்திரனை ஊமைதீர்த்து ஆட்கொண்டருளவேண்டும்." எனப் பிரார்த்தித்து, சண்முகவிலாசத்திற்றானே வசித்துக்கொண்டு 'இப்புத்திரனுக்கு ஒரு மண்டலத்திற்குள் ஊமைத் தன்மை நீங்காதொழியுமேல் மனைவியோடு பிராணத் தியாகஞ் செய்து கொள்ளக் கடவே'னென உறுதி கொண்டு, நியமமாகத் தினந்தோறும் வதனாரம்பத்திலே[2] ஸ்நானஞ் செய்து, முருகக் கடவுளைத் திரிகாலங்களிலும் தரிசித்து வழிபட்டு வந்தனர். தயாநிதியாகிய முருகக்கடவுள், அவர் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளும்படி குறித்துள்ள அந்நாளிலே, சூரியனுதிக்க ஒருயாமமிருக்குமளவில் அருச்சகர்வடிவங் கொண்டு, சண்முகவிலாசத்திலே நித்திரைசெய்கின்ற அவர் புத்திரரிடத்திலெழுந்தருளி, "குமரகுருபரா[3]" என்று தட்டியெழுப்பி, அவருடைய நாவிலே தம்முடைய சடக்ஷரத்தையெழுதி, அவரை நோக்கி, "குழந்தாய் விரைவிலே நமது விசுவரூபதரிசனத்திற்கு வருவாயாக" என்று ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினர். உடனே குமரகுருபரர் தமது மாதாபிதாக்களை "அம்மே, அப்பா" என்று தட்டியெழுப்பி, நடந்தவிடயங்களை யறிவிக்க, அதுகேட்ட மாதா

குமரகுருபரர்

1. இது முதல் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் எழுதிய சரித்திரத்தைத் தழுவி வருகிறது.

2. வதனாரம்பம்-ஸமுத்திரத்திலே அங்குள்ளதோர் ஸ்நானக் கட்டம்.

3. அன்றுமுதல் குமரகுருபரரென்னும் திருநாமமுண்டாயிற்று

பிதாக்களிருவரும் முருகக்கடவுள் தங்கள் புத்திரருக்கருளிய பெருங் கருணைத் திறத்தை வியந்து புகழ்ந்து, அப்புத்திரரோடு வதனாரம் பத்திலே ஸ்நானஞ் செய்து, நியதி முடித்து, சந்நிதியை யடைந்து விசுவரூப தரிசனஞ் செய்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது குமரகுருபரர் முருகக்கடவுளுடைய திருவருளினாலே தமிழ்ச் செய்யுள் பாடுஞ் சக்தியுண்டாகப்பெற்று, கந்தர்கலிவெண்பா என்ற பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

மற்றைநாட் பிராதக்காலத்திலே, குமரகுருபரர் சிவ சின்னமாகியவிபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்து, திருக் கோயிலையடைந்து, சுவாமியைத் தரிசித்து, இனி ஞானாசாரியரைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தோடு முருகக்கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு பிரதக்ஷிணஞ்செய்யும்போது, அக்கடவுளுடைய திருவருளால் ஆகாயத்திலே, "அன்பனே, நீ இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு உத்தரயாத்திரை செய்யுங்கால் எவ்விடத்திலே உன்வாக்குத் தடைபடுமோ அவ்விடத்திலே ஞானோபதேசம பெறக் கடவை" என்று ஓரசரீரிவாக்கு அங்கே யாவருங் கேட்க எழுந்தது. அதுகேட்டுக் குமரகுருபர சுவாமிகள் திருவுளமகிழ்ந்து, திருவருளைப் புகழ்ந்து, நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து தம்மை ஆண்டருளிய அக்கடவுளிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு, திருச்செந்தூரை அரிதினகன்று, மாதாபிதாக்களோடு தமது ஜன்மஸ்தலமாகிய கைலாசபுரத்திற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு சிலகாலம் வசித்திருந்தார். இங்கு வசிக்கும் நாளில கயிலைக் கலம்பகம் என ஒரு நூல் செய்தார். பின்பு, ஒருநாள் மதுரைக்குப் போக விரும்பி, தமது தாய் தந்தையாகளுடைய பிரிவாற்றாமையைத் தேற்றி, விடை பெற்றுக்கொண்டு, தம்பியாராகிய குமார கவிகளும் உடன்வரப் புறப்பட்டு வரும்போது, வழியிலே மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்னும் ஒரு அருமைப் பிரபந்தத்தைப் பாடி முடித்துக்கொண்டு, திருப்பரங்குன்றத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

அன்றிரவு மீனாக்ஷியம்மையார், மதுரையையாளும் அரசராகிய திருமலைநாயக்கர் சொப்பனத்திலே தோன்றி, "நமது குமாரனாகிய முருகப்பிரானுடைய கிருபையைப் பெற்ற ஒருவன் நம்மைக்குறித்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடி முடித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கிறான்; நீ பரிவாரங்களோடு சென்று அழைத்துக் கொண்டு வந்து அப்பிள்ளைத்தமிழை நமது சந்நிதியில் அரங்கேற்றக் கடவாய்," என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே திருமலைநாயக்கர் விழித்தெழுந்து, குதூகலமடைந்து,

தாங்கண்ட சொப்பனத்தைச் யாவருக்கும் மற்றைநாட் காலையி லறிவித்து, மிகுந்த மனமகிழ்ச்சியோடும கைகளைச் சிரசிலே யஞ்சலிசெய்துகொண்டு, தமது பரிவாரங்களோடு திருப்பரங் குன்றத்திற சென்று, சுவாமிகளைத் தரிசித்து வணங்கி, "யாவ ராலும பெறுதற்கரிய திருவருளைப்பெற்ற சுவாமீ! தேவரீரை அடியேன் பூர்வத்திலே புரிந்த புண்ணியத்தினுல் தரிசிக்கப்பெற் றேன்" என்று முகமன் கூறி, மீனுக்ஷியம்மையாருடைய ஆஞ்ஞை யைத் தெரிவித்து, அவரையும் அவரருளிச்செய்த பிள்ளைத்தமிழை யும் யானைமீதேற்றிக்கொண்டு, மதுரையையடைந்து நகர்வலஞ் செய்வித்தார். பின்பு குமரகுருபரசுவாமிகள் திருக்கோயிலை யடைந்து, சித்திவிநாயகக் கடவுளையும், சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்து, துதித்து வணங்கிக்கொண்டு, மீனுட்சியம்மையாருடைய சந்நிதியை யடைந்து,நமஸ்கரித்து எழுந்து நின்றுர். அப்பொழுது, சர்வலோகங்களையும் பெற்றும் குமரியாகவே விளங்காநின்ற மீனுட்சியம்மையார், தெய்வத்தன்மை பொருந்திய தமது இளந் திருச்கோலத்தைக் காட்டியருள, சுவாமிகள் தரிசித்து, அடியேன் செய்த பிள்ளைத்தமிழுக்கு இது பரிசு போலுமென்று நினைந்து, அத்தியந்த ஆச்சரியமடைந்து, தாமியற்றிய பிள்ளைத்தமிழைச் சந்நிதானத்திலே அரங்கேற்றுவாராயினுர்.

அப்போது, அங்குள்ள சிவனடியார்களி லொருவர் பிள்ளைத் தமிழ்த திருமுறையைப் பீடத்தி லெழுந்தருளுவித்து விதிப்படி பூசித்து வணங்கித துதிக்க, குமாரகவிகள் அரசருடைய வேண்டு கோளின்படியே அதனை வாசிக்க, சுவாமிகள் அதன் பொருளை யாவருங்கேட்டு இன்புறும்படி விரித்துப் பிரசங்கித்தார். அத் தினத்திலே காப்புப் பருவம ஒன்றே நடந்தது. சுவாமிகள் இவ் வாறே, தினமும் ஒவ்வொரு பருவமாகப் பிரசங்கித்துக்கொண்டு வரும்போது, வருகைப் பருவத்தில, மீனுக்ஷியம்மையார் அர்ச்சகரது பெண் குழந்தைபோன்று இளந்திருக்கோலத்தோடு திருமலைநாயக் கர் மடியின்மீது எழுந்தருளியிருந்து,

"தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றெடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னெழுகுநறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமய
விமையப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்க
முடுக்கும் புவனங்கடந்து நின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே"

என்னும் ஒன்பதாவது செய்யுளை வாசித்துப் பொருளுரைக்குந் தருணத்தில், 'இன்னுமொருதடவை இச்செய்யுளை வாசித்துப் பொருளுரைக்க,' என யாவரு மகிழ வினவிக் கேட்டு வியந்து, இறுதிச் செய்யுளை வாசித்து நிறுத்துந் தருணத்தில்[1] மறைந்தருளினார். அப்பொழுது திருமலை நாயக்கர் அர்ச்சகரது பெண் குழந்தை யென்று அதுகாறும் தாம் எண்ணிக்கொண்டிருந்த எண்ணத்தை யொழித்து இங்ஙனமெழுந்தருளியிருந்தவர் சர்வஜீவதயாபரராகிய மீனாட்சியம்மையாரேயென்று தெளிந்து, சுவாமிகளுக்கு அம்மையாரருளிய திருவருளின் திறத்தைப் புகழ்ந்து கொண்டாடினார். சபையாரும் அளவிறந்த ஆச்சரியமடைந்தார்கள். இவ்வண்ணமே பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய பின்பு, திருமலைநாயக்கர் சுவாமிகளைச் சிங்காதனத்திலெழுந்தருளுவித்து, திருவடிகளில வீரகண்டாமணியைத் தரித்து, பொன்னினாலும் அரதனத்தினாலும் அபிஷேகஞ்செய்து, யானை, குதிரை, சிவிகை, குடை கொடி முதலிய விருதுகளையும் கொடுத்தார்.

அதன் பின்னரும் சுவாமிகள், திருமலைநாயக்கர் முதலியோர் •வேண்டுகோளின்படி * மீனாட்சியம்மைகுறம், மீனாட்சியம்மை யிரட்டை மணிமாலை என்னும் இரண்டு பிரபந்தங்களையும், சோமசுந்தரக்கடவுளைத் துதித்து மதுரைக்கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தத்தையும் அருளிச் செய்தனர். பின்பு ஒருநாள், திருமலை நாயக்கர் வெகுநேரம்வரையில் போசனஞ் செய்யாதிருந்தமை கண்டு, சுவாமிகள், [2]"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி — தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" என்னுந் திருக்குறளை யெடுத்தோத; அரசருவந்து,"அரிய திருக்குறளெனப்படும் தமிழ்வேதத்தை

1. வருகைப்பருவத்திலன்றி முத்தப்பருவத்திலே; "காலத தொடுகற்பனைகடந்த கருவூ லத்துப் பழம்பாடற்—கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண் மணியே யுயிரால, வாலத் துணர்வென் னீர்பாய்ச்சி வளர்பயார்க் கொளிபூத் தருள்பழுத்த—மலர்க்கற் பகமே யெழுதாச்சொன் மழலை ததும்பு பசுங்குதலைச், சோலைக் கிளியே யுயிர்த்துணையாந் தோன்றாத் துணைக்கோர் துணையாகித்—துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத, மூலத் தலத்து முளைத்தமுழு முதலே முத்தந் தருகவே—முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தருகவே" என்னும் முதற்செய்யுளை வாசித்துப் பொருளுரைக்குங்கால் மீனாக்ஷியம்மையார் இளந்திருக்கோலமாகக் காட்சியளித்து, ஒரு முத்துவடம் ஸ்வாமிகள் கழுத்திலணிந்து மறைந்தருளியதாகவும் சரித்திரம் உண்டு. 2 திருக்குறள் ௩அ-ம் அதிகாரம்; ஊழ். எ.

* திரு. ஐயரவர்கள் இவை அடிகளியற்றியன அல்ல என்றார்.

முற்றும் ஆராய்ந்துதெளிதற்குக் காலமில்லையாதலால், அதி லுள்ள நீதிகளை விளக்கிச் சுருக்கமாக அடியேன் பொருட்டு ஒரு நீதிநூல் செய்துதரவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சுவாமி கள் அவ்வாறே நீதிநெறி விளக்கம் என்னும் ஒருநூலை அருளிச் செய்துதந்து, அவ்வரசர்வேண்டுகோளின்படியே மீனாட்சியம்மை யையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்துக்கொண்டு, அத்தலத் திலே வசித்தருளினார்.

சிலநாட்சென்ற பின்பு தமது சகோதரராகிய குமார கவிகளை யழைத்து, மாதாபிதாக்களனுமதியின்படியே, தாமவதரித்த கைலாசபுரத்திலே இல்லறதருமத்தில் வழுவாது நிற்கும்படி பணி த்து, விடையளித்தனுப்பிவிட்டு, தாம் நானாவித வாத்தியங்கள் முழங்க,விருதுகள் புடைசூழ, தமக்குக்கொடுத்த திரவியங்களை அர சர்வேண்டுகோளின்படியே ஒட்டகங்களின் மீதேற்றிக்கொண்டு, மதுரையை யகன்று, தம்மைப் பிரிவாற்றாது தொடர்ந்துவரும் அரசரையும், மந்திரிமார்களையும், பிறரையும் மீண்டு செல்லும்படி வற்புறுத்தி, சிவிகைமேற்கொண்டு, பாண்டிநாட்டைக் கடந்து, சோழநாட்டை யடைந்து, அங்குள்ள திரிசிராப்பள்ளி, திருவா னைக்கா முதலிய தலங்களிலுள்ள அடியார்கள் எதிர்கொண்டு பணிய, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அவ்வத்தலங்களிலே சில நாள் வசித்து, திருவாரூரையடைந்து, தியாகேசப்பெருமானைத் தரிசித்து, திருவாரூர் நான்மணிமாலை என்னும் ஒரு பிரபந்தத்தை அருளிச்செய்தனர். அங்கு வசிக்கு நாளில், திருக்கைலாசபரம்பரை யிலே வந்த தருமபுரவாதீனத்திலே நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமாசிலாமணி தேசிகசுவாமிகளுடைய திரு வருட் சிறப்பைக்கேள்வியுற்று, அவரைக் காணவிரும்பி புறப் பட்டு, இடையிலுள்ள பலதலங்களையும் வணங்கிக்கொண்டு தரும புரத்தை யடைந்தார்.

அத்தினத்திலே, சைவசித்தாந்த சாஸ்திரங்களையும், அவற்றிற் குரிய அங்கங்களாயுள்ள நூல்களையும், ஐயந்திரிபற ஓதியுணர்ந்து அவற்றிற் கூறப்படும் சரியை, கிரியை, யோக ஞானனுசந்தானங் களை மேற்கொண்டு குருபத்தியிற் சிறந்து விளங்கும் அடியவர் திருக்கூட்டங்களும், வேத சிவாகம விற்பன்னர்களும், சைவாசாரி யர்களும், இலக்கண இலக்கியங்களில் வல்ல வித்துவான்களும் புடைசூழும்படி ஞானசூரியனைப்போல ஸ்ரீமாசிலாமணித்தேசிகர் தக்ஷிணாபிமுகமாக எழுந்தருளியிருந்தார். அச்சமயத்திலே, சுவா மிகள் பரிசனங்கள் பின்னேவர, விருதுகளோடும் அத்திருமடத்தி னுள்ளே சென்று, அவருடைய சந்நிதியிலே உத்தரீயத்தோடு

ஆசனத்தின்மீதிருந்துகொண்டு, மாசிலாமணி தேசிகரால் வினவப்பட்ட வினாக்கள் பலவற்றிற்கும் உத்தரஞ்சொல்லிக்கொண்டுவந்தார். மாசிலாமணி தேசிகர் புன்முறுவல்கொண்டு இறுதியிலே திருத்தொண்டர் புராணத்தில்

ஐந்துபே[1] ரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமேயாக
விந்துவாழ் சடையா னாடுமானந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

என்னுந் திருவிருத்தத்தின் அனுபவப்பயனை வினவ விடையிறுக்க மாட்டாது வாக்குத் தடைப்பட்டது. உடனே சுவாமிகள் இருக்கை விட்டெழுந்து, முருகக்கடவுளுடைய ஆஞ்ஞையை நினைந்து, மனங் கலங்கி, ஆசனத்தை யெடுத்தெறிந்துவிட்டு, உத்தரீயத்தை இடையிலே கட்டிக்கொண்டு, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து நின்று, அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே! ஆணவமலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமற்செய்த பெருங்குற்றத்தை மன்னித்து, அடிமைகொண்டருளவேண்டும்." என்று பிரார்த்தித்து வணங்கினார். அப்பொழுது ஞானாசாரியராகிய மாசிலாமணி தேசிகர் அவரை நோக்கி "நீ, காசியாத்திரை செய்துகொண்டு மீள்வையேல், அநுக்கிரகம் புரிவோம்." என்று வலியுறுத்த; சுவாமிகள் பின்னும் பலமுறை வணங்கி, கருணாநிதியே! சிறியேன் தேவரீருடைய கட்டளையின்படி, பசியினாலும், பிணிமுதலியவற்றினாலும் வருந்திக் காசியாத்திரையை முடித்துக் கொண்டு வருமளவும் தேகநிற்பதோ நிலையில்லை; அன்றி இறக்கினும், பின்னரும் இம்மானுடப்பிறவியே வாய்த்துத் தேவரீர் திருவருட் பேற்றிற்குப் பாத்திரனாதலும் நிச்சயமில்லை; ஆதலால், அடியேனுடைய குற்றத்தைச் சிறிதும் திருவுள்ளத்திற்கொள்ளாது, திருவருள்பாலித்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பரங்கருணைத்தடங்கடலாகிய மாசிலாமணிதேசிகர் திருவுளமிரங்கி, "அன்பனே! அது இயலாதாயின், சிதம்பரஸ்தலத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு ஒருமண்டலம் வசித்து வருவாயாக" என்று ஆஞ்ஞாபித்தருளினார்.

சுவாமிகள், அவ்வாஞ்ஞையைச் சிரமேல் வகித்து, அநுமதி பெற்று, சிவிகைமேற்கொண்டு, திருப்புள்ளிருக்கு வேளூரையடைந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வைத்தியநாதசுவாமியையும், தையனாயகி யம்மையையும், முத்துக்குமார சுவாமியையுந்

1. தடுத்தாட்கொண்டபுராணம் (க௦௬)

தரிசித்து வணங்கித் துதித்துக்கொண்டு, அத்தலத்தின் எல்லையைக் கடந்து புறத்திற்செல்லும்போது முத்துக்குமார சுவாமியானவர், சுவாமிகளிடத்தில் அருச்சகர்வடிவமாக எழுந்தருளி விபூதி கொடுத்து, "நம்மைக்குறித்தும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். உடனே சுவாமிகள் இங்ஙனம் எழுந்தருளினவர் நம்மையாண்டருளிய முருகக்கடவுளே யென்று தெளிந்து, நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, மீண்டும் அத்திருப்பதியை அடைந்து, எவ்வாறு பாடுவேனென்று திகைக்கும்போது, அக்கடவுளுடைய திருவருளினல் "பொன்பூத்தகுடுமி" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. சுவாமிகள் அதனையே முதலாகக்கொண்டு, முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தம் பாட ஆரம்பித்து, செங்கீரைப் பருவம் பாடும்போது, 'செத்துப்பிறக்கின்ற தெய்வங்கண் மணவாளன்' எனவும, 'தேனூறுகிளவிக்கு' என்று தொடங்குங் கால 'வாயூறி நின்றவன்' எனவும் இன்னவாகத் தெய்வகதியாய்ப் பிறர்பா விகழ்ந்தசொற்களையும், இவையும் திருவருட்டிறம் என்று விடாதமைத்துப் பாடிமுடித்து, அக்கடவுளுடைய சந்நிதியிலே பலருந் துதிக்கும்படி அரங்கேற்றிச் சிலநாள் அவ்விடத்திலே வசித்தார்.

பின்பு, சீகாழியைத் தரிசித்துக்கொண்டு, சிதம்பரத்தையடைந்து, திரிகாலங்களிலும் வழுவாமல் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வசிக்குநாளில் சிதம்பர மும்மணிக்கோவை என்னும் ஒரு பிரபந்தமியற்றியருளினர். அந்நாளிலே, சுவாமி தரிசனத்துக்குப் பரிசனங்களோடு செலலும்பொழுது, வழியிலே தினந்தோறும் புராணப்பிரசங்கஞ் செய்துகொண்டிருந்த சைவாசாரியரொருவர் தவிர, அது கேட்பவர் யாவரும் எழுந்து மரியாதை செய்வார்கள். அவர்களுள்ளே ஒருவர் ஒருநாள் புராணிகரை நோக்கி, "ஐயா! புலவர்திலகராயும், சிவாநுபூதிப்பெரு வாழ்வாயும் விளங்காநின்ற சுவாமிகளைக் கண்டு தாங்கள் மாத்திரம மரியாதை செய்யாதது என்னை?" என்று வினவ: அது கேட்ட புராணிகர் "அவர் இலக்கணக்கவியா? வரகவி தானே!" என்ருர். அதுபொருத ஒருவர் சுவாமிகளுக்குத் திருச்செவி சாத்த; சுவாமிகள் புன்முறுவல் செய்து, "மிகமுயன்று அரிதிற்பெறுவது இலக்கணக்கவியும், அவ்வாறன்றி எளிதிற்பெறுவது வரகவியுமன்றே? இதை யுணராதுரைப்பினும, அவர் சொல்லளவில் நம்மைத் துதித்தவரே யாயினர்: ஆயினும, அவர் சந்தேகத்தையும் நிவிர்த்தி செய்வோம்" என்று சிதம்பரச் செய்யுட் கோவை என்ற ஒரு சிறந்த பிரபந்

த்தை அருளிச்செய்தனர். புராணிகர் அந்நூலிலமைந்துள்ள அரிய இலக்கணங்களையும், சொற்சுவை பொருட்சுவைகளையும் நோக்கி, சுவாமிகளை யடைந்து வணங்கி வேண்டிக்கொள்ள, சுவாமிகள் திருவுளமகிழ்ந்து, அளவளாவினர். பின்பு, சிவகாமியம்மை யிரட்டை மணிமாலை என்னும் பிரபந்தத்தையும் செய்தருளினார்.

இவ்வாறு நியதிபூண்டு ஒரு மண்டலம் வசித்து, அத்தலத்தை அருமையாக நீங்கி, தருமபுரத்தை யடைந்து, ஞானசாரியரைத் தரிசித்து, வணங்கி, அவரைத் துதித்தியற்றிய பண்டார மும்மணிக் கோவை என்னும் பிரபந்தத்தை அவர் சந்நிதானத்திலே அரங் கேற்றினார். உடனே ஞானசாரியர் திருவுளமிகமகிழ்ந்து, சுவாமி களை நோக்கி, "நீ இயல்பாகவே துறவியாயினும் நமது வரன் முறைப்படியே அத்துறவிற்குரிய காஷாயவஸ்திர முதலிய சின்னங் களையும் தரித்துக்கொள்ளக்கடவாய்" எனப் பணித்து, அவரை யடிமை கொண்டு, அச்சின்னங்களை யளித்து, ஞானோபதேசமுஞ் செய்தருளினார். சுவாமிகள் அணுக்கத்தொண்டராகி[1] அங்கு வசிக்குநாளிலே ஒருநாள், தமக்கு முன்னே பரிசாகக் கிடைத்த திரவியங்களை அந்த ஞானசாரியர் சந்நிதியில் வைத்து ஏற்றருளும் படி பிரார்த்திக்க, அவர் முன்னர்ப் பணித்தவாறே "நீர் காசியை யடைந்து இவற்றைக்கொண்டு தருமமியற்றுவீராக" என்று திரு வாய் மலர்ந்தருளினார்.

சுவாமிகள், அவ்வரியபணியைச் சிரமேற்கொண்டு, அநுமதி பெற்று, அத்திரவியங்களை ஒட்டகங்களின் மீதேற்றிக்கொண்டு, பரிசனங்களோடு தருமபுரத்தினெல்லையைக் கடந்து, சிவிகையில் ஆரோகணித்துச் சென்று, சிதம்பரம் முதலாகிய ஸ்தலங்களை வணங்கிக் காஞ்சிபுரத்தையடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து வசிக்குநாளிலே, தம்மிடத்தில் அநேக வைணவர்களோடு வந்து சமயக்கோட்பாட்டைப்பற்றி வாதித்த பிள்ளைப்பெருமாளையங் கார்[2] முதலியோரைப் பல பிரபல நியாயங்கொண்டு வாதித்து, அவர்களை வென்று, அவ்விடத்தினின்று நீங்கி, இடையிலுள்ள

1. அணுக்கத்தொண்டராகி வசிக்குநாளிலே அவ்வவ்வமையங்களில், "பூதங் கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்தசொல், வாதங் கடந்து மனோலய மாயினது மண்டலம்போய், நாதங் கடந்து நடுவெளி தாண்டி நலஞ் சிறந்த, போதங் கடந்தின்ப பூரண மாகிப் பொலிந்ததுவே" என்னும் இச் செய்யுள்முதலிய சில செய்யுளருளியதாகவும் கூறுவதுண்டு.

2. பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கம் பெரிய கோயிலிலே வசித்தாரென்று கேட்கப்படுகிறதே யன்றிக் காஞ்சியில் வாழ்ந்ததாகக் கேட்கப் படுதலில்லை.

திருக்காளத்தி முதலிய ஸ்தலங்களை வணங்கிக் கொண்டு, காசியென்னும் திவ்வியதலத்தை யடைந்தார். அவ்வெல்லையை யடைந்தவுடன் சிவிகையினின்றிறங்கிக் கங்கையை வணங்கி, அதிலே ஸ்நானஞ்செய்து தமது நியதிகளை முடித்துக்கொண்டு, அக்கங்கையின் இருபுறத்தினுங் காடுகளடர்ந்து துருக்கர்களுடைய பள்ளியும் சமாதியுமே நிறைந்திருப்பதைக்கண்டு, மனமநொந்து, அன்றிரவு நித்திரை செய்தார். அப்போது அங்கு அந்தக் காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்தி லெழுந்தருளிய சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மைப் பூசிப்பாயாக" என்று ஆஞ்ஞாபிக்க, சுமாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராமிமுகூர்த்தத்திலே கேதாரத்தை யடைந்து, காடுகளை யெல்லாம் அழிப்பித்து, அதனடுவே எழுந்தருளிய சிவபெருமானைப் பூசித்துத் துதித்துப் பின்னர் விசுவநாதரை விசாலாட்சியம்மையாரோடும அருச்சித்து வணங்கி, காசிக் கலம்பகம் என்ற பிரபந்ததை அருளிச்செய்தார்.

அத்தலத்தில் வசிக்கு நாளிலே, அந்நகரத்தை யாண்டுகொண்டு அங்கிருந்த டிலலிபாட்சாவைக் கண்டு வசனித்துத் தருமமியற்றுதற்கு வேண்டும இடமபெற விரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தானி பாஷையைத் தெரிவித்தருளும்படி சகல பாஷைகளிலும் வல்ல சரஸ்வதியைப் பிரார்த்தித்து, சகலகலா வல்லிமாலை என்னும் பிரபந்தத்திலே ஒன்பது பாடலருளியும், திருவருள் செய்யாதிருந்தமை கண்டு, 'மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென் - பண்கண் டளவிற் பணியச்செய்வாய்" என்னும் பத்தாமது பாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வதியார் திருவருள்சுரந்து அப்பாஷையை விளக்கியருள, சுவாமிகள் களிகூர்ந்து, அவ்வரசன்சமுகத்திற் கெழுந்தருளினர். அவன் சுவாமிகளுடைய அருமை பெருமைகளைச் சிறிதும அறியாதவனுகையால் சிங்காதனத்திலிருந்துகொண்டே வரலாற்றை வினவ, சுவாமிகள் அதனாலே தமக்கு யாதொருகுறைவும் இல்லையாயினும், அவனுக்கு நேரிடும கெடுதியை யோசித்து, கருணைகூர்ந்து, 'மஹா-ராஜாவே, உமக்கு ஆசீர்வதிக்கவந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தருமமல்ல' என்று உரைத்தருளினர். அதுகேட்ட அரசன் 'உமமிடத்திலே தெய்விகங்கண்டாலன்றி உமது சரீரத்தோற்றத்திற்கு நான் மரியாதைசெய்யேன்' என்று சொலல, சுவாமிகள் "அப்படியாயின் அதனை நாளைக்குக் காட்டுவோம்" என்று சொல்லி மீண்டு, மற்றைநாள் காளியினுடைய அருளினலே வந்த ஒரு சிங்கத்தின்மேல் ஏறிக்கொண்டு, யாவரும் அஞ்சும்படி சபையை யடைந்து, அரசனை நோக்கி, "நீர் இருப்பது உயிரற்ற

சிங்கம்; நாமிருப்பது உயிருள்ள சிங்கம்; ஆயினும் நீர் அஞ்ச வேண்டுவதில்லை; உமக்குமாத்திரம் இது பசுவாகத் தோன்றும்" என்று சொல்லி, அதிலிருந்தபடியே அவனுடைய வினாக்களுக்கு உத்தரங்கொடுத்து அவன் வணங்கும்படி செய்து அங்கே வீற்றிருந்தருளினார்.

அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படி நடாத்திய பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக் குறித்துச் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, துறவிகளாய் விருத்தப்பருவமடைந்துள்ள அரசனுடைய குரு முதலியோர்களும் விரகத்தினாலே மயங்கிப் பூமியிலே விழுவார்கள். யுத்தவிஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக்கேட்டு, வயோதிகர்களும் பற்களைக் கடித்து, ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களையும்பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கங்களிலும் தாங்கள் அந்தந்த மயமாதலை யடைந்தும், சில துருக்கர்கள் மற்றவைகளைப்பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக் குறித்துச் செய்த பிரசங்கத்தில் மாத்திரம் சந்தேகம் பிறந்து, இவருக்கு அனுபவமில்லாமலே சாஸ்திரத்தில இவ்விஷயத்தில் இவ்வளவு பேசமுடியுமா வென்று சுவாமிகளை நோக்கி 'இவர் பகற்சந்நியாசிபோலும்!' என்பது முதலாகப் பலவாறு பிதற்றுவாராயினர். அதுகண்டு சுவாமிகள் மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப்பாத்திரத்தை வருவித்து, அவ்வாறு பிதற்றிய துருக்கர்களைநோக்கி, "நாளைக்கு இதை மருந்திலலாமலே பொன்னாக் குதலாகிய ஓர் இரசவாதம் செய்வோம்" என்று சொல்லி, அப்பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலே புதைக்கச் செய்தார்.

மறுநாள் அரசன் முதலிய பலரும் வந்து கூடியபின்பு, அப்பாத்திரத்தை யெடுத்துச் சுத்திசெய்வித்துப் பொன்னென எதிரே வைக்கக்கண்டு, முதனாள் ஆக்ஷேபித்த துருக்கர்களுட் சிலர், "இது இரசவாதத்தாலன்று; மலம் புளிப்பாதலால் இப்படிப் பிரகாசிக்கின்றது" என்ன, உடனே சுவாமிகள் அவர்களைநோக்கி, "நீவிர், மலம் புளிப்பென்றீர்களே, அதையும் புசித்து அனுபவித்தீர்கள்போலும்" என்றார். அவர்கள் அதுகேட்டு மிகவும் கோபங்கொண்டு வேறு எண்ணத்துடன் சூழ, சுவாமிகள் அவர்களைநோக்கி, "நேற்றைக்கு இப்படிப்பட்ட கோபம் நமக்கும் உண்டாயிருக்குமே?" என்று சொன்னார். அப்பொழுது விவேகிகளாகிய அரசன் முதலாயினோர் அவர்களையடக்கி, சுவாமிகளுடைய புத்தியை வியந்து புகழ்ந்தார்கள். மூர்க்கர்களாகிய

அத்துருக்கர்கள் முன்னையினும் மிக்க பொறாமையுடையவர்களாய் ஒருநாள் அரசனிடத்திலே வந்து, "உமது நண்பராகிய குமர குருபரசுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவரேனும் அவர் கைக் கொண்ட தெய்வமோ பொய்" என்றார்கள். அதுகேட்ட அரசன் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ் செய்ய, சுவாமிகள் உண்மையை யாவருக்கும் வெளிப்படுத்தவிரும்பி, அத்துருக்கர்க ளுடைய உத்தேசப்படியே காய்ச்சப்பட்ட இரும்பைக் கொணர் வித்து, 'சைவசமயமே மெய்ச்சமயமானால், அச்சமயத்திற்குரிய சிவபெருமானுக்குப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரி யன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுமே திருவுருவமானால், அவ் வெட்டனுள்ளும் அக்கினியே பிரதானமானால், இது சுடமாட்டா தென்னுங் கருத்தோடு அவ்விரும்பைத் தமது திருக்கரத்திலே ஏந்தியருளினார். அதுகண்ட யாவரும் அதியற்புதமடைந்து சிவ பெருமானே பரம்பொருளென்று தெளிந்து, சுவாமிகளைத் துதித் தார்கள். பொறாமை யதிகரித்துள்ள துருக்கர்களோ தங்கள் கருத்து முற்றாமையால்முகமபுலர்ந்து தலைகவிழ்ந்துநிற்க,சுவாமிகள் யாதொரு சலனமுமின்றி அரசனுடைய வேண்டுகோளின் படியே அந்த இரும்பை எறிந்துவிட்டுச் சபையிலே வீற்றிருந் தருளினார்.

பின்னொருநாள் அத்துருக்கர்கள் அரசனையடைந்து, "துறவி களுக்குச் சாதிபேதங் கூடாது" என்று சாஸ்திரங்களிலே சொல் லப்பட்டிருத்தலால் துறவியாகிய குமரகுருபரசுவாமிகளுக்கு நமது கிருகத்திலே போசனஞ்செய்விக்கவேண்டும" என்று கூறக் கேட்டு, அரசனும அதற்குடன் பட்டவனாய்ச் சுவாமிகளுக்கு விண் ணப்பஞ்செய்ய, அதறகு மிசைந்து, தமது வேலைக்கார ரொருவனை ஒரு தட்டிலே சில செவ்வரத்தம்பூவை வைத்து ஒரு வெள்ளைப் பரி வட்டத்தினாலே மறைத்துக்கொண்டு வரும்படி நியமித்துவிட்டு, தாம் முற்சென்று, அங்கே தமக்காகப் படைக்கப்பட்டிருந்த மாமி சங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே வினாவி, "பன்றிமாமிசம் ஒன்றுமாத்திரம தவறியதுபோலும, ஆனால் அது என்னிடத்தி லிருக்கிறது" என்று சொல்லி, வேலைக்காரன் கொண்டுவந்த தட்டை வாங்குதற்குக் கைநீட்ட, அம்மிருகத்தின் பெயரையுஞ் சொல்லாத துருக்கர்களோடு அரசனும வெட்கப்பட்டு அதனைத் தடுத்தான். சுவாமிகள் அரசனைத் தமவயமாக்க விருமபி, அங்கே படைத்துள்ள மாமிசங்களனைத்தையும் உற்று நோக்க, அவைக ளெல்லாம் காய், கனி முதலிய பல அரிய தின்பண்டங்களாயின. அதுகண்ட அரசன் சுவாமிகளை வணங்கித் தனது குறையை

யிரந்து, "இனி அடியேன் செய்யவேண்டிய பணியாது?" என்று வினவ, சுவாமிகள், "உமது ஆளுகையிலுள்ள இக்காசிமாநகரத்தில் நாம எண்ணிவந்த தர்மத்தை நடத்துதற்கு ஓரிடமவேண்டும" என்றார். அரசனும் "தேவரீருக்குப் பிரீதியான இடந்தருவேன்" என்று உடன்பட்டான். அன்றிரவு நித்திரை செய்யும்பொழுது கேதாரேசுவரர் சுவாமிகளுடைய சொப்பனத்திலே தோன்றி, 'அன்பனே நீ அரசனிடத்திலே உபயகருடன் வட்டமிடும் இடத்தைக் கேள்' என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளைத் துதித்து, மற்றை நாள் உஷக்காலத்திலே கேதாரேசுவரரைத் தரிசித்துக் கொண்டு வெளியிலே வந்தபோது, அந்தக் கேதாரகட்டத்தின் அருகில் அரசனுடைய பள்ளிவாசலில் சிவாஞ்ஞைப்படி உபயகருடன் வட்டமிடக் கண்டு, திருவுள மகிழ்ந்து, அரசனிடத்திற் சென்று தெரிவித்தார். உடனே அரசன் யாதொரு தடையுஞ் சொல்லாமல், அந்த இடத்தில் ஒரு பெரிய மடங் கட்டி, அதிலே தனது முகருமம வைத்து, தத்தஞ் செய்து இவருக்கு வேண்டிய சிறப்புக்களையும் கொடுத்தான். அதுவே குமாரசாமி மடம் என்று சொல்லப்படும.

சுவாமிகள் அத்திருமடத்திலே எழுந்தருளியிருந்துகொண்டு, திருமலைநாயக்கர் கொடுத்த திரவியங்களைக் கொண்டு அவர் பெயரினால் ஒரு சத்திரங் கட்டுவித்து, தருமபரிபாலனஞ் செய்தமையேயன்றி கேதாரநாதருக்கும் ஆலயமமைத்து, விதிப்படி நித்திய நைமித்திகங்களை ஏற்படுத்தி, காலந்தோறும் தரிசனஞ் செய்து கொண்டு அத்தலத்திலே வசித்திருந்தனர். ஒருநாள் தமது ஞானாசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்னும் அன்பு அதிகரித்தலால் கேதாரநாதரையும விசுவநாதரையும தரிசித்துக்கொண்டு பிரஸ்தானமாகி, இடையிலுள்ள தலங்களைத் தரிசித்து, தருமபுரத்தின் எல்லையை யடைந்து, சிவிகையினின்று மிறங்கி, திருமடத்தினுள்ளே சென்று, ஞானாசாரியரைத் தரிசித்து, திருவருள்பெற்றுச் சிலநாள் உடன் வசித்து, காசியை மீண்டும் அடைந்தனர் இங்ஙனம் மூன்றுமுறை வந்து தரிசித்துச் சென்ற பின்பு நாலாவது முறையிலே ஞானாசாரியருடைய சந்நிதியிலே நின்று, "இனி அடியேனுக்கு எம்பெருமானுடைய தரிசனத்தைவிட்டு நீங்கிக் காசியிலிருக்க மனமில்லை" என்று விண்ணப்பஞ் செய்தனர். அப்போது ஞானாசாரியார் பிரிவாற்றுமையால வருந்தும் சுவாமிகளை நோக்கி,

காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்கமலை

வீட்டிருந் தாண்டருள் ஞானப்பிரகாசன் விரைமலர்த்தாள்
நேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே.

என்னும் கட்டளைக்கலித்துறையை யருளிச்செய்து, சொக்கலிங்க மூர்த்தியையும் மீனாட்சியம்மையையும் கிரியாபூசையாக எழுந்தருளப்பண்ணிக்கொடுத்து, திருவருள்பாலித்து விடையளித்தனர். சுவாமிகள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, அங்கே எழுந்தருளி விளங்கும் சொக்கலிங்க மூர்த்தியின் சந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து, அரிதினீங்கி, காசியை யடைந்து, அரிய சிவதருமங்களை யியற்றிக்கொண்டு சிவாநுபூதிச் செல்வராய்ச் சிலகாலம் வீற்றிருந்து வைகாசிமாதத்திலே, கிருஷ்ண திருதியையிலே, சிவபெருமான் திருவடிநீழலிற் கலந்தருளினார். இவர் காசியில் வசிக்குங்காலத்தில வெள்ளியம்பலவாணர் முதலாயினோர் இவருடன் இளவல்களாகவிருந்து கல்வி பயின்றனர்.[1]

இப்பெரியார் வாழ்ந்த காலத்தைக் குறிக்கக் கூறக்கூடிய சாதனங்கள் இருக்கின்றன. இவர் திருமலைநாயக்கருடைய வேண்டுகோட்கிணங்கி நீதிநெறிவிளக்கம் பாடியது ஒன்றே காலத்தைக் குறிக்கச்சாலும். திருக்கயிலாய பரம்பரையைச் சார்ந்த தருமபுர மடம் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்டதென்பது அறிஞர் அறிந்தது. அம்மடத்தின் நாலாவதுபட்டத்தில வந்த மாசிலாமணி தேசிகர் இவ்வடிகளை யாண்டருளினமையும் மற்றொரு சான்று. இவற்றால இப்பெரியார் பதினேழாம நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார்.

குமரகுருபரர் செய்த நூல்கள்

1. **கந்தர்கலிவெண்பா.** இந்நூல் இயற்றிய காரணம் தலைப் பிற் கூறினோம். இது முருகனது திருவருளைப்பெற முக்காலத்தும் பாராயணம் செய்யப்படுமொரு நூல் என்பதே இதன் பெருமையைக் குறிக்கப் போதியது. 122 கண்ணிகளையுடையது.

2. **கயிலைக்கலம்பகம்.** தமது பிறப்பிடமாகிய கைலாசபுரத்திலே கோயில்கொண்டுள்ள சிவபிரான்மீது செய்யப்பட்டது. அந்நூலின் ஒருபகுதியே இதுபொழுது கிடைப்பது.

3. **மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.** இதன்பெருமை முன்னர்க் கூறினோம். இது நூறுபாக்களை உடையது. இனிய சந்தமும் இன்னோசையு முடையது.

---

1. இவ்வடிகளைச் சார்ந்தாரது கால்வழியினர் சீவைகுண்டத்தில் இருக்கின்றனர்; அவ்வூர் திரு. குமரகுருபரன்பிள்ளை B. A. B. L. அவ்வகையினருள் ஒருவராவர்.

4. **மீனாட்சியம்மை குறம்.** இது 51 பாக்களையுடையது. குற வஞ்சியென்று கூறப்படும் பிரபந்த வகையினுள் சில பகுதிகளை நீக்கிக் கூறப்படுவது. இதனுள் அம்மையின் பெருமை பெரிது மெடுத்துச்சொல்லப்படுகின்றது. இந்நூலையும் அடுத்துவரும் இரட்டை மணிமாலையையும், சிவகாமியம்மை இரட்டைமணிமாலை யையும் அடிகள் இயற்றவில்லை யென மகாமகோ. டாக்டர். வே. சாமிநாதையர் தாம் எழுதி இவ்வாண்டு பதிப்பித்த குமர குருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டில் கூறுகிறார்கள். அச்செய்திக்குத் தடையாக நிற்பது குறத்தின் பின்னே காணப்படும்.

நீர்வாழி தென்மதுரை நின்மலனு ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி சச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே

என்ற வாழ்த்துச்செய்யுள். இதனுள் காணப்படும் திருமலை பூபதி திருமலைநாயக்கராவர். ஆகவே ஐயரவர்கள் சொல்வது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

5. **மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை.** இது வெண்பாவும் கலித்துறையும் மாறி மாறி வரும் இருபது பாக்களைக்கொண்ட நூல்.

6. **மதுரைக்கலம்பகம்.** சொக்கலிங்கப்பெருமானது பெருமையைக் கூறுவது. சோமசுந்தரக் கடவுளது திருவிளையாடல்களைப் பெருமிதத்தோடு பல செய்யுட்கள் கூறும். நூற்றிரண்டு பாக்களை யுடையது.

7. **நீதிநெறி விளக்கம்.** இது நீதிகளைக் கூறுவதொரு நூல். நூற்றிரண்டு வெண்பாக்களாலாயது இந்நூலிலுள்ள பாக்களெல்லாம் பொன்னேபோற் போற்றத் தகுந்தவை. (வருந்தி)த்தாங்கற்ற,(முற்றுமுணர்ந்தவர்)என்பதுபோன்றசெய்யுட்கள் சாலச் சிறப்புடையன, அறிவுச்சுடர் கொளுத்தக்கூடியன. இது ஆங்கிலம் முதலான மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இந்நூல் தமிழ் ஆங்கிலப் பாடசாலைகளிலும் பாட புத்தகங்களி லமைந்திருப்பது சாலப் பொருத்த முடையது.

8. **திருவாரூர் நான்மணிமாலை** திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகப் பெருமான் மீது பாடப்பெற்றது. நாற்பது பாக்களைக் கொண்ட நூல். இந்நூலுள்வரும் அகவற்பாக்களெல்லாம்

மற்றையவற்றைக் காட்டினும் மிக்க விழுமிய பொருள் படைத்தவை.

தேவா சிரியன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திர கணங்களென் றேடினர் வணங்கி
யருக்கிய முதல வகனமர்ந் தளிப்ப
வித்தலத் துற்றவ ரினித்தலத் தரு௵ெனக்
கைத்தலத் தேந்திய கனன்மழு வுறழு
மழுவுடைக் கைய ராகி விழுமிதின்
மாந்தர் யாவருங் காந்தியிற் பொலியும்
வாமிகு கமலைத் திருநகர் 28

நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே. 36

வண்டுகூட் டுண்ண நுண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழுக்கால் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தென்னக் கிளைதொறும் பிணைத்து
மறிந்துகீழ் விழுந்த நறுந்துணர்க் கொடிக
ளாற்றிசைப் புறத்து நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித் தண்டினிற் படரவப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் களிமயி லடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றாக்கி
முட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திக டொடர மருண்டுமற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனு ளொருத்தி யாடின ணிற்பப்

பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடந்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனி னடக்கும் வண்ணம தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவு
ளன்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த
வருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடு
மிந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி
யந்தமி றிருவொடு மரசவற் குதவி
யொருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந் தனுக்கு முன்னின் றாங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவா வழங்குமான் மன்ற
யாவிரு நமர்கா ளிறைஞ்சுமின் னீரே.

9. **முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.** இது புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகப்பிரான் மேற்று. இப்பெம்மான் புனல் நாட்டினது கண் கண்ட தெய்வம். இந்நூல் நூறுபாக்களைக் கொண்டது.

10. **சிதம்பர மும்மணிக்கோவை.** தில்லையின் கண்ணே கோயில் கொண்டுள்ள நடராசப் பெருமான் மீது பாடிய முப்பது பாக்களையுடைய ஒரு நூல் விழுமிய பொருளுடையது. கூத்தப் பெம்மானது முத்தொழிலையுங் குறிக்குமாறு கூறிய செய்யுளொன்றும் பிறிதொரு செய்யுளும் வருமாறு :

மன்றம் பொருட்டா மதிலிதழா மாடங்க
டுன்னும் புயல்கள் சுரும்பராப்—பொன்றங்கு
நற்புண்ட ரீகமே யொக்கு நடராசன்
பொற்புண்ட ரீக புரம். (2)

புரமொன் றிரண்டும் புகையழ லுண்ணப் புவனமுண்ணுஞ்
சரமொன் றகிலஞ் சலிக்கவெய் தோய்சலி யாநடஞ்செய்
வரமொன் றிரண்டு மலர்த்தாளு மூன்றிற்றன் மாமகுடம்
பரமொன்று மென்றுகொல் லோகொண்ட வாவப் பதஞ்சலியே. (3)

11. **சிதம்பரச் செய்யுட்கோவை.** இது எழுந்த காரணமும் இதனது பெருமையும் முன்னர்க் காட்டப்பட்டன. இது 84-பாக்களை யுடையது.

12. சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை. சிதம்பரத்தின் கண்ணே கோயில் கொண்டுள்ள உமாதேவியாரான சிவகாமி யம்மையின் மேல் பாடப்பட்டது. இருபது செய்யுள்களை யுடையது.

13. பண்டார மும்மணிக்கோவை. இது பாடியகாரணம் முன்கூறப்பட்டது. இந்த நூலிலே சைவசித்தாந்தக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன.

....
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
மேன்மையோ டமர்ந்த ஞானசம் பந்த
வீண்டுனைத் தமியனேன் வேண்டுவ தியாதெனி
னங்கிய மென்று மநங்கிய மென்று
மிங்கிலை யிரண்டு மெய்திற் றென்றும்
பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப் புரிவதுவே. (4)

முற்படு மாயை முதற்கரை நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி
யீரிரு கண்ணுற் றெழுதரம் வகுத்த
வாறே ழிரட்டி நூறூ யிரத்த
செயற்படு செய்களி னுயிர்ப்பயி ரேற்றி
யூழெனப் பட்ட தாழ்புனற் படுகரிற்
றெய்விக முதலாச் செப்புமும் மதகு
மொவ்வொரு மதகா வுடனுடன் றிறந்து
தாக மென்னுந் தனிப்பெருங் காலிற்
போக மென்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயுமைம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரன்முறை தேக்கலு
மிதத்துட னகித மெனுமிரண் டூற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புன லதனை மந்திர முதலா
வோரா றுவகைப்படு மேரிக ணிரப்பி
விளைவன விளைய விளைந்தன வறுத்தாங்
கொருகளஞ் செய்யு முழவ னாகி

மாநிலம் புரக்கு மாசி லாமணி
ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியம் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவய னுப்ப
ணருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
வோரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னுயினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனுல்
வேம்பெனக் கொண்டன னின் விண்ணவ ரமுதே. (10)

14. காசிக்கலம்பகம். இது காசியிலெழுந்தருளிய விசுவநாதர்மேற்று; நூறு செய்யுட்களை யுடையது.

15. சகலகலாவல்லிமாலை. இது பாடற்குரிய காரணம் முன்னர்க்கூறினும். இது தோத்திரரூபமாக அமைந்த தென்பதும்வாக்கு வன்மையைத்தரவல்லது என்பதும் அறிஞர் பலரது கொள்கை. இது வெள்ளைக்கிழத்தி மாலை எனவும் வழங்கும்.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.

16. காசித் துண்டிவிநாயகர் பதிகம் என்பது காசியில் எழுந்தருளியுள்ள விநாயகர்மேற்று. அச்சிடப்பட்டுள்ளது.

9. வெள்ளியம்பலவாணத் தம்பிரான்

திருத்தொண்டர் புராணமென்ற பெரிய புராணம், தேவார முதலாய சிறந்த நூல்களிலே நூலாசிரியர் பாக்களுக்கும் தம் பாக்களுக்கும் வேறுபாடு தோன்றாதவாறு பாக்களை இடைமடுத்துச் சென்றார் ஒரு புலவர். அவ்வாறு இடைமடுத்த பாக்களை வெள்ளி பாடலென்பர் அறிந்தோர். அத்தகைய சிறந்த புலவரது இயற்பெயர் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் ஆகும். வெள்ளியம்பலவாணர் திருநெல்வேலிச் சீமையினர், சுத்த சைவர். 'இவர் இளமையிலேயே தருமையாதீனத்தில் நாலாவது பட்டத்திலெழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகரிடம் தீட்சையும் யாத்திராகாஷாயமும் பெற்றவர்[1].' அக்காலத்திலே மிக்க சீரும் சிறப்பும் பெற்று அவ்வாதீனத்தைச் சார்ந்து அப்பொழுது காசி முதலாய க்ஷேத்திரங்களிலே தருமங்களை நடத்திவந்த குமரகுருபரரிடத்திலே காசி சென்று கலவிகற்றனர் தென்மொழியோடு வடமொழியிலும் வல்ல பண்டிதர். ஐந்தாவது பட்டத்திலிருந்த ஞானசம்பந்த தேசிகரிடம் சைவ சந்நியாசம் பெற்றார். அக்காலத்திலே இவரது கல்வி வல்லமையாலும் போதிக்குந் திறனாலும் அநேக நன்மாணாக்கர்களைப் பெற்றார். சோழநாட்டிலிருக்கும்போது பட்டினத்தடிகள் பிறப்பிடமான திருவெண்காட்டிலே நடேசப்பெருமானுக்குத் திருச்சபையும், திருமாணக்குடி புள்ளிருக்குவேளூர் முதலான விடங்களிலே சில திருப்பணிகளுஞ் செய்தார்.

திருநெல்வேலியிலே சிந்துபூந்துறையி லிருக்கும் ஆதீனமடத்திற்றங்கிப் பல மாணாக்கருக்குக் கலைகற்பித்துக் கொண்டிருக்கும்போது புலவர் சிகாமணியெனப் போற்றப்படும் சிவப்பிரகாச அடிகளும் அவருடைய இளவல்களும் சென்று தமது கல்வியைப் பூர்த்திசெய்துகொண்டனர். இவ்வாறாகப் பல மாணாக்கர்களுக்கும் வித்தியாதானஞ் செய்துகொண்டிருந்து தமது முதுமையில் சிவபெருமானது திருவடிநீழலையடைந்தார். வெள்ளியம்பலவாணவர் செய்தநூல்கள் **1.** ஞானசம்பந்ததேசிகர் சமூகமாலை, **2.** தாலாட்டு, **3.** திருப்பள்ளியெழுச்சி என்ற குருதோத்திரங்களும், **4.** முத்தி நிச்சயச் சிற்றுரை, **5.** பேருரை, **6.** சிவஞான சித்தி ஞானாபரண விளக்கம், **7.** மிருகேந்திரம் முதலாயினவாம். இவற்றுள்,

---

1. சைவத்துறவிகள் முதலில் துறவறம்பூணுமுன் யாத்திராகாஷாயம் பெற்றுப் பரதேசியாகி யாத்திரை செய்து வந்த பின்னர் மந்திரகாஷாயம் பெறுவது மரபு. அதன் பின்னரே தம்பிரான் என்றழைக்கப்படுவர்.

1—3 குருஸ்தோத்திரங்கள். 4—5 முத்திநிச்சயவுரைகள். தருமையாதீன ஸ்தாபகரான ஞானசம்பந்த தேசிகோத்தமரால் இயற்றப்பட்ட முத்திநிச்சயம் என்ற நூலுக்கு ஒரு சிறிய உரையும் பேருரை யொன்றும எழுதியிருக்கின்றார். அவற்றுள் சிற்றுரை அச்சேறியிருக்கின்றது. பேருரையும் அண்மையில் வெளிவருதல் கூடும.

6. ஞானாபரண விளக்கம். இது சிவஞானசித்திக்குச்செய்த மாபாடியம்: இதனுதவி கொண்டே திருவாவடுதுறை மாதவச் சிவஞானயோகிகள் சிவஞானபோத மாபாடியமெழுதினர் என்பது கன்னபரம்பரைச் செய்தி, இவ்விளக்கவுரையில் ஆகமக் கருத்துக்களும் பல ஆகமங்களின் மேற்கோள்களும மலிந்து கிடக்கின்றன:

7: மிருகேந்திரம்: 'மிருகேந்திரம்' என்னும் உபாகமத்தின் மொழிபெயர்ப்புப்போலும்.

முனிவர் அநேக செய்யுள்களைத் தேவாரம், பெரியபுராணம் முதலியவைகளில் இடைமடுத்தாரென்றோம். நம்பியாரூரரென்னும சுந்தரமூர்த்திகளது பாடல்களில் இப்பொழுது திருநாகைக் காரோணப் பதிகம் என்று பதிப்பித்திருக்கும், 'பத்தூர் புக்கிரந்துண்டு பலபதிகம் பாடி' என்று தொடங்கும் பதினொரு பதிகங்களையும சிலர் வெள்ளிபாடல்களென்றும் மற்றுஞ் சிலர் 'பொன்னுமிதழிவிரை மத்தம் பொங்குகங்கை புரிசடைமேன்' என்று தொடங்கும் பதினொரு பதிகங்களையும வெள்ளி பாடலென்றும் கூறுவர். பிற்கூறிய பொன்னுமிதழி விரைப் பாசுரங்கள் இக்காலத்துப் பதிப்புக்களில் அச்சாகவில்லை. காரணமும் விளங்கவில்லை. பெரிய புராணத்திற் கண்ட வெள்ளிபாடல்கள் அப்புராணத்திலேயே வெள்ளிபாக்களெனக் குறிக்கப்பட்டுள.

இப்புலவர் பெருமானுடைய காலம் யாதெனஆராய்வோமாயின் இவர் சந்நியாசம்பெற்றுக் கல்வி கற்றது குமரகுருபரரிடத்தேயாகலான், அவர் வாழ்ந்த காலமான பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குப் பிற்பட்டதென்பது அமையும். மேலும் இவரது மாணாக்கரான சிவப்பிரகாச அடிகள் கி. பி. 1652-ல் பிரபுலிங்கலீலை இயற்றியிருப்பதாலே, அவருடைய காலத்திற்குச் சிறிது முந்தியதும் பிந்தியதுமாகப் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவரென்று கொள்வது பிழையாகாது.

10. மாதைத் திருவேங்கடநாதர்

திருவேங்கடநாதர் என்பார் காவேரியாற்றின் வளப்பத்தாற் செழிப்புடையதான சோழநாட்டிலே காவேரி நதிக்கு அருகிலுள்ள மாதை யென்ற மாத்தூரிலே வாழ்ந்த ஒரு சுமார்த்தப்பிராமண குடும்பத்திலே பிறந்தவராவர். இவரது தந்தையார் பெருமாளையர் எனப்பெறுவர். பெருமாளையர் பொறை வாய்மை நல்லறிவு முதலிய சீரிய குணங்கள் வாய்ந்தவர். 'அரும்பொறை வாய்மை நல்லறிவின் வேலையாய் வரும்பெருமாள்' என்பது மெய்ஞ்ஞான விளக்கம். சீலம் ஒழுக்கம் முதலியவைகளையுடைய பெருமாளையரது அருந்தவப் புதல்வராகப் பிறந்த திருவேங்கடநாதரும் தந்தையாருடைய உயர்ந்த குணங்களைப் பெற்றிருந்தனர். 'கல்விக்கெல்லை கருணைக்காகரம், பெருமாண் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய... திருவேங்கடநாதன்' என்பது இலக்கண விளக்கச் சிறப்புப்பாயிரம். இவர் சுமார்த்தப்பிராமண வகுப்பைச் சார்ந்தவராயினும் 'திருமகணாயகன் செம்பொன் னடியிணையிணையும் வணங்குஞ் சென்னியா'ராவார்.

மாதையென்பது திருவாமாத்தூர் எனவும், அது தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள விழுப்புரத்தைச் சார்ந்த திருவாமாத்தூராகுமெனவும், திருவேங்கடநாதர் காணியாளப்பிராமணர் எனவும் கூறுவர்.[1] இச்செய்தியைப் பின்பற்றியே சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமது தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் 'இவரூர் நடுநாட்டிலுள்ள திருவாமாத்தூர்;[2] குலம் வேதியர் குலம்; சமயம் வைணவம' என்றும், 'திருவேங்கடநாதரூரைச் சிலர் ஆமாத்தூர் என்பர்: சிலர் மாயூரத்தருகிலுள்ள மாந்தை[3] என்பர்" என்றுங் கூறுவர்.

ஈண்டுக் கூறிய திருவாமாத்தூர் நடுநாட்டிலுள்ளதொரு சிவத்தலம். வெள்ளாற்றின் வடபாலும் பாலாற்றின் தென்பாலுமுள்ள நாட்டை நடுநாடென்பர். திருவேங்கடநாதருடைய மாதையோ, சோழ நாட்டிற் காவிரிக்கரையிலுள்ளதோரூர்.

> பொன்னி மாநதி புடைபரந் தோங்கலிற் புதுப்பூங்
> கன்னி வாழையுந் தாழையுங் காய்க்குலைக் கமுகும்
> பின்னி நீள்கதிர்ச் செந்நெலுங் கன்னலும் பிறவு
> மன்னி நீடிய வளவர்சோ ணாட்டொரு வள்ளல்

---

1. செந்தமிழ் IV, 629-638; J. O. R. S, ii, 34-43. 2. தமிழ்ப் புலவர்கள் சரித்திரம், பக். 119. 3. ஷை உபக்கிரமணிகை, 11.

என்றும், 'மறைக்கு லந்தவழ் நெடுமதின் மாதைக்கு மன்னன்' என்றும் மெய்ஞ்ஞான விளக்கப் பாயிரம் கூறும். 'காவேரியாற்றினன், சோழ வளநாட்டினன்; தென் மாதைப்பதியான்' என்று பணவிடுதூது கூறும். ஆகவே திருவேங்கட நாதரது மாதையென்பது நடுநாடென்றும் திருமுனைப்பாடி நாடென்றும் கூறப்படும் பகுதியிலுள்ள திருவாமாத்தூ ரன்றென்பதும், அது சோழநாட்டின்கண் காவிரியாற்றின் மருங்குள்ள தென்பதும் தெளிவு. களத்தூர் களந்தையாயினாற்போல மாத்தூரும் மாதையென மரீஇயிற்று. இப்பெயருடைய ஊரொன்று காவிரியின் மருங்கிலே அந்தகனைக் காலா லடர்த்த திருக்கடவூருக்கு மேல்பா லிருக்கின்றது. அது அன்றுதொட்டு இன்று காறும் பிராமணர் வாழும் கிராமமாகவே யிருக்கின்றது. திருவேங்கட நாதர் சமயத்தில் வைணவரென்பதற்கும் சாதியில் காணியாளரென்பதற்கும் போதிய ஆதாரம் காணப்படவில்லை. சுமார்த்தப் பிராமணர்கள் பூசிசாதனமுடையரா யினும் வைணவப்பற்றுடையவரே யாவர். அதுகொண்டு வைணவராகக் கூற இயலாது.

திருவேங்கடநாதர் தந்தையாரைப்போலவே சீலம் ஒழுக்கம் முதலிய நற்குணங்களுடையவர். கல்வி கேள்விகளில் மேம்பாடுடையவர். இவைகளை யறிந்த நாயக்கவரசர்கள் திருவேங்கடநாதரைத் தமது காரியகர்த்தராக்கி ஒரு மண்டலத்தைப் பரிபாலிக்கச் செய்தனர். இது, 'திருமாலுலகம் செய்வதின் புரக்கும் திருவேங்கடநாதன்' என்று இலக்கண விளக்கப் பாயிரமும், 'திருவேங்கடநாதமண்டலிகன்' என்று பணவிடுதூதும் 'திருவேங்கடமாயன்—வளர் செங்கோல் நடத்துந் திருநாட்டில்' என்று சாத்தூர் நொண்டி நாடகமும் கூறுவதனால் விளங்கும். இவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கயத்தாற்றுச் சீமையைப் பரிபாலித்துவந்தார், அச்சீமையிலே மந்தித்தோப்பு என்றொரு கிராமமுண்டு. அதனில் சங்கர பாரதித் தம்பிரான் என்று ஒரு பெரியார் இருந்தார். அவருடைய மடத்தின் செலவுக்காகச் சகம் 1466-லே விசுவநாத நாயக்கராட்சியில் காரியகர்த்தராயிருந்த திருவேங்கட நாயக்கர் விசுவநாத நாயக்கருத்தரவுப்படி சில கிராமங்களைச் சர்வமானியமாக விட்டிருந்தார். ஆயினும், இந்தச் சர்வமானியக் கிராமத்துக்காக 20 பொன் பொறுப்புக்கட்டும்படி ஏற்பாடிருந்தது[1]. அதனைத் திருவேங்கட நாதர் நீக்கினதாக ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அது வருமாறு[2]:

1. 288 of 1928. 2. 289 of 1628.

'சகாத்தம் ௲௫௱௩௰௫-ன் மேற் செல்லாநின்ற பிரமோதூத வருஷம் தைமீ 1உ விசுவநாதநாயக்கரய்யன் திருவேங்கடநாயக்கரய்யன்[3] காரியத் துக்குக் கர்த்தரான திருவேங்கடநாதர் மந்தித்தோப்பச் சங்கரபாரதித் தம்பிரானுக்குச் சறுவமானியப் பட்டயம் [5]குடுத்தபடி...சீமைக்குள் மந்தித் தோப்பு முன்னாள் செகவீரராமராசாவின் பண்டாரத்திலே சங்கரபாரதித் தம்பிரானுக்கு சறுவமானிய மாகக் கட்டளையிட்டு நடத்துகி[றதற்]கு கயத்த[ாறுசீர்]மை அ...நதறந்து கட்டிக்கொண்டு [உய பொன்] வருசத்துக்கு [இ]ருபது [பொன்] தாங்களே கொடுத்து வந்ததை இப்பொழுது சறுவ மானியமாகக் கட்டளையிட வேணும் என்று...நமக்குச் சொன்ன படியினாலே சுவாமி திருமலைநாயக் கரய்யனுக்குப்[6] புண்ணிய மாகவும் தித்தயப்ப செட்டியாரய்யன் குமாரனச்சுத்து சீரங்கப்ப செட்டியாரய்யனுக்குப் புண்ணிய மாகவும் பொ[ன் 20] இருபது பொன்னும் வேண்டாமென்று சறுவமானி யமாகக் கட்டளை யிட்டோம். இந்தப்படிக்குச் சந்திராதித்தவரை சந்ததிப் பிரவேசமே சறுவமானியமாக அனுபவித்துக்கொண்டு இப்ப[டி பூசை]யும் மடத்தையும்[7] சீவிதத்தையும் பரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகத்தில் இருக் கவும்......' என்பதாம்.

இதனால், திருவேங்கடநாதர், திருமலைநாயக்கர் காலத்திலே கயத்தாற்றுச் சீமையைப் பரிபாலனம் செய்துவந்தாரென்பது இனிது பெறப்படும்.

ஒருநாட்டை அரசுபுரிவது எளியகாரியமன்று. மிகுதியுமிடுக் கணுடையதேயாகும். அரசன் தக்க அமைச்சு ஒற்று முதலிய உறுதிச்சுற்றத்தால் சூழப்பட்டிருந்தாலன்றி அரசாட்சி செங் கோன்மையுடையதும் எளியது மாகாது. அரசனும் கல்வியிலும் அரசாட்சியிலும் மேம்பாடுடையவனாக இருத்தல்வேண்டும். இத் துணைச் சிறப்போடு கல்வியிலும் வல்லவனாக இருத்தல் சிறிதும் இயலாத காரியமாகும். அவ்வாறு கல்வியில் மேம்பாடுடையவனாக இருப்பின் அவனைச் சிறந்தவனாக உலகமும் அரசும் மதிக்கும். இத்துணைச் சிறப்புடையவராகப் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் தமிழ்நாட்டிலே அதிவீரராமனும் வரதுங்கராமனு மாவர். வடநாட்டிலே கிருஷ்ணதேவராயரைக் கூறல் தகும்..

3. மதுரை நாயககவரசர், திருமலை நாயக்கரென்றிருக்கவேண்டும் 1529—1564. 5. கொடுத்த என வாசிக்க. 6. திருமலைநாயக்கர் 1623—1659. 7. மந்தித் தோப்பு மடம், மகாமகோ. டாக்டர் ஐயரவர் களுக்குப் பல ஏடுகளும், சுவடிகளும் தந்தன. புறநானூறு காண்க.

பதினேழாம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர்களில் அநேகர் அரசர்களாயிராவிடினும் மாபெருந்தலைவர்களாக இருந்து அரசாட்சியோடு கல்வியிலும் மேம்பாடுடையராக இருந்திருக்கின்றனர். அவர்களுள்ளே சிறந்தோராக மாதைத் திருவேங்கடநாதரையும் மாதை வேங்கடேசுரனையும் கூறல் தகும்.

'தந்திர முதுமறை தவழு நாவினன்'
'அறம்பொரு ளின்பம்வீ டாய நால்வகைத்
திறந்தெரிந் தந்நெறி செலுத்துஞ் செய்கையான்' (5)

'மண்ணிடத் தவரவர் மதியும் மற்றவ
ரெண்ணிய எண்ணமும் இனிய யாவையு
முண்ணில வுறவகன் றொருங்கு காட்டலாற்
கண்ணடி யாமெனக் கருதுஞ் சூழ்ச்சியான்' (7)

'திணிபுயத் தரசர்தஞ் செம்பொன் மாமுடி
மணிநிரைத் தீபஞ்சூழ் வனசத் தாளினன்
பணிகொளெண் டிசையெனும் பாவை மார்செவிக்
கணிமலர்த் தாரென லாகும் கீர்த்தியான்' (8)

'..............நனியுல களித்தும்
சீதைகா தலனெனத் திசைக ளெட்டையும்
நீதியாற் புரந்துநன் னெறி நடாத்திய
வேதபாரகன்' (14)

'பன்னரு மனுமுறை பகர்ந்த நீதியா
லன்னவன் புவிபுரந் தருளுங் காலையில்'[1] (15)

என்று வருந்தொடர்கள் மாதைத் திருவேங்கடநாதருடைய ராஜ்ய பரிபாலன முறையை விளக்கவல்ல சான்றுகளாக நிற்கின்றன.

இவருக்குப் பிள்ளைகள் அறுவராவர். அவருள் மூத்தவர், சொன்ன கிருஷ்ணையர் எனப்படுவர். இரண்டாமவர் புதல்வர் வேங்கடேசையர், மூன்றாமவர் புதல்வர் மணிவண்ணப் பெருமாளையர், நான்காமவர் புதல்வர் ராஜகோபாலையர், ஐந்தாமவர் புதல்வர் கனகசபாபதி ஐயர், ஆறாமவர் புதல்வர் வேங்கடராமையர். இவ்வடைவினருள் வேங்கடேசையர் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தார். மணிவண்ணப் பெருமாளையர் என்பார் எண்ணெண் கலைஞானங்களையும் அறிந்து அரங்ககிருஷ்ண பூபாலனுக்குத் தம்பியென்று கூறும்படி அத்துணைக் கேண்மையராய் மதுரைவீட்டு

1. 'மெய்த்ஞானவிளக்கம்' பாயிரம்.

வாசற்பிரதானியாக இருந்தார். இராசகோபாலையர் நாயக்கமன்னராட்சியிற் பிறிதொரு பகுதியை ஆண்டுவந்தார். கனகசபாபதி ஐயர் கல்வியிற் பெரியராக இருந்தார். இச்செய்திகளைப் பணவிடு தூது மிக அழகாகக்கூறும். அவ்வடிகள் வருமாறு :

'.................................... முறை முறையே
தெண்டனிடும் வாசற் றிருவேங்கட நாத
மண்டலிகன் பெற்ற வரபாலன்—பண்டைநாள்
ஆதிசுப்ர மண்ய ரமார்சிறை மீட்கவந்து
சோதி மயவடிவாய்த் தோன்றியபின்—நீதிதிகழ்
ஆறுமுகம் வெவ்வே றவதார மாகியிந்நாள்
வீறுபுவி காக்கவந்த மேன்மைபோல்—பேறுமிகத்
தன்னுடனே யைவர் சகோதரநுந் தானுமெழின்
மன்னவர்சி காமணியாய் வந்தபிரான்—மின்னு
மருக்குங் குமமார்பன் மார்க்கண்ட வாழ்வாய்
இருக்குந் துரை வேங்க டேசன்—பெருக்கமுள்ள
தேசப்ர தானமெனுந் தென்மதுரை வீட்டுக்கு
வாசற்ப்ர தானி மகாராசன்—ராசரிகக்
கிம்புரிமால் யானைசொன்ன கிர்ஷ்ணபூ பாலனுக்குத்
தம்பியென வந்த தயாளுவாய்—அம்புவியில்
எண்ணெண் கலைஞான மெல்லாந் தெளிந்தமணி
வண்ணப் பெருமாள் மகிபதியும்—தண்ணளியாய்த்
தேசமோ ராணைகொண்டு செங்கோன்மை செய்யவந்த
ராசகோ பாலந ராதிபனும்—நேசமிகு
துங்கனக ளங்கன் றுலங்குகன காவியப்ர
சங்கன் கனக சபாபதியும்—இங்கிதஞ்சேர்
திங்கட் டிருமுகத்திற் செங்கமலை கூத்தாடும்
வேங்கட்ட ராம விதரணனும்—இங்கிவர்கள்
பின்னுதித்த நால்வர் பிராணபதத் தம்பியா
முன்னுதித்து வந்த முகூர்த்தவான்'

என்பனவாம். இவ்வடிகளாலே திருவேங்கடநாதையர் வேறு என்பதும், பணவிடுதூது கொண்ட வேங்கடேசையர் வேறு என்பதும், இவர் முன்னவருடைய இரண்டாமவர் மைந்தரென்பதும், தெளிவான செய்திகளாம். இவ்வாறன்றி, பெருமாளையர் தனயரான திருவேங்கடநாதரும் அவருடைய இரண்டாமவர் புத்திரரான வேங்கடேசையரும் ஒருவரென மயங்கித் தனயருக்குரிய வெல்லாம் தந்தைக்குரியவாகக் கூறுவாருமுண்டு[1]

1. செந்தமிழ் iv; சாஸனத் தமிழ்க்கவி சரிதம், 189-192. பார்க்க.

அக்காலத்திலே இவர் திருவாரூர் வைத்தியநாத தேசிகரை ஆதரித்தவராதல் வேண்டும். வைத்தியநாத தேசிகர் திருவேங்கடநாதையருடைய இல்லத்தில் பாடங்கற்பிக்கையில் இலக்கண பாடம் கற்பித்துவரும்போது இலக்கண விளக்கம் இயற்றப்பட்டதாக ஒரு கன்னபரம்பரைச் செய்தியுண்டு. ஆதலினாலே திருவேங்கடநாதர் வைத்தியநாத நாவலரை ஆதரித்ததோடு அவரையே தம் மக்களுக்குத் தமிழ் கற்பிக்கும்படி செய்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. அவ்வாறு வைத்தியநாததேசிகர் போதகாசிரியராக இருந்தமையே இலக்கணவிளக்கம் மூலமும் உரையுமாக இயற்ற இடந்தந்ததாகும் என்று வைத்தியநாததேசிகர் புத்திரர் தம் புரவலரைப் பெரிதும் போற்றுவார்.

'எழுத்துமுதன் மூன்றையும் யாவரும் தெரியத்
தொகைவகை விரியிற் பகருக வென்று
வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதைய ரதிபன் வரகுண மேரு
கல்விக் கெல்லை கருணைக் காகரம்
பெருமான் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
திருமா லுலகஞ் செவ்விதிற் புரக்கு
மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன்
ஓதினனாக'[1].

இவர் அரசாட்சியிலே தம் காலத்தைக் கழித்து வந்தாலும் ஈசனிணையடி மறவா மாண்பினராவர். இச் செய்தியை,

'மேயபற் பலதுறை மேற்கொண் டுய்ப்பினு
மேயவில் வாழ்க்கையி லிருந்து மன்னதிற்
பாயுநன் மதுமலர்ப் பதுமப் பாசடைத்
தூயதண் புனலெனத் தோய்ந்துந் தோய்ந்திலான் (9)

'மனையறம் பூண்டுநல் வாழ்வின் வைகியு
மனையபல் கிளைஞரோ டளவ ளாவியு
நனியுல களித்துமெய்ஞ் ஞான மெய்திய
சனகனைப் போலிருந் தருளுந் தன்மையான்' (10)

என்ற மெய்ஞ்ஞான விளக்கச் செய்யுள்கள் நன்கு விளக்கும். இவருக்கு ஞானோபதேசஞ்செய்த குரவர் இராகவானந்தர் எனப்படுவர். அவரைக் குறித்த செய்திகள் ஒன்றும் நாமறிவதற்கில்லை. ஆயினும், இக்குரவரே திருவேங்கடநாதரைப்பார்த்து, 'அறம் பொருளின்பமும அகிலத்தோர் பெறத்-திறம்படப் புரிந்த நீ வீடுந்

1. இலக்கணவிளக்கப் பாயிரம்.

தேர்ந்தவர்-உறும்படி ஞானநூ லொன்று சொல்கென' அவரும், மெய்ஞ்ஞான விளக்கம் என்னும் நூலைப் 'பற்பல வருணத்தோர்க் கும் பாங்குறப் பகர்தலுற்றுர்' என்று அந்நூற்பாயிரம் கூறும். மேலும் அவர் முதலில் வடமொழியிலேயே இந்நூலைச் செய்துள் ளாரென்று தமிழ்நூற்பாயிரம் கூறும்.

சென்னைக் கிறிஸ்தவகலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதரா யிருந்து 1903-ஆம் ஆண்டிற் காலஞ்சென்ற வி. கோ. சூரியநாரா யணசாஸ்திரியார் அக்காலத்திலே நடந்துவந்த விவேகசிந்தாமணி என்ற திங்கள்வெளியீட்டிலே இலக்கணவிளக்கம வைத்தியநாத தேசிகரைக் குறித்து வரையுங்கால், 'மெய்ஞ்ஞானவிளக்க மென்று மறுநாமத்தையுடைய பிரபோத சந்திரோதயம் நமது நாவலரை யாதரித்து வந்த திருவேங்கடநாதரால் இயற்றப்பட்டதென்று கூறி மயங்குவாருமுளர். இவ்வாறு அவர்கள் பிராந்தியடைந்ததற்குக் காரணமென்னவென்று சற்று விசாரித்துப் பார்ப்போமாளுல்,

போதத் தமிழ்க்கும் வடகலைக்கும் புலவோர் தமக்கும் பொருள் விரித்துச்
சீதைக் கிறைவ னெனநீதிச் செங்கோல் செலுத்தித் திசைபுரந்து
வேதப் பனுவன் மெய்ஞ்ஞான விளக்கா லுலகை விளங்குமெங்கண்
மாதைத் திருவேங் கடநாத மறையோன் வாழி வாழியவே.

என்ற ஒரு விருத்தமேயென்பது வெளிப்படும். இந்தப்பிரபந்தத் தைத் திருவேங்கடநாதர் வேண்டுகோளின்படி வைத்தியநாத நாவல ரியற்றினரென்று முன்னே கூறியிருக்கிறேம். ஆதலால் வேங்கட நாதர் ஏவுதற்கருத்தாவும், நாவலர் இயற்றுதற்கருத்தாவுமாவார் கள். இதுவுமல்லாமற் சென்னையிலிருந்த வித்வான் தாண்டவராய முதலியாருடைய பிரபோத சந்திரோதயப்பிரதியில் நாவலரியற்றின தாகக் குறிக்கப்பட்டிருப்பதனுலும், மதுரை, நெல்லை, புதுவை முத லிய விடங்களிற் கன்ன பரம்பரையாக நாவலரியற்றினுரென்று வழங்குவதனுலும், யாம் கூறுவதே திருவாரூர் அபிஷேகஸ்தர்கட் கும் தருமபுராதீனத்தார் முதலாயினுர்க்கும் ஒப்பமுடிந்ததா மாத லாலும் இம்மயக்கம் தவரு யச்சிடப்பட்ட மூலம்பற்றி யுற்பத்தி யானதுபோலும்'[1] என்று எழுதுவர். நூலை வைத்தியநாத தேசிகரே பாடிப் புரவலருடைய பெயரால் வெளியிட்டதாக அவரது வழியில் வந்த பெரியோர்கள் சொல்லக் கேட்டதுமுண்டு. அக்கூற்றுக்குரிய அகச்சான்றுகள் பல அந்நூலிலுமுண்டு. ஆயினும்,

1. தமிழ்ப்புலவர் சரித்திரம். பக்கம் 32-34.

'அத்தகை வேதாந் தப்பா லாழியைத் தனது புந்தி
மத்தினா லுழக்கி மேனாண் மால்புல வோர்க்கு வாரிப்
புத்தமு தெடுத்தாற் போலப் பொருவிலா ஞான சார
மெத்தனை யவற்றை யெல்லா மின்புறத் திரட்டி வாங்கி

'சகத்தொரு ப்ரபோத சந்த்ரோ தயமெனு நாட கந்தான்
மிகுத்துரை செய்த க்ருஷ்ண மிச்சிரன் றானு நாணப்
புகழ்த்திரு வேங்க டேந்த்ரன் பூசுரர் குலத்துக் கெல்லாம்
வகுத்தகாப் பியமதாக வடமொழி யதனிற் செய்தும்

'கற்பதற் கெளிதாய் நாவிற் கனிந்துதே னூற மேலாந்
தற்பரஞ் சோதி தானாய்த் தம்முளே யுதய மாகச்
சொற்பசுந் தமிழி னாலுந் தொகுத்ததை மாதை வேந்தன்
பற்பல வருணத் தோர்க்கும் பாங்குறப் பகர்த லுற்றான்'

என்பது அந்நூற்பாயிரம், தமிழினாலும் தொகுத்ததைத் திருவேங்கடநாதன் வெளியிட்டான் என்று கொள்ளின் கன்னபரம்பரைச்செய்தி உறுதிபெறும். 'தொகுத்து அதைப் பகர்தலுற்றான்'[1] என்று கொள்வதும் இழுக்காகாது. இந்நூல் 48 சருக்கங்களும் 2019 திருவிருத்தங்களுமுடையது. சொல்வளமும் பொருட்செறிவுமுடையது. முழுவதும் படிக்க வியலாவிடினும் பதினொன்றாமதான அதனுள் பாங்காரச் சருக்கமேனும் படித்தல் இன்றியமையாதது. இரண்டு செய்யுள்கள் மாதிரிக்காகக் கொடுக்கின்றாம்.

இவனவ தானி யிவன்கிரம தாடி யிவன்சடா வல்லவ னென்பா
னவனுபாத் யாய னவன்வேத பட்ட னவனத்தி யாபக னென்று
நவநவ மாகப் பேர்பல புனைந்து நல்குதா னங்களும் பெற்றெத்
திவசமும் புசித்திவ் வுலகை வஞ்சிக்குந் திருடரிங் கிவரிவர் சிலரால் (5)

அட்டிடு வெண்சோ றவரவ ரிடச்சென் றருந்தலா முலகினை யதுபோற்
றெட்டிய திலையென் றானடி யார்போற் றெரிந்திடப் பன்மயிர் திரட்டி
நெட்டியற் கொன்றைக் காய்கள்போ னீட்டி நிமிர்தலைச் சுமையென நிரப்பிக்
கட்டிய சடையின் கொழுந்தினா னெடிதாற் கண்டக ரிவர்மனக் காதல். (15)

ஞானசோபனம் என்றொரு நூலை இவர் இவற்றியதாகக் கூறுவதுண்டு. அதன் நடைப்போக்கு மிக எளியது. அதைப் பிறரொருவர் இயற்றி இவர் பெயரால் வெளியிட்டனரோவென ஐயுற வேண்டியிருக்கிறது

1. தமிழ்நாவலர் சரிதை, 257.

இப்பெரியார் புலவர் பலரை ஆதரித்தார். இலக்கண விளக்க மியற்றிய வைத்தியநாத தேசிகரை ஆதரித்தவரென்பது முன்னர்க் கூறினோம். அந்தகக்கவி வீரராகவ முதலியாரை இவர் ஆதரித்தவராவர். அவர் இப்புரவலர்மீது உலா ஒன்று பாடியுள்ளார். அது கயத்தாற்று அரசர் உலா எனப்படும். அஃது அரங்கேறியஞான்று அவையிலுள்ளார்

ஒட்டக்கூத் தன்கவியு மோங்கியகம் பன்கவியும்
பட்டம் பகல்விளக்காய்ப் பட்டவே—அட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்

என்று கூறினர்.

இனி இவருடைய காலம் திட்டமாகத் தெரியக் கூடியவாறு பல சாதனங்கள் அமைந்துள்ளன. முதலாமதாக இவர் கட்டளையிட்ட தானசாதனம் சகம் 1555-க்கு ஆங்கிலவாண்டு 1653-ல் வரையப்பட்டதாகும். அக்காலத்தே பாண்டிநாட்டிலே அரசு செலுத்தியவர் திருமலை நாயக்கராவர். இவரது காலம் 1623-1659-ஆம். திருவேங்கடநாதர், சொக்கநாத நாயக்கர் காலத்திலும் காரியகர்த்தராக இருந்திருக்கின்றாரென்று பணவிடுதூதும், சாத்தூர் நொண்டி நாடகமும் கூறுகின்றன. அன்றியும், இவரது இரண்டாமது புத்திரரான வேங்கடேசையர் அரங்க கிருஷ்ண முத்துவீரப்பநாயக்கருடைய காரியகர்த்தராகத் திருநெல்வேலியிலே அரசு செலுத்தியதைப் பணவிடுதூது கூறும். திருநெல்வேலிக் கலெக்டராபீசில் சேமித்து வைக்கப்பட்டுள்ள செப்பேடொன்று நெல்லையப்ப ராலயத்திற்கு அரங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கர் திருவேங்கட நாதையர் இவர்கள் புண்ணியமாகப் பூதானஞ் செய்ததைக் குறிக்கிறது. இச்செப்பேட்டின் காலம கொல்லமாண்டு 858 ஆகும். இது கி. பி. 1683 ஆகும். அக்காலத்திலே திருவேங்கடநாதர் திருநாடலங்கரித்திருக்கவேண்டும்.

பின்னும், இவர் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகரை ஆதரித்தவராகவே, அவருடைய மாணாக்கர் பலருள்ளுஞ் சிறந்தவரான படிக்காசுப்புலவரை யாதரித்த இரகுநாத சேதுபதி கிழவன் சேதுபதியாகும். இரகுநாத சேதுபதி வாழ்ந்த காலம் 1673-1710 அக்காலத்துக்கு முற்பட்டவர் திருவேங்கடநாதர் என்பது நன்கு விளங்கும்.

விளங்கவே வள்ளலான திருவேங்கட நாதையர் சோழநாட்டு மாத்தூரிற் பிறந்தவரென்பதும், பெருமாளையருடைய ஏகபுத்திர

ரென்பதும், இவருடைய மக்கள் அறுவரென்பதும், திருமலைநாயக்கர், சொக்கநாதநாயக்கர் அரங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கர் காலங்களிலே கயத்தாற்றுச் சீமையை யாண்டவரென்பதும் புலவர் பலரை ஆதரித்துப் பதினேழாம் நூற்றாண்டி னிடைக்காலத்திலே வாழ்ந்தவரென்பதும் பெற்றாம்.

11. மணவாளதாசர்

மணவாளதாசர் என்ற பெயருடையார் பல்லோராவர். மணவாளதாசர் பலரையும் ஒருவராகவே கருதுவர் முன்னோர் பலரும். அதற்குக் காரணம் அவர்கள் பிள்ளைப் பெருமாள் என்றழைக்கப் படுவதே போலும். மணவாளதாசர் பலருள் ஒருவர் சோழமண்டலத்திலுள்ள திருமங்கை என்று சொல்லப்படும் திருநகரியிலே பிறந்தவர். மற்றொருவர் வெண்மணி என்ற ஊரிலே பிறந்தவர். வேறொருவர் பிறந்த ஊர் அறிதற்கிலது. இவர்கள் பாடிய நூல்களைச் சேர்த்து அஷ்டப்பிரபந்தம் எனப் பேர்கொடுத்து ஆசிரியர் பலரையும் ஒருவராக முதன்முதலிற் செய்தவர் திரிசிரபுரம் கோவிந்த பிள்ளையாவர். கோவிந்தபிள்ளை தாம் பதித்த அஷ்டப் பிரபந்த[1] முகவுரையில் ஒருவரெனக் கூறினர். இவரைப் பின் பற்றியே ஆசிரியர் ஒருவரோ பலரோ என ஆராயாமல் காலத்தைப் பல படியாகக் கூறிவருவாராயினர். திரிசிரபுரம் கோவிந்த பிள்ளை மணவாள தாசர் காலம் திருமலைநாயக்கருடைய காலமென்றார். பல ஆராய்ச்சிகளெழுதிய கல்குளம் குப்புசாமி முதலியார் பன்னிரண்டாமது நூற்றாண்டின் இடைக்காலமென்றார்.[2] 'காலம் ஏறக்குறைய இற்றைக்கு முந்நூறு வருடங்களுக்கு முன்னர் என்பர்' என்றெழுதுவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவர்.[3] 'வைணவ சம்பிரதாய புத்தகசாலை' அஷ்டப்பிரபந்தப் பதிப்பிற் காணுவது வருமாறு: 'இவர் திருவேங்கடமாலை முதலிய நூல்களியற்றியதைக் குறித்து ஒருசாரார் வழங்குவதொரு வரலாறு வருமாறு:—இவர் ஸ்ரீரங்கநாதனுக்கே தொண்டராகி அப்பெருமானையன்றிப் பிறிதொரு தெய்வத்தை மறந்துந்தொழாத மனவுறுதியுடையவராய், அப்பரமன் விஷயமாகவே அந்தாதியும் மாலையும் கலம்பகமும் ஊசலும் பாடியபொழுது, திருவேங்கடமுடையான் இவர் வாயால் தாம் பிரபந்தம் பாடப்பெற விரும்பித் தமது

---

1. இது கலாரத்நாகரம் அச்சியந்திரசாலையில் பதிக்கப்பட்டது.

2. அஷ்டப்பிரபந்த முகவுரை பக் 16 ரிப்பன் பிரஸ் அச்சு 1904-ம் ஆண்டு. 3. தமிழ்ப்புலவர் சரித்திரம், 145.

உண்மைவடிவத்துடன் இவரது கனவில் தோன்றி 'வேங்கடத்தின் விஷயமாகச் சில பிரபந்தம் பாடுக' என்று கட்டளையிட, இவர் அதற்கு இணங்காமல் 'அரங்கனைப் பாடிய வாயாற்[1] குரங்கனைப் பாடேன்' என்று கூறி மறுக்க, திருவேங்கடமுடையான் எங்ஙனமாவது இவர்வாயாற் பாடல்பெற அவாக்கொண்டதுமன்றி, எல்லாத் திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் ஒருவனே யென்று இவருக்குத் தெரிவித்து இவர்கொண்டுள்ள பேதபுத்தியை அகற்றவுங் கருதியதனால், இவர்க்கு உடனே கண்டமாலை யென்னுங் கொடியநோய் உண்டாகும்படி செய்ய அந்த வியாதியால் மிகவருந்திய இவர் அதன் காரணத்தை உணர்ந்துகொண்டு அப்பெருமான்பக்கல் தாம் அபசாரப்பட்டது தீருமாறு உடனே திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி என்னும் பிரபந்தங்களை இயற்றி அப்பெருமானைத் துதிக்க, அது பற்றித் திருவுள்ளமுவந்த திருவேங்கடமுடையான் உடனே இவரெதிரில் எழுந்தருளிக் காட்சிதந்து அநுக்கிரகிக்க, அதனால் இவர் அப்பொழுதே அந்த நோய் நீங்கப்பெற்றவராகி, பின்பு, அவ்வடமலைக்கு ஈடான தென்மலையின் விஷயமாக அழகரந்தாதி பாடி, அப்பால் தமது பேதபுத்தி யொழிந்தமை நன்கு விளங்க நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி பாடினர்.

'திருவேங்கடமுடையான் [ஸ்ரீநிவாசன்] ஐயங்கார்க்குச் சேவை சாதித்தஇடம் கோயிலில் சலவைக்கல் மண்டபப் பிராகாரமென்ற உட்பிராகாரத்தில் தென்கிழக்குப் பக்கத்தில் என்பர்.

'பரமதநிரஸநம்பண்ணி ஸ்வமதஸ்தாபநஞ் செய்தற்பொருட்டு இவர் பாடிய பாடல்களின் தொகுதியே, பரப்பிரஹ்மவிவேகமெனப்படுவது.

'விசுவரூப தரிசநபசு சமவாதமென்னும்மறுபெயரையுடைய பரப்ரஹ்மவிவேக மென்னும் நூலின் உரைத் தொடக்கத்தில் அந்நூலின் வரலாற்றைக்குறித்து எழுதியுள்ள விவரத்தை அடியிற் காண்க :— "திருவரங்கத்த முதனார் திருப்பேரனாராகிய அழகிய மணவாளதாசரென்கிற திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் நம்பெருமாள் முதலிய சில திவ்வியதேசப் பெருமாள்களின்மீது தமிழ்ப்பிரபந்தங்கள் பல செய்தருளுங்காலத்தில், தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுவல்ல சிறந்த புலவர்கள் பலரும் இவருடைய கவிகளிற் சொல்நோக்கு முதலியவற்றைக் கண்டுங் கேட்டும்

---

1. திருவேங்கடமுடையானைக் குரங்கனென்றது, குரங்குகளுடன் மலையில் வாழ்தலால்; "மந்திபாய் வடவேங்கடமாமலை," "வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்றார் ஆழ்வார்களும்.

கொண்டாடுவதை ஆனைக்காவிலிருக்கும் ஆகமவாதிகள் கேள்விப்பட்டு 'இப்படிப்பட்ட வித்துவானால் நம்முடைய ஜம்புகேசுரச் சிவபெருமான்மீது ஒரு பிரபந்தம் பாடுவித்துக் கொள்ளவேண்டும்' என்னுங் கருத்துடையவர்களாய் ஒருநாள் இவருடைய திருமாளிகையில் வந்து தங்கள் கருத்தை வெளியிட, அதுகேட்டருளித் திரிகரணத்தாலும் தேவதாந்தரத்தை பற்றறவிட்ட சுத்த சத்துவ தொண்டக்குல ஸ்ரீவைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்கார் புன்னகை கொண்டு 'யாம் அரங்கனைப்பாடின வாயினால் மற்றொரு குரங்கனைப்[1] பாடுவதில்லையே' எனத் திருவாய்மலர்ந்தருள, கேட்டு, 'குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுமவரைப்போல' நம்முடைய பரமசிவத்தின்மீது பாடல்பெற்றுக்கொள்ள வந்து குரங்கனென்னுஞ் சொல்லைப் பெற்றுக் கொண்டோமே என்று மனம்பொறாதவர்களாய்ச் சடக்கென எழுந்திருந்து, 'எவ்வகையினாலாவது உம்முடைய வாக்கினால் எங்கள் பரமசிவத்தின்மீது ஒரு பாடலாவது பெற்றுக்கொள்கிறோம்' என்று சபதங்கூறித் தங்களிருப்பிடத்திற்குப்போய் அதற்கு வகை தேடிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கச்செய்தே, கோயிலில் உதயத்தில் திருக்காப்பு நீக்கி நம்பெருமாளுக்குச் செய்யுங் கைங்கர்யமாகிய விசுவரூப தரிசனஞ் செய்விக்கப் போகிற சமயத்திற் கொண்டுபோய் அர்ச்சகர் சமர்ப்பிக்கிற பொருள்களில் ஒன்றாகிய கபிலையென்கிற பசுவானது ஒருநாள் ஆனைக்காவைச்சார்ந்த ஒருபுலத்தில் மேய அதை மேற்கூறிய ஆகமவாதிகள் பிடித்து இதனால் தாங்கள் கொண்ட கருத்தை ஈடேற்றுவித்துக்கொள்ளலாமென நினைத்துக் கட்டி வைத்தார்கள். அன்று இராத்திரி கோயிலில் அர்ச்சகர் முதலாயினோர் விசுவரூபதரிசநப் பசுவைக் காணாமல் தேடிக்கொண்டு போகையில், ஆனைக்காவி லிருக்கக்கண்டு ஆகமவாதியர்களைப் பசுவைக் கொடுக்கும்படிகேட்க, அவர்கள் 'உங்களுடைய பிள்ளைப்பெருமாளையங்கார் வந்துகேட்டால் தருகிறோம்' என்று சொல்ல, அதுகேட்டு, விசுவரூபதரிசநத்துக்கு ப்ராதக்காலத்தில் வேண்டுமேயென்னும் எண்ணத்தினால் அதை மறுத்து ஒன்றும் பேசாமல் ஒத்துக்கொண்டு, பரபரப்புடன் சென்று ஐயங்காரிடத்தில் விண்ணப்பஞ்செய்ய, "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்கிறபடியே அந்

1. குரங்கம் - மான்: வடசொல்; அதனை இடக்கையிலேந்தியுள்ளவன், குரங்கன்: எனவே, சிவபிரானும். அன்றி, நந்திகேசுரனை அடிமையாகவுடையனாதல்பற்றியும், அநுமானாக அவதரித்தவனாதல்பற்றியும், சிவபிரானைக் குரங்கனென்றனரென்னலாம். கு - குற்சிதமான, ரங்கன். அம்பலத்தையுடையான் என்றுங் கூறுவர்.

தப் பிரபந்த நிஷ்டானுபவராகிய வைதிகவைணவரானவர் அது கேட்டருளி, 'துஷ்கர்ம காலம் தவிர மற்றைக் காலத்தில் ருத்திர பூமியில் அடிவைப்பது கூடுமோ? அன்றியும், அவ்வாலயத்திற் பிரவேசிப்பது வைதிக வைணவனுக்குத் தக்கதன்று. 'ஆனை துரத்திவந்தாலும் ஆனைக்காவில் நுழையாதே' என்கிறபழமொழி[1]யையேனும் கேட்டதில்லையோ? ஆதலால், அந்த ஆகமவாதியர்களைக்கோயிலிடத்தில் அழைத்துவாருங்கள்' எனச்சொலலினர். அவ்வாறே அந்த ஸ்ரீ வைணவர்களும் ஆனைக்காவிற்சென்று அவர்களுக்குச் சொல்ல.எவ்வகையிலாயினும் ஐயங்காரால் ஒருபாடல்பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துக்கொண்டிருந்த அவர்களும், 'நம்முடைய எண்ணம் நிறைவேறுங் காலம இதுதான்' என்று அதற்கு ஒத்துக்கொண்டு, அதிக சந்தோஷத்தோடு அக்கபிலையையும் ஒட்டிக்கொண்டு, ஜயவிஜயர்கள் எழுந்தருளியிருக்கும் சந்தநுமகாராஜமண்டபத்தில் வந்து சேர்ந்தார்கள். ஐயங்காரும் அவ்விடத்தில் எழுந்தருளி, 'கபிலையை விடுவதற்கு உங்களுடைய கருத்து எது'? என்று கேட்டருள, அவர்கள் 'உம்முடைய வாக்கால் ஜம்புகேசுரச் சிவபெருமானாகிய எங்கள் தெய்வத்தின்மீது ஒரு பாடல் பாடித்தருவீரேல், விசுவரூபதரிசனப் பசுவை நாங்கள் விடுவதற்கு யாதோராடங்கமு மில்லை' என்று சொல்லினர். "பொய்ம்மையும வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்கிற குறளின்படி அவர்கள் சொன்னதற்கு இணங்கினவரைப் போல் நடித்து ஐயங்கார் 'நம் பெருமாளுக்கு விசுவரூபதரிசனத்திற்கு மற்று நாள் பிராதக்காலத்தில் ஆடங்கமாகிறபடியால், அப்பசுவை விடுவீர்களாகில், உடனே யாம் பாடுகிறோம' என, 'எங்கள் சிவபெருமான் விஷயமாக நீர் பாடுவது யதார்த்தமாகில், அப்பாட்டில் இரண்டொரு சீரையேனும் முன்னே சொல்லுவீராகில் பசுவை விடுகிறோம' என்று அவர்கள் சொல்ல, ஐயங்காரும் புன்னகைகொண்டு அவ்வாறே "மங்கை பாகன்" என்று முதலிரண்டுசீரை அருளிச்செய்த மாத்திரத்தில், அப்பசுவை விட்டார்கள். உடனே ஐயங்காரும் முன் தாம் சொன்ன சீரைத் தொடங்கி,

"மங்கைபாகன் சடையில்வைத்த கங்கை யார்பதத்துநீர்
வனசமேவு முனிவனுக்கு மைந்தனை தில்லையோ
செங்கையா லிரந்தவன்க பாலமா ரகற்றினர்
செய்யதாளின் மலரான்சி ரத்திலான தில்லையோ

---

1. 'ஆனை துரத்தி வந்தாலும் ஆலயத்தில் நுழையாதே' என்பது பழமொழி.

வெங்கண்வேழ மூலமென்ன வந்ததுங்கள் தேவனே
வீறுவாண னமரிலன்று விறலழிந்த தில்லையோ
அங்கணாள மூண்டபோது வெள்ளிவெற் பகன்றதோ
ஆதலால ரங்கனன்றி வேறுதெய்வ மில்லையே

ஆதலால்,சிவகோடியிற் சார்ந்தவரேயொழிய உங்கள் தேவதை பரமாத்மா வல்லர்" என்று இச்செய்யுளைச் சொல்லி 'உலகத்துக்குப் பல தெய்வங்கள் உண்டோ? ஒரு தெய்வமேயாம்; அத்தெய்வம் திருவரங்கனே யலலாமல் வேறில்லை' என, அது கேட்டு அவ்வாகமவாதியர்கள் 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாப்போல்' இது என்ன விபரீதமாய் முடிந்ததே! என்று சினங்கொண்டு அந்த ஆகமவாதிகளுக்குட் சிறந்த நிஷ்டாநுபவர்களாகிய சில வித்வான்கள் வேத விருத்தமாகிய ஆகமபுராணங்களைக் கொண்டு புலவர் பெருமானாகிய ஐங்காரோடு வாதுசெய்யத் தொடங்கினார்கள். அவ்வாதிசைவ வித்வான்கள் கேட்ட வினவுக்கு விடை சொல்லியருளிய உத்தரங்களைப் பின்னுள்ளோரும் தெரிந்துகொள்ளும்படி பரம காருணிகராகிய ஐயங்கார் வெள்ளைப்பாவாற் கூறினார். ஆதிசைவ சமய நிஷ்டாநுபவர்களாகிய வித்வான்கள் சொல்லிக்கொண்டுவந்த கேள்விகளுக்கு வடமொழியிலும் தென்மொழியிலும் தெய்வப் புலமையுள்ள வீரவைணவ சிகாமணியாகிய ஐயங்கார் அருளிச் செய்த விடைகளை மறுத்துச் சொல்ல ஒன்றுந் தோன்றாமல் அவ்வாதியர்கள் 'ஓம்' என்று தங்கள் தங்களிருப்பிடத்துக்குச் சென்றார்கள்.

திருநரையூர் நம்பி மேகவிடுதூது என்ற நூலும் இவர் செய்ததென்பர். இவர் செய்தனவாகத் தனிப்பாடல்களும் சில வழங்குகின்றன.

பின்பு இவர் ஒரு நாள் தமது திருவடிகளிற் சம்பந்தமுடையவர்களை நோக்கி 'நமக்கு அந்திமதசை பசுவினாலே நேரிடும்' என்று சொல்லி அப்படியே சக்கரவர்த்தித் திருமகனைச் சேவித்துக் கொண்டு ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியிற் சேவிக்கும் பொழுது, ஒரு நொண்டிப்பசு வந்து தவறி இவர்மேல் விழ, அது விழுந்ததனாலாகிய துன்பத்துடனே இவர்

துளவ துளவவெனச் சொல்லும்சொற் போச்சே
அளவி னெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்கா யரங்கா வினி

என்று சொல்லித் திருநாட்டை யலங்கரித்தனர்.

'இவர், சிலேடை திரிபு யமகம் அந்தாதி கலம்பகம் ஊசல் முதலியன விசித்திரமாகப் பாடுவதில் ஒப்புயர்வில்லாது மிக வல்லவர்; இது, இவர் செய்துள்ள நூல்களால் இனிது விளங்கும்: அன்றியும், திவ்வியகவி என்ற இவரது பட்டப் பெயர் தானே இதனை வற்புறுத்தும். இவர் இயற்றிய திருவரங்கக்கலம்பகம் வெண்பாப்பாடுவதில் வல்ல புகழேந்தியும், விருத்தம்பாட வல்ல கம்பரும், அந்தாதிக்கு எடுத்த ஒட்டக்கூத்தரும், கலம்பகத்திற்கென்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இரட்டையர்களும், சந்தம்பாடுதலிற் சமர்த்தரான படிக்காசுப்புலவரும் முதலிய மகாவித்வான்கள் சேர்ந்து செய்தாலொத்த சிறப்பினையுடையது. இங்ஙனமிருக்க, ஒரு சாரார் 'ஐயங்கார் அம்மானையில் அடிசறுக்கினார்' என்று குறைகூறுவது, சிறிதும் சரியன்று; திருவரங்கக்கலம்பகத்திலுள்ள "தேனமருஞ்சோலை" என்ற தொடக்கத்து அம்மானைச்செய்யுளினது ஈற்றடியின் பிற்பகுதியிற் பொருந்திய சிலேடைப்பொருள் நயத்தையும் சரித்திரவமைப்பையும் ஆழ்ந்த கருத்தையும் ஊன்றி நோக்குமிடத்து, அங்ஙனம் இழித்துரைப்பாரது பழிப்புரை வெற்றுரையேயா மென்பது தெற்றென விளங்கும்: அன்றியும், அக்கூற்று அழுக்காற்றினாலாகியதேபோலும்; அந்த அம்மானைச் செய்யுளின் அருமை பெருமைகள் இங்கு விரிப்பிற் பெருகும். இன்னும், இவர் செய்துள்ள பிரபந்தங்களெல்லாம், ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தில் உள்ள நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களின் ஸாரார்த்தங்களும், நாதமுனிகள் முதலிய ஆசாரியர்களுடைய அருளிச்செயல்களின் விசேஷார்த்தங்களும பொதிந்திருத்தல் மாத்திரமேயன்றி, "சொல்நோக்கும பொருள்நோக்கும தொடைநோக்கும் நடைநோக்கும் துறையின்நோக்கோடு எந்நோக்குங் காண இலக்கிய" மாகியும் இருப்பன.

'இவர், ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைதமத ஸ்தாபநாசாரியரான ஸ்ரீபகவத்ராமாநுஜாசார்யரென்கிற ஸ்ரீபாஷ்யகாரரது அந்தரங்கசிஷ்யரான கூரத்தாழ்வானுடைய குமாரராகிய ஸ்ரீபராசரபட்டரது சிஷ்யராதலாலும், அந்தப்பட்டரது திருவவதாரம சாலிவாகன சகாப்தம் ஆயிரத்துநாற்பத்தைந்தில் என்று தெரிதலாலும், இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய எழுநூற்றறுபது வருஷத்துக்குமுன்னராகின்றது; (இப்பொழுது நிகழ்கிற சாலிசகம் - கஅகூசு)[1]. இவரை ஸ்ரீபாஷ்யகாரரது ஸ்ரீபாதத்திலாசிரயித்தவர்களுட் பிரதானரும், இராமானுச நூற்றந்தாதி அருளிச் செய்தவரு

1. இது கி.பி. 1914-ம் ஆண்டு.

மாகிய திருவரங்கத்தமுதனார்து திருக்குமாரரென்று பலரும் திருப் பேரனாரென்று சிலரும் வழங்கி வருவதும் கீழ்க் கூறிய காலக் கணக்கையே வற்புறுத்தும்'.

ஆராய்ச்சியிற் றேர்ந்தவராகக் கருதப்படுபவரும் சர்வ கலா சாலையில் 'எம். ஏ.' பட்டம் பெற்றவரும் பல தமிழ் நூல்கள் எழுதியவருமான கா. சுப்பிரமணியபிள்ளை 'பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே (1623-1650 வரை) திருமலைநாயக்கர் மதுரையிலாண்டபோது மணவாளதாச ரென்னும் பிள்ளைப்பெருமாளையங்காரும் சைவ எல்லப்ப நாவலரும், குமரகுருபரசுவாமிகளும் தத்தஞ்சமயங்களை நிறுவுதலிற் றலைநின்றனர்' என்றனர்.[1] மேலும் அவர் 'இவரியற்றிய சிறுகாப்பியங்கள் அஷ்டப்பிரபந்த மெனப்படும் 1. அழகரந்தாதி, 2. திருவரங்கக்கலமபகம், 3. திருரங்கத்தந்தாதி, 4. திருவரங்கத்துமாலை, 5. திருவரங்கத்தூசற்றிருநாமம், 6. திருவேங்கடத்தந்தாதி, 7. திருவேங்கடமாலை, 8. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி யென்பன' என்றெழுதுவர்[2].

மேலே காட்டிய நூல்களுள் முதலாவதான அழகரந்தாதித் தனியனுகக்

திருகவி மங்கை மணவாள வள்ளல்செக் தேன்றளித்து
முருகவிழ் தென்திரு மாலிருஞ் சோலை மலைமுகுந்தற்
கிருகவின் றூள்களிற் சூடுமந் தாதியி னீரைம்பதில்
ஒருகவி கற்கினு ஞானமும் வீடு முதவிடுமே

என்ற செய்யுள் காணப்படுகிறது. இச்செய்யுள் மங்கை யென்ற ஊரின்கண்ணே வாழ்ந்த மணவாளதாசர் இந்நூலைச் செய்தாரென்று கூறுகிறது. இந்நூலினிறுதியிலே

அலங்கா ரருக்குப் பரமச் சுவாமிக் கழகருக்குக்
கலங்காப் பெருநக ரங்காட்டு வார்க்குக் கருத்தன்பினால்
கலங்காத சொற்றொடை யந்தாதி யைப்பற்ப நாபபட்டன்[3]
விலங்காத கீர்த்தி மணவாள தாசன் விளம்பினனே

என்ற செய்யுள் காணப்படுகிறது. இச்செய்யுளினால் மங்கை மணவாளதாசர் பத்மநாப பட்டரது திருமகனுவர் என்பதுதெளிவு படுகிறது. இதனை யொத்த வேறு நூல்கள் யாவை யென இனி யாராய்வோமாயின் திருவரங்கத்து மாலையின் இறுதியிலே

1. தமிழ் இலக்கிய வரலாறு, 443.
2. தமிழ் இலக்கிய வரலாறு, 444.
3. பற்பநாபபட்டன் என்பதற்குப் பராசரபட்டர் என்று உரைகாணுவர் இப்போதுள்ள உரையாசிரியர்கள். இது பொருந்தாமை வெள்ளிடை.

மனிதக் கவிமொழி யாமங்கை வாழ்மண வாளவள்ளல்
புனிதக் கவிகொண்டு மாலைசெய் தான்புயல் போன்முழங்கும்
தொனிதக்க சங்கந்திருச் சக்கரஞ் சுடர் வாண்முசலம்
குனிதக்க சார்ங்கந் தரித்தா ரரங்கர்பொற் கோயிலுக்கே

என்ற செய்யுள் காணப்படுகிறது. இதனது தனியன் 'மணவாளர் தம்மாலையினுட்பொருளே'. என்று அடைமொழியின்றிக் கூறும். இவ்விரண்டு நூல்களையன்றி எஞ்சியுள்ள ஆறுநூல்களிலும் மங்கையூரினரான மணவாளரைக் குறிக்குஞ் செய்தி காணுத லில்லை.

திருவரங்கக்கலம்பகம் ஒன்றே அழகிய மணவாளதாசன்என்ற பெயரைக் குறிக்கிறது.

மழைமுகி லெனவே பணமுழ கந்திகழ் வரியர வணையே றிவாழ ரங்கர்தம்
எழில்பெறு மிருதா ளிலேக லம்பக மெனுமொரு தமிழ்மா லைதான ணிந்தனன்
குழலிசை யளிமே வுகூரம் வந்தருள் குருபர னிருபா தபோத டைந்தவன்
அழகிய மணவா ளதாச னென்பவ னடியவ ரடிகு டிவாழு மன்பனே.

என்பது கலம்பகத்தின் இறுதியிற் காணப்படுஞ் செய்யுள். இக் கலம்பகவாசிரியர் இந்நூலின் காப்பிலே

வானிட்ட கீர்த்தி வளர்கூரத் தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தார்நம் பெருமாள் குமாரர் சிவனையயன்
றனிட்ட சாபந் துடைத்தா ளரங்கர்சங் காழிபுய
நானிட்ட னென்றருள் பட்டர்பொற் றாள்கதி நந்தமக்கே

என்று கூறுவர். இச்செய்யுளின்படி இந்நூலாசிரியர் கூரத் தாழ்வாருடைய மகனார் பராசர பட்டரைத் தமது குருவாகக் கொண்டவர் என்று கூறுதல் ஒருவாறு பொருந்தும். ஆயினும் ஆழ்வாரதிகட்கும் ஆசாரியர்கட்கும் காப்புக் கூறினர் என்று கொள்வதே பொருத்தமுடையது. அவ்வாறே கொண்டனர் வைணவ சம்பிரதாயக்காரர்களும்.

அஷ்டப்பிரபந்தங்களுள் ஒன்றான திருவேங்கடத் தந்தாதி யிறுதியிலே

மட்டலை தண்டலை சூழ்வட வேங்கட வாணனுக்குத்
தொட்டலை யுண்டபிரா னுக்கன்பாம் பட்டர்[1] தூயபொற்றா
ளுட்டலை யுண்ட மணவாள தாச னுகந்துரைத்த
கட்டலை சேர்திரு வந்தாதி நூறு கலித்துறையே

1. பட்டர் ஸ்ரீபட்டரான பராசர பட்டரென்றே கொண்டனர் வைணவ உரையாசிரியன்மார்.

என்ற செய்யுள் காணப்படுகிறது. இதனிற்கண்ட பட்டர் பராசர பட்டரோ வேதவியாச பட்டரோ அறிவதற்கில்லை. பராசர பட்டா ராகவே கொள்வோம். 'திருவரங்கத்தந்தாதி' யின் இறுதியில்

'குணவாள ராம்[1] பட்டர்க் கேழேழ் பிறப்புங் குடியடியான்
மணவாள தாசன் யமகவந் தாதி வனைந்தனனே'

என்றும்; 'திருவேங்கடமாலை'யின் முடிவிலே

குணவாள பட்டரிரு கோகனத் தாள்சேர்
மணவாள தாசன்றன் வாக்கு'

என்றும், 'நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி'யின் கடையிலே

பதின்ம ருரைத்த பதியொருநூற் றெட்டும்
துதிசெய்ய வந்தாதி சொன்னான்—அதிக
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன் வகுத்து

என்றும் காணப்படுதல்கொண்டு இம்மூன்று நூல்களையும் இயற்றினார் வேறொரு மணவாளதாசரெனக் கருத இடமுண்டு.

மேற்கூறிய நூல்களையன்றி எஞ்சி நிற்பது சீரங்கநாயகரூசல். இந்த நூலின் கடைச்செய்யுள்

சீதார விந்தன்மலர்த் திருவினுதன் றிருவூசற் றிருநாம மொருநா லெட்டும்
வேதாசா ரியபட்டர்க் கடிமை யான வெண்மணிப்பிள்ளைப்பெருமாள்[2]
விளம்பினனே

என்று கூறுகிறது. இதனை யன்றி இந்நூலின் காப்பிலே,

புதுவைநகர்ப் பட்டர்பிரான் சரண்கள் போற்றி
* * *
மதுரகவி யெதிராசன் கூரத் தாழ்வான்
வாழ்வான பட்டர்திரு வடிகள் போற்றி

என்று கூறப்படுகிறது.

1. குணவாளராம் பட்டர், குணவாளபட்டர் என்ற தொடர்களுக்கு குணம் + ஆளர் + பட்டர் எனப்பிரித்து நற்குணத்தை உடையவரான ஸ்ரீ பட்டர் எனக்கொண்டனர். குணாளரென்னுமை வருமொழி தமிழாதல் குறித்து.

2. வெண்மணிப் பிள்ளைப் பெருமாள் என்பதற்கு வெள்ளைமணி போலச் சத்துவகுண மிருந்த பிள்ளைப்பெருமாளையங்கார் என்று பொருள் காண்பர். அவ்வுரையின் தகுதியின்மை வெள்ளிடை. வெண்மணியென்பது ஓர் ஊராகும். இதனை 'வெட்டியன்றே கொன்ற வெண்மணிப் பாடியுதிர வெள்ளத்து' என்று வருஞ் சாஸனக்கவித் தொடரால் அறிக.

இதனுலே ஊசல் பாடியவர் புதுவை நகர் வேதாசாரிய பட்டரு டைய சீடரான பிள்ளைப்பெருமாள் என்பது விளங்கும். அன்றி யும் இந்நூலினுடைய தனியனில் 'மணவாளர் பேரர் கூடித் தொகுத்திட்டார் திருவரங்கத் தூசருனே' என்று காணப்படுவது கொண்டு இப்பிள்ளைப்பெருமாளும் மணவாளதாசரெனப் படுவா ரென்றேற் படுகிறது. படவே,

1. அழகரந்தாதி திருவரங்கத்துமாலை ஆகியஇருநூல்களையும் இயற்றிய மணவாளதாசர் ஒருவர்; அவர் மங்கை யூரினர். பத்மனப பட்டருடைய குமாரர். அதனுலே திருமங்கை மணவாளதாச ரெனப்படுவார் என்று கூறுதல் பொருந்தும்.
2. திருவரங்கக் கலம்பகம் இயற்றியவர் ஓர் அழகிய மணவாளதாசர்.
3. திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை திருவரங்கத்தந்தாதி இவைகளின் ஆசிரியரான பட்டர் பிரானடிமை மணவாளப் பெருமாள் ஒருவர்.
4. திருவரங்கத்தூசற் றிருநாமம் பாடிய வெண்மணிப் பிள்ளைப் பெரு மாள் ஒருவர். ஆக நால்வர் மணவாளதாசர் காணப்படுவர். இவர்கள் நால்வரும் ஒருவராகார். இந்நால்வரும் ஒரு காலத் தவரா வெவ்வேறு காலத்தவரா
வென்பவற்றையும் ஆராய்வாம்.

கூரத்தாழ்வாரது திருமகனுரான பட்டர்பிரானுடைய காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டென்பது ஸ்ரீவைணவர்களது கருத்து. சரித்திர ஆசிரியர்களது கருத்தும் அதுவேயாகும். அதுகொண்டு இக்காலம் மூன்றுவதாகக்கூறிய மணவாளப்பெருமாளைக்குறிக்கும் என்பது விளங்கும்[1].

திருவரங்கத்தூசல் பாடிய வெண்மணிப்பிள்ளையான[2] பிள்ளைப் பெருமாள் பிற்காலத்தவராகவேனும்பதின்மூன்றும் நூற்றுண்டின

1. மகாவித்வான் ரா. இராகவையங்கார் '16-ம் நூற்றுண்டுத் தமிழ் புலவர் வரலாறு' மதிப்புரை கூறுங்கால், ஸ்ரீபட்டர் 12-ம் நூற்றுண்டுக்குச் சில நூற்றுண்டு பிந்தியவர் என்பர். ஸ்ரீவைணவர் சரித ஆசிரியரான து. அ. கோபிநாதராவ் இராமானுசர் தர்மோநஷ்ட: என்ற வாக்கியப்படி சகம் 1059க்குச் சரியான கி. பி. 1137-ல் இறந்தாரென்பர். (பக். 34) அவரை யடுத்தவர் ஸ்ரீபட்டர். ஆகவே 12-ம் நூற்றுண்டு என்பதில் இழுக்கு இருப்பதாகத் தோற்றவில்லை.

2. வெண்மணி ஒரூர் என்பது வெண்மணிகிழான் ஆட்கொண்ட நாய கன் திருநட்டப் பெருமாள் ஆளுடையபிள்ளையார்க்குச் சில நிவந்தங்கள் வைத்துள்ளான் என்பதால் விளங்கும் (M.E.R. 123 of 96.)

ராகவேனும் கொள்ளுதல் கூடும். எற்றுலெனின் மணவாளர்பேரர் என்பதாலேயாம். 'திருவரங்கக் கலம்பகம்' பாடியவர் காலமும் இன்னதெனக் கூறுவதற்கில்லை. ஆயினும் இந்நூலாசிரியர் சைவ எல்லப்ப நாவலர் காலத்தவரென்று ஒரு கொள்கையிருப்பதால் அவருடைய காலத்தவராகக் கொள்ளுதலும் தவருகாது.

அழகரந்தாதி பாடிய மங்கை மணவாளதாசருடைய காலம் இன்னதெனத் திட்டமாகப் புலப்படவில்லை. எனினும் முன்னோர் பலரும் திருமலைநாயக்கருடைய அரண்மனையிலே இவர் இருந்தாரென்று கூறுவதை ஒருவாறு ஒத்துக்கொள்வோம். அவ்வாருயின் இவர் 17-ம் நூற்றுண்டிலிருந்தவராவர். இவரைக் குறித்தே ஈண்டு ஆராய்வதுமாம்.

சோழநாட்டிலே ஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்த சீகாழிப்பதிக்கு அண்மையில் திருவாலித் திருநகரி என ஒரூர் உளது. அது முன்னம் திருமங்கை மன்னன் அவதரித்த ஊராகும். அவ்வூரிலே மணவாளதாசர் பிறந்தவராவர். மணவாளன், அழகிய மணவாளனென்பது திருவரங்கத்திற் பள்ளி கொண்டுள்ள பெருமாளது திருநாமம். மணவாளர் மிக்க சீலம் ஒழுக்கமுடையவராயும பெருமாள் பக்தியிற் சிறந்தவராயுமிருந்தார். இவரது நற்குணங்களையும் திறமையையுமறிந்த மன்னனை திருமலைநாயக்கர் இவரைத் தம்மிடத்துக் காரியநிர்வாகியாக அமர்த்திக் கொண்டார். இவர் தமது வாழ்க்கையி னிமித்தம் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்தனராயினும், பகவத் விஷயத்தில் முன்னிலும பன்மடங்கு மேலானவரானுர். அதனை அரசன் அறிந்திலன். ஒருநாள் இவர் அரச சமூகத்தில் விடைபகர்ந்து கொண்டிருக்கும்போது தன்னுடைய மேலுத்தரீயத்தைத் துடைத்தார். இது அரச சமூகத்தில் செய்யப்படாத காரியமாகையால், இதனைக்குறித்துக் கேட்டபோது பெரியார் திருவரங்கத்திலே பெருமாளது திருத்தேர்ச்சீலை பற்றி யெரிந்ததாகவும் அதனை அணைத்ததாகவும கூறினுர். 'இவ்விஷயங்களைச் செவியுற்ற அரசன் ஐயங்காரைத் தருவித்து அவரை நோக்கி, திருத்தேருற்சவத்திற்கு எங்ஙனே போயினீர்' என்ன, ஐயங்கார் 'எனக்கு மானஸானுபவமே யல்லது நான் கோவிலுக்குப் போனதில்லை' என்றுர். அரசன் ஆட்சேபித்து 'நீவிர், ரதோற்சவத்தன்று ஸ்ரீரங்கத்திலிருந்ததாக மற்றவர்கள் சொலவது பொய்யோ'? என்ன, அப்போது, அவர் உத்தரீயத்தைக் "கிருஷ்ண, கிருஷ்ண" என்று சொல்லித் தேய்த்ததைக் கண்டிருந்தசிலர் அவர் அன்று இங்குத்தானிருந்தார் என்று நடந்ததைக் கூற, அரசன் நன்றென்று இவரது

தெய்விகத்தன்மையை வியந்தனன். அன்றிரவு அரசன் நித்திரையில் தான் பெருமாள் சந்நிதிக்குப் போனதாகவும், காவேரிக்கரையில் ஐயங்கார் நிற்கக்கண்டுஅவருடனே சந்நிதிக்குப்போய்ப் பெரிய பெருமாளைச் சேவித்து மீளும்போது ஐயங்காரைக் காணுமல் மயங்கினதாகவும் கனவு கண்டான். கண் விழித்துப் பார்த்ததும் நடந்ததெல்லாஞ் சொப்பனமெனத் தெளிந்து பொழுது விடிந்ததும் ஐயங்காரை வரவழைத்து, "நீரோ மகானுபாவரா யிருக்கிறீர், இனி என் சேவைக்குத் தக்கீரல்லீர். நீவிர் விரும்புவது யாது"? என்ன ஐயங்கார் 'திருவரங்கம பெரியகோயில் தளிகைப்பிரசாதமும் அங்குற்ற வாசமும் வேண்டும்' என்றுர். அரசன் அவ்வாறே கட்டளை பிறப்பித்தான். ஐயங்கார் அன்றுதொடங்கி ஸ்ரீரங்கத்திலே சலவைக்கல் மண்டபத்தில் மேற்கு மூலையில் ஓர் அறையில் இருந்து வந்தார். ஒருநாள் பசுவொன்று முட்ட அது காரணமாக இருந்து பரமபத மடைந்தார்.

இவர் செய்தனவாக நாம் கண்ட நூல்கள் இரண்டு. அவற்றுள் அழகரந்தாதி ஒன்று. அது நூறு பாக்களைக் கொண்டது, இனிமையான வாக்கினையுடையது. மற்றென்று திருவரங்கத்துமாலை. இது 112 பாக்களைக் கொண்டது. மேற்கூறியதே இதனுக்கும பொருந்தும்.

12. வைத்தியநாத தேசிகர்

மன்னுதென் கமலை வைத்திய நாதன்
பொன்னடிக் கமலப் போதினைச்
சென்னியிற் சேர்த்துது மதிசிறந் திடவே

என்பது இலக்கண விளக்கம் என்ற நூலின் முகப்பு ஏடுகளிற் காணப்படும் செய்யுள். இச்செய்யுளிற் கண்ட வைத்தியநாத தேசிகர் திருவாரூரிலே பரம்பரைச் சைவாசாரியார் மரபிலே தவவணைக் குடியில்[1] வந்த வன்மீகநாத தேசிகரின் முதன் மனைவியின் புத்திரராவர். இளமையிலே தாயினை யிழக்க நேர்ந்தமையாலும், மாற்றுந் தாயினது பராமரிப்புக் குறைவாலும் வைத்தியநாதர்

1. தவவணை என்பது கோத்திர (குடி)ப்பெயர் என்பதை யறியாது 'தவமணை எனத்திருத்துக' என்று கூறுவர். பெருந்தொகை 1715. விசேடக் குறிப்பு, பக்கம் 639. வைத்தியநாத தேசிகரது புதல்வரான சதாசிவ தேசிகரே 'பிறவித்துன்பம் முழுதையும் போக்குந் தவத்திற்கோர்அணை யாயினேன்' என்று கூறுவர். இதனை வடமொழியில் தபஸ்வின் என்று கூறுவர்.

சிறிது துன்பமடைந்து வருந்தினாரென்று அவரது பரம்பரையினர் கூறுவர். ஆயினும் அத்துன்பம் நீண்டநாள் நிலைத்திருக்கவில்லை. அவருடைய தந்தையாரான வன்மீகநாத தேசிகரிடம் கல்வி பயின்ற வரும், அக்காலத்திலே ஸ்ரீகமலை வசந்தத்தியாகேசனது அபிஷேக கட்டளை அன்னதானகட்டளைகளின் விசாரணைக்கர்த்தருமாயிருந்த அகோரமுனிவர் என்பார் வைத்தியநாதரது பரிதாபநிலையையறிந்து அவரை யழைத்துவந்து தம்மோடு வைத்துக்கொண்டு கல்வி கற்பித்துவந்தார். உணவுக்கவலை யொழியவே, வைத்தியநாதர் தம் காலத்தை வீண்போக்காது கல்வி கற்பதே நோக்கமாகக் கொண்டார். ஆசிரியராயமைந்த அகோர முனிவரும் தமது குருபுத்திரரைப் பலவிதத்திலும் அன்போடு பாதுகாத்து வந்தனராயினும் கல்வியில் மட்டும் கடுமையுடையவராகவே யிருந்தாரென்று கன்ன பரம்பரைச்செய்தி கூறும். மாணவர் கல்வி பயிலுங்கால் சோர்வுற்றால் ஆசிரியர் தம்கையிலுள்ள கரக நீரைப் பெய்துவிடுவர் என்று கூறுவர். இவ்வாறாகப் பலநாள் வடமொழி, தென்மொழி யிரண்டுங் கற்றுவந்தார்.

அக்காலம் காசிபோந்து கங்கையாடி வருவது பெரும் பேறாகக் கருதப்பட்டகாலம். அகோரமுனிவரும் காசியாத்திரை செல்லும் நோக்குடையராய் அப்பயணத்திற்கு ஆவன புரிந்துவந்தார். ஒரு நாள் தம் மாணாக்கர்க்கு முனிவரர் தமது காசியாத்திரையைக் குறித்துக் கூறுதலும், மாணவராகிய வைத்தியநாதரும் தமக்கு அப்பொழுது திருவாரூரிலே ஒரு பற்றுக்கோடுமின்மையால் தாமும் தமது ஆசிரியரோடு காசிக்கு வருவதாகக் கூறினார். ஆசிரியர் வைத்தியநாதரது இளமையையும் இல்லறவாழ்க்கை நிலையினையும் வழியினது அருமையையும் எத்துணை எடுத்துக் கூறியும், வைத்தியநாதரது மனம் அமைதியுறவில்லை. அதனைக்கண்ட முனிவரரும் மாணவராகிய வைத்தியநாதர் தம்மோடு காசியாத்திரை செல்வதற்கு ஒருவாறு ஒருப்பட்டார்.

இருவரும் ஒரு நன்முகூர்த்தத்திலே திருவாரூரை விட்டுப் புறப்பட்டு இடையிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவண்ணாமலையை யடைந்து ஒரு மடத்திற் றங்கினார்கள். முனிவரர் தமது ஆன்மார்த்த பூஜையின்பொருட்டுச் சென்றனர். வைத்தியநாதர் நித்தியக் கடன்களைக் கழித்தவளவிலே தமது பாடபுத்தகத்தைக் கையிற்கொண்டு யோகபட்டை கட்டிப் பயிலப் புகுந்தவர் மெய்மறந்து நின்றார். ஆசிரியர் தமது பூஜையை முடித்துக் கொண்டு வந்து மாணவரைப் பார்த்தார். மாணவர் இருந்த நிலை முனிவரர்க்கு எவ்வாறு தோன்றியதோ அது அறிவதற்கில்லை.

அவர் வைத்தியநாதரை மும்முறை வலம்வந்து சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, இனித் தாம் சீடரும் வைத்தியநாதர் குலமுறைப்படி குருவுமாயினதாகக் கூறிக் குருவுக்குரிய சிறப்புக்களையுஞ் செய்தனர்.

அகோரமுனிவரர்க்கும் வைத்தியநாத தேசிகர்க்கும் இதுவரையிருந்துவந்த தொடர்பு வேறுபட்டதாலே, இனித் தேசிகர் தம்மோடு காசி செல்வது ஏற்றதன்றெனக் கூறியதோடு தமது உடன்சாலை மாணவரும் பிரபுவாயுமுள்ளாரொருவர் திருநெலவேலியின் கண்ணே இருப்பதாகவும், அவ்விடம் செல்லுமாறும் வேண்டிக் கொண்டதோடு அவ்வன்பினருக்கு[1] ஒரு முடங்கலும் எழுதிக் கொடுத்துத் தேசிகரை ஊர்போக விடுத்துத் தாம் காசி நோக்கிச் சென்றார்.

வைத்தியநாத தேசிகர் திருவண்ணாமலையிலிருந்து புறப்பட்டுத் திருவாரூர் சென்றனர். சிறிதுகாலங் கழித்து, ஆரூரினின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலி நோக்கிச் சென்றார். இடையிலே கயத்தாற்றில் அப்பொழுது மதுரையை யாண்ட திருமலைநாயக்கரது காரியகர்த்தராக விருந்த திருவேங்கடநாத ஐயரைச் சந்தித்தார். தேசிகருடைய கல்வித்திறமையையும் அடக்கம் வாய்மை பொறுமை முதலாய நற்குணங்களையும் கண்ட திருவேங்கடநாதையர் தேசிகரைத் தமது மக்களுக்குத் தமிழாசிரியராக அமர்த்தினர். தாம் பாடம் கற்பித்துவரு நாளிலே, இலக்கண பாடம் சொல்லிவருகையில் தாம் கற்ற நன்னூலும் சைன முனிவரான மயிலைநாதர் செய்த உரையும் பல இடங்களில் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபடுவது கண்டு இயன்றவரை நன்னூற் சூத்திரங்களை வைத்துக்கொண்டு வேண்டிய விடங்களிற்றிருத்தியும் புத்துரை வகுத்தும் பாடம் போதித்து வந்தாரென்று கூறுவர். அதுவே நாளடைவில் **இலக்கண விளக்கம்** எனப் பெயர் பெற்றது.

வைத்தியநாத தேசிகர் மலையாளஞ் சென்று அந்நாட்டு அரசரின் மேற் பல பிரபந்தங்கள் பாடி, அவராற் பல சன்மானங்களும் ஊர்களும் முற்றூட்டாகப் பெற்றதோடு அவரது அவைக்களத்தினரால்

ஓதும் ப்ரபந்தங்க ளொருகோடி நிமிஷத்து ரைக்கும்ப்ர சண்டவாக்கி
உத்தண்ட வமிர்தரச சித்ரவித் தாரகவி யுபயகவி ராசராசன்

1. இவ்வன்பினர் யாவரென இதுபொழுது தெரிதற்குரிய சான்றுகள் கிடைத்தில.

போதும் பசுந்தமிழ்ப் பலகையுங் குடிபுகப் புலமகளெனுங் குமாரி
புதுநலந் தனைநுகர்ந் தவனுநீ யாகிலுன் புலமையை வழுத்த வசமோ
காதுங் கடுங்கொலைப் பாகடுங் கடதடக் களியானை யாசவெள்ளங்
களிசுவைப் பரணிமட லந்தாதி தூதுலாக் காதல்செய வோதவல்லாய்
மோதுந் தனிக்கொற்ற வாயிலாய் மூதண்ட முழுதும்ப ரந்தகீர்த்தி
முருகுகமழ் தருகமலை வருவைத்ய நாதகுரு முத்தமிழ்க் கவிராசனே

எனத் துதிக்கப்பட்டார். பின்னர் வடநாடு சென்று திண்டிவனத்தை யடுத்த மயிலாசலத்திலே எழுந்தருளியிருந்த சிவஞான பாலையர்மீது பாசவதைப்பரணி என்ற நூலும் மயிலாசலபதியான முருகன்மீது பிள்ளைத்தமிழும் பாடி அரங்கேற்ற, அவற்றிற்குச் சன்மானமாகப் பாலையருக்குச் சொந்தமாயிருந்ததும் கூறும் பேட்டிலுள்ளதுமான பத்துக் காணி நிலமும் ஓராள் சாகுபடி செய்யும் உப்பளமும மானியமாகப்பெற்றார்.[1]

திருவாரூரிலே இருக்கின்ற காலத்திலே தியாகேசப் பெருமான் மீது திருவாரூர்ப் பன்மணிமாலை, கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ் என்று சிறு பிரபந்தங்களைச் செய்தார். திருச்சிராப்பள்ளியை யடுத்த கருவூர்ப்பக்கங்களில் வாழும் பன்னிரண்டாஞ் செட்டிகளென்ற ஒருவகை வணிக மரபினரது[2] வேண்டுகோட் கிணங்கித் திருவாட்போக்கிப் புராணம் பாடினார். பின்னர் அமர்நீதி நாயனார் வாழ்ந்து முத்தியடைந்த திருப்பதியான திருநல்லூரின்மேல் நல்லூர்ப் புராணம் பாடினார். இந் நல்லூர்ப் புராண ஏடுகளின் இறுதியிலே,

தவிர்ப்பார்க் குறுதுணை வன்மீக நாதன் றனயனிந்தப்
புவிப்பாற் புலவன் வயித்திய நாதன் புகன்றசெஞ்சொற்
கவிப்பாகந் தேவர்க் கவிப்பாகம் போலின்பங் காட்டுங்கற்றோர்
செவிப்பா லுள்ளேசென்று சித்தத்திலே நின்று தித்திக்குமே.

பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரா னல்லூர்ப் புராணமாக் காதைசெந் தமிழாற்
கன்னலுந் தேனு மமுதமு மதூக் கனியும்போற் கட்டுரை செய்தான்
பன்னுமெய்ப் புகழான் றவவணை முதல்வன் பாரெலாம் வணங்குதென் கமலை
மன்னவன் கல்விக் கடலெனச் செழித்த வயித்திய நாததே சிகனே.

---

1. இந்நிலமும் உப்பளமும் இவருடைய சந்ததியாரிடமிருந்து கி. பி. 1894-ம் ஆண்டில் கைமாறியது.

2. பன்னிரண்டாஞ் செட்டிகளைக் குறித்துத் திருச்சிராப்பள்ளி கஜட்டீர் தொகுதி 1 லும், எட்கர் தர்ஸ்டன் எழுதிய சாதிகள் வரலாறு (Castes and Tribes) தொகுதி ii, பக்கம் 93லும் பார்க்க.

'இது சொன்னான் புதுப்பத்தூர் தவவணை கோத்திரத்தான் ஒப்பிலாமணி யென்றறிக' என்றெழுதப் பட்டுளது கொண்டு இதன் பெருமை விளங்கும்.

தேசிகர் நூல் செய்தலில் வல்லவரா யிருத்தல்போலவே பாடஞ் சொல்லுதலிலும் வல்லவராவர். இவர் இடைவிடாது பாடஞ்சொல்லும் வழக்கமுடையவ ரென்ப அதற்கேற்ப அவ்வாறுஓயாதுபாடஞ் சொல்லுவதாலுண்டாகுந் தாள்வலியைப் போக்கத் தவிட்டை வறுத்து ஒத்துக் கொடுப்பது வழக்கமாம். அவர் தமது மனைவி யாரை அழைத்து,

'தகதக தங்கம் தாளை வலிக்குது
தவிடு வறுத்துத் தா'

என்று கூறுவராம். இவரிடம் கல்விகற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தோர் பல்லோராவர். அவர்களுள்,

கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேழன்னின் தந்தை தம்மாற்
பாடும் புலவர்க ளானேமின் றிச்செம்மற் பட்டியெங்கும்
காடுஞ் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்பதுவே

என்று பாடியவர் படிக்காசுப் புலவர்.

குடந்தைப் புராணம்[1] பாடிய அரசூர் சொக்கப் புலவர் மற்றொரு சீடர். இவர் தமது ஆசிரியரைக் குடந்தைப் புராணத்தில்

அவமொழித் தென்னுளத் தமுத மூறுதீஞ்
சுவையெனத் தமிழ்வளஞ் சுரந்து நல்குமே
தவமெனக் கமலையி லிருந்த தேசிகன்
றவவணை வயித்திய நாதன் றாள்களே

என்று துதித்திருக்கின்றார். சிவரகசியம் பாடிய ஒப்பிலாமணி தேசிகர் மற்றொரு சீடர் என்பது அவர் நல்லூர்ப் புராணத்தைக் குறித்துப் பாடிய சிறப்புப்பாயிரங்களால் நன்கு விளங்கும்.

இவர் கல்விச்செல்வம் பெற்றிருந்ததுபோல மக்கட்செல்வமும் நிரம்பப் பெற்றிருந்தார். இவரது மனைவியார் 'தங்கம்' எனப்பெயர் பெறுவர். சதாசிவம், தியாகராஜன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என்ற பழனி என ஐவர் மக்களுண்டு. இவர்கள் ஐவரும் நன்கு கல்வி கற்ற வித்வான்களாகவே வாழ்ந்தனர்.[2]

1. குடந்தைப்புராணம் அச்சாகவில்லை. இது சகசி மகாராஜாவின் சபையில் அரங்கேற்றப் பட்டது.

2. இவர்களது சரிதம் பிறிதோரிடத்தில் கூறப்பட்டுள்ளது.

இவரது காலம் திருவேங்கடநாதரது காலமாகிய பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியே யாகும். இவரது சீரையுஞ் சிறப்பையுங் குறித்து இலக்கணக்கொத்து[1] எழுதிய சுவாமிநாத தேசிகர்.

'என்கண் காணத் திருவாரூரிற்
சிறப்புற் றிலகும் வைத்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்'

என்று கூறியுள்ளார். மேலும் இவருடைய பெருமையையும் திறமையையும் குறித்து அக்காலத்திலே வாழ்ந்த அந்தகக்கவி வீரராகவ முதலியார் கூறிய சான்று வருமாறு :

ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோநாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ—இம்பர்புகழ்
வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதங் காட்சரித்தக் கால்[2].

வைத்தியநாத தேசிகர் செய்தனவாக இது பொழுது தெரிந்த நூல்களாவன.

1. இலக்கணவிளக்கம். இது எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்ற ஐந்திலக்கணங்களையும் செவ்வனே விளக்குமொருநூல். இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையுடையதாய் முறையே 158, 214, 388 சூத்திரங்களையுடையது. ஆசிரியராலே எழுதப்பட்ட விரிந்த உரையையுடையது. இது குட்டித்தொல்காப்பியம் என வழங்குவது கொண்டே இந்நூலின் பெருமை விளங்கும். 17, 18-ம் நூற்றாண்டிலிருந்த புலவர் பலர் ஓதிய இலக்கண நூல் இதுவேயாம்.

இனி, சின்னாள் முன்னர் இலக்கணவிளக்கம் நூலும் உரையும் வைத்தியநாத தேசிகர் எழுதியதா அன்றி உரை வேறொருவர் எழுதியதா வென்ற ஒரு வினாவை யெழுப்பி அதுகுறித்துப் பெரிய விவாதம் ஒன்று பத்திரிகைகளில் நடைபெற்றது. அதுகாலை ஒரு புலவர் அவரது பரம்பரையில் வந்த அடியேனை இதனுண்மைபற்றி

1. நாவலர் அச்சிட்ட இலக்கணக் கொத்தில் சிறப்புற்றிலகும் என்பது திருக்கூட்டத்தில் என்று திருத்தப் பட்டுள்ளது.

2. இச்செய்யுள் அந்தகக்கவி பாடியதன் றென்பது இக்கால ஆராய்ச்சியாளரது சொந்த அபிப்பிராயம். 'அவர்காலம் முற்பட்டதாகலின் அவர் மரபினரான புலவரொருவர் பாடியது போலும்' என்று கூறுவர் பெருந்தொகை விசேடக் குறிப்பு 1711. கால ஆராய்ச்சித்திறன் இன்மையால் பலர் பலவாறு கூறுப.

உசாவினர். 'அடியேன் இலக்கணவிளக்கம் என்ற நூற்பெயரை யேனும் கேட்டதுண்டோ' என்று கேட்ட பண்டிதராக விளங்கு மொருவரும் உடனிருந்தனர்.

' என்கண் காணத் திருவா ரூரிற்
சிறப்புற் றிலகும் வைத்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்'

என்று ஈசானதேசிகரெனச் சிறப்புப்பெயர்பெற்ற இலக்கணக் கொத்து சுவாமிநாத தேசிகரே கூறியிருக்கும்போது அடியேனது கருத்து வேண்டாத தொன்றென்ற விடை பகர்ந்தேன். இவ்வினு எழுதற்குக் காரணமாக விருப்பது,

முதலு முடிவுஞ் சிதர்தரப் பலவாய்க்
கிடந்த வியலைத் தொடர்ந்தொரு வழிப்பட
வீட்டலா னிலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வைத்திய நாத தேசிக
னன்னவன் றவத்தி னுலவ தரித்த
முன்னவன் பாயிர மொழிந்துசொல் லணியுந்
தற்பவ முதன்மூன் றிற்பட நாடிப்
பகர்ந்தன னிளவல்பன் னூலு மாராய்ந்
துகந்துதொல் காப்பியத் துண்மை தோன்ற
வைந்திய லுந்தன் புந்திசான் றுரகத்
தந்தைமுன் னுரைத்தநூ றுன்முடி பெய்த
வந்த ணரூர்ச் சந்திர மௌலி
யருளுட் கொண்டு மருண்மன நீங்கிப்
பவங்கொளப் பாட்டிய லிலங்க வுரைத்தனன்
வாய்மைதரு தியாக ராய தேசிகனே.

என்ற பாட்டியற் பதிகமேயாம். ஆயினும் சி. வை. தாமோதரம் பிள்ளை கூறுமாறு ' தந்தையார் சூத்திரமிவை மைந்தனூர் சூத்திர மிவை' யென்று பாகுபாடு செய்வதற்குரிய ஏது யாதுங் காண்கிலம். பாட்டியலுக்கும் இச்சிறப்புப்பாயிரமின்றேல் வைத்தியநாதரது வாக்காகவே கொள்ளப்படுதலில் யாதொரு தடையுமில்லை.

இனி, இது ஒருக்கால் யான் முன்னர்க் கூறியதுபோன்று திரு வேங்கடநாதரது புத்திரர்கட்குப் பாடஞ் சொல்லும்போது சதா சிவதேசிகரும் உடன்சென்று பாடஞ்சொல்லி யிருந்தாலு மிருக்க லாம். இவைகளைக் குறித்து உறுதியாகக் கூறக்கூடிய சான்று ஒன்று மில்லை.

2. **மயிலம் பிள்ளைத்தமிழ்.** திண்டிவனத்தை யடுத்த மயிலா சலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பிரான்மீது பாடிய பிள்ளைத்

தமிழ் நூலாகும். இது நூறுபாக்கள் கொண்டது. சொற்சுவை பொருட்சுவை யுடையது இதுபொழுது முருகப்பிரான் திருமுன்னர் மாலைவேளையில் ஓதப்பட்டு வருகிறது. அச்சிடப்பட்டுளது. ஈண்டு மாதிரிக்காக ஒன்றிரண்டு செய்யுட்கள் காட்டுவாம்.

நயகுணவி லாசச் செருக்கினால் நலியுமல ரேவைத் துரக்குமோர்
செயவனிதைத் தாளைப் பழிச்சியே தினமுமுடி சூடிச் செழித்துமே
அயிலைநெடு மாவைப் பிளக்கவே யருளிவிடு வானைத் தருக்கியே
மயிலமலை வாழக் களிப்பினால் வருமுருக வேளைப் புரக்கவே. (காப்பு. 8.)

செங்கயற் பெருநயன தேவகுஞ் சரியன்பு செப்புமுக பதுமமுத்துஞ்
சிறுமுறுவல் புரியுமுக கமலமுத் தமுமூடல் தீர்க்குமுக புளரிமுத்தும்
மங்கையர்க் கரசிபுது மந்தார மாலையொரு வனசரர்கு லக்கொழுந்து
வாரிதியில் வாராத வாரமுத மெனவந்த வள்ளியிரு வள்ளநிகருங்
கொங்கையொ டிணைத்தமுக புண்டரிக முத்தமுங் குமுதவா யமுதநுகருங்
கோகநக முத்தமும் மாகனக லதையனைய கோதையவள் காதல்புகழும்
பங்கயந் தருமுத்தும் வேண்டுமயி லைச்சயில பவளவாய் முத்தமருளே
பரிதிவெயில் விடுபசுங் குருதிவடி வேலவா பவளவாய் முத்தமருளே. (43)

3. பாசவதைப்பரணி. இது அம்மயூராசலத்திலே எழுந்தருளியிருந்த சித்தமூர்த்தியான சிவஞானபாலையதேசிக சுவாமிகள் மீது பாடப்பட்ட பரணி நூலாகும். இது i கடவுள்வாழ்த்து, ii கடைதிறப்பு, iii காடுபாடியது, iv பேய்களைப் பாடியது, v கோயிலைப்பாடியது, vi தேவியைப்பாடியது, vii பேய்முறைப்பாடு, viii கூளி கூறியது என்ற பகுதிகளோடு 736 தாழிசைகளையுடையது. இது மிக்க சுவையுடையதொரு நூலாகும்.

இதன் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் என்பதற்குப் போதிய ஆதாரமில்லை யென்பது சிலரது கருத்து. இந்நூலும் மயிலம் பிள்ளைத்தமிழும் பாடியதற்காகவே ஜமீன் சூளும்பேட்டி லுள்ள நிலமும் அளமும் ஆசிரியரது பரம்பரையினர் அனுபவித்து வந்தனர் என்பது ஒன்றே அக்கூற்றை மறுத்தற்குப் போதியதாகும். இந்நூல் அச்சிலுண்டு.

4. திருவாரூர்ப் பன்மணிமாலை. இது சப்தவிடங்க க்ஷேத்திரங்களிலொன்றான திருவாரூர்த் தியாகேசன்மீது பாடப்பட்ட சிறு நூலாகும். அநேக சரிதங்களைக் கொண்டது. நூறு பாக்களைக் கொண்டது. அச்சேறியுள்ளது.

காவா யெனச்சிறு தெய்வந் தனைத்தினங் கைதொழுது
நாவாய் தழும்பப் புகழ்ந்தென் பயன்கதி நாடின்மும்மைத்
தேவாயத் தேவிற்குங் கோவாய் மணிப்பொற்சிங் காதனஞ்சேர்
பூவாய் மதிக்கண்ணி யாரூர்ப் பிரான்பதம் போற்றுமினே

என்பது பன்மணிமாலையில் ஒரு பாட்டு.

5. நல்லூர்ப்புராணம். இது ஆண்டார் நல்லூர் என்று இது பொழுது கூறப்படும். திருநல்லூர்ச் சிவபிரானது பெருமையைக் கூறுவது. சைவசித்தாந்தக் கருத்து மலிந்தது. இது 27 சருக்கங் கொண்ட 1013 திருவிருத்தங்களையுடையது.

i பாயிரம். 7, ii நைமிசாரணியச் சருக்கம் 153, iii கைலாசச் சருக்கம் 60, iv சுந்தராசலச் சருக்கம் 42, v பிரமதேவ ரருச்சனை புரிந்த சருக்கம் 42, vi பிரமதீர்த்தச் சருக்கம் 26, vii பஞ்சாக் கரச் சருக்கம் 78, viii அக்கினிதீர்த்தச் சருக்கம் 82 ix அகத்தி யர்க்கு மணக்கோலங் காட்டிய சருக்கம் 23, x சத்த சாகரம் வர வழைத்த சருக்கம் 45, xi சமுத்திர ராசன் செப்பேசுரம் பணிந்து மீண்ட சருக்கம் 26, xii பிரமதேவர் வரம் பெற்ற சருக்கம் 33, xiii ஐராவதம் வரமபெற்ற சருக்கம் 39, xiv சுமதி காந்தனை யடைந்த சருக்கம் 40, xv சங்குகன்னச் சருக்கம் 23, xvii கிராத மோட்சச் சருக்கம் 33, xvii தருமசேனச் சருக்கம் 49, xvii தீர்க்க துண்டச் சருக்கம் 25, xix எக்கியகுத்தச் சருக்கம் 12, xx கோவிதாரத்துவச் சருக்கம் 22, xxi தலவிசிட்டச் சருக்கம் 20, xxii மாயவருச்சனைச் சருக்கம் 20, xxiii தேவர்களருச்சனைச் சருக் கம் 11, xxiv தீர்த்தமான்மியச் சருக்கம் 28, xxv கழுகு மோசனச் சருக்கம் 10, xxvi வீதி விடங்கச் சருக்கம், 28 xxvii அமர்நீதி நாய னர் சருக்கம் 26, ஆகத்திரு விருத்தம் 1013.

இருவினை வெண் டிரைமாயக் கருங்கடலைத் தணித்தேற்றி யெண்ணி லாற்றற்
பொருவருமா ணவச்சேறு கருணைநீ ராற்கழுவிப் போக்கிப் போகா
நிரதிசயா னந்தநெடு நிலவெறிப்ப வுயர்முத்த நெடிய தாம
மருவுதன தணியாக மகிழ்காசி வாரணத்தை வணங்கி வாழ்வாம்.

உலகெலாம் படைத்தருளி நிலைபெறுத்தி யிளைப்பொழிய வொடுக்கி மீட்டுந்
தொலைவிலா வினைப்பயன்க டுய்ப்பவவை திரோபவித்துத் தொடர்ந்து நீங்கா
வலகிலா ணவச்சத்தி யாவரண விடநீக்கி யருளா நிற்குந்
தலைவர்மே தகுநல்லூர்ச் சவுந்தரநா யகரவர்தா டலைமேற் கொள்வாம்.

என்பன காப்புச் செய்யுட்கள்.

ஈறில் போக மெவர்க்கு மளிப்பது
மாறி லாத வரகதி யுய்ப்பதுந்
தேறில் யாதது தேர்ந்துரை செய்யெனக்
கூறி னுனவ னுங்குறித் தோதுவான்

* * *

ஆனால் அச்சிடப்பட்டுள்ள வாட்போக்கிப் புராணத்தில் தேசிக ருடைய பாக்களின் இடையே வேறு செய்யுட்கள் இடைமடுக்கப் பட்டும் ஆரியராசன் சருக்கம், சிற்றுயனார் சருக்கம் என்பவை திரு வாவடுதுறை இராமலிங்கத் தம்பிரானால் பாடிச் சேர்க்கப்பட்டும், வயிரப்பெருமாள் சருக்கம் முத்துச்சாமி யென்பவராலும், பொன் னிடுபாறைச் சருக்கம் அ. சிவானந்தசாகர யோகீசுரராலும் பாடிச் சேர்க்கப்பட்டுமுள. தேசிகர் பாடிய புராணச் செய்யுள் நானூறுக்கு உட்பட்டவாகவே யிருக்க, அச்சிடப்பட்ட புரா ணம் 845 செய்யுட்களை யுடையதாய் 'கமலைமாநகர் வைத்திநாத தேசிகரா லியற்றப்பட்டது' என்று வழங்குகிறது. இது கம்பன் தன்னுடைய வாழ்நாளிலேயே இராமாயணத்திற் றன்பாக்களும் சில கேட்டதுண்டு என்ற கதையை உறுதிப்படுத்தும்.

7. கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ். இது திருவாரூரிற் கோயில் கொண்டிருக்கும் பராசக்தியின் மேற்று. நூறுபாக்க ளோடு காப்புங்கொண்டது. இதுவே இவர் பாடிய முதல் பிரபந் தம் எனத் தோன்றுகிறது.

மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரந் தரித்த லானுங்
காவற் கடவு ளாத லானும்
பூவினட் புணர்த லானுமுன் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி
யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல் என்னும் அமைப்புற்ற

காப்புப் பருவத்தில் வீரபத்திரக் கடவுள் காப்புங் கூறி யுள்ளார். 'மயிலம் பிள்ளைத்தமி'ழிலும் வயிரவர் காப்புண்டு. பாக்கள் மிகுந்த நயமுடையவாயும் ஓசையும் அழகுமுடைய வாயும் உள. அம்பிகையின் அருள் பெற்றதைச் செய்யுள்கள் காட்டுகின்றன. 'என் சிந்தையுள்ளே—யோர்பூத்த பாட்டளிகள் துதையாக் கமலத்திருந்தருள்செய் கவுரிமாதா' என்றும் 'மன் சரிதை விட்டிழிந்த மடம்பெற்றேனை மகிழ்ந்தெடுத்து' என்றுங்

கூறுவர். பன்மணிமாலையிற் கூறியாங்கு 'செத்துப் பிறக்குங் கடவுளரைச் சிந்தையெண்ணி யுழலாது' என்று கூறுவர். இச்சிறு நூலிற் காணக்கிடைக்கும் கதைகள் அளப்பில. பல கதைகள் விளங்கவில்லை.

துண்டப் பிறையணி சோதியிடந்திகழ் தூய துகிற்கொடியே
சுற்றும் அடியவர் பச்சிலை கொண்டடி சூடு மருட்கடலே
கண்டந் தரிவிட மண்டி யெழரவகை கைமலர் பற்றமுதே
காயும் பவவிருள் மாயும் படிவிடு காந்தத் தனிமணியே
கொண்டல் படிந்திடு மாளிகை மேலுறை கோல நுதற்றிருவார்
கூருகிர் தைவரும் யாழிசை மென்மொழி கூறும்படியறியா
அண்டர் மகிழ்ந்துறை தருமா ரூர்மயி லாடுக செங்கீரை
ஆதிப் பரையுமை கோடிக் கதிர்மணி யாடுக செங்கீரை.

7. மெய்ஞ்ஞானவிளக்கம் என்னும் தமிழ்ப் பிரபோத சந்திரோதயம். இதனைக் குறித்த செய்திகளைத் திருவேங்கடநாதர் சரிதத்திற் காண்க.

---

13. அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

தொண்டை நன்னாட்டிலே திருக்கழுக்குன்றத்துக்கு அணித்தாக உழலூர் என்றோரூருண்டு. அவ்வூரிலே பரம்பரையாக வந்த ஒரு சைவ நற்குடியிலே வடுகநாத முதலியாரென்றொருவர் இருந்தார். இவர் ஒரு பெருநிலக் கிழவர். பூதூர் பொற்களந்தை என்ற ஊர்களிலும் நிலப்பரப்புடையவர். அவருக்கு ஒரு பிள்ளை பிறவியிலேயே இருவிழியும் இல்லாது பிறவிக் குருடாகப் பிறந்தது. வேறு பிள்ளையுமில்லை. அப்பிள்ளைக்குப் பெற்றோர் வீரராகவன் என்று பெயரிட்டனர். குருடேயாயினுஞ் செவிடேயாயினுஞ் பெற்றோருக்குப் பிள்ளை அருமையென்று சொல்லவும் வேண்டுமோ? இப்பிள்ளை வளர்ந்து வருகையில் கல்வியில் தீவிர புத்தி காட்டுவதைத் தந்தையார் அறிந்து முதலிற் பொற்களந்தை யென்னும் களத்தூரை யடுத்த பூதூரிலும் பின்னர்ப் பொற்களந்தையிலும் நல்லாசிரியர்களைக் கொண்டு கல்வி பயில்வித்தார் பயிலவித்தும் வீரராகவருக்கு இருந்த கல்வியார்வம் நிரம்பாமை கண்டு அக்காலத்திலே காஞ்சிபுரத்திலிருந்த கந்தபுராணம் கச்சியப்பரிடம்[1] கல்விபயில ஏற்பாடு செய்தார். இவர் கச்சியப்பரிடம் நன்கு பயின்று கவிபாடுந் திறமையும் பெற்றார். இதனாலே கவி வீரராகவர் என்ற சிறப்புப்பெயரும் பெற்றார். இச்செய்தியைக் கச்சியப்பரே,

1. கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் அல்லர். கந்தபுராணப் பிரசங்கத்திலே வல்லவராய கச்சியப்பர் என்று கொள்ளவேண்டும்.

பொங்குதமி ழயோத்தியில்வாழ் தசாதனென் போனிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவரிருவர் தோன்றி னூரால்
அங்கொருவ னொருகலைமா னெய்திடப்போய் வசைபெற்ற னவனி பாலன்
இங்கொருவன் பலகலைமா னெய்திடப்போய்க் கவியினு லிசைபெற் றூனே

என்று புகழ்வர். இவர் கல்வியில் வல்லவரான முறைமை 'ஏடாயிரங்கோடி யெழுதாது தன்மனத் தெழுதிப் படித்த விரகன்' என்றும், 'இந்நாளிருந்தபேர் பண்டிருந்தபேர் பழய பாகம் இருபாகமும் வல்லலக்கணக்கவி வீரராகவன்' என்றும் தம்மைக் கூறிக்கொள்வதாலே இவரது கல்வியின் திறமை விளங்கும். இவர் குருடராயிருந்து கல்விபயின்று கவிபாடுந் திறமை பெற்றதாலே தம்மை வரகவி யென்றே கூறிக்கொள்ளு கின்றூர். அன்றியும் கம்பனது கவித்திறத்தை நன்கு அறிந்திருந் தார். ஒருக்கால் ஈழத்தரசனுன பரராச சிங்கன் என்பான் 'இரா மாயணம் அவதானிக்கச் சொன்னபோது' இவர் செய்த பிரசங்கத் தைக் கேட்டு அரசன் வியந்துகூறிய கவி வருமாறு:—

இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்று னெருமுத் தமிழையுமே.

இவ்வாறு இவர் கல்விகற்றுப் புலமை நிரம்பியதோடு யாழும் பயின்று ஊர்திரும்பினூர். தக்க மனைவியை மணந்து இல்லற வாழ்க்கை நடத்திவந்தனர். கல்வி வல்லவராயிருப்போர் தங்கல்வி யிலே புத்திசெலுத்துவதேயன்றி உலகியலுக்குரியதான நட் புரிமை மனைவிமக்களிடம் காட்டுவது அரிது. அதனாலே மனைவி மக்கள் சில வேளைகளில் அலட்சியமாகப் பேசுதலுமுண்டு. இது மக்களியற்கை. அவ்வாறே நமது புலவரான வீரராகவ முதலி யாரையும் ஒருநாள் அவரது மனைவியார் அவமதித்துப் பேசினதாக வும் அது பொருமல் ஊரைவிட்டுச் சென்றதாகவும் கூறுவர். இஃது எத்துணையுண்மை யென்பது காண்டற்கில்லை.

அக்காலத்திலே வேதசயிலமான திருக்கழுக்குன்றத்துக்குத் தமிழில் புராண மின்மையால் அங்குள்ள சிவாலய பரிபாலனம் செய்து கொண்டிருந்த பேரம்பலத் தம்பிரான் மடத்து உருத்திரகோடித் தம்பிரான் தமிழ்ப் புராணம் பாடும்படி விரும் பினூர். அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் திருக்கழுக் குன்றப் புராணத்தைப் பாடி அரங்கேற்றக் காத்திருந்தார். அந் நாளையில் செங்கற்பட்டு ஜில்லாவில் விஜயநகர அரசர்களுடைய காரியகர்த்தராக விருந்தவர் திம்மைய வப்பய்யன்என்பவர். அவரே வந்து, நூல் அரங்கேற்ற வேண்டியிருந்தது. அதனைக்கேட்ட நமது புலவர் அவருக்குப் பின்வருஞ் சீட்டுக்கவியை எழுதினூர்:

இந்நா ளிருந்தபேர் புதியபா கம்பண் டிருந்தபேர் பழைய பாகம்
　　இருபாக மும்வல்ல லக்கணக் கவிவீர ராகவன் விடுக்கு மோலை
அன்றாதி தானப்ர வாகன் ப்ரசங்கத் தனந்தசே டாவ தாரன்
　　அகிலப்ரகாசகன் திம்மய்ய வப்பய்ய னகமகிழ்ந் தினிது காண்க
தன்னாரு மோலையும் வரக்கண்டு தாம்வேத சயிலப்பு ராணத் தையித்
　　தனைநா ளிருந்தோதி னுமரங் கேற்றுவது தான்வந்த லாம மில்லை
நன்றாவ லோருட னிதைக்கேட் டெனைச்சோழ னாட்டுக் கனுப்ப வேண்டும்
　　நவிலோலை தன்னாம லேசுக்ர வாரத்து நாளிங்கு வரவேண் டுமே.

அவ்வாறே திம்மய்ய வப்பய்யர் வந்திருந்து நூலை அரங்கேற்றினார்.

பின்னர் இவர் தமது ஊரான பொற்களந்தையை விட்டுப் புறப்பட்டுச் சென்று வழியிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டுசென்றார். சென்றவர் திருவாரூரிற்றங்கி அவ்வூர்க்கு ஓர் உலாவும் அவ்வூரையடுத்த கீழ்வேளூருக்கு ஓர் உலாவும் இயற்றியதோடு அவ்வூரில் மிக்க சிறப்போடு விளங்கிய வைத்தியநாத தேசிகரோடும் அளவளாவினார். ஒருகால் அவரது பெருமையைக் குறித்து.

　　ஐம்பதின்மர் சங்கத் * * தங் நாட்சரித்தக் கால்[1]

என்று புகழ்ந்து பாடினார்.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையதீனத்திலே எட்டாமது பட்டத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகரைக் கண்டு அவர் மீது பஞ்சரத்தினம் பாடித் துதித்தார். யாழ்ப்பாணஞ் சென்று பரராசசிங்கனைக் காண முயன்றபோது அரசனுடைய காட்சி கிட்டவில்லை. ஒருநாள் அரசன் இளங்காவிலே உலாவிக்கொண்டிருந்தபோது மரப்பொந்திலிருந்த கிளியொன்று தலையை நீட்டுவதும் உள்ளே யிழுத்துக்கொள்வதுமாக இருந்தது. அதனைக்கண்ட அரசன் அவையிலுள்ள புலவர்களைத் தான் கண்டதைக்கூறும்படி கேட்க, அவர்கள் கண்டசுத்தி பாடும் வன்மையின்மையால் திகைத்தனர். அப்பொழுது ஒரு (புல)வர் வீரராகவரது வரவைத் தெரிவிக்க, அரசன் முதலியாருக்குக் காட்சி யளித்தான். அரசன் அவர் குருடராவரே, அவர் எவ்வாறு காண்பா ரென்றெண்ணிக் கையில் வில்லுமம்புங் கொண்டு நின்றான். கவி அக்கோலத்தை மனக்கண்கொண்டு கண்டு

1. முன் 72-ம் பக்கம் பார்க்க.

2. சில நூற்றாண்டுகட்கு முன்வரை யாழ்ப்பாணத்துக்கு வேதாரணியம் கோடியக்கரையிலிருந்தே செல்வது வழக்கம்.

வாழு மிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மாராமரமோ இங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை யபிராமா வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

என்று கூறினார். பின்னர் அரசன் கொண்ட எண்ணத்தைக் கூறும்படியாகக் கேட்க

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப் பரிசு பெறுமற் றிரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப் புழுகென் றிறைத்தாற் பொறுப்பாரோ
அடவிக் கதலிப் பசுங்குருத்தை நஞ்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட் டகலா துறையு மகளங்கா
திடமுக் கடவா ரணமுகைத்த தேவே தேவ சிங்கமே
திக்கு விசயஞ் செலுத்திவரும் செங்கோ னடாத்து மெங்கோவே

என்று பாடினார். அரசன் தானினைத்திருந்த செய்திகளெல்லாம் புலப்படவே, புலவரைப் பெரிதும் போற்றினான். கவியரசு அவ்வரசன்மேல் ஒருவண்ணம் பாடிக்கொண்டு வந்திருந்தார். அதுவும் அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது அரசன்

விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொப்பத் தோன்றினர்
சிரகா கம்பிதஞ் செய்ய லாகுமே

என்று பாடியதோடு அநேக சன்மானங்களும் யானைக்கன்றும் பொற்பந்தமும் நல்கினான். அதனைச் சுட்டிப் புலவர்

பொங்குமிடி யின்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபா ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது

என்றும்,

இல்லெனுஞ்சொல் லறியாத சீமையில்வா ழுதானைப்போய் யாழ்ப்பா
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும் பாலி யாமற் [ணன்யான்
கொல்லநினைத் தேதனது நால்வாயைப் பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும் நால்வாய்க்கு மிரையெங்கே துரப்பு வேனே

என்றும் பாடினார்.

---

1. இலங்கைக்கு அரசனான இராவணனில்லை; மாரீசனாகிய மானில்லை; ஏழு மாராமரமில்லை; அவ்வாறிருக்க நீ வில்லெடுத்த விதமென்னை என்று அரசனை இராமனாக வர்ணித்தார்.

அரசன் இவரைத் தனது அவையில் பலநாள் வைத்திருந்து கம்பராமாயணம் முதலியன பிரசங்கிக்கச் செய்தான். இவரது கம்பராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டபோது 'இன்னங்......கன முத் தமிழையுமே' என்று வியந்து கூறினன். ஆரூருலாவைக் கேட்டு ஆனந்தமடைந்து

புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே

என்றும் பாடினன்.

இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட புலவர் அந்நாட்டினின்றும் நீங்கி தமிழ்நாடு போந்து அப்போது கயத்தாற்றிலிருந்து அரசாட்சி செய்துகொண்டிருந்த திருவேங்கட நாதரைக் கண்டு அவர்மேல் உலா ஒன்று பாடினார். அவர் அவ்வுலாவைக் கேட்டுப் பாடிய பாட்டு வருமாறு :

ஒட்டக்கூத் தன் * * கவிகேட்ட பின்[1].

இவராற் சன்மானிக்கப்பட்டபின் சீவில்லிபுத்தூர் சென்றார். அங்கு அக்காலத்தில் பொதுமாதர் பலர் இருந்தனர். போலும். புலவர் அவர்களால் மிக்க துன்பமடைந்தாரென்று பின்வருஞ் செய்யுளாற்றெரிகிறது.

வேசையரே மல்குமூர் வீதியிலார் வந்தாலும்
பேசிவலே வீசிப் பிடிக்குமூர்—ஆசைமயல்
பூட்டுமூர் கையிற் பொருள்பறித்தே யோடுகொடுத்
தோட்டுமூர் சீவிலிபுத் தூர்.

பின்னர், பல தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திரும்பினார். அக்காலத்திலே திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள அரியலூர் ஒரு பெரியஜமீன். அதன் சொந்தக்காரர்களுக்கு ஒப்பில்லாத மழவ

1. 55-ம் பக்கம் பார்க்க.

2. இந்த ஜமீன் இராம ஒப்பிலாத மழவராயரால் சகம் 1300-ல் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் 45 ஆண்டு ஆண்டார். இவருக்குப்பின் இரண்டாமவர் இராமர், 3 பல்லகவொப்பிலாதான், 4 மள்ளிகொண்ட ஒப்பிலாதான், 5 வாண்டாயி, 6 கட்டியப்பன், 7 கிருஷ்ணய்ய ஒப்பிலாதான், 8 குமார ஒப்பிலாதான் முறையே 30, 39, 35, 38, 47, 32, 10 ஆண்டுகள் ஆண்டனர். குமார ஒப்பிலாதான் சகம் 1576 க்குச்சரியான கி. பி. 1654 முடிய அரசாண்டான்,

ராயர் என்பதுபட்டம். அவர்கள் கல்வி கேள்விகளில் வல்லவர்கள். சங்கீதத்திலும் நல்ல பயிற்சி யுடையவர்கள். ஜமீன்தாரராயிருந்த பிரபுவைக்காணப் புலவர் சென்றார். பிரபு இவரை வரவேற்று உபசரித்தார். ஜமீன்தாரர் கொடுக்கும் படியின் திறத்தை வியந்து

சேயசெங் குன்றை வருமொப் பிலாதிக்குச் செங்கமலத்
தூயசெங் கண்ண னிணையொப்ப ேனதண் டுழாயணிந்த
மாயன ளக்கும் படிமூன்று கிட்டைய மாமழவ
ராயன ளக்கும் படியொரு நாளைக் கிலக்கமுண்டே.

இந்தப் பிரபுவின் மகனாரான குமார ஒப்பிலாத மழவராயர் இசையில் வல்லவர். அவர் ஒரு சமயத்திற் பாடிக் கொண்டிருக்கும் போது கேட்ட புல்வர் அவருடைய சங்கீதத்திறமையை வியந்து

வாழொப் பிலாதவன் சேயொப் பிலாத மழவதிசை
ஆழக் கடல்விட்டு நீபாடுங் காலத் தரிசெலுங்கால்
நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான்
காழொப் பினுநின் னிசைகேட்குங் காற்கரைந் தேகுமென்றே

என்று பாடினார். அந்நாட்டுப் பிரபுக்களால் சன்மானிக்கப்பட்டு ஊர் சென்றார்.

போகும் வழியில் ஆலூர் என்ற ஊரிலுள்ள வீரையன் என்ற பிரபுவினுடைய மைந்தரான தீத்தான் என்பவர் கல்வி கேள்விகளில் வல்லவராக இருந்ததோடு இசைச் செல்வமும் பெற்றிருந்தார். அவரது இசையைக் கேட்டு மகிழ்ச்சி கொண்ட நமது புலவர்,

வாவிய பொற்பரி யாவூரில் வீரையன் மைந்தபஞ்ச
காவியந் தேர்கின்ற தீத்தாசங் கீதத்திற் காவலதாம்
ஓவிய சாலையெல் லாங்கொல்லி யாமுள் ளுருகும்ரத்னம்
மோவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே

என்று சிறப்பித்தார்.

சேலம் ஜில்லாவிலே திரிபதகை என்ற ஊரிலே செழியதரையன் என்றொரு பிரபு இருந்தார். அவரிடம் ஒரு குதிரை வேண்டிப் பின்வரும் சீட்டுக் கவியை எழுதி யனுப்பினார்.

ஏடாயி ரங்கோடி யெழுதா து தன்மனத் தெழுதிப் படித்த விரகன்
எதுசொலினு மதுவே யெனச்சொலுங் கவிவீர ராகவன் விடுக்குமோலை
சேடாதி பன்சிர மசைக்குங் கலாகரன் திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலஞ் செயித்த தாகந்தீர்த்த செழியனெதிர் கொண்டுகாண்க

பாடாத கந்தருவ மெறியாத கந்துகம் பக்திகோ ணூதகோணம்
பறவாத கொக்கனற் பண்ணுத கோடைவெம் படையாய்த் தொடாதகுந்தஞ்
சூடாத பாடலம் பூவாத மாத்தொடை தொடுத்துமுடி யாதசடிலஞ்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந் துதிக்கவர விடவேணுமே.

இச் செய்யுளைக் கண்ட செழியதரையன் குதிரை யொன்றனுப்பிய போது பின்னுஞ் சில பண்டங்கள் விரும்பி மற்றொரு கவி யெழுதினுர். அதனைக் காண்க :

சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற வாவைகள் காறளைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பரென்னீர்
சேலத்து வேந்த னகத்தாகந் தீர்த்த செழியனுக்கே.

இக்கவியைக் கேட்டு அவன் வேண்டுவன செய்தான்.

செய்யூரெனவழங்கும் சேயூரிற் கோயில் கொண்டிருக்கும் முருகன்மேல் பிள்ளைத்தமிழும் கலம்பகமும பாடினுர். இவை அரங்கேற்றமாகையில் அவ்வூரிலிருந்த பிரபுவான விட்டினர் அம்மையப்ப முதலியார் பிணக்கங் கொள்ளவே அவர்மேல் பிள்ளைத் தமிழொன்று பாடினுர்.

தென்னூர்க்காடு ஜில்லாவிலே அனந்தை என்றேர் ஊருண்டு. அவ்வூரிலே சந்திரவாணன் என்றெருரு பிரபு இருந்தார். அவர்மேல் கோவைப் பிரபந்தம் பாடினுர். அப்பிரபந்தம் பாடி இரண்டு மூன்று மாதமாகியும் சந்திரவாணப்பிரபு புலவரை வரவழைத்துக் கோவையை அரங்கேற்றம் செய்யவில்லை. புலவர் உடனே அந்தப் பிரபுவுக்கு ஒரு சீட்டுக்கவி பின்வருமாறு எழுதினுர்.

மின்னு மாளிகை யனந்தை யாதிபதி சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கு மோலைதன் விருப்பி னுல்வலிய வேயழைத்
துன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு கோவையோதுமெனவோதின
னேத மாதமொரு மூன்று மோதியொரு நாலு மாதமள வாகவும்
இன்ன முந்தனது செவியி லேற்றதிலை யென்னி லிந்தவுல கெண்ணுமோ
இராச ராசர்திறை கொள்ளு மென்கவிதை யிங்கு வந்துகுறை யாகுமோ
தன்னை யென்சொலுவ ரென்னை யென்சொலுவர் தமிழ்க்குத் தான்மண
தன்புகழ்க்குமிது நீதியோ கடிது தானிந் நேரம்வர வேணுமே. [மல்லவோ

இந்தச் சீட்டுக்கவியைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டுப் புலவரை வரவழைத்து நூலை அரங்கேற்றி வேண்டிய சன்மானங் களைச்செய்து ஊர்போகவிடுத்தான். இம்மாதிரியாக இவர் மயிலைச் காளத்தி கிருஷ்ணப்பமுதலியார் போன்ற பலருக்குச் சீட்டுக்கவிக

ளெழுதினார். கொடாதவர்களை வைது அவர்கள்மேல் வசையும் பாடியிருக்கின்றார். தினகரனென்றொரு பிரபு இருந்தார். அவரைக் கண்டு சில பாக்களைப்பாடினார். அவர் இவரைத் தக்கபடி சன் மானிக்காமையினாலே

திரையன் தினகரனைச் செந்தமிழ்க்கு நல்ல
துரையென்று நாங்கவிதை சொன்னோஞ்—சுரையுண்ணும்
வண்ணமே செய்தான் வரகவிக்கு வண்மையென்னும்
எண்ணமே செய்தா னிலை.

என்று வசை பாடினார்.

இவ்வாறாக வசைப் பாட்டடைந்தவர்களுள் நாகதேவனும், சடையாண்டியும் குறிக்கத்தக்கவரார். ஆனால் தமக்கு நன்மையும் பெருமையுஞ் செய்தாரையும் மறப்பதில்லை. விஜயராயன் என்ற பிரபு தம் பல்லக்கின்பின் வந்ததைக் கண்ணுற்று அதனைக் குறித்து மகிழ்ந்து,

திருமாலு மீசனும் பின்போயுந் தூது செலத்துணிந்தும்
அருமா துரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்குப்
பெருமான் சிவிகைப்பின் சென்றான் விசயப் பிரமனுமே

என்று சிறப்பித்தார். இவர் பலநாளிருந்து பலபுரிந்து, இல்லறம் நடாத்திச் சிவபெருமானது திருவடிநீழலை யடைந்தார். இச்செய்தியைக் கேட்ட கயத்தாற்றரசர்

இன்னமுதப் பாமாரி யிவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுலகிற் பெய்யப் புகுந்ததால்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்முடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம்

தோற்றா தொளித்திருந்த தூலக் கவிகளெலாம்
மேற்றா ரகையின் விளங்கியவே—எற்றாலுங்
கன்னவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னருஞ் செங்கதிரோன் போய்

என்று கையறம் பாடினர்.

முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான் மீகனுநின் முன்னில் லாமல்
தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்துஞ் சென்று சேர்ந்தார்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவிவீர ராக வாநீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெயப் போயினையோ புகலு வாயே

என்று ஒருவர் வருந்தினார்.

இவர் சமயோசிதமாகப் பாடுஞ் சமர்த்தர். ஒருகால் தாம் கொண்டுசென்ற சாதத்தை நாய் கௌவிக்கொண்டு ஓட, அதனைச்சுட்டி

சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே

என்று பாடினார். தம்முடைய மனைவியிடஞ் சென்று தாம் வாங்கி வந்த பரிசிலைக்குறித்துக் கூறிய வேடிக்கைப்பாட்டொன்று வருமாறு:

இம்பர்வா னெல்லை யிராமனை யேபாடி
என் கொணர்ந்தாய் பாணு நீயென் றாள்பாணி
வம்பதாங் களப மென்றேன் பூசுமென்றாள்
மாதங்க மென்றே னும்வாழ்ந் தேமென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் தின்னு மென்றாள்
பகடேன் றேனுழு மென்றாள் பழனந் தன்னைக்
கம்பமாவென் றேனற் களியா மென்றாள்
கைம்மாவென்றேன்சும்மா கலங்கினளே.

யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வரும்போது கோடியக் கரையிலிறங்கி இடும்பாவனம் சென்று தங்கினார். அங்கு இவரை யாதரிப்பாரில்லை. அப்பொழுது இடும்பாவன நாதரைக் குறித்து.

பசிமுடுக நோவதல்லாற் பாழ்வீட்டிற் பாழ்த்த
கொசுகுகடி யாலுங் குமைந்தோம்—மிசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தா னீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே

என்று பாடி வருந்தினார். இவர் சீட்டுக்கவி பாடுவதில் மிக்க சமர்த்தர். அதனைக்குறித்து நிரஞ்சனநாதர் என்ற வித்வான்

சீட்டுக் கவியென்று சொல்வார் சிலரந்தச் சீட்டுக்கவி
காட்டுக் கெறித்த நிலவாகிப் போஞ்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ருற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவ னற்கவியே

என்று பாடுவார்.

இவர் கல்வியில் வல்லாராக இருந்தமை மேற்காட்டியவைகளாலும் பிறவற்றாலும் இனிது விளங்கும்.

இவருடைய காலத்தைக் குறிக்கப் பல சான்றுகள் கிடைக்கின்றன. முதலாமதாக இவர் திருக்கழுக்குன்றப் புராணம் பாடிய காலம். கி.பி. 1680வரை செங்கற்பட்டில் திம்மய்ய நாயக்கர் என்பவர் அரசு செலுத்தியிருக்கின்றார் என்று தெரிகிறது' என்பர் தி.த. கனகசுந்தரம் பிள்ளை[1]. இரண்டாமதாக வைத்தியநாத தேசிகரையும் கயத்தாற்றிலிருந்த திருவேங்கட நாதரையும் கண்டு பாடியுள்ளார். அவர்களது வயோதிகப் பருவத்தில் இவர் இளமையுடையவராக இருந்திருத்தல் வேண்டும். மூன்றுமதாக அரியலூர் ஜமீன்தாரர்களான கிருஷ்ண ஒப்பில்லாதமழவராயர் குமாரர் ஒப்பில்லாத மழவராயர் இவர்களைப் பாடியுள்ளார்; இவர்களுடைய காலம் கி. பி. 1612 முதல் 1654 வரையிலாகும். தருமையாதீனத்தில் எட்டாமது பட்டத்திலிருந்த அழகிய திருச்சிற்றம்பல தேசிகரைப் பாடியிருக்கின்றார். தேசிகோத்தமர் சற்றேறக்குறைய 1650-ல் இருந்தவர். இவைகளாலே இவருடைய காலம் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பது தெளிவுறும்.

இவர் இயற்றிய நூல்கள்

1. திருக்கழுக்குன்றப் புராணம். இது திருக்கழுக்குன்றில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் மேற்று. இது பாயிரம் 18, நாட்டுப்படலம் 35, நகரச் சருக்கம் 20, கயிலாயச் சருக்கம் 30, காருடச் சருக்கம் 37, வேதகிரிச் சருக்கம் 29, உருத்திர கோடிச் சருக்கம் 60, நந்திதவச் சருக்கம் 63, மாயிகச் சருக்கம் 10, காமதேனுச் சருக்கம் 34, நாரதச் சருக்கம் 23, இந்திரச் சருக்கம் 50, நாராயணச் சருக்கம் 32, சதுமுகச் சருக்கம் 23, வசுதேவச் சருக்கம் 93, தினகரச் சருக்கம் 20, முனிகணச் சருக்கம் 15, திருமணச் சருக்கம் 39, கங்காசலச் சருக்கம் 50, பசுவராகச் சருக்கம் 36, தீர்த்தச் சருக்கம் 39, தலவிசிட்டச்சருக்கம் 51, சுரகுருச் சருக்கம் 16, ஆகச்சருக்கம் 22க்குத் திரு. 832 கொண்டது. இது பாடிய காலம் சற்றேறக்குறைய, கி.பி. 1640.

2. திருக்கழுக்குன்றத்துலா. இது 409 கண்ணிகளையுடைய ஒரு சிறு பிரபந்தம். இது புராணம் பாடியபின் பாடப்பட்டது. 'பக்தியின் மிகுதியினால் எழுந்த செய்யுளாகவே இந்நூலைக் கூறலாம்' என்பது பெரியோர் கருத்து[2].

3. திருவாரூருலா. இது 528 கண்ணிகளையுடைய ஒரு சிறு பிரபந்தம். இதன் பெருமையை முன்னர்க் கூறியுள்ளோம்.

---

1. தமிழ் நாவலர் சரிதை, 112.
2. மகாமகோ. டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு, பக். 23.

4. கீழ்வேளூருலா. இது முழுவதும் கிடைக்கவில்லை. குறைப் பிரதியே கிடைத்துள்ளது. அவ்வேட்டின் முகப்பில் வீரராகவர் பாடியதாகக் காணப்படுகிறது. இவ்வுலாவைக் குறித்துக் கொட்டாம்பட்டி கருப்பையா பாவலர் 'கருவாராவிதமன்பர்க் களித் தருள்கீழ் வேளூரன் கவியுலா' என்பர். இதனால் இவ்வுலாவின் பெருமை விளங்கும்.

5. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ். மதுராந்தகம் தாலூக்கா சேயூரிலே கோயில்கொண்டுள்ள முருகன்மேல் பாடப்பட்ட பிரபந்தம். நூறு செய்யுட்களையுடையது. அம்புலிப் பருவம் 10-வது. செய்யுள் கழுக்குன்றன் திருப்பணியும் சேறைக் கவிராசபிள்ளை உலாபாடிய செய்தியும் இவர் பிள்ளைத்தமிழும் கலம்பகமும் செய்த செய்தியும் கூறும்.

6. சேயூர்க் கலம்பகம். இதுவும் முருகன் மேற்கூறியதாகும். நூறு செய்யுட்களையுடையது.

7. விட்டினர் அம்மையப்பன் பிள்ளைத்தமிழ். இது பருவத்துக்கு ஐந்துகொண்ட ஐம்பது பாக்களையுடையதொரு நூல். சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றும்போது அவ்வூரில் கல்விச் செல்வத்திலும் பொருட்செல்வத்திலும் பிரசித்தி பெற்றிருந்த விஷ்டினர் அம்மையப்ப முதலியார் என்பவர் 'வடதெரு முருகனைக் காக்கவே' என்று காப்புப் பருவத்து கங்காதேவி துதியில் கவிராயர் பாடியிருப்பதைக் கேட்டு அதனால் வடக்குத்தெரு சிறந்து விட்டதென்றும் தாமிருந்த தெற்குத்தெருவின் புகழ் குறைந்ததென்றுங் கொண்டு கவிராயர்மீது சினங்கொண்டு தம்முடன் வந்தவரையும் உடன்கொண்டு அரங்கத்தை விட்டெழவே, கவிராயர் அவரது கோபத்தை யாற்றிப் பிறகு அவரைத் திருப்தி செய்யும்வண்ணம் அவர்மீது ஒருபிள்ளைத்தமிழ் பாடியதாகவும் தெரியவருகிறது. அதுவே இப்பிள்ளைத் தமிழ்.

8. பரராசசிங்கன் வண்ணம். இவ்வண்ணம்பாடி அரங்கேற்றியதாகக் கேள்விப்படுகிறோமே யன்றி நூல் கிடைத்திலது.

9. கயத்தாற்றரசனுலா, இது அப்பொழுது கயத்தாற்றிலே கல்விமானும அரசனுமிருந்த திருவேங்கட நாதையர் மேல் பாடப்பட்டது. இது பொழுது கிடைத்திலது. உலா பாடியபோது பாடிய வெணபா ஒனறு தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகிறது.

10. சந்திரவாணன்கோவை. இது அநந்தையிலிருந்த சந்திரவாணன்மேற் பாடிய கோவையாகும். இது பாடிய விவரம் மேலே

குறித்திருக்கின்றேம். கோவை முழுவதும் கிடைக்கவில்லை. அக் கோவையிலொரு செய்யுள் வருமாறு.—

மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செங் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சாற்றி னமுதவயன்
மேலே முளைத்த கரும்போவிம் மங்கைக்கு மெய்யெங்குமே.

11. **பஞ்சரத்தினம்.** இது தருமையில் எட்டாவது பட்டத்தி லெழுந்தருளி யிருந்த அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்மீது பாடிய துதிநூலாகும். அச்சிடப்பட்டிருக்கின்றது.

திருக்கழுக்குன்றமாலை. அந்தகக்கவி பாடியதென்று சிலரும் சித்தர் சிவப்பிரகாசரென்று சிலரும் கூறுவர்.

14. தமிழாகர முனிவர்

தருமை யாதீனத்தில் ஆறுவது பட்டத்திற் றிகழ்ந்த திருஞான சம்பந்த தேசிகரிடம் தமது முதுமைப்பருவத்திலே தீட்சைபெற்று அவ்வாதீன அடியார்குழாத்துள் ஒருவரானவர் தமிழாகரமுனிவர். இவர் திருநெல்வேலிப் பதியினர். சைவசமயத்தினர். வேளாண் தலைவர். இளமையிலே கல்வியிற் றேர்ச்சி பெற்றவர். அக்காலத்திலே இவரது வித்யா குருவாகவும் ஞானகுருவாகவும் இருந்தவர் சிதம்பரம் குகை மடத்தைச்சார்ந்த ஞானப்பிரகாசராவர். இவரும் அறச்சாலைமடத்து அதிபதியாக விருந்தவர்[1]. 'பெருமை பெறு நாவலர்கள் கொண்டாட வுலகினிற் பேர் காப்பியங்கள் செய் சீர் கொண்ட தமிழாகரன்' என்று தனது திறமையையும் கூறுகின்றார். இவர் ஞானப்பிரகாசரிடம் கல்விகற்று ஞானோபதேசம் பெற்றனராயினும் அம்மடத்தினர் ஆன்மானந்த வாதிகளாயினமையின் இவரது ஆன்மா சாந்தி யடையவில்லை. இவர் சற்குருவைத் தேடினார். அக்காலத்திலே தென்தேச யாத்திரையாய்ச் சென்று தங்கட்குரிய சிந்துபூந்துறை மடத்திற் றங்கியிருந்த திருஞானசம்பந்த தேசிகரைக் கண்டு ஈடுபட்டு அவரது அடித்தொண்டரானார். இத் தமிழாகரமுனிவர் அக்காலத்திலே முதிர்ந்த பருவமுடையவராக விருத்தல் வேண்டுமென்பது இவரது வாக்காலும் நூல்களாலும் அறியுமொரு செய்தி.

1. அறச்சாலை மடம் என்பது தொண்டநயினார் தெருவிலுள்ளது. இது பொழுது நெல்லுமண்டித்தெரு என வழங்குகிறது. தற்போது திருவண்ணாமலை யாதீனமான குன்றக்குடி யாதீனத்தைச் சார்ந்ததெனக் கேள்வி.

போர்கொண்ட மழைமதக் கலுழிபொழி கடவுள்வரைப் புடைபிளிறு பிடியொ
பொதியமலை முனியால் வளம்பெறுந் தெட்சிணபூமிக் கெழுந்தருளு நாள்[டுலவும்
ஏர்கொண்ட நெல்லையம் பதியறச் சாலைமட மீடேற வந்தெனக் கோர்
எழுவகைத் தீட்சையைச் சொக்கநா தன்றிருமு னேபுரிந் தாட்கொண்டபின்
பேர்கொண்ட நாமச் செபஞ்செபித் திடுமுண்மை பெற்றன னின்னரு ளினுற்
பெருமைபெறு நாவலர்கள் கொண்டாடவுலகினிற் பேர்காப்பி யங்கள்செய்யுஞ்
சீர்கொண்ட தமிழாகரன் சொல் விண்ணப்பந் திருச்செவி சாற்றல் வேண்டுந்
திகழ்ஞான சம்பந்த னேகமலை யதிபனே சிவசமய குருரா யனே.

இவர் தமது ஞானகுருவின்மேல் ஞானசம்பந்த குருராயவட்டகம் என்றொரு துதியும் சந்திரகலாமாலை என்றொரு துதியும் பாடியுள்ளார். இவற்றை யன்றி நெல்லையப்பர் நான்மணிமாலை, நெல்லை காவலமாலை, திருப்பணிமாலை, கலைமகளிரட்டைமணிமாலை, நீதி சாரம்; ஆசௌசதீபிகை, பிராயச்சித்தசமுச்சயம் முதலாய நூல்களும் இவர் செய்துள்ளார். இவற்றுள் இப்பொழுது கிடைப்பவை நீதிசாரம், ஆசௌசதீபிகை, பிரயச்சித்தசமுச்சயம், ஞானசம்பந்த குருராய வட்டகம், சந்திரகலாமாலை என்பனவாம். மற்றவை இது பொழுது கிடைத்தில. மற்றவைகளை இம்முனிவர் இயற்றினரென்பது பின்வருஞ் செய்யுளான் விளக்கமாகும்.

பைவாய் மணிச்சுடிகை யரவணி நெலேச னிருபா தாரவிந் தத்திலன்
பான நான் மணிமாலை நெல்லைகா வலமாலை பகர்திருப் பணிமாலை மா
மைவாய் விழித்துணைக் கலைமக ளிரட்டை மணிமாலை தமிழ்நீ திசார
மற்றுமுத லானபிர பந்தங்கள் செய்ததுவும் வரிசைபெறு வாழ்வு முற்றேன்
வெவ்வாய் மழுப்படை யினன்சிவா கமமும் வண்மேன் மைப்புரா ணங்களும்
விரிகதிர்ப் பரிதிமுன் றீயுமிழு மணிபோல் விளங்கி யடியவர் வீடுறச்
செவ்வாய் மலர்ந்தருளு நின்னுடைப் பரிகலச் சேடங்கொண் மகிமை கண்
திகழ்ஞான சம்பந்த னேகமலை யதிபனே சிவச மயகுரு ராயனே. (டாய்

இவ்வாறு இந் நூல்களைப் பரோபகாரமாக இயற்றியிருந்து சிவபெருமானது திருவடிநீழலடைந்தார்.

இவர் இயற்றிய நூல்களாவன :

1. நீதிசாரம் என்பது வடமொழி நீதிசாரத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. 100 பாக்கள் கொண்டது.

2. ஆசௌசதீபிகை யென்பது சைவ நன்மக்கட் குரியது பிறப்பிறப்புக்களால் உண்டாகும் விலக்குகளை விளக்குவதொரு நூல். இது யாழ்ப்பாணம் மா. வைத்தியலிங்கம் பிள்ளையால் 1882-ம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

3. பிராயச்சித்த சமுச்சயம். இதுவும் மக்கட்குரிய கழுவாய் களைக்கூற எழுந்தது. 302 திருவிருத்தங்களையுடையது. அக்காலத்திலே வேளை நகரிலிருந்த கமலை ஞானப்பிரகாசரது வழித்தோன்றல், 'மலைமுனிக் கொப்பான தன்மையர், நித்திய கருமந் தவறாச் சீலரது' வேண்டுகோட்கிணங்கி

அன்னவர்தந் திருவாக்கென் றலைமேற் கொண்டாண்
டானகொல்ல மெண்ணூற்றெட் டாண்டாங் கீர
வெண்ணுமுறு வருடமுத் தாராய ணத்தி
லெழிலுறுகும் பத்தில்வளர் பக்கந் தன்னிற்
பன்னுபுத வாரமகம் பருவந் தன்னிற்
பதிஞானப் பிரகாசன் பாதந் தன்னை
யுன்னியுளத் தறிந்தபடி யுரைத்தேன் கல்வி
யுடையோர்கள் பொறுப்பரொனு முறுதி யாலே

என்றுகூறிச் செய்தார். இது யாழ்ப்பாணத்து விவேகானந்த யந்திர சாலையில் கலியப்தம் 5001-ல் நல்லூர். த. கைலாச பிள்ளையால் அச்சிடப்பட்டது. ஞானசம்பந்த குருராய வட்டகமும் சந்திரகலா மாலையும் துதிநூல்களென்று முன்னர்க் கூறினோம். இவையிரண்டும் தருமபுர ஆதீனமடத்தால் அச்சிடப்பட்டுளது.

இவர் கி. பி. 1633ல் பிராயச்சித்த சமுச்சயம் செய்தனரேனும், தருமை திருஞானசம்பந்த தேசிகர் காலத்தில் தருமை மடத்துச் சீடரானதாக அவருடைய வாக்காலேயே அறியப்படுதலான் நீண்ட ஆயுளுடையவராக இருந்தவராவர். இவருடைய காலம் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று கொள்வது பிழையாகாது.

---

15. சம்பந்த சரணாலய முனிவர்.

சைவ சித்தாந்த ஞானோபதேசமும் சிவப்பேறுமே நோக்கமாக வுடைய தருமபுர ஆதீனமடத்திலே குருஞான சம்பந்தருக்குப்பின் ஆறுவது பட்டத்தில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தவர் திருஞானசம்பந்த தேசிகர் என்ற பெரியார் என முன்னர்க் கூறினும். அக்காலத்திலே இந்தத் தருமை யாதீனத்தின் பெருமை மிக உன்னத நிலையிலிருந்தது. பலர் துறபூவுண்டு சைவசமயத்தை வளர்ப்பாராயினர். அவ்வாறு துறவு பூண்டவர்களில் சம்பந்த சரணாலயரும் ஒருவர்.

சம்பந்தசரணாலயர் என்பது தீட்சா நாமம். இவரது இயற்பெயரோ அன்றி இவரது பிறப்பிடமோ இதுபொழுது ஒன்றுங்

கிடைத்தில. ஆயினும் இவர் சைவசமயத்தவர் என்பதும் வேளாண் மரபினர் என்பதும் உண்மையான செய்திகள். இவர் தருமபுர மடத்து வித்துவானாகவிருந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரானது சீடர்களில் ஒருவர் என்பது கர்ணபரம்பரைச் செய்தி. வெள்ளியம் பலவாணரது சீடராகவே கல்வி கேள்விகளில் வல்லவர். பேசுவதில் மிக்க திறமையுடையவர். ஒருக்கால் மைசூர் அரசர் இவரைக் கண்டபோது இவரது கரிய திருமேனியைக் கண்டு 'இவரென்ன! அண்டங்காக்கையோ'[1] என்று பரிகசிக்க, இவர் சமயோசிதமாக 'அது தாங்களே' என்றாராம். அருகிலிருந்தார் அரசனது முகக் குறிப்பைக் கண்டு அவர் இந்த உலகபாரத்தைத் தாங்கியுயிர்களைக் காப்பது அரசரே என்று சொல்ல அரசர் மிக்க மகிழ்ச்சியடைந்தா ரென்று பெரியோர் கூறுவர்.

இவர் மைசூர் அரசர் வேண்டுகோளின்படி அந்தச் சமஸ்தா னத்திலிருந்து அவரால் பெரிதும் பேணப்பட்டாரென்றும், அவரது வேண்டுகோட் கிணங்கிக் கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணத்தைச் சுருக்கிக் கந்தபுராணச் சுருக்கம் இயற்றினாரென்றும் கூறுப. அரசர் இவரது திறமையை மெச்சி வேண்டிய சன்மானங்களைச் செய்ய, அவற்றைப் பெற்று 'இவை குருவுக்குப் பிரீதியாகுக' என்று சொல் லிப் பக்கத்தே வைத்தனர். பின்னரும் சன்மானித்தபோது 'இது சிவபெருமானுக்குப் பிரீதியாகுக' என்றனராம். மீண்டுமொரு தரம் பரிசளிக்க 'இது அடியவர்கட்காகுக' என்று கூறினராம். இதனுண்மை காண விரும்பிய வரசர்க்கு முனிவர் தமது உடல் பொருள் ஆவியெல்லாம் அடியவரானபோதே தலைவரது ஆயின மையின் தமக்கென ஒருபற்றுமில்லை யென்றாரென்றும், அப் பொழுது அரசன் இவரை நோக்கி உங்கள் குருத்தானத்தில் நாடோறும் சீடர்கள் செய்வதென்ன என்று கேட்க, அதற்கு விடையாக

ஆய்வார் பதிபசு பாசங் களினுண்மை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரி யுள்ளே யொன்றிரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ர காசனற் றொண்டர்களே

என்று கூறினதாக ஒரு கதை வழங்குகிறது.

இவர் தமது ஆசாரியரிடத்தும் ஆதீனத்தாபகரான ஞானசம் பந்தரிடத்தும் மிகுதியான பற்றுடையவர். தமது ஞானகுருவான திருஞானசமபந்தர்மேல் சிகாரத்னமாலை என ஒரு துதிநூல் பாடி

1. அண்டங்காக்கை யென்பது மிகுந்த கரிய நிறமுடையது.

யிருக்கின்றார். அதனில் தமது ஞானசாரியருடைய வல்லமையைப் பின்வருமாறு கூறுவர்.

கல்வியிற் கவிதையிற் போதனையி னிற்கலை கருத்துறு மருத்தத் தினிற்
கவிவாணர் புகழ்மிகு நவமான பொருளோடு கலந்தகூர் மையினி லவையைச்
சொல்வளம் பெறவிரித் தியாவருந் தெளிவுறச் சொல்லும் பிரசங் கத்தினிற்
றொல்லுலகி லொருவர்க்கும் வல்லமைக ளிலையென் றுதோன்றவவை தோன்ற [வந்தாய்
நல்வரம் பெறுசெவ்வெ னுந்துங்க மங்கையொளி நளினமணி முகைநகை யென
நாடிவரு மளிகளெனு மாடவர்கள் புடைமொய்ப்ப நானில மெனுங்கு டிக்குச்
செல்வமென வளர்கமலை பாண்டிநா டேத்தவரு திருமலிந் திட்ட மதுரை
சீர்தருமை வாழவருண் ஞானசம்பந்தனுந் தேசிக சிகாரத் னமே.

இவ்வாறு கல்விச் செல்வமுடையராய் மைசூர்ப் பிரதேசங்களில் வாழ்ந்து தருமையாதீனத்துக்குப் பெருமதிப் புண்டாக்கிச் சிவபெருமானது திருவடி நீழலடைந்தார்.

இவர் செய்த நூல்களுள் சிறந்தது கந்தபுராணச் சுருக்கம். இது 1048 திருவிருத்தங்களை யுடையது. i. உற்பத்தி காண்டம் 168, ii. அசுரகாண்டம் 148, iii. மகேந்திரகாண்டம் 105, iv. யுத்தகாண்டம் 331, v. தேவகாண்டம 36, vi. தட்சகாண்டம் 229 என ஆறுபிரிவுகளையுடையது. பலராலும் பெரிதும் போற்றப் படுவது. ஐப்பசிமாதத்து ஸ்கந்தசஷ்டியின்போது சைவர்களால் மிகுதியாகப் பாராயணஞ் செய்யப்படுவது. அடை மிகுதியுமின்றி யெழுந்த ஒரு சிறந்த நூல்.

இவர் இயற்றியதாகத் தெரியும் பிறிதொரு நூல் சிகாரத்ன மாலை என்ற பதிகம். இது தமது குருவான ஞானசம்பந்தர்மீது இயற்றிய துதியென முன்னர்க் கூறினும்

இவர் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்த தருமை மாசிலாமணி தேசிகருக்கும் குமரகுருபரருக்கும் பின் 6-வது பட்டத்திற் சிறந்திருந்த திருஞான சம்பந்த தேசிகரது காலத்தவராதலால் இவரது காலம் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யென்று கொள்வது இழுக்காகாது.

---

16. அழகிய சிற்றம்பலக் கவிராயர்.

பதினேழாம் நூற்றாண்டிலே தொண்டை நன்னாட்டில் பல சான்றோர் தோன்றினர். அவர்களுள் அழகிய சிற்றம்பலக் கவிராயரும் ஒருவர். இக்கவிராயர் கடற்கரையின் கண்ணுள்ள மல்லை என்ற ஊரினர். மல்லை மாமல்லபுரம் என்று தமிழிலும்

'ஸெவன் பகோடாஸ்' என்று ஆங்கிலத்திலும் வழங்கும். வேளாண் குடியினர்; நல்ல கல்விமான். தொண்டைமண்டலத்திலேயுள்ள பல புலவர்களும் அக்காலத்திலே தமிழை ஆதரிக்கும் வள்ளல்களைத் தேடிச் சென்று கண்டு வருவது இயற்கையாக இருந்திருக்கின்றது. அதுபோலவே இவரும் தென்னாடு சென்றார்.

அக்காலத்திலே மதுரையை யாண்ட அரசர் திருமலை நாயக்கராவர். அவருடைய அரசாட்சியிலே தமிழ் மொழி சிறந்து விளங்கிய தென்றே கூறலாம். அவரே குமரகுருபரரைக்கொண்டு நீதிநெறி விளக்கம் பாடுவித்தவர். இராமப்பையன் அம்மானை அவருடைய காலத்தது. அக்காலத்திலே திருமலைநாயக்க மன்னரின்கீழ் தலைவராகவிருந்தவர்களில் வெங்களப்ப நாயக்கர் ஒருவர். அவர் சிறந்த தமிழபிமானியென்று அறியக்கிடக்கின்றது. பல புலவர்களை ஆதரித்தவர் என்றும் அறிகிறோம். அவர்மீது சிற்றம்பலக் கவிராயர் குறவஞ்சி என்ற பிரபந்தத்தைப் பாடி அதற்குச் சன்மானமாக சாலிவாகன சகம் **1570** (கி. பி. **1648**)ல் மிதிலைப்பட்டி என்ற ஊரை முட்டூற்றுகப் பெற்றார். அதுமுதல் கவிராயர் அவ்வூரிலேயே வாழ்ந்துவரலாயினர். அதனால் அவரை மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் என மக்கள் வழங்குவாராயினர்.

இராமநாதபுரத்திலும் தளவாய்சேதுபதி இறந்து தளவாய் விசய இரகுநாத சேதுபதியான திருமலை சேதுபதி பட்டத்துக்கு வந்தார். அவரும் பெரிய தமிழபிமானி. அவருடைய ஆஸ்தானத்திலே புலவர் பலர் கூடியிருந்தனர். பொன்னாங்கால் அமிர்த கவிராயர் ஒருதுறைக் கோவை பாடியதும் இவரைப்பற்றியேயாம். அழகிய சிற்றம்பலக் கவிராயரும் இவர்மீது தளசிங்கமாலை என ஒரு நூல் பாடி யரங்கேற்றிச் சன்மானம் பெற்றார். இந்தத் தளசிங்கமாலை நூல் முழுவதும் கிடைக்கவில்லை. ஒருசில செய்யுட்களே கிடைத்தன. அவைகளைச் செந்தமிழ் vi-ம் தொகுதியில் இப்பொழுது ராவ்சாகிப் பட்டமுள்ள ஸ்ரீ. மு. இராகவையங்கார் வெளியிட்டார்.

கவிராயர் வமிசம் கல்வியிலேயே ஈடுபட்ட ஒரு பெரிய குடும்பமாகும். இவரது பின்னோர்களில் ஒருவரான மங்கை பாகக் கவிராயர் நத்தம் ஜமீன்தார் சொக்கலிங்க நாயக்கர்மீது வருக்கக் கோவை பாடி சகம் **1635**-ல் பூசாரிப்பட்டி என்ற ஊரைப் பெற்றார். மங்கைபாகக் கவிராயருடைய புதல்வர் குழந்தைக் கவிராயர். முல்லையூர் தாண்டவராயபிள்ளைமீது மான்விடு தூது

பாடிச் சன்மானம் பெற்றார். தாண்டவராயபிள்ளை சிவகங்கை சமஸ்தானப் பிரதிநிதியாகவிருந்தவர்.

கவிராயருடைய வமிசம் கல்வியில் ஈடுபட்ட குடும்பமென்று மேலேகூறினேம். அதற்கு ஏற்ப அவர்களிடத்துள்ள நூல்கள் அளவிறந்தன வென்றும், அவையெல்லாம் சுத்தமான பிரதிகளென்றும் அவைகளெல்லாம் மகாமகோபாத்யாய, டாக்டர் வே. சாமிநாதையரவர்கட்குப் பெரிதும் பயன்பட்டன, படுகின்றன வென்றும் ஐயரவர்களே பலநூல்களிலும் எழுதியிருக்கின்றார்கள்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் மிதிலைப்பட்டியைப் பெற்றது கி. பி. 1648. பின்னரே தளசிங்கமாலை பாடிப் பரிசில் பெற்றார். ஆகவே இவர் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சார்ந்தவராவர்.

கவிராயர் இயற்றிய நூல்களாகத் தெரிவன.

1. தளசிங்கமாலை. இது தளவாய் சேதுபதிக்குப் பின்னாண்ட இரகுநாத சேதுபதிமீது பாடப்பட்டநூலாகும். இதுபொழுது இந்நூல் முழுமையும் கிடைத்திலது. கிடைத்த செய்யுட்கள் செந்தமிழ்த் தொகுதியில் வெளியிடப்பட்டுள.

2. வெங்களப்பநாயக்கர் குறவஞ்சி. குறவஞ்சி என்பது குறத்திபாட்டாகும். குறத்தி கூற்றாகத் தலைவனுடைய பெருமைகளைக் கூறுமொரு பிரபந்தம்.

---

17. வென்றிமாலைக் கவிராயர்.

அமிழ்தினு மினிய தமிழ்த் தெய்வமாகக் கருதப்படும் முருகக்கடவுளது படை வீடுகளுள் ஒன்றாவது திருச்சீரலைவாய். இவ்வூர் செயந்திபுரமென்றும், திருச்செந்தில் என்றும், சிந்துபுரம் என்றும் கூறப்படும். காசி, காஞ்சி, பொன்னம்பலம், காளத்தி, கமலை, தேசுலா வனலக்கிரி, மாசிலாணைக்கா, வன்புருடோத்தம மாநகரம் இவ்வெட்டுடனும் ஓசைமாக் கடலுடுத்த பாரிடத்தில் ஒன்பதாக வைத்தெண்ணப்படும் செயந்தி நன்னகரமும் ஒருங்குசேர அமைந்துளது. அவ்வயினடைந்து 'சுருங்கு கூபமும் வாவியுங் குளனும் வான்சுருங்கா-திரங்கும் யாறுமாம் புண்ணிய தீர்த்தத்தின் நிறையிற்-பரம்பு மங்நகர் தருங்கதி யாவரே பகர்வார்?' இத்துணைப்பெருமை பொருந்திய திருச்செந்திலின் கண்ணே திரிசுதந்தரர்[1] என்னும் முக்காணியக் குடும்பம் ஒன்றிலே ஒருவன் தோன்றினன். அவனுக்கு வென்றிமாலை எனப் பெற்றோர் பெயரிட்டனர்.

---

1. திரிசுதந்தரர். புடவியும் சுவர்க்கமும் பிரமலோகமும் வதிதிர முத்தேவும் வரந்தரலால் திரிசுதந்தர ரெனப்பட்டார்.

அவன் இளமையிலே தன்குலத்துக்குரிய ஒழுக்கமுமின்றிக் கல்வியுமின்றி மூர்க்கனுய்த் திரிந்தான். பின்னர் செந்திலாண்டவன் கோயிற் பரிசாரகனுயமர்ந்து மடைத் தொழில் செய்துவந்தான். ஆயினும் முருகக்கடவுளிடத்து ஆராதபத்தியுடையவனுக விருந் தான். ஒருநாள் யாது காரணத்தாலோ அவன் செய்யவேண்டிய மடைத்தொழில் முட்டுப் பாடுண்டாகி நித்தியச்சிறப்பு சிறிது காலம் தாழ்க்க நேரிட்டது. இதனைக்கண்ட தலத்தாரும் தானத் தாரும் அம்மடையனுன வென்றிமாலையைச் கசையாலடித்தனர்.[1] அவன் அவ்வடிதாங்காது தவித்ததோடு தண்டனைபெற்ற பின்னர் மானமின்றி உயிர்வாழ்தலோடு உயிர்துறப்பதே சாலச்சிறந்த தென்றுகொண்டு வள்ளிமணுளன்மேல் பாரத்தைப் போட்டுக் கடலில் விழுந்தான்.

தவிப்பார் குறுதுணையாய செந்திலாண்டவன் அவனைக் கை விட மாட்டானன்றே? நல்லருள் கிட்டவும், அவனைக் குமாரக் கடவுள் கைபிடித்து அவனுக்கு இனிய செந்தமிழ்ப் பாடல்பாடும் சக்தியளித்து திருச்செந்தூர்ப் புராணத்தைப் பாடும்படி அருளி ஞர் என்று கன்ன பரம்பரைச்செய்தி கூறும்.

வென்றிமாலைக் கவிராயர் இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் சக்திவாய்ந்தவராக விருந்தார். அக்காலத்திலே ஐரோப்பிய நாடுக ளில் ஒன்றுன ஆலந்து (Holland) தேசத்தவரான உலாந்தாக்காரர் இந்தியக் கடல்களில் வந்து வாணிபஞ் செய்யத்தலைப்பட்டனர். இவர்கள் இலங்கையிலே ஆதிக்கம் பெற்றிருந்தனர்; இவர்கட்கு முன் வந்த ஐரோப்பியர்கள் போர்த்துகேசியராவர். அவர்கள் பரங்கியர் (Feringi) என்றழைக்கப்பட்டனர். அவர்கள் தூத்துக் குடி முதலான இடங்களில் மாதாக் கோயில் முதலானவை கட்டிக் கொண்டு வியாபாரஞ் செய்து வந்தனர். டச்சுக்காரரான உலாந் தாக்காரரும்[2] இந்திய வாணிபத்தைக் கைக்கொள்ள முயன்றனர். அக்காலத்திலே பாண்டிய நாட்டை யரசாண்டவர் திருமலைநாயக் கர். அவர் உலாந்தாக்காரருக்குக் கோட்டை முதலானவை கட்டிக் கொண்டு வாணிபஞ் செய்ய அனுமதி கொடுத்தாலும் போர்த்து கேசியருக்குக் காட்டிய சலுகை இவர்களிடம் காட்டவில்லை.

1. கசையடி. இதனைச் சாட்டையடி யென்பர். கோயிலில் திருடும் பரிசாரகர் முதலாயினர்க்கும் சிறுகுற்றங்கள் செய்பவர்க்கும் கசையடி கொடுத் தல் மரபு. அங்கில அரசாட்சிவந்தும் இவ்வழக்க மிருந்ததென்பதை ஆசிரியர் நன்கறிவர்.

2. உலாந்தக்காரரை டச்சுக்காரர் என்பதுமுண்டு.

பரங்கிகளின் துர்ப்போதனையால் 1648-ம் ஆண்டில் உலாந்தர்களைப் பாண்டிய நாட்டினின்றும் அப்புறப்படுத்தினர். உலாந்தர்களுக்கு இந்தியக்கடலில் தலைமைஸ்தானம் சாவகத்தீவிலுள்ள படேவியா (Batavia) என்ற ஊராகும். அங்கு இச்செய்தி எட்டிற்று. அங்கிருந்த தலைவர் இலங்கைத்தீவில் தலைவராக இருந்த தனது கீழதிகாரிக்கு இந்த அவமானத்தை மீட்குமாறு உத்திர விட்டார். உடனே ஒரு சிறுபடையைத் திரட்டி 1649 ஆண்டு பிப்ரவரிமீ 9-ம் தேதி திருச்செந்தூருக்கு அண்மையில் வந்திறங்கி திருச்செந்தூர்க் கோயிலைப் படை வீடாகக்கொண்டு தூத்துக்குடியிலிருந்த பரங்கிகளிடம் சண்டையிட்டனர். அதற்குள் வெள்ளையர் கோயிலில் புகுந்து கெடுதிசெய்வதைக் கண்ட ஊரவர் அவர்களை வெருட்ட முயன்றனர். இருதிறத்தாருக்கும் சண்டை மூண்டது. ஆனால் அதிகச் சேதமேற்பட வில்லை. ஆயினும் உலாந்தாக்காரருக்கு இலாபமுமில்லை. அதனால் உலாந்தரின் தலைவர் திருமலை நாயக்கருக்கு அவரால் உண்டான கஷ்டத்தைச் சுட்டி அதற்கு ஈடு செய்தால் தாம் கோயிலைக் கெடுதி செய்வதில்லை என்பதாக எழுதி விட்டு மார்ச்சு மீ 1-ம் தேதி கோயிலிலிருந்து மூலஸ்தான விக்கிரகம் முதல் எல்லாவிக்கிரகங்களையும் எடுத்துக்கொண்டு இலங்கைத் தீவு சென்றுவிட்டார். இது சரித்திரச்செய்தி[1].

ஆனால் மக்கள் உலாந்தாக்காரர்கள் வாணிபத்தோடு கொள்ளையடிப்பதும் வழக்கம் என்றும் இவர்களில் ஒரு கூட்டத்தினர் திருச்செந்தில் வந்து கொள்ளையடித்தது மாத்திரமன்றி, கடவுளையுந் தூக்கிக்கொண்டு கலத்திற் சென்றனர் என்றும் கூறலாயினர். உடனே பெரும் புயற்காற்றொன்று அடிக்கவே இது கடவுளானுடைய குற்றமென நினைந்து செந்திலையகனைத் தூக்கிக் கடலிலெறிந்து விட்டுச் சென்றனராம். இக்கதை திருநெல்வேலி கஜட்டீரிலும் காணப்படும்[2].

அக்காலத்திலே அந்நாட்டுக்குக் காரியகர்த்தராக விருந்தவர் காவை வடமலையப்ப பிள்ளையன்[3]. இவர் சிறந்த பக்திமான். செந்திலையகர் இவரது கனவிற் றோன்றி தாம் கடலில் இன்னவிடத்திலாழ்ந்திருப்பதாகக் கூறினதாகவும் உடனே அவர் சென்று திருமேனியை எடுத்து வந்ததாகவும் கூறுவர். உண்மையில் இவர் காயல் பட்டணத்திலிருந்த தன் கீழதிகாரி நாராயண முதலியா

1. இச் சரித்திரச் செய்தி 1939-ம் ஆண்டு நவம்பர் மாதக் கலைமகளில் ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரிகளால் விரிவாக எழுதப்பட்டுளது.

2. திருநெல்வேலி கஜட்டீர்; i, 506. J.I.H. XVI, 175-180.

3. இவர் சரித்திரக் குறிப்புக்களைச் செந்தமிழ் தொகுதி 35ல் காண்க.

ருக்கு இலங்கையில் காலி (Galle) த்துறையிலுள்ள செந்திலாண்டவனைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யும்படி உத்திர விட்டார். காயல் பட்டணத்திலிருந்து தக்கவர்கள் காலித்துறை சென்று உலாந்தரைக் கேட்டபோது சற்றேறக்குறைய இலட்சம் ரூபா கொடுத்தால் திருஉருவங்களைத் தருவதாக எழுதியனுப்பினர். அதற்குள் தலைமைஸ்தானமான படேவியாவிலிருந்து திருமேனிகளைக் கிடைத்த விலைக்கு விற்றுவிடும்படியும் வாணிபத்தை மீட்டும் தொடங்கும்படியும் உத்திரவு வந்தது. இலங்கை யதிகாரிகள் வாணிபத்தை யாரம்பிப்பதற்கு அனுகூலமாகச் செந்திநாயகன் முதலாய திருவுருவங்களைக் காயல்பட்டணம் கொண்டுவந்து சேர்த்தனர். அங்கிருந்து வடமலையப்ப பிள்ளையன் ஆண்டவனைத் திருச்செந்திலுக்குக் கொண்டுவந்து சகம் 1575ன்மேல் செல்லாநின்ற கொல்லம் 829 விஜய வாண்டு தைமீ 23-ம்தேதி வெள்ளிக் கிழமை பிரதிட்டையும் கும்பாபிஷேகமும் செய்தார். இச்செய்தியை உடனிருந்த வென்றிமாலைக் கவிராயர் கீர்த்தனமாகப் பாடினார். அது வருமாறு :

இராகம்-மத்தியமாவதி, ஆதி தாளம்

பல்லவி

இப்போது தேவரீர் எழுந்தருளினது
எல்லோர்க்கும் நல்ல காலம்

அனுபல்லவி

செப்பெனும் பூண்முலை வள்ளிபங் காளரே...செல்வரே
கல்வி பயிலுஞ் செந்தூரினில்......................இப்போது

எண்ணூற் றிருபத் தொன்பதா மாண்டு
இசையும் விஜய வருடந்தை மாதத்தில்
நண்ணுமிரு பத்து மூன்றாந் தெய்தியில்
நல்ல வெள்ளி வாரத்தில்
புண்ணியஞ் சேருந் திரயோதசி யிற்புனர்
பூசத்திற் பூர்வ பட்சத்தின் மிதுனத்திற்
விண்ணவர் போற்று மிந்திரநாம யோகத்தில்
மேன்மேலுஞ் செந்தூர்க்கு நன்மையுண்டாகவே... இப்போது

சந்திர னில்லாத வானம் போலவும்
சைவநெறி யில்லா வையகம் போலவும்
ஐந்தரு வுடைய இந்திர னில்லாத
அண்டர்பதி போலவும்

இந்த நிலத்திற் றிருப்பாண்டிச் சீமையின்
எழு திரைக்கடல் சூழுங் குணபதி
செந்தி னகர்வள மழிந்து போகாமல்
தேசத்தி லுள்ளோர் செய்பூசா பலத்தினால் .....இப்போது
சென்முகங் கண்ட பயிர்போலப் பங்கயம்
செங்கதிர் கண்டவர் போலே பெற்றதாய்
தன்முகங் கண்ட குழவியைப் போலிந்தத்
தாரணி யீரேழும்
நின்முகங் கண்டிரு பாதமலர்போற்றி
நிரந்தரஞ் சொன்ன வரங்கள் கொடுக்கும்
கொன்னிலை வேலரே சண்முக பாலரே
கோலா கலமயில் வாகனரே சாமி.................இப்போது
தாரேறு வெற்பெனும் ஈராறு திண்டோளும்
தண்டை சிலம்பணி புண்டரிகத் தாளும்
ஓராறு சென்னியும் சண்முக சேவையும்
ஒண்பொற் குழைக்காதும்
போரேறு வேலேந்து செங்கையும் கண்டன்பர்
போற்று முருகரே மாமால் மருகரே
காரேறுதண்டலை சூழுஞ் செழுந்தமிழ்க்
காவை வடமலையப்பன் தொழுதிட ....இப்போது

இச்செய்தியைச் செந்தினகரிலுள்ள மண்டபத்திற்காணும் கல்லெழுத்து உறுதிப்படுத்தும். அது வருமாறு:

சகாத்தம் 1595ன் மேல் செல்லாநின்ற கொல்லம் 829 விஜயஞூ தைமீ 23உ வெள்ளிக்கிழமையும் திரயோதசியும் சிவயோகமும் சிவகாரணமும் பெற்ற புனர்பூசத்தில் மிதுனலக்னத்தில் விசுவநாத நாயகரய்யன் திருமலைநாயக ரய்யன் வடமலையப்ப பிள்ளையன் இவர்களை ரக்ஷிக்கும்பொருட்டாக சுவாமி எழுந்தருளினர்.

வென்றிமாலைக் கவிராயர் திருச்செந்தூர்ப் புராணம் பாடினர். இந்தப் புராணம் வியாதமுனி சூதமுனிவர்க் குரைத்ததைக் கூறும். வடமொழியிலிருந்த கதையைச் செவ்வல் கிருஷ்ண சாஸ்திரி கூற அதனைக்கேட்டுக் கவிராயர் தமிழ்ச்செய்யுளாகப் பாடினர்.

விரிதருசீர்ப் புகழ்ச்செவ்வற் கிருட்டினசாத்திரி யெனுநால் வேதன் வேதங்
கருதரிய வடகலையை யாராய்ந்து சொல்வதனைக் கருதிச் செவ்வேள்
சரிதையென வுணர்ந்துணராப் புல்லறிவினாலினிய தமிழேபோலத்
தெரிதரத்தென் செயந்திபுர மான்மியமா மெனவுலகிற் செப்பினேனால்

இது i. நைமிசச் சிறப்பு, ii. வியாதர் சுகருக்கு உபதேசித்தது, iii. செயந்திபுர வைபவம், iv. முருகன் திரு

வவதாரம், v. செயந்திபுர அத்தியாயம், vi. வள்ளியம்மை திருவவதாரம், vii. சுவாமி வள்ளியிடஞ் சென்றது, viii. வள்ளியம்மை திருமணம், ix. பிரமனுக்கு வரங்கொடுத்தது, x. திரிசுதந்தரர் வரலாறு, xi. மாத பூசை விதி, xii. விபூதி, xiii. விசுவரூபம், xiv மந்திரமகிமை xv பலகதை, xvi இயமனுக்குச் சிந்துபுரவைபவ முரைத்தது, xvii. பிரமன் தேவர்கட் குபதேசித்தது, xviii. சுகர் பூஜை பண்ணினது எனப் பதினெட்டு அத்தியாயங்கள் கொண்ட 899 திருவிருத்தங்களையுடையது. இவரே இந்நூலாசிரியரென்பது,

நறைகமழுஞ் செயந்திபுரத் தலபு ராண
நால்வேதம் பயில்கிருட்டின சாத்திரி கூறப்
பொறையினொடு தமிழிசையாற் புலவர் கேட்கப்
புத்தமுதஞ் செவிக்கென்னப் புனைதல் செய்தான்
நிறைவடநூற் கடலையெல்லாந் தாமே நீந்தி
நின்றளவி னெஞ்சகத்தி னிலையே கண்ட
மறையவர்க டிலகனெங்கள் செந்தூர் வென்றி
மாலைகவி ராஜகலை வாணி யானே

என்ற செய்யுளால் இனிது பெறப்படும்.

வென்றிமாலைக் கவிராயருடைய காலம் காவை வடமலையப்பரது காலமாகவே, இவர். கி. பி. 1654க்கு முன்னும் பின்னு மிருந்தவராவர்.

---

18. பாகை அழகப்பன்.

தெள்ளுதமிழ்ச் சங்கத்தார் சீர்புகழ்ந்து பாடினார்
வள்ளுவரைக் காவை வடமலையே —ஒள்ளொளியாய்க்
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றறிதல் வல்லா ரகத்து

என்று காவை வடமலையப்ப பிள்ளையனுடைய சொற் சாதுரியத்தையும் வல்லமையையுங் குறித்துக் கூறிய புலவர் பாகை அழகப்பனென்ற புலவராவர். தொண்டை மண்டலத்திலே சென்னையையடுத்த கோடம்பாக்கம் கோடலம்பாகையென முற்காலத்திலே வழங்கினும், புலவரது ஊர் தென்னாட்டிலுள்ளது என்று தோற்றுகிறது. புன்னை வனநாதன், தீராதவினைதீர்த்தான் என்ற பெரியோர்கள் அப் பாகையிலே வாழ்ந்தவர்களாவர். அவ்வூரைச் சார்ந்தவரே நமது புலவரும். கல்வி கேள்விகளில் வல்லவர் இவரை ஏகசந்தக்கிராகி என்று அச்சிட்ட வடமலைவெண்பா

முகப்பு ஏடு கூறும். இவர் வடமலையப்ப பிள்ளையின்மேல் வடமலைவெண்பா என ஒரு சிறுபிரபந்தம் இயற்றியிருக்கின்றார். வடமலையப்ப பிள்ளையன் மதுரை நாயக்கர்களிற் சிறப்புற வாழ்ந்த திருமலை நாயக்கரது காரியகர்த்தராவர் என்றும் திருநெல்வேலிச் சீமையிலே வேலைபார்த்து வந்தாரென்றும கூறியிருக்கின்றோம். அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களுள் இவ அழகப்பரும் ஒருவராவர். இவர் பிள்ளையன் மேற்பாடிய வடமலைவெண்பா வாழ்த்து காப்புகள் நீங்கலாக நூற்றெட்டு வெண்பாக்கள் கொண்டது வெண்பாவின் பிற்பாதி திருக்குறளைக் கொண்டது.

இவ்வெண்பா காவை வடமலைப்பிள்ளையன் மேற் பாடியதே என்ற செய்தியைக் காட்ட அந்நூலிலுள்ள இரண்டு செய்யுட்களைக் குறிக்கின்றேன்.

> சீரோங் குலகை மனுவினைப் போலச் சிறந்தளித்த
> பேரோங்கு காவை வடமலையப்பநற் பிள்ளையன்மேற்
> பாரோங்கு வள்ளுவர் பாவுடன் வெண்கவி பாடுதற்குத்
> தாரோங்கு பூங்குழல் வாணியென் னாவினிற் றங்கினளே.

> வாயா லிகழ்ந்துரைத்து மாண்டான் சிசுபாலன்
> மாயோனைக் காவை வடமலையே—யாயுங்கால்
> யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

அழகப்பனை யாதரித்த புரவலர் பிள்ளையனாகவே, இப்புலவரது காலம் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யெனக் கொள்ளல் தகும்.

---

19. நாராயண தீட்சிதர்.

வைணவத் திருப்பதிகளில் ஒன்றான தென்திருப்பேரையிலே பலவைணவக் குடும்பங்கள் தமிழில் மிக்க பாண்டித்தியமுடையவைகளா யிருந்தன. அக் குடும்பங்களிலே ஒருகுடியிலே வந்தவர் நாராயண தீட்சிதர் என்ற பெரியார். இவர் தலவகார சாமவேதி, வைணவ சமயத்தினர். தமிழிலும் வல்ல பண்டிதர். மகரநெடுங்குழைக்காதர் என்ற அவ்வூர்த் திருமாலிடத்துப் பரம பக்தியுடையவர். நம்மாழ்வாரிடத்திலே அளவுகடந்த அன்புடையவர். அவருடைய பாசுரங்களிலே ஈடுபட்டவர்.

இந்தத் தீட்சிதருக்கு நிலபுலன்களுண்டு. அவைகளிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு குடித்தனஞ் செய்துகொண்டும் திருக்கோயில் வழிபாடுசெய்துகொண்டும் காலந்தள்ளி வந்தார்.

அக்காலத்திலே நாயக்கவரசர்களுடைய காரியகர்த்தராக விருந்தவர் காவை வடமலையப்ப பிள்ளையன் ஆவர். இவர் சிறந்த தமிழபிமானி யென்பதும் பல புலவர்களை ஆதரித்தவரென்பதும் முன்னர்க் கூறினோம். ஆயினும் அரசாங்கக்காரியத்தில் கருத்துங் கண்ணுமா யிருப்பவர். அரசர்க்குச் சேரவேண்டிய அரசிறை தென் திருப்பேரையினின்றும் வரவில்லை அரசனது ஆணைப்படி தீர்வை யிறுக்காதவர்கள் அதிகாரிகளால் சிறையிலடைக்கப்பட்டனர். அவர்களுள் நாராயண தீட்சிதரும் ஒருவர்.

நாராயணதீட்சிதர் சிறைவாசம் இன்னதென அறியாதவர். என் செய்வர்? திருமால் பத்தியிற் சிறந்தவர். ஸ்ரீமந் நாராயணனே கதியென்று எண்ணி மகரநெடுங் குழைக்காதரைத் தோத்தரிக்கலானார். ஒரு மாதத்திற்கு மேலாகியும் சிறைநீக்க மேற்படவில்லை. இதனைச்சுட்டி

திங்களொன் றாகச் சிறையிருந் தோமிச் சிறையகற்றி
எங்கடம் பாலிரங் காததென் னோவிசை நான்மறையின்
சங்கமுங் கீதத் தமிழ்ப்பாட லுஞ்சத்த சாகரம்போற்
பொங்குதென் பேரைப் புனிதா கருணைப் புராதனனே (21)

என்று வேண்டினர். மேலும், 'வள்வார் முரசதிர் கோமான் வடமலையப்பன் முன்னே விள்வாருமில்லை காரியம் என்னுவது' என்றிரந்தார். இவ்வாறு 65 பாக்கள் பாடினார். பிள்ளையனுடைய காதுக்கு இவருடைய செய்தி எட்டியது உடனே அவர் பரிசனருடன் வந்து தீட்சிதரைச் சிறைமீட்டார். கீழ் உத்தியோகஸ்தர்கள் அறியாது செய்த தவற்றை மன்னிக்குமாறு தீட்சிதரை வேண்டிக்கொண்டதோடு மேலும் அம்மாலையைப் பாடி முடிக்குமாறு வேண்டிக்கொண்டார். அதுவே மகரநெடுங்குழைக்காதர் பாமாலையாயிற்று. இந்நூல் நூறுபாக்களையுடையது. இது குழைக்காதரிடத்திலே தீட்சிதர் வைத்திருந்த பற்றையும் அன்பையும் உறுதியையும் செவ்வனே காட்டுவது. அதனோடு பிள்ளையனுடைய பெருந்தன்மையையும் கல்வியிடத்துள்ள ஆர்வத்தையும் விளக்குகிறது.

தீட்சிதர் காவை வடமலையப்ப பிள்ளையனுடைய பேரனை இரசை வடமலையப்ப பிள்ளையனுடைய காலத்தவர் என்று சிலர் கூறுவர். இரசையார் திருநெல்வேலியில் அரசப் பிரதிநிதியாக யிருந்ததாகக் கூறக்கூடிய சான்றுகளில்லை. முன்னவரே தீட்சிதரை ஆதரித்தவராவர். ஆகவே தீட்தருடைய காலம் பதினேழாம் நூற்றுண்டின் நடுப்பகுதியாகும்.

20. திருமேனிக்கவிராயர்.

திருமால்கோயில் கொண்டுள்ள நூற்றெட்டு திவ்ய தேசங்களில் ஒன்றான தென்திருப்பேரை என்ற திருப்பதியிலே உயர் வேளாண்குடியிலே பிறந்தவர் காரிரத்னக் கவிராயர். காரிரத்னம் என்பது ஆழ்வார் திருநாமம். அப்பெயரைத் தாங்கிய புலவரும் வைணவ சமயத்தவரேயாவர். தென்திருப்பேரைக்கு மூன்றுகட்டை தொலைவிலுள்ள ஆழ்வார்திருநகரி என்ற திருக்குருகூரிலே மாறனலங்காரம் முதலாய நூல்களியற்றிய திருக்குருகைப்பெருமாள் கவிராயர் மிக்க சிறப்போடு வாழ்தலையும் அவரது தமிழறிவையும் கேட்ட காரிரத்னம் அவரிடம் சென்று கல்விபயின்றார். மிக்க நுண்ணறிவுடையராதலின் குருவுக்குத் தக்க மாணவரானார். தாம் கற்றதோடு அமையாது தமது ஆசிரியர் இயற்றிய மாறனலங்காரம் என்ற நூலுக்கு ஒரு சிறந்த உரை யியற்றினார். இதனையன்றி, திருக்குறளிற் காணப்படும் நுட்பங்களுக்கு உரையொன்று குறித்து திருக்குறள் நுண்பொருண் மாலை எனப் பேர்தந்து எழுதினார். நம்பெருமாள் மும்மணிக்கோவைக்கு விருத்தியுரை யொன்றுஞ் செய்தார். இவைகளையன்றி, தொல்காப்பிய நுண்பொருண்மாலை என்றொரு குறிப்பு எழுதினதாகவும் கூறுவர். இவ்வாறு பெருமிதத்தோடு கூறினும் உரைகளையன்றி வேறு நூலொன்றும் செய்ததாகப் புலப்படவில்லை. ஆயினும் இவர் 'கல்விக் கடலைக் கரை கண்ட ரத்னகவி' என்று கூறப்பட்டிருத்தல் சாலப் பொருந்தும்.

இவ்வாறு பெருமைபெற்ற காரிரத்னக் கவிராயருடைய புதல்வரே திருமேனிக் கவிராயர். இவரும் தந்தையாரைப் போலச் சிறந்த கல்விமான் ஆயினும் தந்தையாரைப் போன்று இவரும் உரைகளியற்றுவதோடு நின்று விடாமல் சில நூல்களும் இயற்றியிருக்கின்றார். நவ திருப்பதிகளுள் ஒன்றானதும் தான் பிறந்ததுமான தென்திருப்பேரைத் திருப்பதியிலே நடந்த திருப்பணிகளைச் சுட்டித் திருப்பணிமாலை என்றொருநூல் இயற்றியிருக்கின்றார்.

கல்விக் கடலைக் கரைகண்ட ரத்னகவி
செல்வக் குமரன் திருமேனி—நல்ல
திருப்பணி மாலையிந்தத் தேசமெல்லாம் வாழ்த்த
விருப்பமுடன் செய்தான் விரைந்து

என்பது அத்திருப்பணிமாலையின் சிறப்புப் பாயிரம். இவர் காவை வடமலையப்ப பிள்ளையனையும் திருமலை நாயக்கரையும் அந்நூலிலே கூறுவதாலும், இறுதியிலும் பிள்ளையன் செய்த திருப்பணியோடு நிறுத்துவதாலும் திருமேனிக் கவிராயர் பிள்ளையன் காலத்தவரென்பது விளங்கும். அப்பகுதிகள் வருமாறு :

பொன்னி கலக்கிப் புகாரைப் புதுக்கிச்
சென்னி யுறந்தை திறைகொண்டு—முன்னடந்த
வல்லங் குழுற மகதங் குடிவாங்கக்
கொல்லங் கடாரங் குடைக்கொதுங்கச்—செல்லுங்காற்
கப்பங் கொணர்ந்திருதாள் கைகுவித்துத் தங்கள்குறை
செப்புந் திருமுன்றிற் றேவேந்த்ரன்—ஒப்பரிய
செய்யதமிழ்க் கச்சித் திருமலைய பூபாலன்
வையமுழு தும்புரக்கு மானபரன்—தூய்ய
திருமலை ராயன் சிகரமணி மேருப்
பொருபுய னுல்லாச போசன்—அருள்புரியும்
புண்ணியமாம் செல்வம் புரக்குங் கரியமுகில்
வண்ணன் கருணை வடமலையான்—எண்ணிய
மானு பரணன் வடமலைப்பூ பாலனலுங்
தேனூர் குவளைத் திருமார்பன் . . . .

*　　*　　*　　*

கடலுலக
மெல்லாம் பொதுநீக்கி யெங்கணு ஞ்செங்கோல் நடாத்து
மல்லார் தடந்தோள் வடமலையான்

*　　*　　*　　*

தேனூர்
பறையளக்கு நெஞ்சம் பதைபதைப்ப வந்து
திறையளக்குந் தேவேந்த்ர சிங்கம்—முறைதவறு
மன்னன் கருணை வடமலைப்பூ பாலன்மகிழ்ந்
திந்நிலத்து வாழி யினிது.

திருமேனிக் கவிராயர் இயற்றிய வேறு நூல்கள் இன்னவென இதுபொழுது அறிதற்கில்லை. இரசை வடமலையப்ப பிள்ளையன் மேல் புலவராற்றுப்படை பாடியவரென்றும் சிலர் கூறுவர்[1]. அது உண்மை யன்று.

குழைக்காதர் திருப்பணிமாலை கலிவெண்பாவாலியன்றது. 161 கண்ணிகளும் காப்பும் வாழ்த்தும் சிறப்புப் பாயிரமுமுடையது.

21. சிவப்பிரகாச சுவாமிகள்

சைவசமயக் கிளர்ச்சியுண்டான பின்னர் மக்கள் பலரும் சிவ சம்பந்தமான பெயர்களைத்தம் மக்கட்கு இட்டு வழங்குவாராயினர். அப் பெயர்களுள் சிவப்பிரகாசர் என்ற பெயரும் ஒன்று. இப்பெயர் கொண்டோர்,

1. பெருந்தொகை பக். 639, 1736-ம் பாட்டுக் குறிப்பு.

1. திருவாரூர்ச் சிவப்பிரகாசர்
2. துறைசைச் சிவப்பிரகாசர்
3. மதுரைச் சிவப்பிரகாசர்
4. சிதம்பரம் சிவப்பிரகாசர்
5. வள்ளல் சிவப்பிரகாசர்
6. சிவப்பிரகாச துரை
7. சிவப்பிரகாச பண்டிதர்
8. சிவப்பிரகாச சுவாமிகள்.

எனப் பல்லோராவர்.

இவ்வடைவினருள்ளே திருவாரூர்ச் சிவப்பிரகாசரது சமயம் சைவம். வேளாண் குலத்தினர்; யோகப்பயிற்சி யுடையவர்; கோவத்தம் என்னும் ஊரிலுள்ள ஒரு புதரில் நிஷ்டை கூடியிருக்கையில் தம்மை வந்தடுத்த சொரூபாநந்தருக்கு உபதேசஞ் செய்தவர்.

2. துறைசைச் சிவப்பிரகாசர்:—திருவாவடுதுறை ஆதீனத் தாபகரான நமச்சிவாய மூர்த்திகளிடம் ஞான தீக்ஷை பெற்றவர். ஒரு காரணத்தான் வீரசைவ சமயத்தையே கைக்கொண்டு வாழ்ந்தவர். இவர் துறையூர் சிவப்பிரகாசரென வழங்கப்படுவர். இவரைக் குறித்து முன்னரே கூறியுள்ளோம்.

3. மதுரைச் சிவப்பிரகார்சர்:— இவர் சைவத் துறவி. திருப்பரங்குன்ற நாட்டினைச்சார்ந்த காவையம் பதியில் தோன்றிய அம்பலவாணத் தம்பிரானுர் திருவடிசம்பந்தமுடையவர். அம்பலவாணத் தம்பிரான் சந்தான குரவருள் ஒருவரான கொற்றங்குடிப் பெரியார் செய்தருளிய சிவப்பிரகாசத்துக்குக் குறள்வெண்பாவால் சிவப்பிரகாசக் கருத்துரை என ஒரு நூல் இயற்றியவர். அதனை ஆதாரமாகக்கொண்டு சிவப்பிரகாசத்துக்கு ஓர் அரிய உரையை இவர் இயற்றியுள்ளார். இவர் பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவரென்று கொள்ளுதல் இழுக்காகாது.

4. சிதம்பரம் சிவப்பிரகாசர்:—இவர் வீரசைவ சமயத்தினர். பதினேழாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர். கன்னட தேயத்திலிருந்து தமிழ்நாடு போந்து திருத்தில்லையின்கண்ணே மடந்தாபித்து வதிந்த பச்சைக்கந்த தேசிகருடைய திருவடி சம்பந்தமுடையவர். இவர் சிறந்த அறிவாள ரென்று தெரிகிறது. இவருடைய புத்திரரே அரும்பொருள் விளக்க நிகண்டு செய்த அருமருந்தைய தேசிகர்.

5. வள்ளல் சிவப்பிரகாச தேசிகர்:—இவர் தத்துவராயர் பேரை சாந்தலிங்க சுவாமிகள் முதலியோரது ஆசிரியராவார். தத்துவராயர்,

அருமறை முழுது மமரர்கள் கணமுந்
தெரிவுற வரிய சிவப்பிர காசர்
எல்லையி லருளா னெழிலுரு வாகிக்

கல்லுறு மென்மனங் கனிசெய்து முன்னம்
உனது வடிவா யுழியுழி வந்த"

என்றும்,

ஐயனற் சொரூப னடியிணை புனைந்த
செய்யநற் சிவப்பிர காசனென் செல்வன்
தன்னையோர் மொழியினற் சதிர்பெற வளித்திங்
கன்னையி லன்புசெய் யாரருட் பெருங்கடல்

என்றும் கூறித் துதித்துள்ளார். விருத்தாசலத்திலே இருந்த குமாரதேவர் ஓரிடத்திலே,

மறைமுடி வதனில் விளங்கிடு மொளியே மனிதரைப் போலவந் தெனது
சிறைதவிர்த் தாண்ட சிவப்பிரகாச தேசிகன் றன்னைமற் றவன்றன்
நறைமல ரடியைப் போற்றிடுஞ் சாந்த நாயகன் றன்னைமற் றவன்றன்
நிறையருள் பெற்ற பழனிமா முனியை நெஞ்சினு ளிருத்தியே பணிவாம்

என்று குருவணக்கங் கூறியுள்ளார். இவரது மதம் அத்துவிதம். மற்றைய விவரங்கள் ஒன்றும் விளங்கவில்லை.

6. சிவப்பிரகாச துரை:—இவர் சேற்றூர் ஜமீன்தாராவர். இன்றும் போலவே அன்றும் புலவர்களை யாதரித்த சீமான் குடியினர். ஒருகால் சொக்கம்பட்டித் தானுபதி பொன்னம்பல பிள்ளையால்,

ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானு மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்

என்று புகழப்பட்டவர். பிரபுக்களுக்கு இயற்கையாகவுள்ள குணங்களைப் போலவே இவரும் பரிசில் நீட்டித்ததைக் கண்ட புலவரொருவர்,

படிவாங்கப் படும்பாடு பரமசிவ பங்கில் வாழுமவ னறிவன்
வடிவாளு மறிவளவன் மக்களுக்குந் தெரியும்

என்று பாடுவதைக் கேட்ட பிரபு புலவரது கழுத்தைப் பிடித்துக் கொண்டு, "இவ்விடம் வந்து இதுவரை வசை கூறினவர் ஒருவருமில்லை; ஆகையால் மிகுதியையும் நசையாகப் பாடவேண்டும்" என்று வேண்டியபோது பாடிய பிற்பகுதி வருமாறு:

. . . . இந்த வருத்தந் தீர்ப்பாய்
முடிவேந்த ரடிதாழ்ந்து முறைமுறையே திறையெனக்கு முகுந்தா மேலாந்
துடிவேந்த ரதிகாந்தா துரைத்திருவா தரைக்கொருவா சுகிர்தவானே

என்று பாடினதாகக் கூறுவர்.

7. சிவப்பிரகாச பண்டிதர் :—இவர் யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வேலியிற் பிறந்தவர். வடமொழி தென்மொழிகளில் வல்லவரான சங்கரபண்டிதரின் மைந்தர். இவரும் தந்தையார்பால் வடமொழி, தமிழ்மொழி இலக்கண இலக்கியங்களெல்லாம் பயின்றவர். பாலாமிர்தம், பாலபாடம், திருச்செந்தூர்ப் புராண உரை, சிவானந்தலகரித் தமிழுரை முதலியன இயற்றியவர். 1915-வரையிலிருந்தவர். இவரது பாலாமிர்தத்தில் காணப்படும் செய்யுட்களிலொன்று வருமாறு :

இச்செயலா லீதுவரு மென்றுரா யாமலே
எச்செயலு மேலோ ரியற்றார்தாம்—இச்சையொடு
வல்லை யியறறுவரேல் வந்திடுமே மாறாத
அல்லலவர்க் கென்றே யறி.

இவரை மிக மதித்துப்பேசுவர் சுன்னாகம், அ. குமாரசாமிப் புலவர்.

ஈண்டுக் குறிப்பிட்ட சிவப்பிரகாச சுவாமிகள் இவர்களினின்றும் வேறுவர். முகரி சேயாறு பாலி முராரிரைக்கம்பை யகருவேநாறும் பெண்ணை யருந்திருநதிகள் நிறைந்துள்ள தொண்டை மண்டலத்திற்கு நடுநாயகம் போன்றதான கச்சியம்பதியிலே குமாரசுவாமிகள் என்றொருவர் இருந்தார். இவர் வேளாளரது தீட்சா குருவாக விருந்தவரென்றும், கார்த்திகை தரிசனத்திற்காகத் திருவண்ணுமலைக்குப் புறப்பட்டுச் செல்லுங்கால் வழியிற்றங்கி தமது ஆன்மார்த்தபூஜையைச் செய்து முடித்துக்கொண்டு புறப்பட்டுச் சென்று இரவில் ஓரூரிற் றங்கினபோது, பூஜைப்பெட்டியைக் குறித்து விசாரணை செய்கையில் பகலிற் றங்கியவிடத்தில் வைத்து மறந்துவிட்டதாகத் தவசுப்பிள்ளை கூற அதுவே கவலையாக விருந்தாரென்றும், இரவில் அண்ணுமலையார் சங்கம வடிவங்கொண்டு கனவிற்றோன்றி அங்கம்வேறு இலிங்கம் வேறன்று என்றும் தாரண தீட்சை செய்து கொள்ளும்படியுஞ் சொல்லிச் சென்றன ரென்றும், மறுநாட்காலையில் திருவண்ணுமலையிலே தெற்கு வீதியிலுள்ள மடத்தில் எழுந்தருளி யிருந்த குருதேவரிடம் தாரணதீட்சை செய்துகொண்டாரென்றும் 'சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு' எழுதிய சிதம்பரம் ஈசானியமடம் திரு. இராமலிங்க அடிகள் கூறுவர். அவர்களைப் பின்பற்றியே பிறரும் கூறுவர்[1]. ஆயினும் ஆதாரம் ஒன்றும் எவரும் காட்டிலரல்லர்.

1. திரு. முருகதாசரும் பானுகவியும் செய்யுள் வடிவில் இவருடைய சரித்தை இவ்வாறே யெழுதியிருக்கின்றனர்.

மேற்கூறிய செய்திகளில் பலமுரண்பாடுகள் காணப்படுகின்றன[1]. அவையாவன: சைவர்களுள் குருவாயிருப்போர் முதலில் ஆசாரியவபிடேகம் ஆனவுடன் செய்து கொள்வது பார்த்திவ லிங்கபூஜை. இது க்ஷணிகலிங்கபூஜை யென்றுங் கூறப்படும் பார்த்திவ பூஜை செய்துகொண்டு ஒருபத்தாண்டுகளாவது சென்ற பின்னரே 'சிவலிங்கப் பிரதிஷ்டை' யென்னும் 'உடையவர் பூஜை' செய்துகொள்வது வழக்கம். முற்குறித்த செய்திகளில் குமாரசுவாமி தேசிகர் இந்நிகழ்ச்சி நடந்தநாளில் திருமணஞ் செய்துகொண்டவராகக் காணப்படவில்லை. ஆதலின் அவர் இளைஞராக விருந்திருத்தல் வேண்டும். இளமையில் சிவலிங்கப் பிரதிட்டை செய்துகொள்வது முற்கால வழக்காறன்று. அன்றியும் வழியில் பூசை பேடகம் காணுவிடின், அதற்குரிய கழுவாய்களைச் செய்து வேறொரு சிவலிங்கம் தேர்ந்து மறுமுறை பிரதிட்டை செய்வதே ஆகமவிதி. இவைகளுக்கு முற்கூறிய செய்தி முரண்பாடுடைய தென்பது விளங்கும். இவைகளையன்றி தொண்டை மண்டலத்திலே வேளாளருக்குத் தீட்சாகுருவாக விருப்பவர் கச்சி ஞானப்பிரகாச சுவாமிகள் மடத்தின் அதிபர். அவர்களிடம் தங்கள் மடத்துச் சிஷ்யகோடிகளின் பட்டி இன்றுமுண்டு. இவைகளாலே குமாரசுவாமி தேசிகர் கச்சியம்பதியின்கண்ணே வந்த ஒரு வேளாளரது ஆசாரியராக விருக்க வியலாதென்பது தெளிவு. அன்றியும் இவர்கள் கன்னடியர் என்று பல செய்திகளால் ஊகிக்க வெண்டியிருக்கிறது.

மேற்கண்ட செய்திகள் ஒருபுற மிருக்க, தலைப்பிற் கண்ட சிவப்பிரகாச சுவாமிகள் குமாரசுவாமியாரது புதல்வர் என்பது ஒருதலை. இவருடைய இளவல்கள் வேலையர், கருணைப்பிரகாசராவர். சிவப்பிரகாசர் உரியகாலத்தே தாரண தீட்சை பெற்றுத் தமது தந்தையாரிடம் தம்சமயத்துக்குரிய கல்வியும் இலக்கண இலக்கியங்களும் கற்றனர். இவர்களது தந்தையார் இளமையில் இவர்களைப் பிரிந்து காலமாயினர். சிவப்பிரகாசருக்குக் கல்வியில் மேலும் மேலும ஆசையுண்டாகவே, தாம் கற்றது கைம்மண்ணளவான மிகச் சுருங்கியதே யென்று கொண்டு மேலும் கல்வி பயில வெண்ணினூர். அக்காலத்திலே மிக்க கீர்த்தியோடு வாழ்ந்த வரும் திருநெல்வேலி யென்னும் நெல்லையம்பதியின் கண்ணே வாழ்ந்து வந்தவருமான வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம்

---

1. இச்செய்திகள் யாவும் சைவர்களா யுள்ளார் தெளிந்தறிதற்குரிய விடயமேயொழிய மற்றையோர் அறிந்து கொள்ளவியலாத ஒரு சிக்கலான விஷயமாகும்.

கல்வி பயிலச்சென்றார். போகும்போது வாலிகண்டபுரத்திற்கு[1] அண்மையிலுள்ள துறைமங்கலத்தில் தங்கி நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டிருந்தார். அவ்வூருக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் அதிபதியாக விருந்த இலிங்கா ரெட்டியாருடைய[2] குமாரர் அண்ணாமலைரெட்டியார் என்பவர் சிவப்பிரகாசருடைய ஒழுக்கம் முதலியவைகளைக் கவனித்து அவ்வூரிலேயே இருக்கும்படி வேண்டிக்கொண்டார். அண்ணாமலை ரெட்டியார் வெள்ளாற்றுக்கு வடகரையிலுள்ள முப்பது வட்டங்களுக்குக்காரியகர்த்தர்; வீரசைவசமயத்தினர், சிறந்த பக்திமான். கல்வியறிவு மிகுதியுமுடையவர். இவரது தந்தையார்கட்டியகோவிலைநிர்வகித்து வந்தார். அவரது வேண்டுகோளுக்கு இணங்கிச் சிறிது காலம் இருந்துவிட்டுத் தான் புறப்பட்டுவந்த காரியத்தைக் கூற, பின்னும் ரெட்டியாரது வற்புறுத்துதலுக்கு இணங்கித் தாம் திரும்புகாலில் அங்குத் தங்குவதாக வாக்களித்து விடைபெற்றுச் சென்றார்.

திருநெல்வேலியை யடைந்து வெள்ளியம்பலவாண முனிவரைக் கண்டு தமது வரலாற்றைத் தெரிவித்தார். நடைபெறுங்காலத்திற் காணப்படுவதுபோல அக்காலத்திலே மதாவேசம் அதிகமாக விருந்ததாகக் காணப்படவில்லை. வெள்ளியம்பலவாணர் சிவப்பிரகாசருடைய கல்வியறிவைச் சோதிக்கும்பொருட்டு, கு என எடுத்துக் கு என முடியுமாறு ஒரு வெண்பா பாடும்படி கட்டளையிட்டார். சிவப்பிரகாசர் அக்கணமே

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள
லூருடையா னென்னு முலகு

என்று பாடினார். அது கேட்ட தம்பிரானார் மிக மகிழ்ந்து அரிதினுணர்ந்த இலக்கண விலக்கியங்களைக் கற்பித்து வந்தார். தீவிர புத்தியுடைய சிவப்பிரகாசரும் அவைகளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பெரும் புலவராயினார். அவர் தமது கல்வி முற்றியவுடன் குருவுக்குக்காணிக்கை செலுத்த முயன்றபோது குருவான வெள்ளி

---

1. வாலிகண்டபுரம் விழுப்புரத்திலிருந்து உளுந்தூர்ப்பேட்டை வழியாகத் திருச்சிராப்பள்ளி செல்லுஞ் சாலையில் பெரும்பலூருக்கு 5, 6 கட்டை தொலைவிலுள்ளது.

2. இலிங்காரெட்டியார் துறையூர் பாளையப்பட்டைச் சார்ந்தவர். இப்பாளையப்பட்டு சகம் 1378-ல் சின்னஎறமரெட்டியால் நிலைநாட்டப்பட்டது. இந்தக்கால் வழியில் இலிங்காரெட்டியார் கி. பி. 1610-ல் பட்டத்துக்குவந்து 38 ஆண்டுகள் ஆண்டார். 4 பக்கம் பார்க்க.

யம்பலவாணர் தமக்குப் பொருள்மேல் விருப்பில்லை யென்றும் தம்மைச்சிறுமையாகப்பேசிவரும் திருச்செந்திலுள்ள ஒரு புலவரை யடக்கிவருவதே தமக்குச் செலுத்தும் காணிக்கையாமெனக் கூறினதாகவும் சொல்லுவர்.

சிவப்பிரகாசரும் அச்செய்தி குருவாணை யென்றெண்ணிச் செந்திநகரை யடைந்து, செந்திலாண்டன் அடிபணிந்து வீதிவலம் வரும்போது அவ்வூர்ப் புலவர் எதிர்ப்பட்டார். புலவர் சிவப்பிரகாசர் இன்னாரென அறிந்த மாத்திரத்தே அவரையும் எள்ளிநகவாரம்பிக்க, சிவப்பிரகாசர் அவர் உண்மையான புலவராயின் செந்திற் செம்மல்மீது முப்பது நாழிகையில் நிரோட்டகயமக அந்தாதியொன்று பாடுவதென்றும், அதனை எவர் முந்துறப் பாடுகின்றனரோ அவர் எதிரிக்கு அடிமையாவ தென்றும் தீர்த்துக் கொண்டனர். புலவருஞ் சம்மதித்துப் பாட முயன்றனர். சிவப்பிரகாசரோ கடன்மடை திறந்ததுபோல முப்பது செய்யுட்களைப் பாடிமுடித்துவிட்டார். புலவர் எதிரியின் வல்லமையறியாது சிக்கிக் கொண்டு தாம்சொன்னபடி சிவப்பிரகாசருக்குத தோற்றதாகக் கூறியதோடு, அவருடன் பயணமாகிச் சிந்துபூந்துறையையடைந்து வெள்ளியம்பலவாணற்கும் தோற்றதாக அடிப்பணிந்து நின்றார். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தமது மாணவரது பெருமைக்கு மகிழ்ந்து வாயார வாழ்த்தித் தமதூர்போக விடுத்தனர்,

வழியில் காவிரிக் கரையிலுள்ள திருக்காட்டுப்பள்ளியென்னு மூரை அடைந்து தங்கியிருக்கும்பொழுது அறிவிற் சிறந்த பெண்ணொருத்தி 'வீதியினிடத்தே உப்பு விற்றலைக் கண்டு இரக்கமுற்றுத் திருநோக்க தீட்சைசெய்து, அவளது நல்லூழையும், பரிபக்குவத்தையு முணர்ந்து, அவளுடைய புலமையைப் பிறர்க்குப் புலப்படுத்தத் திருவுளங்கொண்டு[1],

நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா—னுறையுந்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளிய மாத்திரத்தே, அப்பெண்

தென்னாங்கு தில்லைப் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னாங்கு சேவடியைப் போற்றினேன்—மன்னான்
றிருக்கூட்ட மத்தனைக்குந் தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்டம் போக்கினேங் காண்

1. இதனை வேறுபாடுறக் கூறுவது முண்டு.

என்று பாடி தரிசனவேதியி னெதிர்ப்பட்ட இரும்புபோல மன முருகி விரைந்து வந்து பணிந்து நற்கதியடைந்தாள்.

பின்னர் வருப்வழியில் துறைமங்கலத்திலுள்ள அண்ணாமலை ரெட்டியார் தமதூரிலேயே வசிக்கும்படி முன்னர்வேண்டிக்கொண் டதை நினைப்பூட்டி ஒரு திருமடமும் கட்டிக்கொடுத்தார். அங் கிருக்கும் நாளில் அவ்வூருக்கு அணித்தான திருவெங்கை யென் னும் வெங்கனூரில் கோயில் கொண்டிருக்கும் பழமலை நாதர்மேல் திருவெங்கைக்கோவை திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா திருவெங்கையலங்காரம் முதலாய நூல்களை இயற்றினார்.

அக்காலத்திலே சிவப்பிரகாசர் வால வயதுடையராயினமை யின் ரெட்டியார் அவரை மணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க் கையை நடாத்தித் தாம் இன்புறுவதோடு உலகிலுள்ளோரும் இன் புற்று அவர்களைப் பின்பற்ற ஒரு வழிகாட்டியாகுமென வேண்டி னார். அப்பொழுது சிவப்பிரகாசர்,

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டாலுங் கொளலா நூறுவய தினிருந்து
பேய்கொண்டா லுங்கொளலாம்பெண் கொள்ளலாகாதே

எனவும்,

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க ணிமலன் றாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்கும் காம
வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலை தானே

எனவும் விடை கூறினார். அதுமுதல் சிவப்பிரகாசரது மனம் துற வில் நின்றது என்பது வெளியாயிற்று. பின்னர், தம் இளவல்கட்கு மணஞ் செய்வித்து சமயோசிதமும் விநோதமுமான எண்ணங் களைத் தரத்தக்க செய்யுள்களைக் கூறி ஆசீர்வதித்தருளினார். அவற்றுளொன்று வருமாறு :

அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதா னையவென் செவியை மிகவு
மறுமுகன் கிள்ளினு னென்றேசி ணுங்கிடவு மத்தன்வே லவனைநோக்கி
விரைவுடன் வினவவே அண்ணனென் சென்னியில் விளங்கு கண்ணெண்ணின
வெம்பிடும் பிள்ளையைப் பார்த் துநீயப்படி விகடமேன் செய்தாயென [னென்
மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன மயிலவ னகைத்துநிற்க
மலையரைய னுதவவரு முமை யவளை நோக்கிநின் மைந்தரைப் பாராயெனக்

கருதரிய கடலாடை யுலகுபல வண்டங் கருப்பமாப் பெற்ற கன்னி—
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள் களிப்புடனுமைக் காக்கவே.

சிலநாள் சென்ற பின்னர் சிதம்பரம் சென்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வசித்துவரு நாளில் சிவப்பிரகாச விகாசம், தருக்க பரிபாஷை, சதமணிமாலை நால்வர் நான்மணிமாலை என்பவற்றை யருளிச்செய்தார். சில காலத்திற்குப்பின்னர்க் காஞ்சிபுரம் சென்று ஏகாம்பரநாதரையும் காமாட்சி யம்மையாரையும் தரிசித்துக்கொண்டு அங்கிருக்கும்போது திருப்போரூரிலுள்ள சாந்தலிங்கர் என்ற பெரியார் அங்கு வந்தார். அவரைச் சிவப்பிரகாசர் கண்டு அளவளாவினுர். அவர் காஞ்சிபுரம் தரிசனஞ் செய்து கொண்டு, பொம்மபுரத்தில் எழுந்தருளியுள்ள சித்தமூர்த்தியான சிவஞான பாலையரைத் தரிசிக்கச் செல்வதாகக் கூறினுர். சிவப்பிரகாசரும் பாலையரது பெருமைகளை முன்னரே கேட்டிருந்தவராதலின் தாமும் உடன் வருவதாகச் சொல்லிச் சென்ருர். பாலையர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடுதூது என்ற சிறு நூல்களையும் தோத்திரமாகப் பாடினுர். பின், சாந்தலிங்கருக்குத் தமது தங்கையை மணம் புரிவித்து மறுபடியும் கச்சியம்பதியை யடைந்து வசித்து வந்தார். அக்காலத்திலே கன்னட பாஷையிற் செய்யப்பட்டிருந்த விவேக சிந்தாமணி என்னும் நூலின் ஒரு பகுதியான வேதாந்த பரிச்சேதத்துக்கு வேதாந்த சூடாமணி யெனப் பேர்தந்து மொழிபெயர்த்தார். சிந்தாந்த சிகாமணி, பிரபுலிங்கலீலை யென்ற நூல்கள் மொழிபெயர்க்கப்பட்ட காலமுமிதுவேயாம்.

ஞானதேசிகரான சிவஞான பாலையரைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பம் மீதூரக் காஞ்சியைவிட்டுப் புறப்பட்டுப் பொம்மபுரஞ்சென்று ஞானதேசிகரைக் கண்டு கும்பிட்டு, திருப்பள்ளியெழுச்சி, சிவஞானபாலையர் பிள்ளைத்தமிழ் என்ற நூல்களைச் செய்தருளினுர். பின்னர்ச் சிலரது வேண்டுகோளின்படி திருக்கூவப் புராணம் பாடி யரங்கேற்றினுர்.

பின்னர் வெங்கனூரை யடைய வெண்ணிச் செல்லும்போது விருத்தாசலத்திலேயிருந்த சிதம்பர பூபதியென்பார் ஒரு திருமடம் கட்டுவித்து அதனிலிருந்தருளும்படி வேண்ட அவரது நற்குணத்தைப் புகழ்ந்து,

வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கு
மெங்கட் கினிய சிவஞானதேவ னிசைவுகொடு
திங்கட் பவனி யிருகான் முதுகுன்றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மடமிதுவே

என்று பாடி அம்மடத்தில் வசித்துவந்தார். அங்கிருக்கு நாளை யில் 'பழமலையந்தாதி, பிட்சாடன நவமணிமாலை, கொச்சகக் கலிப்பா, பெரிய நாயகியம்மை நெடுங்கழினெடில், பெரிய நாயகி யம்மை கட்டளைக்கலித்துறை' என்பவைகளைப் பாடியருளினர். பின்னர், பாலையர்மீது கலம்பகம் ஒன்று பாடி, நன்னெறியையும் பாடினர். வழியிற் கண்ட பாதிரியார் ஒருவரோடு வாதிட்டு ஏசுமதநிராகரணம் என ஒரு நூலியற்றினர். சீடர் சிலர் வேண்டுகோட்கிணங்கி நல்லாற்றூர் சென்று வசித்து வந்தார். அக்காலத்தே இவரது இளவலான கருணைப்பிரகாசர் வெங்க ணூரிலே காலமாயினமை கேட்டு அங்குச்சென்று அவரது சமாதி முன்னர் நின்று

முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு கண்டசுவை முதிர்ச்சி யாலே
தன்னியலை முழுதுமுரைத் தமையாமுன் னினைக்கவர்ந்து தடங்கா ளத்தி
மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே
யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச னென்னுங் கோவே.

என்று பாடித் துக்கித்து நின்றார். சகோதர வாஞ்சை யென் பது எவரையும் விடாததொன்றன்றே? இவரது பிரிவை யாற்றாத மற்றோர் இளவலான வேலையரைத் தேற்றி நிறுத்தி விட்டுத் திரும்ப நல்லாற்றூரை யடைந்து சிவநாம மகிமை, அபிஷேகமாலை, நெடுங்கழினெடில், குறுங்கழினெடில், நிரஞ்சன மாலை, கைத்தலமாலை முதலாய நூல்களை இயற்றியருளியிருந்து தமது 32-வது வயதில் அவ்வூரிலேயே இஷ்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினர்.

பிணியறு துறவினேன் பிணியி லாமலே
மணியொளி யிறையவன் மாட்டு மன்னினன்
அணியவ னுறையுட லதனை யன்பினோர்
பணிபுரி குகையிடைப் பண்பி னூர்த்தினர்.

என்பது பானுகவி வாக்கு.

சிவப்பிரகாச சுவாமிகள் செய்தருளிய நூல்களைத் தொகுத்து ஓர் ஆசிரிய விருத்த முண்டு. அது வருமாறு:

தெருள்சிவப் பிரகாச வடிகளரு ளியநூல்கள் சீர்ச்சோண சைலமாலை
செந்திலந் தாதிவெங் கைக்கோவை வெங்கைக்க லம்பகம் வெங்கையினுலாச்
செப்பரிய வெங்கையின லங்கார மேசிவப் பிரகாச நல்வி காசம்
சேர்தர்க்க பரிபாடை நால்வர்நான் மணிமாலை திரிபில்சத மணிமா லையே
அருளுறுஞ் சிவஞானி நெஞ்சுவிடு தூதுதா லாட்டுபிள் ளைத்த மிழ்கலம்
பகமோடு பள்ளியி னெழுச்சிகூ வப்புரா ணம்பிரபு லிங்க லீலை

அமையும்வே தாந்தசூ டாமணிசித் தாந்தச்சி காமணிநல் பழமலையினந் தாதிபி க்ஷாடன நவம்மணிம் மாலையுட னறைகொச்ச சகக்க லிப்பா மருளதனை மாற்றுபெரி யம்மைக் கலித்துறை வளர்நெடு விருத்தம்யேசு மதநிரா காணம்நன் னெறியோடு சிவநாம மகிமைதல வெண்பாமுறை வதியிட்ட லிங்கவபி டேகமா லையுநெடுங் கழிநெடில் குறுங்கழிநெடில் மாநிரஞ்சனமாலை கைத்தலம் மாலையாம்................ .....

சிவப்பிரகாசரது சமயக்கொள்கை

அடிகள் பிறப்புமுதல் வீரசைவ சமயத்தவராயினும் பிடிவா தமுடைய வீரசைவ ரல்லர். வீரசைவ மதத்தினர் சத்தியைப் போற் றுார் சிவலிங்கரூபி ஒன்றே கொள்வர். அடிகளோ அன்னரல்லர். பெரியநாயகியம்மை விருத்தம் பெரியநாயகியம்மை கலித்துறை இவ்விரண்டுமே அடிகள் அவ்வாறான கொள்கையின ரல்லரென் பதற்குப் போதிய சான்றாகும். கூத்தப் பெம்மானிடத்து ஆராக் காதல் கொண்டவர் என்பது அவர் சிதம்பரத்திலே தங்கியிருந்தது கொண்டே அறியலாகும். அது 'பொய்ச் சார்பதனை யொழிக்குஞ் செழும்புலியூர்ப் புனிதன் நற்சார்பிற் சார்ந்த சிவப்பிரகாசன்' என்பது கொண்டு மேலுந் தெளிவுபடும். சைவசமய குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இந்நால்வரிடத்தும் பேரன்பு பூண்டவர். அவர்களுள்ளும் மாணிக்கவாசகரிடத்துத் தம்மையறியாத பத்தி பூண்டவரென்றே கூறவேண்டும். அங்ஙன மில்லையாயின் 'பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் மொழிந்தவாசகமே வாசகம்' என்றும் 'மன நின்றுருக்கு மதுரவாசகம்' என்றும் கூறியிருக்கமாட்டார். குருலிங்கசங்கம பத்தி வீரசைவர்கட்கு உரியதுதான். இஃது இயல்பாக வுள்ள தெனினும் சங்கமர் என்பது உயிருடனிருப்பவரைக் குறிக்குமே யன்றித் தெய்விகம் பெற்றாரையன்று. அன்றியும் அடிகள் சிவஸ்தல யாத்திரை செய்ததாகவும் அறிகிறோம். அதுமட்டு மல்லாமல் திருக்கூவமான திருவிற்கோலத்திற்குப் புராணமும் சீகாளத்தி புராணத்திற் பகுதியும் பாடியது இவர் சமயத்தில் வீரசைவராயினும் சுத்த சைவத்தில் வெறுப்புடையவரல்லர் என்பதையும், வீரசைவத்திலே அழுந்தி விடாப்பிடியுடையவ ரல்லர் என்பதையும் தெளிவாக்கும்.

சிவப்பிரகாசரது நூல்கள்

1. சோணசைலமாலை. அருணசல மென்னுந் திருவண்ணா மலையில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரான்மீது பாடிய ஒரு சிறு பிரபந்தம். நூறு திருவிருத்தங்களாலாயது; இது மலையை வலம் வருங்காலையிற் பாடியது என முன்னர்க் குறித்துள்ளாம். ஒரு செய்யுள் எடுத்துக் காட்டாகக் குறிப்பாம்.

கானமே மருவும் விலங்கினுங் கடையேன் கற்பவை கற்றிலேன் விடய
ஞானமே யுடையே னறிஞரைக்காணி னுணிலே னுய்யு நாளுளதோ
வானமே யளவு நெடுங்கிரி மலய வாதமோ துறுபவர் கட்குத்
தானமே யுதவ வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

2. திருச்செந்தி னிரோட்டக யமக வந்தாதி. இது முப்பது செய்யுட்களாலாயது. கலித்துறையா னியன்றது. பாடிய காரணம் முன் காட்டினும்.

3. வெங்கைக்கோவை. வெங்கனூரிலே எழுந்தருளியிருக்கும் பழமலை நாதர்மீது 425 கலித்துறையா னியன்ற கோவைப் பிர பந்தம். அகப்பொருட் பகுதியான களவும் கற்பும் செவ்வன் விளக்குவது. கற்பிலே வரைவியலொன்று கற்பித்தும் பொருள் வயிற் பிரிவும் மீண்டு வருதலுங் கூறித் தலைமகளோடு கலந்துறுந் தலைமகன் கார்ப்பருவங்கண்டு களித்தியம்பலோடு முடிப்பர்.

4. வெங்கைக் கலம்பகம். நூறு செய்யுட்களை யுடையது; இதுவும் வெங்கனூர்ச் சிவபிரான்மேற்று.

5. திருவெங்கையுலா. இது 419 கண்ணிகளை யுடையது. வெங்கனூர்ச் சிவபிரான்மேற்று. இந்நூலிலே தம்மை யாதரித்த அண்ணாமலை ரெட்டியாரைப் பெருமையாகப் பாராட்டி யுள்ளார். 55—68 கண்ணிகளில் காண்க.

6. வெங்கையலங்காரம் என்பது ஐந்து செய்யுட்கள் கொண்ட ஒரு சிறு நூல். இதுபொழுது அருகியுளது.

7. சிவப்பிரகாச விகாசம். இதனைத் தில்லையின்கண்ணே இருந்தபோது செய்தருளினார். சைவசித்தாந்த மரபினைப் பெரிதும் விளக்குவது. இது பதியியல, பசுவியல், பாசவியல், பிரளயவியல் என நான்கியல்களைக் கொண்டது. அடிகள் 'கூறுவன் பார்கொளும் பதிபசு பாசத்தன்மையே' என்று கூறுவதால் பிரளயவியல் ஆசிரிய ருடைய வாக்கா? என்பது ஆராயற்பாலது.

8. தருக்கபரிபாடை. மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்த மென்னும் வைதிக சாஸ்திரமாற னுள் ஒன்ருகிய நியாயசாஸ்திரம் பண்டிதர்களால் பல வகையாகக் கூறப்பட்டுளது. தார்க்கிகருள் தலைமைபெற்று விளங்கிய கேசவ மிசிரர் என்ற பெரியார் பாலர்களுக்கு உபயோகப்படும்படி தர்க்க பரிபாஷையென்ற நூலை வடமொழியில் செய்தார். இந்நூலுக்கு வடமொழியில் 23 வியாக்கியானங்க ளிருக்கின்றன. தமிழ் மக்க ளுக்கு உபயோகமாகும் பொருட்டு அடிகள் இந்நூலை வசனமாக மொழிபெயர்த்தருளினர். இது 142 காரிகைகளை யுடையது.

9. நால்வர் நான்மணிமாலை. இது சைவசமயாசாரியரான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்களைக் குறித்து நாற்பது பாக்களாலான ஒரு சிறு பிரபந்தம். சம்பந்தரை வெண்பாவாலும், நாவுக்கரையரைக் கலித்துறையாலும், சுந்தரரை விருத்தத்தாலும் திருவாதவூரடிகளை அகவலாலும் துதிப்பர். இந்நூலின் பெருமையும் ஆசிரியரது பக்திச் சிறப்பும் முன் கூறினும். இந்நூலுக்குச் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்க அடிகள் ஒரு சிறந்த உரை இயற்றி யிருக்கின்றார்.

10. சதமணிமாலை. இது நூறு செய்யுட்களாலான ஒரு சிறிய பிரபந்தம். சைவசித்தாந்த உண்மைகளை ஒவ்வோர் ஆகமத்தினின்றும் எடுத்து இனிய செய்யுள் வடிவிலே கூறுவது.

11. சிவஞானபாலையர் நெஞ்சு விடு தூது. தனது நெஞ்சினை (மனத்தினைப்) பாலைய சித்தசுவாமிகளிடம தூது செல்ல வேண்டுமெனக் கூறும் ஒரு நூல். இது 255 கண்ணிகளையுடையது. ஆசிரியரது நெஞ்சினைச் சுட்டி

என்னோ டிருக்கு மெனினுஞ் சிவஞானி
யன்னோ னினைவிடுத்தா லன்றியே—தன்னோகை
வஞ்சமே செய்குவனுன் மற்றவன்பாற் றூதாக
நெஞ்சமே செல்விரைந்து நீ

என்று கூறுதல் இவரது பக்திப்பெருமையை இனிது விளக்கும்.

12. ஷை தாலாட்டு. இது பாலையரது பெருமையைப் பெண்டிரும் தொட்டிற் பிள்ளைகளும் அறிந்துணருமாறு கூறிய பிரபந்தம். 100 கண்ணிகளையுடையது.

13. ஷை பிள்ளைத்தமிழ். இது நூறு செய்யுட்கள் கொண்ட பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம. பாட்டியன் முறைப்படி காப்புக் கூறுது திருமால, மல்லிகார்ச்சுனேச்சுரன், உமாதேவி, விநாயகர், முருகன், அல்லம தேவர், வசவண்ணர், சமயகுரவர் மூவர், மாணிக்கவாசகர், சென்னவசவ தேவர் இவர்கட்குக் காப்புக் கூறியுள்ளார்.

14. ஷை கலம்பகம். இதுவும் பாலையர் பெருமையைக் கூற எழுந்த நூல். நூறு பாக்களையுடையதாக இருத்தல் வேண்டும். அச்சிடப்பட்ட நூலில் 93 பாக்களே காணப்படுகின்றன. இதனுட் காணப்படுங் களிச்செய்யுள் வருமாறு :

மெய்த்தவறு சமயங்கட் கிறைவ னாகி
விளங்குசிவ ஞானகுரு வாம மென்னுஞ்
சத்திசம யத்தினுக்குக் கள்ளு மூனுந்
தகுமெனமான் மதுகைவிடா னாகின்றான்

புத்தலரி யயன்கரகங் கொண்டு வந்தான்
புராரியுழை யைங்கரன்பே ரெலிகைக் கொண்டான்
செய்த்தவடி வேன்முருகன் சேவல் கொண்டா
னிலவினனோர் முயன்முழுதும் விழுங்கி னானே.

15. ஷை திருப்பள்ளி யெழுச்சி. இது நான்கு பாக்கள் கொண்டது. பாலையரைத் துயிலெழுப்புவது.

16. திருக்கூவப் புராணம். தொண்டை நாட்டிலுள்ள 32 ஸ்தலங்களுள் ஒன்றான திருவிற்கோலம் என்னும் திருக்கூவத்திலே கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானுடைய பெருமையைக் கூறுவது.

காவி நேர்விழி மங்கைபங் கினனிசைக் காந்த
மேவு மாசனற் குமாரசங் கிதையினில் விரித்த
தாவில் காளிகா காண்டமென் கடற்புகழ் தன்னிற்
கூவ நீர்மையுட் கொண்டியான் கூறுவன் தமிழால்

என்பது கொண்டு இந்நூல காந்தத்துட் கண்டதாகும். இது பாயிரம், நைமிசச் சருக்கம், தலச்சருக்கம், திரிபுரதகனச் சருக்கம், சந்தானச் சருக்கம், அடிமுடி தேடிய சருக்கம், செந்நெல் வைத்த சருக்கம், தாருகன்வதைச் சருக்கம் முதலாய ஏழு சருக்கங்களோடு கூடிய எழுநூற்று மூன்று திருவிருத்தங்களை யுடையது.

பொருந்தா ரரணம் பொடிபடுத்த பொன்னஞ் சிலையோன் கூவத்தி
னிருஞ்சீர் தமிழாற் புனைதல்செய்தா னிதழ்கூப் பாத வந்தாதி
யருந்தா மந்தான் புணர்ந்துசெந்தி லமர்ந்து சூர்மா முதறடிந்தோன்
பெருந்தோண் மலைகட் கணிந்தசிவப்பிர காசப்பெ ருந்தகையே.

17. பிரபுலிங்க லீலை. இஃது அல்லம தேவரது சரிதம். பிரபு என்ற சொல் எல்லாமாய் அல்லவுமாய் இருக்குந் தன்மை. அத்தன்மையை யுடையவரான அல்லம தேவரது திருவிளையாடல் என்பதாம். இது வீரசைவ மதத்தின் மேம்பாடு கூற எழுந்த கன்னட நூல். அதனில் 'பிரபுலிங்க லீலை' என்றே பெயர்பெறும். அடிகள் இதனைத் தமிழில் மொழிபெயர்த்தனர். சிவபெருமானும் சத்தியும் ஒருவரோடொருவர் கலாய்க்க, எம்பெருமாட்டி தனது சக்தியால் மாயையையுண்டாக்கி யனுப்புதலும், அவள் மதுகேசனை வேண்டிப் பத்தியோடருச்சனை பயின்றதை நித்தனறிந்தான். 'நிரந்தரமடியார் வேண்டு நினைவெலாம நிரப்பா நின்ற பெருந்தகை யல்லமையன் மனிதனாகி' வந்தனை புரிந்தாடன்பாற் பொருந்தி யவளை நல்வழிப்படுத்தியதும் மற்றுமுள்ள அடியார்கட் கருளியதும கூறும். இது 1. துதிகதி, 2. கைலாச சக்தி, 3. மாயையினுற்பத்தி கதி, 4. மாயை பூசை கதி, 5. பிரபுதேவர் வந்தகதி

6. விமலைகதி. 7. மாயை கோலாகலகதி, 8. சைவண்ணர் வந்தகதி, 9. அக்கமாதேவி யுற்பத்திகதி, 10. அக்கமா தேவி துறவு கதி, 11. கொக்கிதேவர் கதி, 12. முத்தாயி யம்மைகதி, 13. சித்தராமையர் கதி, 14. வசவண்ணர்கதி, 15. மருள சங்கரதேவர் கதி, 16. இட்ட லிங்ககதி, 17, கதலிவனகதி, 18· சாதகாங்ககதி, 19 கோரக்கர் கதி, 20. முனிவரர்கதி, 21. சூனிய சிங்காதனகதி, 22. சூனிய சிங்காதனத்திலிருந்தகதி, 23. ஆரோகணகதி, 24. மஞேலயகதி, 25. மான்மியகதி. ஆக 25 கதியையும் 1157 திருவிருத்தங்களையும் கொண்டது. இதனை இயற்றிய காலம்.

> பார்கெழு சகாத்த மூவைஞ் ஞூற்றெழு பானுன் காவ
> தாகிய கரநா மங்கொ ளாண்டுறு விடைஞா யிற்றின்
> சீர்கெழு மல்ல மன்றன் றிருவிளை யாடற் காதை
> கார்கெழு மிடற்றெங் கோமான் கருணை கொண் டியம்பினுனே.

இதனிற் கண்டசகம் 1574, கி. பி. 1652க்குச் சரியாகும்.

18. **வேதாந்த சூடாமணி.** இது வேதாந்த சூளாமணி என்றும் கூறப்படும். விவேகசிந்தாமணி என்றெருரு வேதாந்த நூல் வடமொழியிலுண்டு. அதனைக் கன்னடத்தில் மொழி பெயர்த்த நிஜகுணயோகி யென்பார் வேதாந்த பரிச்சேதம் என்றெருரு பகுதி, வேதாந்தத்தை விளக்கி எழுதினுர். அதனைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளுமாறு சிவப்பிரகாச அடிகள் தமிழில் மொழிபெயர்த்தருளினுர். இது 185 திருவிருத்தங்களையுடையது. இதற்குப் பிறசை அருணுசல சுவாமிகளால் ஒரு சிறந்த உரை செய்யப்பட்டுளது.

19. **சித்தாந்த சிகாமணி.** இது வீரசைவத்தைப்பற்றிக் கூறு மொரு நூல். இது வடமொழியில் சிவயோகிராட் என்பவராற் செய்யப்பட்டது. இது பாயிரம். இரேணுகர் காதை, பிரதமப் பரிச்சேதம், அங்கஸ்தலம், லிங்கஸ்தலம் என்ற பெரும் பகுதிகளோடு 880 திருவிருத்தங்களை யுடையது. முன்னம் மூலம்மட்டும் அச்சிடப்பட்டிருந்தது. பின்னர் வீரசைவ பக்தரான நாகி செட்டியாரால் உரையோடு வெளியிடப்பட்டுள்ளது.

20. **பழமலையந்தாதி.** இது முதுகுன்றம் என்றும் பழமலை என்றும் பெயர்பெறும் விருத்தாசலத்தில் கோயில்கொண்டுள்ள பழமலைநாதர் துதியாகவமைந்த அந்தாதி நூல். நூறு செய்யுட்களைக் கொண்டது. இந்நூல் கற்பவருக்குத் திருவருந் தங்கவருங் கல்விமாது சிறப்பு வரும்.

21. **பிக்ஷாடன நவமணிமாலை.** இதுவும் விருத்தகிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது பிக்ஷாடனக் கோலத்தை வியந்து

கூறுவது. ஒன்பது செய்யுட்களைக் கொண்டது. இஃது இரட்டுற மொழிதல் என்னும் அலங்காரங்கொண்டுள்ளது. இதற்குச் சிறந்த உரையொன்று சிதம்பரம் இராமலிங்க அடிகளால் காணப் பட்டுளது.

22. **கொச்சகக்கலிப்பா.** இதுபொழுது அகப்படாததொரு நூல்.

23. **பெரியநாயகியம்மை கலித்துறை.** இது முதுகிரியில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகி யம்மையார் மேற்று; பத் தொன்பது கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டது. செய்யுட்கள் படிக்கப்படிக்க இன்பந்தரத் தக்கன.

தண்ணு ரிதழி புனைவான் விழியிணை தம்மனைகள்
பண்ணு வழிக்குமென் றேநின் றிருமுக பங்கயத்திற்
கண்ணு யினருனக் கவ்வலை மாதுங் கலைமகளும்
பெண்ணு ரமுதனை யாய்குன்றை வாழும் பெரியம்மையே.

24. **பெரியநாயகி திருவிருத்தம்.** இதன் முழுப்பெயர் 'பெரிய நாயகி யம்மை நெடுங்கழிநெடிலாசிரிய விருத்தம்'. இதுவும் முது குன்றம் அம்மையார்மேற்று, பதினொன்கு சீர்களையுடையது. பத்துப் பாக்களாலாயது.

25. **ஏசுமத நிராகரணம்.** இது கிறித்தவமத கண்டனமாக எழுந்த ஒரு நூல். 'அகராதி செய்த வீரமாமுனிவர் என்பார் எதிர்ப்பட்டு யேசுமதமாகிய, தங்கொள்கையை நாட்டுதற் பொருட் டுத் தருக்கஞ்செய்ய உடனே அக்கொள்கையை மறுத்து ஏசுமத நிராகரணமெனப் பெயரிய நூலை அருளிச்செய்தார்' என்று இராம லிங்க அடிகள் கூறுவார். பெஸ்கி பாதிரியார் காலம் சிறிது பிற் பட்டதாகலின் இப்புலவர் பெருமான் அவரைச் சந்தித்திருக்க இய லாது என்பது பிறர் கொள்கை. பெஸ்கி பாதிரியார் என்பது உண் மையாக இராவிடினும் வேறு ஒருவராக இருத்தலும் கூடும். இருந்த ஒரே பிரதி பாதிரி யொருவரால் விலைக்கு வாங்கப்பட்டுத் தீக்கிரையாயிற்று என்ற செய்தி பத்திரிகையில் காணப்படுவது. அந்நூலிலிருந்து மேற்கோளாகக் காட்டப்பட்ட இரு செய்யுட்கள் வருமாறு :

வாய்திறந் தலறும் வேங்கை வல்விட முமிழ்பாம் பாதி
நேயமற் றெவர்கூற்றாகி நிகழ்வதென் னுலகத் தந்நாட்
டியவ ஞறிக் கோதுஞ் செந்நெறி யடங்கா தென்னி
ஞயகோ வாதி மாந்தர்க் கடங்கிய விதமென் கொல்லோ.

சொல்லி னவர்க்கச் சாதி யடங்கவும் துயாஞ் செய்தே
கொல்லமற் றையவுமீச னெனிற்கொடு நரகமாதி
நல்லவா வோரோர் காலத் தடங்கலா னவிலச் சாதி
யல்லல்செய் திடலாற் றீயோ யறைந்தசொற் பழுதே யாகும்.

26. நன்னெறி. இது நாற்பது வெண்பாக்களாலாய ஓர் ஒழுக்க நூல். பள்ளிச்சிறுரும் கற்குமாறு எளிதிலமைந்தது.

27. சிவநாம மகிமை. சிவ என்ற சொல்லின்பெருமையைக் கூறுவது. பதினெரு பாக்களையுடையது. இப்பெயரின் பெருமையை ஆசிரியர்

இழிவுறுபுன் கருமநெறி யினனெனினுங் கொலைவேட னெனினும் பொல்லாப்
பழிமருவு பதகனெனி னும்பதித னெனினுமிகப் பகரா நின்ற
மொழிகளுண்முற்றவசனுய்ச்சிவசிவவென்றொருமுறைதான்மொழியிலன்னேன்
செழியநறு மலரடியின் றுகளன்றே வெங்கள்குல தெய்வ மென்ப.

28. தலவெண்பா. இது தலங்கள்தோறும் பாடிய விடு பாட்டுப் போலும்; கிடைப்பது அருமை.

29. இஷ்டலிங்க அபிடேக மாலை. 30. நெடுங்கழிநெடில், 31. குறுங்கழிநெடில், 32. நிரஞ்சனமாலை, 33. கைத்தலமாலை இவ்வைந்து நூல்களும தமது அங்கலிங்கமான ஆன்மலிங்கத்தினைப் பரவுவது. நிரஞ்சனமாலை நீங்கலாக மற்றையன முறையே பப்பத்துப்பாக்கள் கொண்டன. நிரஞ்சனமாலை 31 பாக்களைக் கொண்ட துதி நூலாகும்.

30. சீகாளத்தி புராணம். சீகாளத்தி புராணத்தில் கண்ணப்பச் சருக்கமும், நக்கீரச் சருக்கமும் இவர் செய்தவை. அவை யிரண்டும் இலக்கிய மேம்பாடு உடையவென்று கூறல் வேண்டுமோ ?

சிவப்பிரகாசருடைய காலத்தைத் திட்டமாகக் காட்டக்கூடிய சான்று அவர் கி. பி. 1652-ல் பிரபுலிங்கலீலை இயற்றிய தென்பது ஒன்று. துறையூர்ப் பாளையப்பட்டின் தலைவர் இலிங்கா ரெட்டியாரின் புதல்வர் அண்ணாமலைரெட்டியார் இவரை ஆதரித்திருப்பது மற்றொன்று. இலிங்கா ரெட்டியார் திருவெங்கைமா நகரில் பழமலைநாதரை ஸ்தாபித்துக் கும்பாபிஷேகஞ் செய்தது சகம்1549. அதன் பிறகே அண்ணாமலை ரெட்டியாரது வியாபகம் அந்தப் பக்கங்களி லிருந்திருக்கிறது. சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலை பாடியது சகம் 1574. அவர் சிவலிங்கவைக்கிய மாகும்போது வயது 32. தமது முப்பதாவது வயதிலே அவர் அல்லமதேவரது சரிதத்தைப் பாடினதாகக் கொண்டாலும் அவர் சகம் 1576 குச் சரியான கி. பி. 1654-ல் காலகதியடைந்திருக்கவேண்டும்.

---

22. சாந்தலிங்கர்.

சாந்தலிங்கப் பேருடையார் தமிழ்நாட்டிலே இருவர் வாழ்ந்தனர். ஒருவர் 'பழமொழி விளக்கம்' என்னுந் தண்டலையார் சதகம் எழுதியவர். திருத்தருப்பூண்டி தாலுக்காவிலுள்ள தண்டலைச்சேரி என்ற ஊரினர். மற்றையவர் திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் எனப்பெயர் பெறுவர். பின்னவரே ஈண்டுக் கூறப்படுபவர்.

சாந்தலிங்கர் வீரசைவ சமயத்தினர். திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள துறையூர் இவருடைய பிறந்த ஊரென்று சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரும், பேரையூரென்று கா. சுப்பிரமணிய பிள்ளையும் எழுதுவர். இவருடைய வரலாறு நன்கறிந்த சிதம்பரம் இராமலிங்க அடிகள் பேரூரென்றே கூறுவர். அவிநாசியென்று கூறுவாருமுளர். மேற்கூறிய ஆசிரியன்மா ரிருவரும் சாந்தலிங்கர் சங்கம குலத்தினர் என்பர். சங்கமகுலம் என்றொரு குலம் வீரசைவர்களுள் இருப்பதாகத் தெரிந்திலது. ஒரு குலத்தினருக்குச் சங்காண்டி, ஆண்டிகள் என்று அவர்கள் சங்கு ஊதும் தொழில் குறித்துப் பேருண்டே தவிர, சங்கம குலம் என ஒரு குலம் இல்லை. வீரசைவர்களுள்ளே ஆசாரிய ஸ்தானத்திற்கு அருகராவார் ஐயர் என்ற பட்டமும் அல்லாதார் உலகில் வழங்கும் பட்டமான சங்காண்டி என்பதும் கொள்வர். பண்டாரம் என்ற பட்டமும் சில இடங்களில் வழங்கும். இவைகளாலே சங்கமகுலம் என்றொரு குலம் வழக்கிலில்லை என்பது தெளிவுபெறும். இச்சரித்திர புருடர் ஐயரல்லாத மற்றை வகுப்பினர். இவரது இளமையைக் குறித்து ஒன்றும் அறிதற்கில்லை. ஆயினும் கல்வி கேள்விகளில் வல்லவர். பொம்மபுரம் ஸ்ரீசிவஞான பாலையரிடத்து அளவிறந்த பத்திபூண்டவர். அவரைத் தரிசிக்கச் செல்லுங்கால் சிவப்பிரகாச அடிகளை வழியிலே சந்தித்தனர். கற்றாரைக் கற்றார் காமுறுவரல்லரோ? சாந்தலிங்கர் பாலையசுவாமிகளது சிறப்பைக்கூறித் தாம் அச்சுவாமிகளைத் தரிசிக்கும் பொருட்டுச் செல்வதை அடிகளுக்கு அறிவித்தார். சாந்தலிங்கர் அடிகளோடும் பொம்மபுரஞ் சென்று சுவாமிகளைத் தரிசனஞ் செய்து மீண்டனர். ஞானுசிரியரது திருவுளக் கருத்தின்படியே சிவப்பிரகாச அடிகளது தங்கையை மணந்து இல்லற நடாத்தி யிருந்து பின்னர், துறவுபூண்டு திருப்போரூரிலே சிவலிங்க ஐக்கியமாயினர்.

இவருடைய சீடர்களில் முதன்மையானவர் குமாரதேவர் என்ற ஒரு பெரியார். அவரால் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் சீடராயினர். பின்னவர் தமது குருவாற் செய்யப்பட்ட நூல்

களுக்கெல்லாம் விரிவான உரை வகுத்திருக்கின்றனர். சாந்தலிங்க சுவாமிகள் எழுதிய நூல்களாவன :

1. வைராக்கிய சதகம். இஃது ஐம்பது திருவிருத்தங்களும் தோத்திரமாக 50 திரு விருத்தங்களையும் உடையது. சிவபிரானிடத்து வைராக்கியங் கொண்டு அன்பு பூணவேண்டுமென்று கூறுவது. 'விமலனுக் காளல்லார் பொருப்பை நேர்தனஞ் சொரியினும் அவர்கண் ஓர் புன்னுனித் துணையன்புந் திருப்பிடேல்' என்பர்.

2. வைராக்கிய தீபம். காப்புள்பட நூற்றொரு செய்யுள் கொண்டதொரு நூல். இல்லறத்தில் ஞானம கைவரப்பெறமாட்டாது ; துறத்தலே பேரின்பமடையும் வழி என்று வற்புறுத்திக் கூறுவது.

3. அவிரோத வுந்தியார். இதுவும் நூறு செய்யுட்களையுடையது. சமய நூல்களுக்கு விரோதமின்றிக் கூறியதால் அவிரோத வுந்தியாரெனப் பெயர் பெற்றது. உந்தீபற என்ற மகுடத்தை யுடையது.

4. கொலைமறுத்தல். இது 22 திருவிருத்தங்களையுடையது. எச்சாதியினரும், எச்சமயத்தினரும் கொலைபுரிதல் ஆகாதென்று கூறுவது.

நெஞ்சுவிடு தூது இவர் செய்தலாக்க் கூறுவாருமுண்டு[1]. அதற்குப் போதிய ஆதாரமிலலை. இவர் சிவப்பிரகாச அடிகளது மைத்துனராகவே இவரது காலம் சிவப்பிரகாசஅடிகள் வாழ்ந்த காலமாகவே கொள்ளுதல தவறாகாது. ஆயினுமஇவர் பிற்காலத்தே துறவு பூண்டு அவருக்குப் பின்னும வாழ்ந்தவராவார்.

---

23. அமிர்த கவிராயர்.

மதுரை ஜில்லாவிலே சிவகங்கை தாலுக்காவிலே பொன்னுங்கால் என்றோர் ஊருளது. அவ்வூரிலே பிறந்தவர் அமிர்த கவிராயர் என்ற பெரியார். இவர் வேளாணகுடியைச் சார்ந்தவா, சைவ சமயி. தக்க ஆசானையடுத்துக் கல்வி பயின்றார். இவர் தக்க பருவ காலத்திலே இராமநாதபுரம் சீமையை யாண்ட இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்வான் ஆனார்.

அக்காலத்திலே சேதுநாட்டைப் பரிபாலித்து வந்தவர் தளவாய் சேதுபதி என்ற சடைக்கத் தேவரின் தங்கை பிள்ளையான திருமலை சேதுபதியாவர். இவர் கி. பி. 1646 முதல் 1672 வரை

1. தமிழ் இலக்கிய வாலாறு. 459.

அரசாண்டார். இவர் நல்ல கல்வியார். கானலோலர். புலவர் பலரையாதரித்தவர். 'அரசனும் ஆஸ்தான வித்வான்களும் ஒரு நாள் மாலைப்பொழுது உய்யான வனத்திலிருந்தபோது அரசன் புலவர்களை மனோரம்மியமான பற்பல பாடல்களைச் சொல்வித்துக் காலங் கழித்துக்கொண்டிருக்கையில், அகப்பொருளைப் பற்றி வார்த்தை நிகழ்காலத்து, அரசன் தன்னெதிரிலிருந்த புலவர்களை நோக்கி, அகப்பொருட்டுறையுள் ஏதேனுமொன்றில் பல பாடல் செய்யவல்லீரோ என்றுகேட்க, அவருள சிலர் ஒரு துறையிலே, பத்து, இருபது, முப்பது பாடல் செய்வோம என்றார்கள். அமிர்த கவிராயர் நான் நூறுபாடல் செய்வேன்' என்றார். மற்றப் புலவர்கள் இவர் சொன்னதை வேறுவிதமாகச் சிரறுத்து நானூறு பாடல் செய்வேன் என்று சொன்னதாகத் தர்க்கிக்கவே, இவர் 'இதற்கென்ன, இவ்வளவு பேராட்டம; நானூறுஞ்செய்வேன், அதையும் ஒரு பக்கத்தில் எழுதிமுடிப்பேன்' என்றார். கவிராயர் எவ்வாறு எத்துறையில் பாடப்போகிறாரோ என்று யோசித்துக்கொண்டிருக்கையில் 'நாணிக்கண்புதைத்தல்' என்ற துறையில் நானூறுசெய்யுள் குறித்ததவணையிற் பாடிவந்து அரசசபையில் அரங்கேற்றினார். பாட்டினுடைய இனிமையை யறிந்த அரசன் ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு பொன்னாலான தேங்காய் உருட்டினான் என்று கூறுவர். இக்கோவையின் பொருட்டுப் பொன்னுங்கால் என்ற ஊரை முற்றூட்டாகக் கொடுத்தாரென்றும், அவ்வூர் இன்னும் அவருடைய கால்வழியில் உளதென்றுங் கூறுவர்.

இந்நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் முதலிரண்டடிகளில் அரசனுடைய பெருமையுஞ் சிறப்பையுங் கூறிப் பின்னிரண்டடிகளில் அகப்பொருளும புறப்பொருளும தோன்றும்படிக் கூறுவர். இவரது காலம் திருமலை சேதுபதியின் காலமாகவே, இவர் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராவர்.

---

24. கடிகை முத்துப்புலவர்.

கடிகை முத்துப்புலவர் என்பார் பாண்டிநாட்டிலே எட்டையபுரத்திலே பிறந்தவர். எட்டையபுரம் சமஸ்தானம் அன்றுபோல இன்றும் புலவர் பலரை ஆதரிக்குமிடம். முத்துப்புலவர் சாதியிற் கம்மாளர். கடிகை என்பது குடிப் பெயர். இவர் பலரிடத்தும கல்விபயின்று மிக்க தேர்ச்சி பெற்றவர். சங்கீதக்கலையிலும் வல்லவர். எட்டையபுரம் சமஸ்தானப் புலவராகஇருந்து வேங்கடேசுர எட்டப்பதுரைமேல் பல பாடல்களும் சமயோசித செய்யுட்களும்

செய்திருக்கின்றார். பேசும் பேச்சிலேயே கேட்போரை மகிழ்விக்குங் குணமுடையவர். ஒருகால் மனைவியின் திவசத்துக்கு அரிசி வாங்கிக்கொண்டு வந்தார். வழியில் கண்ட ஒருவர் 'அது என்ன' என்றபோது 'தலைவிதிவசம்' என்றனராம். 'இது தலைவி திவசம்' எனவும் 'தலை விதி வசம' எனவும் பொருள்படுதல் காண்க. இவர் இறக்குந்தருவாயில் பிள்ளைகள் அழ ஆரமபித்தனராம். 'எட்டப்பன் இருக்கும்போது ஒரப்பனுக்கு அழாதீர்' என்றனராம் எட்டப்பன் என்பது எட்டயபுரத்தரச ரெனவும் எட்டுத்தந்தை எனவும் பொருள்படும். இவ்வாறே இருபொருளாம்படிபேசுவதோடு நிலலாது பாக்களும் அவ்வாறே பாடுவர். இவர் பாடிய தனிக்கவிகள் பலவாம். எட்டையபுரத்துச் சமஸ்தானதிபதிமேல் சமுத்திர விலாசமும், காமரசமஞ்சரியும் பாடி யிருக்கின்றார். தென்பாண்டி நாட்டிலுள்ள திருப்புடைமருதூர் என்னும் திருவிடைமருதூருக்கு ஓர் அந்தாதி பாடினர்.

ஊற்றுமலை ஜமீன்தார் மருதப்ப தேவர்மேல் மதனவித்தார மாலை என்ற நூலைப் பாடிச் சன்மானம் பெற்றார். சிவகிரி ஜமீன்தாரர் வரகுணராம வன்னியனார்மேல் திக்குவிசயம் எனனும நூலையியற்றிச் சன்மானம பெற்றார். இவைகளையன்றிச் சங்கீத சம்பந்தமாக ஏழு பருவமாதர்களையுங் குறித்து ஒரு சிந்து பாடியுள்ளார். இவரது கல்வியின் நிறைவு கண்ட உமறுபபுலவரின் தந்தையார், வாணிபத்தின் பொருட்டு வந்தவர், தமது புதலவனைக் கல்வி பயில விட்டுச் சென்றார் என்பர் அறிந்தோர்.

இவருடைய காலத்தைத் திட்டமாகக் கூறுவதற்குரிய சாதனங்கள் இல்லை எனினும உமறுபபுலவர் இவரது சீடராகவே முத்துப்புலவர் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில வாழ்ந்தவரென உறுதியாகக் கூறல் தகும்.

சமுத்திர விலாசம்

உள்ள திருக்கை காணீரே யுறங்கா திருக்கை காணீரே
ஓசைக் கடலைப் பெருமலையே யொழியேன் விரகப் பெருமலையே
கள்ள ருதாங் குவளைகளே கழலுங் கரத்தாங் குவளைகளே
கரையிற் படராத் துப்பீரே மலந்த துடலத் துப்பீரே
அள்ள லளையுங் களிக்கரையே யழைப்பார் மாதக் களிக்கரையே
ஆறு வகுப்புக் காற்றேனே யாழி புடைப்புக் காற்றேனே
வெள்ள மூரும் பானத்தே விரும்பா திருந்தேன் பானத்தே
வெங்க டேசு ரெட்டனையே மேவத் தடுக்கு மெட்டனையே.

25. நடராசர்.

உலகிலே மக்கள் தமக்குப் பின்வரும் காரியங்களை முற்கூட்டி அறிவிக்க வல்லாரிடத்து முழுநம்பிக்கை கொண்டு மயங்குவது இயற்கை. அவ்வாறு முற்கூட்டிச் சொல்வதைச் சோதிடம் என்பர். சோதிடம் கூறுதற்கு அடிப்படையாக நிற்பது சாதகம். சாதகம் என்ற வடசொல்லுக்குச் சனனம், பிறப்பு என்பன பொருள். ஒருவன் பிறந்தபோது நவக்கோள்கள் நிற்கும் நிலையைக் குறிக்கும் சக்கரத்திற்கும் சாதகம் எனப் பெயரிட்டனர். அச்சாதகத்திலுள்ள கோள்நிலைகளைக் கொண்டே பின் உண்டாகும் நலக் பொலங்களைக் கூறுவர். இப்பலங்களைக் கூறும் நூல்களை வடமொழியிலும் தென்மொழியிலும் பலவாம். அவற்றில் தமிழில் ஆனது சாதகாலங்காரம் என்று நூல். இந்த நூலை இயற்றியவரே நடராசர் என்பவர்.

நடராசர் தென்னுர்க்காடு ஜில்லாவிலுள்ள கீரனூர் என்ற ஊரிலே பிறந்தவர். தந்தையார் சேவடிநாதன் எனப் பெறுவார். இவர் பெரு வள்ளலெனப் போற்றப் படுகின்றூர். தந்தை மகற்காற்றும் நன்றி கல்வி கற்பித்தலன்றே? அவ்வாறே தந்தையாரும் நடராசரை வடமொழியிலும் தமிழிலும் தக்கவாறு பயிற்றுவித்தார். தனயனும் சலிப்புருது கல்வி பயின்றூர். அதன் பயனுக அவரது அறிவு சோதிட சாஸ்திரத்திலே சென்றது. அச் சாஸ்திரத்திலே அக்காலத்தில் வல்லவர்களா யிருந்த வதிட்டைகுடி யென்னுந் திட்டகுடியில் வாழ்ந்த சாமவேத பாரகர் திருமலை ஐயங்கார், அவர்தம இளவல் நாராயணையங்கார், கீழ்முத்தூர் நாராயணையர் இவர்களிடம் சோதிட சாத்திரத்தைக் கற்றூர். தாம் கற்றதைப் பிறரும் அறியவேண்டுமென்ற அவாவினுல், சோதிடப்பலன் முதலாயவைகளைத் தமிழ்ச் செய்யுள் வடிவிற் செய்து கி. பி. 1665-ல் அரங்கேற்றினுர் இச்செய்தியை அவரே,

> விளங்கியதோர் சகாத்தமா யிரத்தைந்நூற் றின்மேல்
> மேவெண்பத் தேழுவிசு வாவசுவா மாண்டில்
> களங்கமிலா வடமொழியைத் தான்றெரிந்து கண்டு
> காசியினிற் சாதகா லங்கார மெனவே
> வளங்குலவும் புகழ் பெறுநற் கீரனூர் வாழும்
> வள்ளல்சே வடிநாதன் வரவருவாய் வந்தோன்
> உளங்களிகூர்ந் தருள்ஞான யோகநட ராசன்
> உரைத்ததனிப் பொருளுணர்ந்தோர்க் குண்மைதருந்தானே

என்று கூறியிருக்கின்றூர்.

இச்சாதகாலங்காரத்தைத் தவிர வேறு நூல் இவர் செய்த தாகத் தெரியவில்லை. இந்நூல் சுபம், அரிட்டம், ராஜயோகம், அம்சம், நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் இவைகளாலுண்டாம் பலன்கள் முதலாயவை கூறும். இது பாயிரம் உட்பட 1445 திருவிருத்தங்களை யுடையது. சாதகத்தாலுண்டாம் நன்மை குறித்து இவர் பின்வருமாறு கூறுவர்.

குறித்திடுசா தகமென்ப தவரவர்தம் வினையின்
குணங்களறிந் தயன் விதித்த கொள்கையுள தன்றே
மறித்துமவ ரவர்தமக்கு வரும்பலபா வகத்தின்
வகையறிந்து பெரியோர்கள் வழுத்தியசொல் லதனைப்
பிறித்தறிந்து சுபம்வருமென் றுளமகிழ்ச்சி பொங்கப்
பின்னசுபம் வரிலதற்குப் பரிதியென்கொ லென்று
நெறிதரும சாத்திரத்தின் விதிசாந்தி செய்தே
நிறைந்தசுபம் பெறுவதற்கே நிகழ்த்தினர் சாதகமே.

நடராசர் சாதகாலங்காரத்தைச் சகம் 1587க்குச் சரியான கி. பி. 1665-ல் இயற்றினாராகவே, இவரது காலம் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யெனக்கொள்ளலாகும்.

26. சதாசிவ தேசிகர்.

சதாசிவதேசிகர் என்பார் இலக்கணவிளக்கம் முதலாய நூல்களை யியற்றிக் கவியரசாய் விளங்கிய வைத்தியநாத தேசிகரின் மூத்த புதல்வர், திருவாரூரார். தம் தந்தையாரிடம் கல்வி பயின்றவர். பல நன்மாணுக்கருக்குப் பாடங் கற்பித்தவர். இவருடைய தந்தையார் தம் மாணுக்கரான படிக்காசுப் புலவர் சதாசிவதேசிகரைக் காணச் சென்றபோது மாணுக்கர்கள் அண்மையிலுள்ள காட்டில் தூதுளங்காய் பறித்துக்கொண்டு யாப்பருங்கலக் காரிகையை மனப்பாடஞ் செய்துவந்தனர். இதனைக் கேட்ட அப்புலவர் கூடுஞ்சபையின்... .....கற்றதுவே[1]" என்று துதித்து வழிபட்டு அளவளாவி மகிழ்ந்தார் என்ப. சதாசிவ தேசிகர் செய்த நூல்கள் இப்பொழுது தெரிந்திலவாயினும் இலக்கணவிளக்கத்திலே சிறப்புப் பாயிரங் கூறிச் சொல்லணி இலக்கணமுந் தற்பவந் தற்சமந் தேசியமாகிய மூவகைச் சொற்களிற்பட ஆராய்ந்து கூறினர். இதுவே அணியியலெனப் பெயர் பெறும். இவருடைய காலம் படிக்காசுப் புலவரது காலமாகவே, பதினேழாம் நூற்றாண்டின் கடைப்பகுதி எனக் கொள்ளலாம்.

1. முன் 71-வது பக்கம் பார்க்க

27. படிக்காசுப் புலவர்.

சான்றோர் பலரையுடையதென்று கூறப்படும் தொண்டை நாட்டிலே களத்தூர் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரைப் பொன் விளைந்த களத்தூர் என்றும் பொற்களந்தை[1] யென்றும் கூறுவர் அறிந்தோர். அவ்வூரிலே ஒருயர் குடியிலேயுள்ள ஒருவருக்கு ஓர் ஆண்மகவு உண்டாயிற்று. அப்பிள்ளைக்குப் படிக்காசன் எனப் பெற்றோர் பெயரிட்டனர். அப்பிள்ளை உரிய பருவத்தே கல்வி பயிலத் தொடங்கிற்று. சிறிது காலத்திற்குப் பின்னர் பெற்றோர் தகுதியான ஆசான் யாரெனத் தேடினர். இலக்கண விளக்கம் முதலாய நூல்களைச்செய்த வைத்தியநாத தேசிகர் சிறந்த கல்விமானெனச் சொல்லக்கேட்டனர். அப்பொழுது தேசிகர் மயிலம் முருகன் பிள்ளைத்தமிழும், சிவஞான பாலையர்மீது பாசவதைப் பரணியும் பாடி அரங்கேற்றிய காலம். அவரிடம் கல்விபயிலுமாறு செய்தனர். தேசிகரும் படிக்காசரை யேற்றுப் போதிய கல்வி பயில்வித்தனர்.

படிக்காசர் செங்குந்த மரபினர் என்றும், இவரது இயற்பெயர் இன்னதென விளங்கவில்லை யென்றும் சிலர் கூறுவர். இவர் பிற்காலத்தில் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற் சந்நியாசம் பெற்றுத் துறவுபூண்டமையே இவர் வேளாண்குடியிற் சைவமரபிற் றோன்றியவரென்பதும் படிக்காசனெனவே யாண்டும் வழங்குவதால் பெயர் அதுவே யென்பதும விளங்கும்.

கல்விநலம் கைவரப்பெறவே வல்லையென்ற ஊரிலுள்ள காளத்தி முதலியாரை யடுத்து அவர்மேல் பல கவிகளைப் பாடினார். காளத்தி முதலியார் என்ற பிரபு மிக்க ஆனிரைகளையுடையவர். பெருவள்ளல். அவரைப் பாடவே அவர் வேண்டிய பசுக்களைத் தந்தார். அதனைச்சுட்டி

வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனை யாளைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பசிரெனுஞ்சொல்
மொழியாம லென்னை வரவிட்ட பாவை முசித்துச்சதை
கழியாம லாவளித் தாய்வல்லை மாநகர்க் காளத்தியே

என்று சிறப்பித்தார். இக்காளத்திப் பிரபு இவரது பெருநட்பினராகவே யிருந்தாரென்பது தாம் பாடிய தொண்டை மண்டல சதகத்திலும் கூறிய

கொல்லையிற் பாற்பசு மேய்ப்போன் கறப்பவன் கொண்டுசென்றே
யெல்லையிற் சேர்ப்பவன் பாலடு வோனிவை யித்தனையுஞ்

1. இவ்வூர் செங்கற்பட்டு ஜில்லாவில் ஒத்திவாக்கம் இரயில்வே நிலையத்திற்கு அண்மையிலுள்ளது.

சொல்லையிற் பாவல ரேரோர் கவிசொல்லச் சொல்லநல்கும்
வல்லையிற் காளத்தி வாழ்வானதுந் தொண்டை மண்டலமே

என்ற 52-வது செய்யுளால் விளங்கும்.

புலவர் தேன்றேச யாத்திரையாகப் புறப்பட்டுச் சிதம்பரம் முதலான தலங்களைத் தரிசித்துக்கொண்டு சென்றார்.

புதுக்கோட்டைச் சீமையென்று இப்பொழுது வழங்கும் பகுதியிலே வைத்தூர் என்று ஓரூர் உளது. அதனையும் அதனைச் சுற்றிய நாடுகளையும் பல்லவரையர் என்ற பட்டமுடைய சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். அந்த நாட்டை அப்பொழுது ஆண்டு வந்தவர் சிவந்தெழுந்த பல்லவரையர். இவர் கி. பி. 1681 முதல் 1686 வரை அரசாண்டார். நல்ல கல்வியர். பெருங்கொடையாளர் இவ்வரசரைப் படிக்காசுப்புலவர் கண்டு அவர்மேல் உலாவும் பிள்ளைத்தமிழும் பாடினர். இவை அவரது அவையிலே அரங்கேற்றமடைந்தன. சிவந்தெழுந்த பல்லவரையரும் வேண்டிய சன்மானங்களைச் செய்தார். இதனைப் பாராட்டிப்

பாடுந் தமிழ்க்குச் சிவந்தெழுந்தான் மல்லைப் பல்லவர்கோன்
காடுஞ் செடியுந் திரியா திரட்டைக் கடுக்கன்செய்து
போடும் பொழுதென்ன பூட்டகமோ வற்பப் புல்லரைக்கொண்
டாடும் பொழுதிரு கன்னத்தி லேநின் றடிக்கின்றதே

என்று பாடினர். இவரை வேறோரிடத்தில் 'வல்லைச் சிவந்தெழும் பல்லவன்தன் கருணைமாரிபோல' என்று பெருமையோடுபேசுவார்.

இவ்வாறு பல்லவனால் சன்மானிக்கப்பட்ட பின் தெற்கே மதுரை சென்று மீனாட்சியம்மையையும் சொக்கலிங்கப்பெருமானையும் தரிசித்துப் பாடித்துதித்தனர். பின்னர்த் தெற்கு நோக்கித் திருநெல்வேலி முதலான இடங்களைத் தரிசித்துக்கொண்டு திருச்செந்தூர் சென்று செந்திற்பிரானை வணங்கித் தோத்திரமும் நிந்தையுமாகப் பின்வருமாறு பாடினர்.

முன்ன நின்னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச் சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாளல்ல வேயெனைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் றானோ செந்தூரி லிருப்பவனே.

முற்கரை யப்பரை யேறவிட் டாட்கொண் முதல்வருள்ளக்
கற்க ரைக்கும்படி போதித் திடுங்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை யெங்கெங்குந் தித்திக்குஞ் செங்கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந் தூரெனுந்தானத்திலே

சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னின் மணிப்பிள்ளை பூலோக மெங்கும் புகழும்பிள்ளை
சொன்னஞ் சுழல்கின்ற சூரனை வென்றசொக் கேசர் பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற் குறத்திக்கு மாப்பிள்ளையே.

கல்லடிக்கு முளியிரண்டு காதடிக்கு ளடிப்பதெனக் கவிதை கேட்டுப்
பல்லடிக் கக்கிடுகிடெனப் பறையடிக்கு நெஞ்சர்தமைப் பாடுவேனோ
வில்லடிக்கும் பிரம்படிக்குங் கல்லடிக்கும் விரும்பிநின்ற மெய்யனீன்ற
செல்லடிக்குந் தடவரையிற் சேறடிக்க வலையடிக்குஞ் செந்திலானே.

செந்தினின்றும் திரும்பி வரும்போது திருநெல்வேலிச் சீமையிலே காரியகர்த்தராக இருந்தவரும் மாதைத் திருவேங்கட நாதையரது புத்திரருமான மாதை வேங்கடேசுவர ஐயரால் பெரிதுஞ் சன்மானிக்கப்பட்டார். இருவருக்கும் ஆசிரியர் ஒருவரே. அதனால் அவர்களது நட்புப் பெரிதும் வளர்ந்தது. வேங்கடேசர் செய்த சிறப்பைக் குறித்துப் பிறிதோரிடத்தில் 'மாதைவேங்கடேசுரன்போல் வரிசை செய்தா'னென்பர். அவரைவிட்டு நீங்கித் தம் குருவின் மூத்த புதல்வரான சதாசிவ தேசிகர் அந்நாட்டிலிருப்பதை யறிந்து அவரைக் காணச்சென்றார். தேசிகரது சீடர்கள் காட்டில் தூதுளங்காய் பறிக்கையிற் காரிகையைப் பாராயணஞ் செய்வதைச் கேட்டுச் சென்று அவரைக் கண்டபோது [1]'கூடுஞ் சபையிற்.. ....தமிழ்க்காரிகை கற்பதுவே' என்று பாடித் துதித்தார். அவரோடு அளவளாவியிருந்து ஊர்நோக்கிப் புறப்பட்டார்.

புதுக்கோட்டையிலே புதுராச்சியம் ஏற்பட்டிருப்பது கேட்டு அங்குச்சென்றார். அந்தக் காலத்திலே புதுக்கோட்டையை யாண்டு கொண்டிருந்த அரசன் பஞ்ச கலிகால பயங்கரன் என்ற பட்டந் தரித்திருந்தான். அவனுடைய இயற்பெயர் ராயதொண்டைமான். அவனுடைய அவையிலே கும்பனென்ற புலவனிருந்தான். அவன் திருக்குடந்தை யென்னும் கும்பகோண வாசி. சாதியிற் கொல்லன்; இறுமாப்புடையவன். இப்புலவனுக்கும் படிக்காசருக்கும் சச்சரவுண்டாயிற்றென்று தெரிகிறது. அதன்முடிவு அறிதற்கில்லை. ஆயினும் படிக்காசர் அவ்வூரைவிட்டு அக்காலத்திலே புலவர்கட்குப் புகலிடமாக இருந்த அரியலூர் சென்றார்.

அரியலூர் மழவரங்க பூபன் என்ற பட்டமுடைய தலைவர்களால் ஆளப்பட்டு வந்ததென்று முன்னர்க் கூறினோம். அஃது ஒரு பாளையப்பட்டு. படிக்காசர் அரியலூர் வந்தபோது அவ்வூரை யாண்டவன் இலட்சுமண ரங்க மழவபூபன் என்பர். குமார ஒப்

1. பக்கம் 71 பார்க்க.

பிலாதானுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் இலட்சுமணன். இவனுக்குப்பின் ரங்கப்ப மழவன் பட்டத்துக்கு வந்தான். குடந்தைக் கும்பனும் இப்புரவலனை அறிவன். படிக்காசர் அரியலூர் போயிருக்கின்றாரென்று கும்பன் கேட்டவுடனே, தான் படிக்காசரை அவமானப்படுத்தியதாகவும், அரியலூரில் படிக்காசருக்கு மரியாதை செய்யவேண்டுவதில்லை யென்ற கருத்துத் தோன்றும் படியாகவும்,

கொஞ்சுகவி யானையை வசைக்கவி யெயிற்றினாற் குகவி யுயிரான் மருட்டும்
குடிலகவி ராஜசிங் கங்களைப் பங்கஞ்செய் கும்பசர பத்தி னாலே
செஞ்சிவிஜ யாபுரிக் கோட்டைக் கபாடந் திறக்குங் களிற்று வேந்தன்
திறல்கொண்ட லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை செயசௌர்ய னினிதுகாண்க
வஞ்சியர்க ளிதயமுங் கொஞ்சுபுரவி யின்மனமும் வல்லகவி ராசர் மனமும்
மகிமைபெற மூர்த்திக்கு மறிவரிது நின்சமுகம் வருமு னேயறி சதுரனீ
பஞ்சகவி காலப் பயங்கரன் தொண்டையான் பதியிலவ மான மாக்கிப்
பஞ்சலட் சணமெனுங் கசைகொண் டடித்துப் படிக்கனை முடுக்கி னோமே

என்று ஒரு சீட்டுக்கவி யெழுதியனுப்பினான். இதனைக் கற்றுச் சொல்லிகள் மூலமாக அறிந்த படிக்காசரும்

கொல்லத் தமிழ்க்கவி செலுத்திவாய் வீண்பெற்ற கும்பனெனு மொருதந்தியைக்
கொத்தியுண் டுமிழண்ட பேரண்ட மென்னவரு கூர்படிக் காசனாலே
வல்லைச் சிவந்தெழும் பல்லவன் றன்கருணை மாரிபோலே வழங்கும்
வாழ்வைக் கெடுக்கவரு தென்குடந்தைப் பதிக்கொள்ளி வாய்ப்பேய் களல்ல
புல்லத் துரைத்தன ரெனும்பனியி னிடையிலே புகுபரி திசிக ரென்னவே
புகழ்கொண்ட லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை பூபனெதிர் கொண்டுகாண்க

*　　　　*　　　　*

உன்பேரி லபசார முண்டுனைத்துதி செய்யவெனை வரவழைத்திடுவாயே

என்று ஒரு சீட்டுக்கவி எழுதியனுப்பினார். இவரது ஆற்றலையும் பாட்டின் எளிமையையும் அறிந்த ரங்கப்பமழவன் இவரைத் தகுந்தபடி ஏற்று உபசரித்தான். ஆயினும் தகுந்த பரிசளித்தானல்லன். புலவர் அதனால் வெறுப்புற்று அவனைப் பின்னும் புகழ்ச்சியு மிகழ்ச்சியுமாக,

கனத்தசிராப் பளிதனிலே வடுகர்கூத்து
　　கட்டியாளு வதாச்சுத் தஞ்சா வூரோ
முனைத்த மராட்டியக்காடு மிஞ்சிப்போச்சு
　　முனையும்போம் மூக்கும்போம் மைசூர்போச்சு
பினற்றுறையூர் காய்ச்சலாம் வடதேசத்தார்
　　பேய்த்துலுக்க ருடையாரோ கவிதைகேளார்

இனித்தமிழுக் கரியலா ரென்றிருந்தோ
மிங்குஞ்சம்பளங் குறைந்தாலென் செய்வோமே

என்றொரு செய்யுளைக் கூறினர். இப்பாட்டைக் கேட்டு மகிழ்ந்த மழவரங்கபூபன் கனவரிசை தந்தான். அவ்வூரினின்றும் புறப்பட்டுக் கொங்குநாடு சென்றார்.

அந்நாட்டிலே கோயம்புத்தூருக்கு வடக்கில் பதினெருகட்டை தொலைவில் கவசை யென்று ஓரூர் உளது. அவ்வூரிலே மசக்காளி மன்றாடி என்ற பிரபு ஒருவரி விருந்தார். இவர் பெருங்கொடைவள்ளல். திருச்செங்கோடுடைய பெருமானுக்குப் பல திருப்பணிகள் செய்திருக்கின்றார். அவற்றைச்சுட்டி,

வேலை சூழ்பணி மாமலைவேலரும் விமலரும் மகிழ்வெய்தச்
சீலமா கியோ ரைம்படி யரிசியுஞ் சிலகறி பருப்போடே
மாலை காவிரி மஞ்சனமுந் தீபமும் மனமிகு தயவாகிப்
பாலை சேர்மசக் காளிசெங் கோடரைப் பணிந்திவையளித்தானே.

என்பது திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை. பிரபுவினது பெருமையைக் கேட்டு அவ்வூர் சென்றார்; பிரபுவைக் கண்டார். அப்பிரபுவினது சமூகத்திலே புலவர் பலர் இருந்தனர். இவரது பெருமையைப் பொறாத அப்புலவர்கள் பிரபுவின்மேல் ஒரு வண்ணம் பாடுவதென்றும் தோற்றவர்கள் வென்றவருடைய சொற்படி நடப்பதென்றும் முடிவுகட்டிக் கொண்டனர்.

அப்புலவர்களெல்லாஞ் சேர்ந்து படிக்காசர் தோற்றதாகக் கூறி இவரது பல்லக்கு முதலிய விருதுகளைப் பிடுங்கிக்கொண்டனர். அச்செய்கையைக் கண்டு மனம் பொறாத படிக்காசர்

அஞ்சாலி மக்களுஞ் சாணரும் பாணரு மம்பட்டருஞ்
செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களுஞ் செந்தமிழைப்
பஞ்சாகப் பன்னி யொருகாசுக் கோர்வண்ணம் பாடலுற்றார்
நஞ்சாகப் போச்சுதையோ வென்றமிழ் கொங்குநா டெங்குமே

என்று கூறிவிட்டுத் தமது ஆடை முதலியவற்றைக் கட்டித்தானே சுமந்து சென்றார். இதனைக் கொங்குமண்டல சதகம்

நல்லார் புகழ்மசக் காளி கவசையி னுவினிசை
யெல்லாஞ் சொலிநிலை நில்லாமற் பல்லக் கிரவை பற்றிச்
சோல்லா லுயர்ந்த படிக்காசன் கட்டிச் சுமக்கக்கவி
வல்லா ரடித்துத் துரத்திய துங்கொங்கு மண்டலமே

என்று 85-வது பாட்டுக் கூறும்.

இவ்வாறு மனம்நொந்து வருத்தப்படுபவர் எங்குச் செல்வார்? திவ்யக்ஷேத்திரமான திருச்செங்கோடு சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் உமைபாதியனைப் பாடினுர். மனத்திற்கொண்ட வருத்தமுங் கவலையு மொழிந்தன.

அண்மையிலுள்ள மோரூர் என்ற ஊரில் சைவநலமும் சிவநேசமுமிகுந்த குமாரசாமிக் காங்கேயன் என்றொரு வேளாள குலதிலகர் இருந்தார். அவர் படிக்காசுப் புலவரது பெருமையைக் கேட்டு அழைத்து வந்து உபசரித்தார். அப்பொழுது புலவர் அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் பாம்பலங்காரர்மீது வருக்கக்கோவை பாடி யரங்கேற்றினுர். அதனை யரங்கேற்றுவித்த செல்வச் சீமனை குமாரசாமிக் காங்கேயர் பல வரிசைகளுமிட்டுத் தந்தச்சிவிகையுங் கொடுத்துப் பெருமைப்படுத்தினுர். இச்செய்கையைச் சுட்டி,

> அந்திப் பிறைச்சடை யாரர வாசல ராலயத்திற்
> கந்தப் பிரான்கதை கற்சிலை யாலமை காங்கேயரில்
> விந்தைப் புயக்கும ரேந்திர வேந்து வியந்தெமக்குத்
> தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் தாங்கினனே[1].

என்று புலவர் பாடிப்புகழ்ந்தார். பின்னர் தமதூரான பொற்களந்தை சென்றுர். களந்தைக்கு அணித்தாக உள்ள மாவண்டூர் என்னும் மாவையில் வாழும் கறுப்ப முதலியார் என்ற பிரபு தொண்டை நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டவல்ல நூலொன்று செய்துதரும்படி வேண்டினுர். அவருடைய வேண்டுகோளின்படி தொண்டை மண்டல சதகம் என்ற நூலைச்செய்தார். பிரபுவாகிய கறுப்ப முதலியார் புலவரைப் பெரிதுஞ் சன்மானித்ததோடு பல்லக்கு முதலாய விருதுகளையும் கொடுத்து வீதிவலஞ் செய்வித்தார். அதனோடு நில்லாது தாமுந் தம்பிமாரும் புலவரது பல்லக்கையுஞ் சுமந்தனர். இவ்வரிய செய்தியைச் சுட்டி,

> எல்லப்ப னம்மையப்பன் தருதிருவேங் கடநாத னெழிற்சீராமன்
> வல்லக்கொண் டையன்மாதை வேங்கடே சுரன்போல வரிசை செய்தான்
> செல்வத்தம் பியருடனே கத்தூரி மகன்கறுப்பன் தெருவீ திக்கே
> பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ ராயிரம்பொற் பரிசு தானே

என்று வியந்து பாடினுர்.

பின்னெருகால் சேதுபதி வேந்தரைக் காணவிரும்பித் தம்மூரினின்றும் புறப்பட்டுச் சென்று கடல் மார்க்கமாகச் சேது

1. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை.

நாடடைந்தார். அக்காலத்திலே சேதுபதியாக இருந்தவர் கிழவன் சேதுபதி என்ற இரகுநாத சேதுபதி. இவர் கி. பி. 1678 முதல் 1710 வரை அரசாண்டார். இவரே புதுக்கோட்டையையும் பல்லவரையனது நாட்டையும் தமது மைத்துனனான ராயதொண்டைமானுக்குக் கொடுத்தவர். சேதுபதியைக் காணச்சென்ற புலவர் அவரைக் காணுமுன் தமது கற்றுச்சொல்லிகள் மூலமாய்

விருதுகவி ராசன்க விச்சக்ர வர்த்திவாய் வீண்பேசு வார்கள் மிண்டன்
விஞ்சையர்பி ரான்பொற் களந்தைப் படிக்காசு விவரமுட னெழுது மோலை
பொருவில்பிர பந்தமதி விலகுகவி சேகரன் புகழ்செய் தளவாய் குமாரன்
பூச்சக்ர மன்னர்பணி ரகுநாத சேதுபதி பூரித் தெழுந்து காண்க
பரிதிமதி யுள்ளளவு நிற்கும்ப்ர பந்தகவி பாடிநின் கீர்த்தி கேட்டுப்
பஞ்சலட் சணமொடு தமிழ்க்காணிக் கைகொண்டு பரிவாக வுனை நாடியே
இருபதின் காதவழி கடலேறி வந்தன மிருந்தமிழ்து கொள்ள வேண்டி
இந்நேர மேநம்மை யிருகாத வழியளவு மெதிர்கா ணவரல் வேண்டுமே

என்றொரு செஞ்சொலமைந்த கவியை யெழுதியனுப்பினார். செந்தமிழைப் புரக்கும் வள்ளலான சேதுவேந்தர் பாட்டினினிமையையும் வேண்டுகோளையும் வியந்து பாராட்டித் தமது பரிசனரில் தக்காரை யனுப்பிப் புலவரை எதிர்கொண்டழைத்து வருமாறு செய்தார். சென்ற புலவர் சேது மன்னரைக் கண்டு

மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே

என்று பாடினார். இதனைக் கேட்ட மன்னர் பெருந்தகை அவருக்கு வேண்டிய சன்மானங்களைச் செய்தார்.[1] அங்கிருக்கும் நாளில கீழ்க்கரையிலிருந்த பெரியதம்பி மரைக்காயர் என்னும் ஷேக்காதர் என்பவர் சீதக்காதி என்ற பேரோடு பெருவள்ளலாக விளங்கித் தமிழ்ப் பாவாணரைப் பெரிதும் போற்றுவதாகக் கேள்வியுற்றார். அவரைக் காணவேண்டிச் சேதுபதி நாட்டிலிருந்து புறப்பட்டார்.

1. முன்னர்த் தம்மை மதியாத கும்பகவி சேதுபதி வேந்தனிடம் வரிசை பெற்றபோது 'ஏதையறிவான் இவனுக்கேன் பல்லக்கு' என்ற தலைப்பையுடைய ஒருவசையைப் பாடியதாகவும், அதற்கு உத்தாரமாக, 'தங்கைக்குத் தான்' என்ற முதலையுடைய ஒரு செய்யுளைக் கூறியதாகவும் வித்வக்காய்ச்சல் மேலிடுவதைக் கண்ட சேதுவேந்தர் புலவரிருவரையும் சமாதானப்படுத்தினதாகவுங் கூறுவர்.

சிவகங்கை சமஸ்தானத்தின் வழியாகச் செல்லுகையில் அச் சமஸ்தானத்தைச் சார்ந்த திருமலைத் தேவரென்பவர் படிக்காசரது ஆடம்பரத்தைக் கண்டு பொறாமைகொண்டு வெறுப்புற்று, அவரை யழைத்துத் தனியறையிலே சிறையிட்டார். அச்சிறைக் குக் கிளிக்கூட்டுச்சிறை யென்பர். இவ்வாறு சிலநாள் செல்ல, ஒருநாள் திருமலைத் தேவர் புலவருடைய நிலை எவ்வாறிருக்கிற தென்று அறியும் பொருட்டுச் சென்று பார்க்கையில், புலவர் அவரை நோக்கி,

நாட்டிற் சிறந்த திருமலையா துங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாயிரை தாவென்று கூப்பிடவே

என்று பாடினார். இப்பாட்டைக் கேட்டவளவிலே மனமிரங்கி அவரை சிறைவிடுத்துப் போகவிடுத்தார்.

புலவர் கீழ்க்கரை சென்று சீதக்காதியைக் கண்டு அவரது வள்ளற்றன்மை, அருமை, பெருமை, ஈகை, புகழ் முதலாய குணங்களைப் புகழ்ந்து இனிமையாகப் பல பாடல்களைப் பாடினார். அவற்றுட் சில வருமாறு :

ஈயாத புல்ல ரிருந்தென்ன போயென்ன வெட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் மால்சீதக் காதி யொருவனுமே.

ஓர்தட்டிலே பொன்னு மோர்தட்டி லேநெல்லு மொக்கவிற்குங்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

நேசித்துவந்த கவிராசர் தங்கட்கு நித்த நித்தம்
பூசிக்கு நின்கைப் பொருளொன்று மேமற்றைப் புல்லர்பொருள்
வேசிக்குஞ் சந்து நடப்பார்க்கும் வேசிக்கு வேலைசெய்யுந்
தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக் காதி தயாநிதியே

சீதக்காதியால் சன்மானிக்கப்பட்ட பின்னர், சிவஸ்தல யாத் திரையாகச் சென்று மதுரை, திருவாரூர், திருவாஞ்சியம், மாயூரம் முதலான க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு தருமபுரமடைந் தார். தருமை யாதீனத்தில அப்பொழுது அங்குச் சித்தாந்த ஞான பானுவாக எழுந்தருளி யிருந்த திருநாவுக்கரசு தேசிகரிடத்தில்

சைவ சந்நியாசம் பெற்றுத் தாங்கொண்டுவந்த பொருள்களைக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். அப்பொருள்களைக்கொண்டு வாங்கிய நிலம் முதலாயின இன்றும் படிக்காசரது பெயர் பெறும்.[1] அங்கிருக்கும் நாளில் புள்ளிருக்கு வேளூர் என்ற வைத்தீசுரன் கோயிற் கட்டளை நிருவாகஞ் செய்யுமாறு கட்டளைத் தம்பிரானாக நியமனமானார். அங்கிருந்து தேவஸ்தான பரிபாலனம் செய்யு நாளில் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் பாடினார். அவ்வாறு சிவத்தொண்டு புரிந்துகொண்டிருந்து சிவபெருமானது திருவடி நீழலை யடைந்தார்.

இவர் சமயோசிதமாகப் பாடுதலில் வல்லவர். முன்னர், திருமலைத்தேவர் சிறையிலடைத்திருந்தபோது அவரை மகிழ்வித்துக் கவிபாடி மீண்டதைக் குறித்தோம். சீதக்காதி இறந்தாரென்று கேட்டபோது மனமுருகிப் பாடிய கையறுநிலை இன்றும் கேட்போர் மனத்தை யுருகும்படி செய்யவல்லது.

தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத் தான்றமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி யவர்கடம் வாயி லொருபிடிமண்
போட்டா னவனு மொளித்தான் சமாதிக்குழி புகுந்தே

என்பதுபோன்ற சில பாடல்களைப் பாடினார். இவரது பாட்டினுடைய தன்மையைச் சுட்டி ஒரு புலவர்,

மட்டாருந் தென்களந்தைப் படிக்காச னுரைத்ததமிழ் வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும் பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந் துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினுடை நளினந் தானே

என்று பாடினார். மற்றொருவர் 'பண்பாய பகர்சந்தம் படிக்காசலாதொருவர் பகரொணாதே' என்று பாடினார்.

படிக்காசுப் புலவருடைய காலத்தைப் பலரும் பலபடியாகக் கூறுவர். சேதுநாடும் தமிழும் என்ற நூல் பதினேழாம் நூற்றாண்டு எனக்கொள்ளுமாறு பொதுப்படக்கூறும். தமிழிலக்கிய வரலாறு கி. பி. 1686-1723 எனக் கூறும். படிக்காசுப் புலவர் சரிதம் என்ற நூல் இற்றைக்கு (1928) 280 வருடங்களுக்கு முற்பட்டவர் என்று கூறும். முதலில் இவரை ஆதரித்த சிற்றரசனை சிவந்தெழுந்த பல்லவரையன் கி. பி. 1686க்குள் கொல்லப்

1. படிக்காசுக்குட்டை, படிக்காசு வயல் என்பன இன்றும் தருமையை யடுத்துள்ள ஊரிலுண்டு.

பட்டமையின் இவரது காலம் அதற்குமுந்தியது என்பது அமையும். அன்றியும் பெருங்கொடை வள்ளலாகிய சீதக்காதி இறந்ததற்கு இவர் மிக மனமிரங்கிக் கையறம் பாடியிருக்கின்றார். சீதக்காதி யென்ற பெரியதம்பி மரைக்காயர் பெயர் கி. பி. 1693ல் ஆங்கில வர்த்தகர்களது சென்னைக் கவர்ண்மெண்டுப் பதிவுகளில் காணப் படுகிறது. அன்றியும் புலவர் பதினேழாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகரின் மாணாக்கர். இவர் கி. பி. 1684 முதல் 1724 வரை அரசாண்ட பெத்த லட்சுமண மழவராயரது புதல்வரான ரங்கப்ப மழவராயரையும் பாடியிருக் கின்றார். அதனால் இவர் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த வரென்று கொள்வது தவறாகாது.

படிக்காசர் செய்த நூல்களில் இதுவரை தெரிந்தவை 1. சிவந் தெழுந்த பல்லவனுலா, 2. சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத்தமிழ், 3. உமைபாகர் பதிகம், 4. பாம்பலங்காரர் வருக்கக்கோவை, 5. தொண்டைமண்டல சதகம், 6. புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்பன. இப்புலவர் சேதுபதிமேல் நூல் செய்ததாகக் கூறியிருக் கிறார். 'பஞ்சலக்ஷணமொடு தமிழ்க் காணிக்கையுங் கொண்டு பரி வாகவுனை நாடியே இருபதின் காதவழி கடலேறி வந்தனம்' என்று கூறுவர். அஃது இன்ன நூலென்று அறிவதற்கில்லை. இவைகளை யன்றி இவர் பாடிய தனிப் பாட்டுக்கள் பலவாம்.

முற்கூறிய நூல்களுள் பாம்பலங்காரர் வருக்கக் கோவை பாடிய வரலாறு மேலே கூறியுள்ளோம். இந்நூல் 600 செய்யுட் களை யுடையது.

உமைபாகர் பதிகம். திருச்செங்கோட்டில் எழுந்தருளி யிருக் கும் அர்த்தநாரீசுரர் என்ற உமைபாகரிடம் தமது குறைகளை விண்ணப்பித்துக்கொள்வது.

தொண்டைமண்டல சதகம். தொண்டைமண்டலத்தில்வாழ்ந்த பெரியோர் பலரது சரிதத்தை மேற்கோளோடு சுருங்கக் கூறு வது. இது நூறு பாக்களைக் கொண்டது.

புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம். இதுவும் நூறு பாக்களை யுடைய சிறு பிரபந்தம். இது மிக்க சுவையுடையது.

படிக்காசுப் புலவர் சோழநாட்டிலுள்ள தண்டலை நீணெறி என்ற ஸ்தலத்துக்குச் சென்று அவ்வூரார் வேண்டுகோட்படி பழ மொழிவிளக்கம் என்னும் தண்டலையார் சதகம் பாடினதாகப்பெரும் புலவர்கள் பலருங் கூறியுள்ளார்கள்[1]. தண்டலையார் சதகம் சாந்த

1. சேதுநாடுந் தமிழும் பக்; 19. படிக்காசுப்புலவர். 61-66.

18

லிங்கக் கவிராயரால் பாடப்பட்டது. அச்சிடப்பட்டுள்ளது. மகா மகோபாத்யாய ஐயரவர்களது கருத்து சாந்தலிங்கக் கவிராயர் செய்ததென்பதே. படிக்காசர் செய்ததாகக் கொள்ளக் காரணமாயிருந்தது தண்டலையார் சதகத்தின் குஜிலிப்பதிப்பாகும்.

---

28. நமச்சிவாயப்புலவர்.

நமச்சிவாயப் புலவர் பாண்டி நாட்டினர் எனத் தெரிகிறது. நல்ல கல்வியர். கீழ்க்கரையிலிருந்த சீதக்காதி என்னும் பெரிய தம்பி மரைக்காயர்மேல் பல பாடல்கள் பாடியிருக்கிறார் என்பதையன்றி வேறொன்றும் அறிவதற்கில்லை. தனிச்செய்யுட்சிந்தாமணி என்னும் நூலிலே மான்விடுதூது முதலியவை இவர் செய்தனவாகக் குறிக்கப்பட்டுள. மான்விடுதூது குழந்தைக்கவிராயர் செய்தது. முத்திருளப்பப் பிள்ளைமேல் பாடிய பாடல்களும் இவர் பாடியவல்ல. இப் புலவர் சீதக்காதியின் மேற் பாடியவற்றுள் இரண்டு பாடல்களைக் கீழே குறிக்கின்றேன்.

மைப்போ தகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக் காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் பாழும் பணத்தி னருமையெல்லாம்
இப்போ தறிந்தன மீயாத லோப ரிடத்திற்சென்றே.

பூமா திருந்தென் புவிமா திருந்தெனிப் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.[1]

---

29. உமறுப் புலவர்.

தமிழ் நாட்டிலே முகமதிய மார்க்கத்தைத் தழுவினோர் மிகக் குறைந்த தொகையினரே யாவர். அரேபியா, பாரசீகம் முதலாய முகமதிய நாடுகளிலிருந்து வாணிபத்தின் பொருட்டு வந்தவர் பலராவர். அவர்கள் எல்லோரும் முகமதியரே. அவர்களுட் பலர் வாணிபத்தின் பொருட்டுத் தங்கலாயினர். அவர்கள் அரபு மொழியையும் நாட்டு மொழியான தமிழ்மொழியையும் கலந்து வழங்கலாயினர். அவ்வழக்குமொழிக்கு அரபுத்தமிழ் எனப் பெயரிடலாயினர்.

---

1. இச்செய்யுள் படிக்காசுப் புலவரது என்று பெருந்தொகை கூறும். (செய். 1313) தனிப்பாடற்றிரட்டு நமச்சிவாயப் புலவர் பாடியதாகக் கூறும்.

நாளடைவிலே முகமதியர் இங்குள்ள தமிழ் நாட்டினரைத் தங்கள் மதத்தைத் தழுவச் செய்தனர். அதனால் அவர்கள் ஜனத் தொகையிற் பெருகினார்கள். பெருகினும் அவர்கள் எல்லோரும் பேசிவந்தது கலப்பு மொழியான தமிழேயாம்.

இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய மக்களுள் தமிழ்ப் புலவர்கள் மிகக் குறைந்த தொகையினராவர். ஆயினும் அவர்கள் தமிழில் ஆர்வமற்றவர்கள் என்ற சொல்லவியலாது. அவர்கள் வாணிபத்தையே ஒரு பெருந்துறையாகக் கொண்டமையின் மற்றவற்றைக் கையாண்டிலர் எனலாம். நாளடைவிலே அவர்களும் நாட்டுமொழியான தமிழைக் கற்றுப் புலவர்களாயினர். உமறுப் புலவர் அவ்வாறு வந்த முகமதியத் தமிழ்ப்புலவர்களில் முதல்வராவர் என்று கூறுதல் தவறாகாது. உமறுப்புலவரின் தந்தையார் பெருவணிகர். கீழக்கரையிலிருந்தவர். முத்து வியாபாரத்தின் பொருட்டுச் சென்றபோது எட்டையபுரம் வந்தார். அக்காலத்திலே வணிகமுறை அறிந்துகொள்ளும்பொருட்டுத் தம்மகனையும் அழைத்துச் செல்வர். அவ்விடத்திலே கடிகைமுத்துப் புலவரது பெருமையையும் கல்விவன்மையையுங் கண்டார். அவ்வணிகருக்குத் தம் மகனும் இவ்வாறாகச் சான்றோனெனப் பலராலும் மதிப்பிடப்படல் வேண்டுமெனத் தோன்றிற்று. முத்துப் புலவரிடம் தம் மகனை ஒப்புவித்து அவனைப் புலவனாக்குவது அவரது கடமையெனக் கூறி மைந்தனை விட்டுச் சென்றார். புலவரும் புதிய மாணவனை யேற்றுத் தக்கமுறையிற் கல்வி கற்பித்து வந்தார். நாளடைவிலே உமறுவும் தகுந்த கல்வியுடையரானார்.

உமறுப் புலவர் தமிழிலே தக்க பாண்டித்தியம் பெற்றிருந்தனரெனினும் தமது மார்க்கத்திலும் திடமான பக்தியுடையவரென்றே கூறல் வேண்டும். இவருடைய குருவாகவிருந்தவர் ஸதக்கத்துல்லா என்பவர். அவருக்குத் தாம் பாடிய சீறப்புராணத்தில் வணக்கங் கூறியிருக்கின்றார். அச்செய்யுளைக் கீழ்க் காண்க.

நம்மையா ளுடையான் வேத நபிதிரு வசனந் தீனோர்
சம்மதித் திடப்பா ரெல்லாந் தழைக்கவே விளக்கஞ்செய்தோ
ரிம்மையு மறுமை யும்பே ரிலங்கிய ஸதக்கத் துல்லா
செம்மல ரடியி ரண்டுஞ் சிந்தையி லிருத்தி னேனே.

இவரது சரித்திரக் குறிப்பாக இதுபொழுது வேறு ஒன்றுங் கிடைத்திலது. இவர் இஸ்லாம் மார்க்கத் தலைவராகிய முகமது நபியினுடைய சரிதத்தைத் தமிழிற் செய்தார். அதனைச் சீதக்காதி முன் அரங்கேற்றச் சமயம் வாய்த்திலது. சீதக்காதி வாணிபத்தின்

பொருட்டும் அரசாங்க ஆணைப்படியும் வேற்றிடங்கட்குச் செல்ல வேண்டியிருந்தது. அவர் தமது பொக்கிஷதாரரும் நம்பிக்கையுள்ளவருமான அப்துல்காசிம்முன் அரங்கேற்றச் செய்தார். இக்கதையினைக் கேட்டுக் கொண்டிருந்த சீதக்காதியின் மனைவியார் தங் கணவனைக்கொண்டு பின்னுமொருமுறை அவர் முன்னிலையில் அரங்கேற்றுவிக்க வேண்டுமெனப் பெரிதும் முயன்றும் பயன்படாமற் போயிற்றென்று கூறுவர்.

சீறாப்புராணம். 1 விலாதத்துக்காண்டம், 2 நுபுவ்வத்துக் காண்டம், 3 ஹிஜ்றத்துக் காண்டம் என்று மூன்று காண்டங்களை யுடையது. முதற் காண்டம் 1239 திருவிருத்தங்களைக் கொண்ட 24 படலங்களையுடையது; இரண்டாங் காண்டம் 1105 திருவிருத்தங்களைக் கொண்ட 21 படலங்களையுடையது; மூன்றுங் காண்டம் 2683 திருவிருத்தங்களைக் கொண்ட 47 படலங்களையுடையது; ஆக 5027 திருவிருத்தங்களையுடையது. தமிழ் இலக்கிய வரலாறுடையார் கூற்றுப்படி 12000 பாடலுடையதன்று[1]. இஸ்லாம் மார்க்க நூலாயினும் நல்ல தமிழ் நடையுடையது. சிறந்த கற்பனைகளைக் கொண்டது. பொது நோக்குடைய நூலாகும்.

திருவுருவா யுணருருவா யறிவினொடு தெளிவி டத்துஞ் சிந்தி யாத
அருவுருவா யுருவுருவா யகம்புறமுந் தன்னியலா வடங்கா வின்பத்
தொருவுருவா யின்மையினி லுண்மையினைத் தோற்றுவிக்கு மொளியா யாவு
மருவுருவாய் வளர்காவன் முதலவனைப் பணிந்துள்ளி வாழ்த்து வாமே.

[சிறந்த

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த் தெளிவினுந் தெளிவதாய்ச்
மருவினு மருவா யணுவினுக் கணுவாய் மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப் பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

சிறந்தமெய்ப் பொருளை யழிவிலா மணியைத் தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத் தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்துளே யுறைந்து பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து மண்ணினு மதிமறந் தவரே

என்பவை கடவுள் வாழ்த்துச் செய்யுட்களுட் சிலவாம்.

படித்த லத்தெழு கடல்குல கிரிநிலை பதற
வெடுத்து வீசிய சண்டமா ருதத்தினுக் கெதிரே

1. தமிழ் இலக்கிய வரலாறு, 455.

மிடித்து நொந்தசிற் றெறும்பொரு மூச்சுவிட் டதுபோல்
வடித்த செந்தமிழ்ப் புலவர்மு னியான்சொலு மாறே.

என்பது அவையடக்கத்துளொரு பாட்டு.

இவர் சீதக்காதியின் அந்திம காலத்தவராகவே பதினேழாம் நூற்ருண்டி னிறுதியிலி ருந்தவராவர்.

---

30. திருக்குறுங்குடி நம்பி.

தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக்கு 26 கட்டை யளவில் திருக்குறுங்குடி என்ருேர் ஊர் உளது. அந்த ஊரைக்குறித்துப் புலவர் ஒருவர்.

திக்குளெட் டுக்கயந் துக்கமுற் றுத்திடு க்கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட் டோர்க்கிட மாமதுர
இக்குமுற் றிக்கணுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்கு முக்கி விக்கிக் கக்குமச் சோலைக் குறுங்குடியே

என்று பாடினுர். சிறந்த வைணவ தலம். அவ்வூரிலுள்ள அந்தணர்களிற் பலர் தமிழில் தக்க பாண்டித்திய முடையவர்கள். அவர்களு ளொருவர் திருக்குறுங்குடி நம்பி யெனவே பெயர் பெறுவர். இவர் தொண்டைநாடு சென்ருர். அந்நாட்டிலே செங்கற்பட்டுக்கு அணிமையில் வல்லம் என்று ஓர் ஊருண்டு. அவ்வூரிலே கொடைவள்ளலாக இருந்தவர் காளத்தியப்ப முதலியார் என்பவர். இவர் சிறந்த தமிழபிமானியாக இருந்ததோடு செல்வரானுகவு மிருந்தார். பல ஆனிரைகளையு முடையவர். நம்பி இவ்வள்ளலைக் கண்டு.

பொரடக் கயம்பிடி யென்ருன் மதனுமிப் பூவையுமா
தரடக்க முஞ்சற் றறிந்தில ளேதனைத் தாள்பணியா
முரடக் கவடக் கெடிமண்ட லீகர் முடிபிடுங்கும்
கரடக் கடாக்களிற் ருய்வல்ல மாநகர்க் காளத்தியே.

என்று பாடினுர். வள்ளல் இப்பாட்டின் நயத்தைக் கேட்டு வேண்டிய சன்மானங்களைச் செய்தார். இச்செய்தியைத் தொண்டைமண்டல சதகம்

சொல்லையி லாகச் சொரிகவிமாரி சுருதிவல்லோன்
செல்லையில் சோலைக் குறுங்குடி வாழ்நம்பி சென்றுகண்ட
வெல்லையி னீடுங் கரடக் கடாக்களி றென்றுசொன்ன
வல்லையிற் காளத்தி வாழ்வா னதுந்தொண்டை மண்டலமே

என்று சிறப்பித்துக் கூறும். இவர் வேண்டியவைகளைப் பெற்று ஊர் மீண்டார். இவர் படிக்காசரது உடன் காலத்தவராவர்.

---

31. சுப்பிரமணிய தீட்சிதர்.

ஆழ்வார் பதின்மருள்ளே சிறந்தவரான நம்மாழ்வார் அவதரித்த காரணத்தாலே 'ஆழ்வார் திருநகரி' எனப் பெயர்பெற்ற திருக்குருகூரிலே சுப்பிரமணிய தீட்சிதர் என்ற வேதியர் இருந்தார். அவர் வடமொழியில் அபார பாண்டித்திய முடையவர். அவ்வாறே தென்மொழியிலும் வல்ல பண்டிதர். இவர் வடமொழியிலுள்ள வியாகரணத்துக்கு ஒத்தவாறு தமிழ்மொழியிலக்கண மின்மையையும், அவ்வாறு வடமொழி வியாகரணத்தைப் பின்பற்றிச் செய்த வீரசோழியம் வழக்கொழிந்தமையையும் கண்டார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குச் சேனுவரையர் வடமொழி நியாயம்பற்றி உரை வகுத்தமையையும் அதனைப் பின்பற்றி வேறு நூல்கள் தோன்ருமையையுங் கண்டு ஆற்ருது பிரயோக விவேகம் என்ற நூலைச் செய்தார். தீட்சிதரே 50-வது பாட்டின் உரை யிலே 'இந்நூலுட் சந்தேகந் தோன்றுவதனை மகாபாடியம், கையடம், சித்தாந்த கௌமுதி, சத்த கௌமுதி வாக்கிய பதீயம், அரிபீடிகை, தாது விருத்தி, பதமஞ்சரி, சத்த கௌத்துவம் கற்றவரைக் கேட்க. காசிகாவிருத்தி, பிரக்கிரியா கௌமுதி என்னுமிரண்டினும சித்தாந்தம் பிறவாதாகலின், அவை கற்ரேரைக் கேளாதொழிக. வாக்கிய பதீயம், அரிபீடிகை, ஏலாராசீயம் முதலாயின வழங்கும் காலத்து அவ்வுரை நோக்கிச் சேனுவரையர் முதலாயினுர் தொல்காப்பியத்திற் குரையெழுதினுரென்க' என்றெழுதுவர்.

அக்காலத்திலே வடமொழியிலே வல்ல பண்டிதரா யிருந்தவர் இராமபத்திர தீக்ஷிதர் என்பவர். இவர் தஞ்சையை யாண்ட மகாராஷ்டிர வமிசத்து, சகஜிமகாராஜாவால்[1] சன்மானிக்கப்பட்டவர். இக்காலப் பாணினி எனப் பெயர் வாங்கியவர்[2]. இவருடைய முன்னிலையில் பிரயோகவிவேகத்தை அரங்கேற்றினுர். இச் செய்தியை இவர் தாமே தமது நூலில்

சீதள சந்த்ர முகராம பத்திர தீக்ஷிதர்க்குப்
போதொடு சென்று புகல்வோ மவர்க்கும் பொழுதிலையேல்
மேதினி யிற்றமிழ் செய்பிர யோக விவேகந்தன்னைப்
பேதமிலர்த பதஞ்சலி பாற்சென்று பேசுவமே

---

1. சகஜி மகாராஜா கி. பி. 1684 முதல் 1712 வரை அரசாண்டார்.
2. The Maratha Rajas of Tanjore, 32.

பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்ர தீக்கி தன்று—னேர்கொண்டு
கேட்டா னினிக்கண்ணுற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கா லென்.

என்று கூறுவர்.

பிரயோகவிவேகம் என்ற நூல் ஐம்பத்தொரு பாக்களை யுடையது. இதனை மூலமும் உரையுமாகத் தீட்சிதரே இயற்றினுர். இச்செய்தியை ஈசான தேசிகர் தமது இலக்கணக்கொத்தில்

நூல்செய் தவனர் நூற்குரை யெழுதன்
முறையோ வெனிலே யறையக் கேணீ
முன்பின் பலரே......... .....
அன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநக
ரப்பதி வாழுஞ் சுப்பிர மணிய
வேதியன் றமிழ்ப்பிர யோக விவேகம்
முரைத்துரை யெழுதின னென்றே பலவே.

என்று கூறுவதாற் புலனும்.

சுப்பிரமணிய தீட்சிதருடைய காலம் இராமபத்திர தீட்சிதருடைய காலமாகவே பதினேழாம் நூற்றுண்டின் கடைப்பகுதி யென்பது ஒருதலை.

---

32. வேலையர்.

33. கருணைப் பிரகாசர்.

சிவப்பிரகாச அடிகளது இளவல்கள் வேலையரும் கருணைப் பிரகாசரும். இவர்கள் கல்விகற்றுத் திரும்பி வந்து துறைமங்கலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கையில் சிவப்பிரகாசரைத் திருமணஞ் செய்துகொண்டு இல்லறம் நடத்தும்படி புரவலரான அண்ணுமலை ரெட்டியார் விரும்பியதும், அவருரைத்த விடை யுங் கூறினேம். அவருடைய இளவல்களான வேலையரும் கருணைப் பிரகாசரும் மணஞ்செய்து கொண்டனர். திருமணச் செலவு முழுவதையும் அண்ணுமலை ரெட்டியார் பொறுத்துக்கொண்டனர். இவர்களுள் கருணைப்பிரகாசர் வெங்கனூரில் ரெட்டியாரது ஆதரவில் வாழ்ந்து வந்தார். அப்பொழுது இட்டலிங்க அகவல் என்ற சிறு நூலைப்பாடினுர். பின்னர், சீகாளத்திப்புராணம் பாடத்தொடங்கி, 'சீகாளத்திச் சருக்கம்' வரையும் பாடித் தமதுபதினெட்டாமது வயதில் சிவலிங்கவைக்கியமாயினர்.

அப்பொழுது யாத்திரையிலிருந்த சிவப்பிரகாசர் இச்செய்தியைக் கேட்டு வெங்கனூர் வந்து 'முன்னமொரு.........கோவே, என்று கூறித் துக்கித்தார். வேலையரோ

ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினுற்
றமையனினு மதிக மென்றே
பூண்டவுல கதனினுளோர் புகல்வதுகேட்
டிருந்துமென புதுமை தானே
காண்டகுகண் மணியேநல் விளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான்
மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன்
யானுமிகு வன்னெஞ் சேனே

என்று கூறித் தேறமாட்டாது நின்றார். அவரைத் தேற்றுவித்து அம்மடத்திலேயே யிருக்குமாறு பணித்துச் சிவப்பிரகாசர் சென்றார். வேலையர் அங்கிருந்து வருங்கால் பின்னவர் நல்லாற்றூரில் ஐக்கியமானார் என்று கேட்டவுடன் பதறி எழுந்து நல்லாற்றூரையடைந்து சமாதி முன்னின்று கண்ணீரரும்ப,

அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்—முல்லை
அரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுமிகர்த்தேன் காண்.

என்று பாடித் துக்கித்தார். பின்னர்த் தாமே ஒருவாறு தேறி பெருமத்தூர் மடம் சென்றார்.

ஒருகால் யாத்திரையாகக்[1] குடமுடுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள வீரசிங்காதன மடத்திலிருந்த தலைவர் மகத்துதேசிகர் விரும்பியவாறு வீரசிங்காதன புராணத்தில் மூன்று சருக்கங்கள் பாடினார். பின்னர், தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள வில்வாரணிய க்ஷேத்திர மென்று கூறப்படும் நல்லூருக்குப் புராணம் பாடினார். பின்னர் மயிலத்தி லெழுந்தருளியுள்ள முருகப்பிரான் மேல் உலாவும் இரட்டைமணிமாலையும் பாடினார். பெருமத்தூர் மடம் சென்று தங்கியிருந்து தமது எழுபத்திரண்டாமது வயதில் அங்கேயே ஐக்கியமாயினர்.

இவர் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிற் பிறந்து பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வாழ்ந்தவராவர். இவர் பாடிய நூல்களாவன :

1. இட்டலிங்கக் கைத்தலமாலை. இது தம் ஆன்மார்த்தலிங்கத்தின்மேற் பாடிய நூல்.

---

1. குடமுடுக்கு குடமுக்கு (மேற்கு மூலை) என்னும் தொடர் கும்பகோணம் என மாறியது வருந்தத்தக்கது.

2. நல்லூர்ப் புராணம். இது 'வில்வாரணியஸ்தல புராணம் என வழங்கும்.

3. வீரசிங்காதன புராணம். வீரசைவ மடங்களுள்ளே ஒன்றான சாரங்கதேவர் மடம் என வழங்கும் வீரசிங்காதன மடத்தின் வரலாற்றைக் கூறும். இம் மடம் குடமுடுக்கிலே மகாமகக்குளத்தின் வடமேற்கிலிருக்கின்றது. இங்கிருந்தே கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் சங்கமர்களினின்றும் வீடுபெற் றார் என்பர். இம் மடத்திலே எழுந்தருளியிருந்த மகத்துதேசிக ரென்பார் வேண்ட வேலாயுதர் அந்நூலில் மழைய மல்லேசுரச் சருக்கம் 172, மூர்க்க நாயனார் சருக்கம் 62, அகளங்கச் சோழச் சருக்கம் 150 என்ற மூன்று சருக்கங்கள் கொண்ட 387 செய்யுள் களைப் பாடினார். பிற சருக்கங்கள் திருத்துறையூராதீனம் உமாபாக தேவரால் பாடப் பட்டன.

மகத்துதே சிகன்முன் கருநடந் தமிழால் வழுத்துமென் றியம்பவே லையர்
தொகுத்தருண் மழைய மல்லையர் சரிதந் தொன்மையா மூர்க்கர்தஞ் சரிதம்
பகுத்தக ளங்கச் சோழர்தஞ் சரிதம் பகர்ந்தனர் சிதம்பர மடத்துண்
மிகுத்துவாழ் வசவ லிங்கையர் பிறவும் விளம்பிட வேண்டுமென் றிசைக்க.

கலியது நாலா யிரத்தெண் ணூற் றிருபான் கதசகாத் தம்மொரா யிரத்தின்
மலியறு நூற்று நாற்பத் தொன்றாக வழங்கிய விளம்பிதை மாதஞ்
செலுமதிற் பதினொன் காத்தின மதனிற் றிங்களிற் கயிலையே குடந்தை
சொலும் வீர பத்ர ரிரேணுகர் சோம சேகரர் சரிதமுந் தொகுத்தே.

தக்கமெய் கண்ட சந்ததி யதனிற் றழைகயி லயார்பொற் பதத்தைப்
பக்கமாய்ப் பணிகோட் டூர்வரு மடந்தை பாகருக் குரைத்தனர் குடந்தைக்
கொக்குநூன் முன்னூற் சார்புநூற் பழையோருயர்ந்தவர்க் கியமதையுணர்ந்தே
மிக்கிலக் கணத்தின் விதியுளி வழாது விளங்கிடும் விருத்தயாப் பதனால்.

4. நமச்சிவாயலீலை. இது திருவண்ணாமலையி லெழுந்தருளி யிருந்த குகைநமச்சிவாயரது சரிதமாகும். இது பொழுது கிடைக்க வில்லை.

5. பாரிசாதலீலை. இதுவும கிடைக்காத ஒரு நூல். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய திருவிளையாடல்களைக் கூறுவது.

6. மயிலத்து இரட்டைமணி மாலை. மயிலத்திலே கோயில் கொண்டிருக்கும் முருகப்பிரான் மேல் பாடிய சிறு பிரபந்தம். 20 பாக்களை யுடையது.

7. மயிலத்துலா. இதுவும் முருகப் பிரானுடைய பெருமை யைக் கூறுவது.

8. சீகாளத்தி புராணம். சிவப்பிரகாசரும், கருணைப்பிரகாசரும்பாடியன போக எஞ்சிய பகுதிகளைப் பாடி நூலை முடிவு செய்தார். அந்நூலுள் இவர் பாடியன: 9, கன்னியர் சருக்கம் 152. 10. சிலந்தி முதல் முற்கதைச் சருக்கம் 87. ஆக 239 திருவிருத்தங்கள் கொண்ட இவ்விரண்டு சருக்கங்களும் பாடினார்.

34. சிறிய காரிரத்ந கவிராயர்

சிறிய என்ற அடைமொழியை ஒன்றின்முன் கூறினவுடனே அதற்கு மாறாகப் பெரிது ஒன்றுண்டு எனப் பலரும் அறிவர். சிறிய காரிரத்நம் என்ற போது பெரிய காரிரத்நம் ஒருவர் உண்டென்பது தெளிவுபடும். திருமேனிக் கவிராயரின் தந்தையே பெரிய காரிரத்நமாவர். ஆனால் அவர் அடைமொழியின்றி வழங்கப்படுவர். பிறிதொருவர் உண்டான போதன்றோ அடைமொழி வேண்டுவது. ஆதலினாலே பெரியார் காரிரத்ந கவிராயரை அடைமொழியின்றியே கூறுவர். அவரது குடியிலே தோன்றியவர் சிறிய காரிரத்ந கவிராயர். இவர் கல்வி கேள்விகளில் வல்லவர். பெரிய வித்வத் பரம்பரையிற் பிறந்த இவர் அப்பரம்பரைக்குரிய கல்விஞானம் இல்லாமற் போகாரென்பது திண்ணம். இவருடைய குடும்பம் கோயிலில் வாகன மாலைக்கவி பாடுவது வழக்கம். இவர் அத்தொழிலே யுடையவரென்ப. இவர் சிறந்த வித்துவானாயிருந்தமையாலே அக்காலத்திலே வள்ளலும் சிறந்த கல்வி யருமாயிருந்த இரசை வடமலையப்ப பிள்ளையன்மேல் புலவராற்றுப்படை பாடிச் சன்மானம் பெற்றார். திருமேனிக் கவிராயர் இரசை வடமலையப்ப பிள்ளையன்மேல் புலவராற்றுப்படை பாடியவர். அப்பிள்ளையனை இவர் குழைக்காதர் திருப்பணி மாலையினிறுதியில் வாழ்த்துதல் காண்க என்பர்' திரு. மு. இராகவையங்கார்[1].

'கன்ன னநவரத கல்யாணம் பார்புரக்கு
மன்ன னிரசை வடமலைமேற்—பன்னுதமி
ழேற்றுப் படைக்கு மிரந்தகவி ஞன்புலவ
ராற்றுப் படைபாடி னன்'.

என்பது அவ்வையங்கார் சுவாமிகள் பத்திராசிரியரா யிருந்த செந்தமிழில் வந்த புலவராற்றுப் படையின் பாயிரம். மேலும் மு. இராகவையங்கார் காவை வடமலையப்ப பிள்ளையனையும், இரசை வடமலையப்ப பிள்ளையனையும் ஒருவரென மயங்கியதோடு 'இரசை

1. பெருந்தொகை 1736-பாட்டுக் குறிப்பு

வடமலையப்பர் திருமலை நாயக்கராட்சியின் இடைக்காலந் தொடங்கி—அஃதாவது உத்தேசம் 1640 தொடங்கி—கி. பி. 1706-க்குப் பின்பும் நீண்ட ஆயுளுடன் இவர் நிலவுகிற் பிரபல ராய் வாழ்ந்தமை பெறப்படுகின்றது. இத்தகையோராலும் இவர் கீழ் அதிகாரிகளாலும் அமைக்கப்பட்ட சிலா லிகிதங்கள் தென் பாண்டி நாட்டிலே ஆங்காங்கு அமைந்துள்ளன' என்றும் எழுது வர்.[2] இருவரும் வேறுவேருவர். ஒருவர் காவை வடமலையப்பர்; மற்ற வர் இரசை வடமலையப்பர். இருவேறு காலத்தினர்[3]. புலவராற் றுப்படை கொண்டவர் இரசை வடமலையப்பர். இந்நூல் திருச்சி ராப்பள்ளியிலே கொல்ல மாண்டு அசுஅல் அரங்கேற்றப்பட்ட தாக அவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது என்று புலவராற்று படை முகவுரை கூறும். இந்நூல் 'சொற்சுவை பொருட்சுவை பெரிதுடைத்தாய்ப் படிபபோர்க்குப் பேரானந்தம் பயப்பது.' இது 271 கண்ணிகளையுடையது.

---

35. ஈசான தேசிகர்.

பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் தென்னாட்டிலே தமிழ்மொழியை மிகுதியாகப் பேணி வளர்த்து வந்தவர்கள் தென் னாட்டுச் சைவமடங்களில் வாழ்ந்த பெரியார்களாவார்கள். அம்மடங் களுளொன்று திருவாவடுதுறை மடம். அந்தமடத்திலேபதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில சின்னப்பண்டாரமாக இருந்தவர் மாசிலாமணி தேசிகர் என்பவராவர். அக்காலத்தில் மடத்தின் தலைமை வகிப்பவரைப் பண்டாரசந்நிதி என்றும், மடாதிபதி காலஞ்சென்றபின் அவருடைய இடத்தை ஏற்பவராக இருப்பவ ரைச் சின்னப்பட்டம், சின்னப்பண்டாரம என்றும் வழங்குவர். பண்டார சந்நிதியாயிருப்போர் திருவாவடுதுறையிலும் சின்னப் பண்டார சந்நிதியாயிருப்போர் குமரித்துறையை யடுத்த சுசீந் திரத்திலும் வீற்றிருந்து அருளுபதேசஞ் செய்வது மரபு. அவ் வழக்கப்படியே மாசிலாமணி தேசிகர் சுசீந்திரத்திலிருக்கும்போது அந்நாட்டு வேளாள வகுப்பினைச்சார்ந்த ஒரு பிள்ளை தேசிகரை யடுத்துச் சைவ சந்நியாசம் பெற்றுக் குட்டித் தமபிரானாக இருந் தார். சிறுவர்களாய்த் துவராடை பெறுவோர்களைக் குட்டிகள் என்பது ஆதீனமரபு.

---

2. சாதனத் தமிழ்க்கவி சரிதம் 184-188.

3. இவர்கள் சரித்திர விரிவைச் செந்தமிழ் 35-ம் தொகுதியில் காண்க.

இவ்வாறு துறவடைந்த சிறுவர் சாமிநாதர் என்று அழைக்கப்பட்டார். சாமிநாதர் குட்டித்தம்பிரானுகவே, தமது ஞானுசாரியாரிடம் மிக்க அன்புடையராய் அவருக்குப் பல பணிவிடைகள் செய்வாரானுர். அப்பொழுதே இவர் நல்லொழுக்க முடையராய்க் கல்வியிற் பெரிதும் அவாவுடையவராக இருந்தார்.

அக்காலத்திலே திருவாவடுதுறை மடத்துச் சீடர்களிலொருவராகச் சிறந்து விளங்கியவர் மயிலேறும்பெருமாள் பிள்ளை யென்பவர். திருநெல்வேலி நகரினர். தாண்டவ மூர்த்திப்பிள்ளையின் புதல்வர். சிறந்த கல்வியுடையவர். அக்கல்விக்குத் தக்க ஒழுக்கமும் சிவபத்தியு முடையவர். குருபக்தி மிகுந்தவர். இவர் அடிக்கடி தமது ஞான குருவாகிய மாசிலாமணி தேசிகரைச் சுசீந்திரம் சென்று வணங்கிவருவது வழக்கம். அவ்வாறே ஒருநாள் குருதரிசனத்துக்குச்சென்றபொழுது குட்டித்தம்பிரானுகிய சாமிநாதரைக் கண்டார். அவரது அறிவு ஒழுக்கங்களைக்கண்ட மயிலேறும்பெருமாள்பிள்ளை அவரைக் கல்வியில் வல்லுநராகச் செய்யவெண்ணி, ஆதீனத் தலைவரது உத்தரவுபெற்று, திருநெல்வேலிக்கு அழைத்து வந்து கல்வி கற்பித்து வந்தார். மாணவரான சாமிநாதரும் கல்வியிற் பேரவாவுடையவராக விருந்தமையால், விரைவிலே கற்றதோடு வன்மையும்பெற்று வந்தார். அவரது தீவிரபுத்தியினைக் கண்ட ஆசிரியர் அண்மையிலுள்ள செப்பறை யென்னும் ஊரில் வாழ்ந்த சைவப்பனவரான கனகசபாபதிக்குருக்களைக் கொண்டு வடமொழியுங் கற்பிக்க ஏற்பாடு செய்தார். வடமொழியில் தாம் வல்லவராகவே அச் செய்ந்நன்றியை மறவாது சாமிநாதரும்

செப்பறைப் பதியின் வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி கருதுவட நூற்கடற்
றபோதனர் புகழுஞ் சைவாதி ராசன்
உபய பதங்களை யுண்மையொடு பணிவாம்.

என்று ஆசிரிய வணக்கம் கூறியுள்ளார்.

சாமிநாத முனிவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லுநரான பின் தமது ஆதீனத்தை யடைந்து தங்கியிருந்தார். அங்குத் தங்கியிருந்தபொழுது இலக்கணவிளக்கம் என்ற நூலைச் செய்த வைத்தியநாத தேசிகரைக் கண்டு அவருறவு பெற்றனர். ஆதீனத் தலைவர் யாத்திரை செய்துகொண்டு திருநெல்வேலி சென்ருர்.

அக்காலத்திலே தமது ஞான குருவரைக் காணவந்த மயிலேறும்பெருமாள்பிள்ளை தமது மாணவரது அறிவு ஆற்றல்களை ஞானசிரியரிடம் வியந்துகூறி அவரை ஞானுசாரியராகக் காணவிரும்புவ

தாகக் குறையிரந்து நின்ருர். அப்பொழுது சின்னப்பட்டத்தில் ஒருவர் இருந்ததினுல் சாமிநாதமுனிவரை ஞானசாரியராகச் செய்வது சம்பிரதாயத்துக்கு மாறுதலாகுமென்பதை யெடுத்துக் கூறியதோடு, மயிலேறும்பெருமாள்பிள்ளையினது விருப்பத்தையும் ஒருவாறு நிறைவேற்றவெண்ணி முனிவருக்குச் சங்காபிடேகம்செய்து ஈசான தேசிகர் எனப் பட்டஞ்சூட்டித் திருநெல்வேலியிலிருப்பதும் திருவாவடுதுறைக்குச் சொந்தமானதுமான ஈசான மடத்துத் தலைவராகச் செய்தார்.

சாமிநாத முனிவரான ஈசான தேசிகர் ஈசானமடத்திலிருந்து கொண்டு சங்கர நமச்சிவாயப்புலவர் முதலாயினர்க்கு இயற்றமிழும் சித்தாந்தோபதேசமுஞ் செய்துகொண்டிருந்தார். பின்னர், சிவதல தரிசனஞ் செய்யவெண்ணிப் பல ஊர்களையும தரிசித்துக் கொண்டு திருவண்ணுமலையில தங்கியிருந்தார். அவர் முதிர்ந்த பருவமடைந்திருந்ததால் சிவபெருமானது திருவடிநீழலை அந்தத் தலத்திலேயே யடைந்தார். அதுகொண்டு திருவண்ணுமலை ஈசான தேசிகர்என அவரைக் கூறுதலுமுண்டு. ஈசான தேசிகர் இயற்றிய நூல்களாவன.

1. திருச்செந்திற் கலம்பகம். 2. இலக்கணக்கொத்து. 3. தசகாரியம்.

1. திருச்செந்திற் கலம்பகம் என்பது திருச்செந்திலாண்டவன் மேற் பாடப்பட்ட ஒரு சிறு பிரபந்த நூல். இதன் பெருமையை ஆண்டவன் சந்நிதியில் பூசையின்போது ஓதப்படுகின்றதென்னும் ஒன்றே விளக்கும்.

2. இலக்கணக்கொத்து. இதன் பெயர் மாத்திரையானே இஃதொரு இலக்கண நூலென்பது பெறப்படும். 'பலர் நூல்களினும் பலருரைகளினுஞ் சிதறிக்கிடந்த சில இலக்கணங்களை ஒவ்வொரு சூத்திரத்தில் ஒருங்கே யறியக்கிடத்தலின் இலக்கணக் கொத்தென்று காரணபபெயர் பெற்றதென்க' என்று ஆசிரியரே கூறுவர்.

3. தசகாரியம். இஃது ஒரு ஞானமார்க்க நூல். விருத்தங்களாலாயது. பண்டார சாத்திரம் என்ற தொகுதியில இது அடங்கியுள்ளது. இது திருவண்ணுமலையார் தசககாரியம் எனவும் பெயர்பெறும்.

ஈசான தேசிகரது காலம் பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதியென ஒருவாறு சுட்டலாமே யன்றி முடிவாக இவ்வாண்டு எனக் கூறுதற்குரிய ஆதாரங்களில்லை.

குறிப்புகள் அகப்படாத புலவர்கள்,

இந்த நூற்றுண்டிலே வாழ்ந்த புலவர்களாயிருந்தும் யாதொரு செய்தியும் அறியப்படாதவண்ணம் சிலர் மறைந்தனர். அவர்களைக் குறித்துக் கூறவேண்டுவனவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன்.

36 (1) திருவையாற்றுப் புராண ஆசிரியர். இப்புராணம் இயற்றிய ஆசிரியர் பெயர் அறிவதற்கில்லை. ஆயினும் இந்நூலாசிரியர் வாழ்ந்த காலமும் இந்நூல் செய்த காலமும் திட்டமாகத் தெரிகின்றன.

மலிபுனல்சூழ் சோணாடு தஞ்சையிற்காத் திடுமரசர் மதியமைச்ச
ஞெலிமறைதேர் கோவிந்த தீட்சிதரா யன்திருவாக் குடைமை யாலே
கலியுகத்துச் சகனாண்டு மூவைஞ்ஞூற் றிருபதின்மேற் காணு மேழாய்
பொலிவருடத் தையாற்றுப் புராணவட மொழிதமிழாற் புகல லுற்றேன்

என்பர். அதனால் இந்நூல் சகம் 1527க்குச் சரியான கி.பி. 1605ல் ஆசிரியர் பாடி அரங்கேற்றினார். குருதோத்திரமாக

வடியுற்ற .. . . "
விடியுமள விற்சைவ வைதிகர்மாயேச் சுரர்தூய் தானத் துள்ளார்
முடிவில்சிவ கணத்தொருவ ஞனதிரு வம்பலவன் மொழிய வன்றே
னடிதொழுது பஞ்சநதிப் புராணத்தை யறையலுற்றே னகிலம் போற்ற

என்று கூறுவா. ஈண்டுக்கூறிய திருவம்பல தேசிகர் தருமையதீனத்திலே குருஞானசம்பந்தருக்குப்பின் ஏழாமது பட்டத்திலிருந்தவரல்லர்.

ஐவராயிடுஞ் சத்திய லுலகெலா மளிக்குந்
தெய்வ ராயரே யொருவராய்த் திருமுறை காண
பொய்வ ராச்சைவ நிறுத்திய புகழ்மைசேர்*புதுவைச்
சைவ ராயரெண் மூவர்தா ளெணக்கொரு சரணால்,

என்று கூறுவதாலே இவர் சைவராயரது மடத்துச் சீடராயிருக்க வேண்டுமெனத் தோற்றுகிறது. சோழமண்டல சதகத்திலே,

சேணார் பரியே றும்பெரியோர் தெய்வப் படிமப் பதம்வைத்தோர்
கோணா நிலைமை மாணிக்கக் கூத்தர் காளைக் குருராயர்
பூணார் சைவராயருள்ளார் பொன்னங் கிரியிற் புரிமடமு
மாணக் கருஞ்சூழ் திருவிருப்பு வளஞ்சேர் சோழ மண்டலமே.

என்று செய்யுள் (13) காணப்படுகிறது.

இந்நூல் பிரமகைவர்த்த புராணத்திற் கூறப்பட்டுள்ளது. இது பாயிரம் 67. i. ஆலயச்சருக்கம் 395, ii பிரணதார்த்திஹரச்

சருக்கம் 240, iii. அஞ்சலென்ற சருக்கம் 209, iv. சிவலோகச் சருக்கம் 18, v. ஆரணச் சருக்கம் 83, vi. அங்கமுத்திச் சருக்கம் 125, vii. சபேசச் சருக்கம் 222, viii. பஞ்சநதிச் சருக்கம் 112, ix. காவிரிச் சருக்கம் 190, x. சங்கராந்திச் சருக்கம் 89, xi. மாகச் சருக்கம் 141, xii. துலாச் சருக்கம் 71, பொது 66. ஆகச்சருக்கம் 12குத் திருவிருத்தம் 2028 கொண்டது. ஒவ்வொரு சருக்கமும் பல கிளைக்கதைகளை யுடையது. இது அச்சேறவில்லை.

37 (2) பிறவாநெறிப் புராண ஆசிரியர். இது பேரூர்ப்பட்டிப் புராணம் எனவும் பேர்பெறும். இந்நூல் 342 திருவிருத்தங்களை யுடைய 6 சருக்கங்கள் கொண்டது என்றும் சகம் 1530-க்குச் சரியான கி. பி. 1608-ல் இயற்றப்பட்டதென்றும் திருப்பேரூர்ப் புராண முகவுரை (பக். 17) கூறும். பேரூர்ச் சிவபெருமான் பட்டிமுனிக்குத் திருவருள் பாலித்த காரணமாகப் பட்டீசுரர் எனப் பெயர்பெறுவர்.

38 (3) திருச்செந்தூர்ப் புலவர். இவர் திருச்செந்தூரில் வாழ்ந்தவர். வெள்ளியம்பலவாண முனிவரிடத்துப் பகை பாராட்டியவர். சிவப்பிரகாச அடிகளால் செருக்கடக்கப்பட்டவர்.

39 (4) கந்தபுராணம் கச்சியப்பர். இவர் காஞ்சிபுரத்திலே வாழ்ந்தவர். நல்ல கல்வியர், கந்தப்புராணம் பிரசங்கஞ் செய்வதில் வல்லவர். அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் ஆசிரியர். அவரைப் 'பொங்கு......இசைபெற்றானே'[1] எனப் புகழ்ந்தார்.

40 (5) அம்மைச்சி. இவள் சாதியில் தாசி. சந்திரவாணன் கோவை காஞ்சிபுரத்திலே அந்தகக்கவியால் அரங்கேற்ற மாகுங்கால் இவள் 'பெருநயப்புரைத்தல்' என்ற துறைக்குரிய கவியைக் கேட்டுக் கவிராயருக்குக் கண்தான் கெட்டது. 'மதியுங்கெட்டதோ' என்றாள், குறிப்பறிந்த புலவர் 'கொமடையை வெட்டிக் காலகொடும்' என்று ஏடுபடித்தவரிடம் கூறினார். முன்னம் 'முப்பழச் சேற்றின முதவயல்,' என்றிருந்தது. இந்தத் திருத்தத்தால் 'முப்பழச்சாற்றினமுதவயல்' என மாறிற்று. இருவரும் பெருநட்பினராக இருந்தனர். அவ்வூர்ப் பிராமணர்கள் இவளுடைய கர்வத்தை யடக்க எண்ணி வரதராஜப் பெருமாள் ரதோற்சவத்தன்று தேரை அம்மைச்சியினுடைய வீட்டில் முட்டவிட்டு வீட்டை இடிக்க வேண்டுமென்றெண்ணினர். கவிராயரிடம் அம்மைச்சி தெரிவிக்கக் கோயிற் பிராமணருடைய உட்கருத்தை யறிந்த கவிராயர்

பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேப்பெருமா னேகச்சிச் செல்வரே—கோப்பாகக்

தொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று வந்தீரீ
தம்மைச்சி வாழு மகம்.

என்று பாடவே வீடு இடிபடாமல் தேர் சென்றதென்பர்.

41 (6) வரராசையுலா ஆசிரியர். வரராசை யென்ற சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான்மீது பாடிய உலாப்பிரபந்தம். இது வடமலையப்பபிள்ளையன் காலத்தது. அவர் செய்த திருப்பணிகளைச் செவ்வனே விளக்குவது.

42 (7) நிரஞ்சனநாதர்.[1] இவர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் காலத்தவர். அவருடைய சீட்டுக் கவிகளைப் புகழ்ந்து 'சீட்டுக்கவி............னற்கவியே' என்று பாடியவர்.

43 (8) அனந்த கவிராயர். இவர் சேது சமஸ்தானத்தைக் கி. பி. 1647 முதல் 1672 வரை யாண்ட இரகுநாத சேதுபதி யென்ற திருமலை சேதுபதி காலத்தவர். பொன்னுங்கால் அமிர்த கவிராயரோடு ஒட்டம்வைத்து வண்ணம் பாடித் தோற்றவர். காது அறுபடாது சமத்காரமாகப் பேசி மீண்டவர்.

44 (9) கும்பகவி. குடந்தைவாசி. சாதியிற் கம்மாளர். படிக்காசுப் புலவரோடு பகைமைகொண்டவர். அவரைத் தொண்டைமானது சபையில் வென்றவர். கிழவன் சேதுபதி அவையில் சம்மானமடைந்தவர்.

45 (10) பாண்டிப் பெருமாள். இவர் திருநெல்வேலிச் சீமையினர், சைவசமயி. சிவஞான போதத்திற்குச் சிறந்தொரு விருத்தி எழுதியிருக்கின்றார் என்பதை யன்றி வேறொன்றும் அறிவதற்கில்லை.

46 (11) சீதக்காதி நொண்டி நாடக ஆசிரியர். இவருடைய பெயர் முதலாய விவரங்கள் ஒன்றும் அறிவதற்கியலாவிடினும் இவர் சிறந்த கல்வியர் என்பதும் முகமதிய மார்க்கத்தினர் என்பதும் இந்நூலால் வெளியாகின்றன. வள்ளலான சீதக்காதியையும் அவரது இளவலையும் போற்றுகின்றார். திருப்பூவணம் கந்தசாமிப் புலவரையும், உமறுப்புலவரையும் நேரிற் கண்டவர். இந்நொண்டி நாடகநூல் 222 கண்ணிகளையுடையது. இது பிழைபட அச்சேறியிருந்தது. வேண்டிய குறிப்புகளுடனும் ஆங்கில முகவுரையுடனும் சிறப்புறச் சென்னைச் சர்வகலா சங்கத்தில் உருது, அரபு, பெர்ஸியன். 'ஸீனியர் லெக்சர'ராக விருக்கும் திரு. முகம்மது உஸேயின் நயினாரால் திருத்தமுற அச்சிடப்பட்டுள்ளது.

1. முன் 87-ம் பார்க்க.

ஆசிரியர் சோமசுந்தர தேசிகர் எழுதியனவும் பதிப்பித்தனவுமாகிய நூல்கள்

		ரூ.	அ.	பை.
சைவசிகாமணிகள் இருவர்	....	1	4	0
கமலை ஞானப்பிரகாசர்	....	0	4	0
நரவாகன தத்த சரிதம்	...	0	10	0
பெரிபுளூஸ்	....	0	10	0
தமிழைக்குறித்த பழைய குறிப்புகள் (கால்டுவெல் பகுதி)	....	0	4	0
தமிழ்ப் புலவர்கள் வரலாறு பதினாறாம் நூற்றாண்டு	....	1	4	0

பதிப்பித்த நூல்கள்

சோழமண்டல சதகம்	...	0	10	0
தசகாரியம்	...	0	12	0
அன்பர் போற்றிக் கலிவெண்பா	...	0	3	0
பஞ்சாக்கரமாலை	...	0	4	0
மயிலை யமக அந்தாதி	...	0	4	0
குறுந்தொகை மூலம்	...	1	0	0
திருவாரூர்ப்பள்ளு	...	0	4	0
சோடசகலா பிரசாத யோகம்	...	0	3	0
இலக்கண விளக்கம் (பொருளதிகாரம்)	...	4	8	0

கிடைக்குமிடம் :—

S. S. தேசிகர் அண்டு சன்ஸ்

32, நாச்சியப்ப செட்டித் தெரு,

மயிலாப்பூர், சென்னை.